# இந்தியக் கதைத் திரட்டு

(10 - பாஷைகளிலிருந்து 11 - சிறுகதைகள்)

469 — சி/230

பு. கோ. தேன்மொழி

மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
அவ்வை
தி.க. சண்முகம் நூலகம்.
தமிழியல்துறை.

தொகுத்தவர் :

சு. குருசாமி, பி.ஏ., எல்.டி.

முகவுரை எழுதியவர் :

டாக்டர் ப. சுப்பராயன்

(சென்னை மாஜி மந்திரி)

அல்லயன்ஸ் கம்பெனி,

மயிலாப்பூர் : : சென்னை

காபிரைட்] 1943 [விலை ரூ. 2-4-0

## பொருளடக்கம்

அவ்வை தி.க. சண்முகம் நூலகம்,
நூல் வரிசை எண்: 755
நன்கொடை எண்: 755

பக்கம்

1. பெண்மை - மராட்டிக் கதை ... 3
(ஸ்ரீமதி விபாவரி சிரூர்கர்)

2. ஒளியும் நிழலும் - வங்காளக் கதை ... 12
(டாக்டர் சரத்சந்திர சட்டர்ஜி)

3. ராஜா - ஹிந்திக் கதை ... 34
(ஸ்ரீ சுதர்சன்)

4. பயங்கர ராஜ்யம் - ஹிந்திக் கதை ... 48
(ஸ்ரீ சந்திரகுப்த வித்யாலங்கார்)

5. தோழர்கள் - குஜராத்திக் கதை ... 71
('ஸ்நேஹரச்மி')

6. அப்பூகானின் வெள்ளாடு - உருதுக் கதை ... 84
(ஜாகிர் ஹுஸேன் ஸாகிப், எம்.ஏ., பி.எச்.டி.)

7. அதிருஷ்டம் - அஸ்ஸாமிக் கதை ... 93
(ஸ்ரீ விபின்குமார் பர்கோஹாயி)

8. திட சங்கற்பம் - தெலுங்குக் கதை ... 100
(ஸ்ரீ முனிமாணிக்கம் நரசிம்மராவ், பி. ஏ., எல். டி.)

9. வாழ்க்கை - கன்னடக் கதை ... 106
(ஸ்ரீ ஆனந்தா)

10. ஒரு துளி தண்ணீர் - மலையாளக் கதை ... 126
(ஸ்ரீ கே. தாமோதரன்)

11. யோகாஸனம் - தமிழ்க் கதை ... 131
(ஸ்ரீ எஸ். குருசாமி, பி. ஏ., எல். டி.)

அவ்வை தி.க. சண்முகம் நூலகம்.

சாது அச்சுக்கூடம்
சென்னை :: 7-1-43

# முகவுரை

என் நண்பர் குப்புசாமி ஐயர், "**இந்தியக் கதைத் திரட்டு**" என்னும் நூலுக்கு ஒரு முகவுரை எழுதிக்கொடுக்கும் படியாக என்னைக் கேட்டதற்கு மிகவும் சந்தோஷத்துடன் இந்த முகவுரை எழுதுகின்றேன்.

சிறுகதைகள் ஒரு மொழியின் வளர்ச்சிக்கு மிக அவசியம். அல்லயன்ஸ் கம்பெனியார் தமிழ்மொழிக்கு இச்சிறுகதைகள் வாயிலாக ஒரு பெரிய சேவை செய்கின்றார்கள். இதற்கு முன்பாகக் கதைக் கோவை வழியாக அநேகம் தமிழ் ஆசிரியர்களின் சிறுகதைகளை நம் தமிழ் உலகத்திற்கு இக்கம்பெனியார் அளித்து உதவியிருக்கிறார்கள். இப்பொழுது எஸ். குருசாமி அவர்கள் தமிழ் மக்களுக்கும் தமிழ் நாட்டிற்கும் மற்ற மொழிகளின் சிறுகதைகளை மொழிபெயர்த்துத் தொகுத்து உதவியது ஒரு பெரிய காரியம். எல்லாக் கதைகளையும் உற்சாகத்துடன் வாசித்து மனமகிழ்ந்தேன். வங்காளியும் குஜராத்தியும் இவ்விஷயத்தில் மிகவும் முன்னேறியிருக்கின்றனவென்பதை, இப்பாஷைகளிலிருந்து மொழிபெயர்த்த இரண்டு கதைகளும் நமக்கு நன்கு விளக்குகின்றன. ஆனால் மற்றக் கதைகள் அவ்வளவு மேலல்ல என்று யாரும் நினைக்க வேண்டுவதில்லை. இந்தக் கதைதான் மேலென்று சொல்ல முடியாது. எல்லாக் கதைகளும் மனத்தைக் கவரத்தக்கவைகளாகவே குருசாமி தேர்ந்தெடுத்துள்ளார். இவருக்கும், அல்லயன்ஸ் கம்பெனியாருக்கும் தமிழ் உலகம் என்றும் நன்றி பாராட்டக் கடமைப்பட்டுள்ளது.

*29—12—42.* ப. சுப்பராயன்.

## ஆசிரியர் குறிப்பு

இந்தியாவிலுள்ள முக்கியமான பல பாஷைகளிலிருந்து கதைகள் பொறுக்கப்பட்டு இச்சிறு நூலில் சேர்க்கப்பட்டுள்ளன. கூடிய மட்டிலும் அந்த அந்தப் பாஷைகளிலுள்ள சிறந்த ஆசிரியரின் கதையோ, அல்லது என் கலா நாவிற்கு இனிமையாகத் தோன்றிய கதையோ இத்திரட்டில் சேர்க்கப்பட்டுள்ளது. இதில் தமிழ்க் கதை சேர்த்ததன் முழுப் பொறுப்பும் பிரசுரகர்த்தர்களுடையதே யாகும்.

டாக்டர் உ. வே. சாமிநாதையர், ராஜாஜி, கி. வா. ஜ., 'கல்கி', 'துமிலன்' இவர்களின் கதைகளில் ஏதாவது ஒன்றைச் சேர்த்திருந்தால் நலமாயிருந்திருக்கும். அல்லது தமிழ் நாட்டின் எண்ணிறந்த ஆசிரியர்களில் ஒருவருடைய கதையைச் சேர்த்திருக்கலாம். என்ன காரணத்தை உத்தேசித்தோ என் கதைகளில் ஒன்று சேர்க்கப்பட்டிருக்கிறது.

இந்நூலில் பிரசுரிக்கப்பட்டிருக்கும் கதைகளில் சில ஏற்கனவே 'மணிக்கொடி'யில் வெளியானவை. 'யோகாஸனம்' 'தினமணி' ஆண்டு மலரில் பிரசுரமானது. எஞ்சியவை யாவும், இத்தொகுதிக்காகவே மொழிபெயர்க்கப்பட்ட கதை மலர்கள்.

சு. குருசாமி.

# பதிப்புரை

சிறுகதைக்கு இக்காலத்தில் உலகெங்குமே மதிப்பு ஏற்பட்டிருக்கிறது. தமிழ் நாட்டில் தோன்றியுள்ள உத்வேகத்தில் இந்நாட்டு எழுத்தாளர்களும் வாசகர்களும் ஈடுபட்டு மேலும் மேலும் கதைகளை எழுதியும், எழுதியவற்றைப் படித்து இன்புற்றும் வருகிறார்கள். இந்த உணர்ச்சியின் பயனாகவே கதைக் கோவையின் இரண்டு தொகுதிகளை நாங்கள் வெளியிட்டோம். மூன்றும் தொகுதியையும் வெளியிட முயற்சி செய்துவருகிறோம்.

பிற பாஷைக் கதைகளின் சுவையையும் நம் நாட்டினர் உணரவேண்டியது அவசியம். ஆகவே இந்திய மொழிகளிலுள்ள கதைகளைத் தொகுத்து வெளியிடும் முயற்சியையும் மேற்கொண்டோம். வங்காளச் சிறுகதைத் தொகுதியும், பிரேம் சந்தின் கதைத் தொகுதிகள் இரண்டும் வெளியாயின. இப்போது வெவ்வேறு பாஷைகளில் உள்ள கதைகளில் பாஷைக்கு ஒரு கதையாகத் திரட்டி இந்தப் புஸ்தகத்தை வெளியிடுகிறோம். ஹிந்திக் கதைகள் மாத்திரம் இரண்டு இதில் உள்ளன. மராட்டி, வங்காளி, ஹிந்தி, குஜராத்தி, உருது, அஸ்ஸாமி, தெலுங்கு, கன்னடம், மலையாளம், தமிழ் என்னும் பத்து மொழிகளிலுள்ள கதைகள் இதில் இருக்கின்றன. இவற்றைத் தமிழில் எழுதியுதவிய ஸ்ரீமான் சு. குருசாமிக்கு எங்கள் நன்றி உரியது.

இந்தத் தொகுதியில் தமிழ்க் கதை வேண்டாமென்று முதலில் எண்ணியிருந்தோம். தமிழில் கதாசிரியர்களின் கதைகள் தனித்தனியே வெளிவந்திருப்பதால் இதில் வேண்டாமென்பது எங்கள் கருத்து. சில அன்பர்கள் தமிழும் இருக்க வேண்டுமென்று தெரிவித்தமையால் தமிழ்க்கதை ஒன்றையும் சேர்த்தோம். இதில் தம்முடைய கதையைச் சேர்க்கவேண்டாமென்றும் வேறு எழுத்தாளர் ஒருவர் கதையைச் சேர்க்கலாமென்றும் ஸ்ரீமான் குருஸ்வாமி தெரிவித்தார். ஆயினும் இதிலுள்ள

தமிழ் அவ்வளவும் அவருடையதாக இருக்கும்போது ஒன்று மாத்திரம் வேறு ஒருவருடையதாக இருக்க வேண்டாமென்ற எண்ணத்தால் அவர் கதையையே சேர்த்துக்கொண்டோம்.

தமிழில் மிக்க ஆர்வமுள்ளவரும் தமிழ்இலக்கிய வளர்ச்சிக்கு ஆதரவு அளிப்பவருமாகிய ஸ்ரீமான் ப. சுப்பராயன் அவர்கள் எங்கள் வேண்டுகோளுக்கு இணங்கி இதற்கு ஒரு முன்னுரை எழுதி உதவினர். அவர்பால் மிக்க நன்றி பாராட்டுகிறோம்.

எங்கள் வெளியீடுகளை அவ்வப்போது பாராட்டியும் வாங்கியும் ஊக்கமளிக்கும் அன்பர்களுடைய பேருதவியை என்றும் மறவோம். தமிழில் புத்திலக்கியங்கள் மலரும் காலம் இது. இக்காலத்தில் நம்மால் இயன்ற அளவு தொண்டு செய்யலாமென்ற ஆர்வத்தோடு புஸ்தகங்களை வெளியிட்டு வருகிறோம். இறைவன் திருவருளும் தமிழன்பர்களுடைய உதவியும் துணைநிற்குமென்று நம்புகிறோம்.

பதிப்பாசிரியர்கள்.



'முத்தமிழ்க் கலா வித்துவரத்தினம்'
அமரர் அவ்வை சண்முகம் அவர்கள் நினைவாக
மதுரை காமராஜ் பல்கலைக் கழகத்துக்கு
அன்புடன் அளிக்கப்பட்டது.

27-1-1979

# இந்தியக் கதைத் திரட்டு

ஏற்கனவே வெளிவந்துள்ளவை

1. வங்காளச் சிறுகதைகள்
2. பிரேம்சந்தின் சிறந்த சிறுகதைகள்
3. பிரேம - பஞ்சமி
4. கதைக் கோவை - தொகுதி I
5. கதைக் கோவை - தொகுதி II

மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
அவ்வை
தி.சு. சண்முகம் நூலகம்.
தமிழியல் துறை

# பெண்மை

[ஸ்ரீமதி விபாவரி சிரூர்கர், பி. ஏ.]

## 1

என் தாயினுடைய வாழ்க்கையை நினைக்கும்போதெல்லாம், பெண்களின்மீது எனக்குக் கருணை உண்டாகிறது. ஆண்கள்மீது எனக்கு ஒருவிதமான வெறுப்பு உண்டாகிவிட்டது. அதற்காக நான் மிக வருந்துகிறேன். சிறு வயசில் நான் பார்த்த விஷயங்கள் என் மனத்தை மிகவும் புண் படுத்திவிட்டன. என்னுடைய பெரிய தமையனார் இறந்துவிட்டார். அவருடைய பத்தினி - என் மதனி - தந்தையின் கெட்ட நடத்தை யினால் வெறுப்புற்றுத் தன் தாய் வீடு சென்று வசித்துவந்தாள். எனக்கு நன்றாய் ஞாபகமிருக்கிறது: மனிதப் பிறவி எடுத்தவன் எத்தனைகெட்டகாரியங்கள் செய்யமுடியுமோ அத்தனையும் செய்தார் தந்தை. அவரைத் தந்தை என்று சொல்ல எனக்கே வெட்கமாயிருக் கிறது. அவரால் என் தாய் எத்தனை கஷ்டங்களுக்கு உள்ளானாள் என்பதை நினைக்கும்போதெல்லாம் என் உள்ளம் துடிக்கிறது. அந்த அபலை தன் பதியின்மீது கொண்ட மரியாதையினால், தன் கஷ்டங்களை எல்லாம் தன் உள்ளத்திலேயே மறைத்துவைத்திருந்தாள்; ஆனால் அவளுடைய மரணம் வீட்டு வாயில்களையெல்லாம் உடைத்துக் கொண்டு அவள் பட்ட கஷ்டங்களை எல்லாம் வெளியுலகிற்குப் பறையறைந்துவிட்டது.

என் தாய் என்னைத் தனியே விட்டுச் சென்றுவிட்டாள். தந்தையின் மேற்பார்வையில் நான் இருந்தேன். அவர் எனக்கு வரன்

தேடும்போதெல்லாம், அவர்மீதும் புருஷவர்க்கத்தின்மீதும் எனக்கு வெறுப்பு ஏற்படும். தாயின் சோக சரித்திரம் என் உள்ளத்தை விட்டு அகலவே இல்லை. நான் விவாகமே செய்துகொள்வதில்லை என்று தீர்மானித்துக்கொண்டேன். விவாக விஷயத்தில் என் கொள்கை விசித்திரமா யிருந்தது. என் குடும்ப விவகாரந்தான் அதற்குக் காரணம். புதிதாக விவாகம் செய்யப்பட்ட தம் உறவினர் களைப் பார்க்கும்போது மற்றப் பெண்களுக்கு உண்டாகும் ஆனந்தம் எனக்கு உண்டாவதில்லை. காதல் வலையில் அகப்பட்டுப் பிறரை மதியாதிருக்கும் பெண்ணை நான் பார்த்திருக்கிறேன். அவளுடைய கணவன் ஒருவேளை மோசக்காரனு யிருக்கிருனே என்றுகூட நான் சந்தேகப்படுவதுண்டு. இரண்டொரு காதல் மணம் தடைப் பட்டதனுல் நிந்தைக்கும் கேலிக்கும் ஆளான பெண்கள்மீது கருணை கொண்டதும் உண்டு. மண விலங்குகள் நன்ருய்க் கால்களில் பூட்டப்பெறுவதற்கு முன்பே ஆடவர்களின் போக்கு அவர்களுக்குத் தெரிந்துவிட்டது நலமே என்று நான் நினைத்திருக்கிறேன். காதல் மணத்தில், விவாகம் நிச்சயமாகும்வரை ஆடவன் பெண்ணுக்கு அடிமையா யிருக்கிருன். ஆனுல் பெண்மான் விவாகம் என்ற வலை யில் சிக்கியவுடன், நாதர்ஷாவின் ஆட்சி ஆரம்பமாகிறது. அப்புறம் அந்த ஏழைப்பெண்ணின் காதலைக் கண்டது யார்? ஹ்ருதயத்தைக் கண்டவர் யார்? ஆயினும் இதில் ஆடவர்கள்தாம் ஏமாந்தவர்கள் என்று எனக்குத் தோன்றுகிறது. பெண்கள் கல்யாணம் செய்து கொள்ளும் ஆனந்தத்தில் நாணத்தோடும், சந்தோஷத்தோடும் இங்குமங்கும் திரிவதைப் பார்த்தால் எனக்குப் பரிதாபமாயிருக் கிறது. பாவம்! அதில் அவர்கள் என்ன ஆனந்தத்தை அடையப் போகிருர்கள்! தங்களைக் கல்யாணம் செய்துகொள்ளவேண்டு மென்று எத்தனையோ இளைஞர்கள் என்னிடம் நேரில் வந்து கெஞ்சிக் கேட்டுக்கொண்டது எனக்கு ஞாபகமிருக்கிறது. ஆடவர் கள் இப்படிப் பேசுவதை மற்றவர்கள் தவருக நினைக்கமாட்டார் கள். ஆனுல் எனக்கு அவர்கள்மீது அடக்க முடியாத கோபம் உண்டாகிறது.

கன்னியாயிருப்பதே உத்தமம் என்று நான் நினைத்தேன். கன்னி யாய் வாழ்வது கடினம் என்ற காரணத்தினுல், மணம் என்ற மதுர மான பெயர்கொண்டு ஒரு வாழ்க்கைமுறை உண்டாக்கப்பட்டிருக் கிறதென்பது என் கொள்கை. ஆகையினுல் அந்தப் பாவமயமான வாழ்க்கையினின்றும் முடிந்தவரை தூர விலகியிருக்க வேண்டு

மென்று நான் சங்கற்பம் செய்துகொண்டேன். இது சம்பந்தமாய் என் மனத்திலிருக்கும் எண்ணங்களை எல்லாம் வெளியிட்டால், என்னைப் பைத்தியக்காரி என்று நினைத்து உலகம் சிரிக்கும். மனமானது உண்மையான, புனிதமான நட்பை, அன்பை விரும்பினால், அதற்கு ஆடவர்களின் அவசியம் என்னவென்று நான் பல தடவைகள் யோசித்திருக்கிறேன். அவர்களுடைய அன்பு புனிதமற்றதாயிருக்கலாம். ஆகையால் தன்னுடைய தோழிகளுடன் ஆடிப்பாடிக் கூடியிருப்பது போதும். நான் என்னுடைய தோழிகளுடன் உலாவப் போகும்போதெல்லாம் இதைப்பற்றிய ஆராய்ச்சி நடக்கும். அந்தச் சமயங்களில் எல்லாம் புருஷன் தன்னலங் கருதுபவனும், தன்னதிகாரத்தை நிலைநாட்ட விரும்புபவனுமாகிய ஒரு பிராணி என்ற முடிவுக்கு வருவோம்.

குழந்தைகுட்டிகளோடு மிகவும் கஷ்டப்படும் பெண்ணைப் பார்க்கும்போதெல்லாம் ஆடவர்கள்மீது எனக்குக் கோபம் உண்டாகிறது. அப்பெண்ணின் கஷ்டங்களுக்கெல்லாம், அவளுடைய கணவன்தானே காரணம்? அத்தகைய கணவனைப் பெண் எப்படிக் கடவுளுக்குச் சமானமாகக் கருதுகிறாள் என்பது எனக்கு ஆச்சரியமாயிருக்கிறது.

ஒருபோதும் விவாகம் செய்துகொள்ளக் கூடாதென்று நிச்சயம் செய்துகொண்டேன். ஆடவர்கள்மீது வெறுப்பும், அலக்ஷ்யமும் கொண்டு, வாழ்நாள் முழுதும் கன்னியாகவே வாழ்வதாகப் பிரதிக்ஞை செய்துகொண்ட என் தோழிகள் ஒவ்வொருவராய்க் கல்யாணம் செய்துகொண்டு, தங்கள் தங்கள் கணவன்மார் வீடுகளுக்குச் சென்றபோது, அவர்களை நான் சஞ்சல புத்தியுடையவர்களாகக் கருதினேன். அவ்விளம் பெண்கள் ஒவ்வொருவரையும் இரண்டு மூன்று பிள்ளைகளுக்குத் தாய்களாக நான் கண்டபோதெல்லாம், "இல்லற வாழ்க்கை எப்படியிருக்கிறது?" என்று கேட்பேன். "அக்கா, நீதான் அதிருஷ்டசாலி. கிருஹஸ்த வாழ்க்கையில் எத்தனை கஷ்டங்கள்? நாள் முழுதும் அடுப்பை ஊதிக்கொண்டிருப்பதிலும், குழந்தைகளைப் பராமரிப்பதிலுமே கழிகிறது" என்று அவர்கள் பதிலளிப்பார்கள். ஆனால் இவ்வார்த்தைகள் அவர்களுடைய ஹ்ருதயங்களிலிருந்து வரவில்லை என்பதை நான் அறிந்தேன். இவ்வபலைகள் உலகத்தில் என்ன சுகத்தை அநுபவிக்கிறார்களோ என்று மிக்க ஆச்சரியப்பட்டேன்.

சிறு குழந்தைகள்மீது எனக்கு அளவற்ற பிரியம். அவை பிறருடைய குழந்தைகளா யிருப்பதனுல்தான், அவைகளுடன் நான் மனங்களித்து விளையாடினேன். 'என் விவாகம், என் குழந்தைகள்' என்று நினைத்தாலே எனக்கு மிகப் பயமாயிருக்கும்.

விவாகம்! விவாக சமயத்தில் நடக்கும் காரியங்கள், விவாக உற்சவத்தின் தடபுடல்கள், விவாகச் சடங்குகள் - இவைகளைப் பார்க்கும்போது எனக்குச் சிரிப்பு வரும். விவாகமாம், புனிதச் சடங்காம்! எல்லாம் புருஷர்களுடைய தந்திரம்! எவ்வளவுதான் அதைப் புனிதமென்று கூறியபோதிலும், இறுதியில் பார்க்கப் போனுல், அது ஓர் உடலின்பந்தானே? அதைப்பற்றி நினைக்கும் போதே, அது சகிக்க முடியாததாகத் தோன்றியது.

மணமென்பது பரிசுத்தமான அன்பென்றும், தலைவன் தலைவி இருவருடைய உள்ளமும் ஒன்றுபடுதல் என்றும் கூறுகிருர்கள். எங்ஙனமிருந்தாலும் சரீரசுகத்திற்காகப் புனையப்பட்ட நாடகமே அது.

சிற்சில சமயங்களில் நாவல்களில் வரும் கதாநாயகியாக நான் என்னைக் கற்பனை செய்துகொள்வேன். ஆனுல் அக்கதைகளில் தோன்றும் கதாநாயகர்களின் செய்கைகள் சகிக்க முடியாதனவாய் எனக்குத் தோன்றின. என் கணவர் இவ்வித ஒழுக்கத்துடன் இருந்தால், அவர்மீது எனக்கு எத்தகைய வெறுப்பு உண்டாகும்? இவ்வுலகத்தில் அன்பிற்காக மட்டும் கல்யாணம் நடைபெறுதல் முடியாதா? சரீர சுகபோகத்தின் வாசனைகூட இல்லாத, மானஸிக சுகத்தையே பிரதானமாகக் கொண்ட விவாகம் நடைபெறுதல் இயலாதா? இம்மாதிரிக் கேள்விகளைக் கேட்டால், ஜனங்கள் என்னை அறிவிலி என்று நினைக்கிருர்கள். ஆகையால் இத்தகைய விஷயங்களை நான் பேசுவதே இல்லை. ஆனுல் இவ்வித எண்ணங்கள் என் மனத்தில் அடிக்கடி தோன்றும்.

ஆடவர்களிடம் பயமும் வெறுப்பும் இருந்தபோதிலும், கல்யாணம் செய்துகொள்ளாமல் இருப்பதால், எத்தகைய உலக நிந்தைக்கு ஆளாகவேண்டுமென்பதையும் நான் நன்கு அறிந்திருந்தேன். ஆகையினுல் அன்புக்காக மட்டும் கல்யாணஞ் செய்துகொள்வதுதான் உத்தமம் என்றுகூடத் தோன்றியது. அதில் சரீர சம்பந்தம் கொஞ்சங்கூட இருக்கக்கூடாது.

எனக்கு வயசு ஆக ஆக, என் மனத்தில் மற்ருேர் எண்ணம் தோன்ற ஆரம்பித்தது. என் தோழிகளெல்லாரும் என்மீது மிகுந்த

அன்பா யிருந்தனர். ஆயினும் அவர்களுடன் சம்பாஷணை செய்வதால் மாத்திரம், என் வாழ்க்கை பரிபூர்ணமடையவில்லை. என் தோழிகள் எல்லாரும் ஏதாவதொரு காரியத்தில் ஈடுபட்டிருந்தார்கள். அவர்களில் ஒருவராவது என்மீது முழுஅன்பைச் செலுத்துபவராகக் காணப் படவில்லை. நான் 'சோம்பேறிக் கிட்டு'வைப்போல் தன்னந்தனியாக விடப்பட்டேன். என்னைப்பற்றிக் கவலைப்படுவார் ஒருவருமில்லை. தோழிகளின் சம்பந்தத்தினல் வாழ்க்கை பூர்ணமடையாதென்று மேலும் மேலும் என் மனத்தில் தோன்ற ஆரம்பித்தது. பெண்ணின் வாழ்க்கை பரிபூர்ணமடைவதற்கு ஆடவனை வாழ்க்கைத் துணைவனுகக் கொள்ளுதல் அவசியம் என்ற எண்ணம் என்றுமில்லாத ஒரு புது வேகத்துடன் என் மனத்தில் உதித்தது. ஆயினும் ஆடவனின் அன்பை மட்டுமே நான் விரும்பினேன்.

## 2

பிரபாகரர் மிகவும் நேர்மையான சுபாவமுடையவர். பிறருக்கு உதவி செய்ய அவர் எப்போதும் தயாராயிருப்பவர். அவருடைய நற்குணங்களெல்லாம் அவருடைய நற்செய்கைகளில் பிரதிபலித்தன. அவர் எம். ஏ. பட்டம் பெற்று, அப்பொழுதுதான் கல்லூரி ஆசிரியராக நியமிக்கப்பட்டிருந்தார். ஏனே தெரியவில்லை, கொஞ்சகாலமாக என் மனம் அவர்பால் இழுக்கப்பட்டுச் சென்றுகொண்டிருந்தது. அவர் எனக்கு வெகு நாட்களாகப் பழக்கம் ; அவருடைய நற்குணங்கள் யாவையும் நான் நன்கறிவேன். ஆயினும் அப்போது அவை என் மனத்தில் நன்கு பதியவில்லை. ஆனல் இப்பொழுதோ அவருடைய நற்குணங்களெல்லாம் புதிய உருவத்தில் எனக்குத் தோற்றமளிக்க ஆரம்பித்தன. இக்காரணத்தால், எனக்கும் அவருக்கும் உண்டான பரிசயம் மேன்மேலும் அதிகரிக்கத் தொடங்கியது. பிரபாகரர் என்னுடன் தூய மனத்தோடு சம்பாஷணை செய்தார். நம் உள்ளம் நிர்மலமாயிருந்தால், பிறருடைய உள்ளமும் பரிசுத்தமாயிருப்பதைக் காண்கிருேம். பரிசுத்தமான உள்ளத்தின் எதிரொலி எங்கும் பரவுகின்றது. அவர் திறத்தில் நானும், என் திறத்தில் அவரும் உறவுகொள்ள ஆரம்பித்தோம். அது எனக்கு நன்ருய்ப் புலனுயிற்று.

எங்கள் அன்பு நிஷ்காமமானது, பரிசுத்தமானது. இதற்கு முன் என்றும் அடையாத ஆனந்தத்தை நான் அநுபவித்தேன்.

பிரபாகரர் என் அன்பர். அவருடைய அன்பில் தன்னலம் கடுகளவும் இல்லை. அதில் அதிகார தோரணையும் இல்லை. பரிசுத்தமான அன்பைப்பற்றிய எனது சொப்பனமெல்லாம், இப்பொழுது உண்மையாகி விட்டதுபோல் எனக்குத் தோன்றியது. தோழிகளின் தோழமை நிலையற்றது. அவர்களுடைய உலகம் சிறிது. அவர்களுடைய மனம் உயர்ந்த எண்ணங்களில் சஞ்சரிக்காது. அவர்களுடைய மன நிலைமையும் மெல்லிய கண்ணாடியால் செய்யப்பட்ட பாத்திரத்தைப் போன்றது. தோழிகளின் அன்பு வெகு நாட்களுக்கு நிலைப்பதில்லை. இரண்டு கண்ணாடிப் பாத்திரங்கள் ஒன்றுடன் ஒன்று என்று மோதும், என்று உடையும் என்று சொல்வதற்கில்லை. ஆயிரம் தோழிகளினால் ஆவதைவிட ஒரு தோழனால் வாழ்க்கையின் நோக்கம் நிறைவேறுகிறது.

நாட்கள் கழிந்தன. என்னை அறியாமல் என்னுடைய சுபாவம் மிக்க மாறுதலடைய ஆரம்பித்தது. பிரபாகரருடைய மனநிலையும் அவ்விதமே மாறியது. நாங்கள் தினந்தோறும் குறைந்த பக்ஷம் ஒரு தடவையாவது சந்தித்தாலொழிய, எங்களுக்கு மனச் சாந்தி ஏற்படுவதில்லை. மேலும் என் உள்ளக்கிடக்கையை உள்ளபடி சொல்லப் புகுந்தால், எங்களுடைய அன்பின் போக்கிலும் ஒரு சிறு வித்தியாசம் தோன்றியது. பிரபாகரரோடு பேசும்பொழுது சிற்சில சமயங்களில் எனக்குச் சங்கோசம் உண்டாயிற்று. ஒருவரையொருவர் பார்க்கவேண்டுமென்ற தாகம் அதிகரிக்க அதிகரிக்க, சங்கோசமும் அதிகரித்தது. என் நாணத்தைப் பார்த்து, அவர் புன்சிரிப்புக் கொள்வார். உடனே என் நாணம் எவ்வளவு அதிகரிக்கும் என்பதை என்னால் சொல்ல முடியாது. அவர் என்னைப் பார்க்கும்பொழுது, நான் நாணத்தினால் வேறொரு பக்கம் என் பார்வையைத் திருப்பிக்கொள்வேன்.

> "யானோக்குங் காலை நிலனோக்கும் நோக்காக்கால்
> தானோக்கி மெல்ல நகும்"

என்பதற்கிணங்க நான் இன்பம் அநுபவிக்கலானேன்.

சில தினங்களுக்குப் பின், நான் என் மனநிலையைக் குறித்து ஆழ்ந்து சிந்திக்க ஆரம்பித்தேன். என் உள்ளம் பீதியடைந்தது. விவாகத்தின் வித்து இதில் எங்காவது மறைந்து கிடக்குமோ என்று நான் ஐயுற்றேன். அதெல்லாம் ஒன்றுமில்லை என்று என் மனத்தைத்

தேற்றிக்கொண்டேன். எனது லக்ஷயத்தின்படி இவ்வன்பை விகாரமின்றி, பரிசுத்தமாக வைத்திருப்பதற்கு முயற்சி செய்யவேண்டுமென்று நிச்சயித்தேன்.

இந்தத் தீர்மானம் பிரயோஜனமற்றதா யிருந்தது. பிரபாகரர் வராவிட்டால், நீரினின்றும் எடுத்துவிடப்பட்ட மீனைப்போல் என் உள்ளம் துடிக்கும். அவர் வந்துவிட்டால், உள்ளம் மிக்க சந்தோஷமடையும். ஒருவரோடொருவர் பேசவேண்டிய அவசியங் கூட இல்லை. ஒருவரையொருவர் பார்ப்பதிலேயே எல்லாச் சுகமும் கிடைத்தது. அவரை ஒரு நாளைக்குச் சந்திக்காவிடில், ஹிருதயமே வெடித்துவிடும்போல் இருக்கும். ஆனால் சந்தித்த பிறகும் மனம் சாந்தியடையவில்லை.

ஒரு தடவை என் கையும் பிரபாகரருடைய கையும் கலந்தன. என்னுடைய அங்கம் முழுதும் மின்சாரசக்தி பாய்வதுபோலிருந்தது. உள்ளத்தில் இன்ப அலைகள் எழுந்தன. அவருடைய ஹஸ்த ஸ்பர்சத்திற்காக என் உள்ளம் துடித்தது. ஆனால் எப்பொழுதும் அதையே நினைத்துக்கொண் டிருந்ததற்காக, என்னை நானே குறை கூறிக்கொண்டேன். நிலைமை இப்படியிருந்தால், எங்கள் அன்பு எப்படி நிர்மலமாயிருக்கும் என்று யோசித்தேன்.

எனக்கும் பிரபாகரருக்கும் ஏற்பட்டிருந்த அன்பைப்பற்றியும், எனக்கும் வேறு தோழிகளுக்கும் ஏற்பட்டிருந்த நட்பைப்பற்றியும் நான் சிந்தித்துப் பார்ப்பது உண்டு. ஆனால் இத்தகைய மதுரமான இன்பத்தை நான் எப்பொழுதும் அநுபவித்ததில்லை. எங்கள் அன்பு ஆனந்தமயமான சமாதி நிலையையொத்தது. என் வாழ்க்கை முழுமையை நோக்கிச் சென்றுகொண் டிருப்பதாகவே நான் நினைத்தேன். இவ்வன்பில் நான் உலகம் முழுதையும் மறந்துவிட்டேன். விரிந்த இவ்வுலகம் முழுதிலும் கேவலம் நாங்கள் இருவர் மட்டுமே இருப்பதாகத் தோன்றியது. இவ்வுலகம் முழுதும் எனக்கும், என் பிரபாகரருக்குமே சொந்தம். அதில் வேறு எந்தப் பொருளும் எனக்கு முக்கியமாகத் தென்படவில்லை.

பிரபாகரருடைய மனநிலையும், என் மனநிலையை ஒத்திருந்தது. முன்னால் நாங்கள் பல விஷயங்களைப்பற்றிப் பேசுவோம். ஆனால் இப்பொழுதோ விவாகத்தைப்பற்றி ஒருவருடைய அபிப்பிராயத்தை மற்றவருக்குத் தெரியப்படுத்துவதிலேயே நாங்கள் விசேஷ ஆனந்தத்தை அடைந்தோம். ஒரு நாள் நான் என் மனத்திலிருந்த விஷயத்தைப் பிரபாகரரிடம் சொன்னேன். அவருடைய கொள்கை

களும் என் கொள்கைகளை ஒத்திருந்தன. எங்கள் இருவருக்கும் இவ்விஷயம் புதிது. ஆகையினால் எங்களுடைய அபிப்பிராயம் ஒத்திருந்ததுபோலும். நிஷ்காமமான, புனித அன்பை நாங்கள் இருவரும் விரும்பினோம். சென்ற மூன்று வருஷங்களாகத் தினந்தோறும் வளர்ந்து கொண்டுவரும் எங்கள் அன்பில் மேற்கூறிய குணங்கள் இருப்பதைக் கண்டோம். தன்னலத் தியாகமும் எங்களுக்குள்ளே வளர்வதைப் பார்த்தோம். நாங்கள் சிரிப்பதிலும், பேசுவதிலும், பழகுவதிலும், சரீர மானஸிகக் காரியங்கள் எல்லாவற்றிலும் ஒருவிதமான நிர்மலமான தன்மை ஓடிக்கொண்டிருந்தது.

## 3

நான் சிந்தித்தேன். சென்ற மூன்று வருஷங்களாக நாங்கள் இருவரும் மணிக்கணக்காக உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்திருக்கிறோம்; பழகிக் கொண்டிருந்திருக்கிறோம். பிரபாகரர் மற்றத் தன்னலப் பிராணிகளைப்போல், அதாவது ஆடவர்களைப்போல் இருப்பாராகில், அவருடைய உண்மை இயல்பு நான் அவரைச் சந்தித்த சில தினங்களிலேயே தெரிந்திருக்கும். அவருடைய மனோபாவம் மிகப் பரிசுத்தமானது. எனக்கு எவ்விதமான நிந்தையும் ஏற்படாதவாறு மிகுந்த கவலையுடன் அவர் என்னைப் பாதுகாக்கிறார். அவருக்குப் பக்கத்தில் நிற்பதில் எனக்கு எவ்விதமான பயமும் ஏற்படுவதில்லை. அவர் என் ரக்ஷகர் என்ற திடநம்பிக்கை எனக்கு ஏற்பட்டுவிட்டது. அவர் என்ன செய்தாலும் அது தீமையாயிராது. இதோடு, மற்றோர் எண்ணமும் என் மனத்தில் தோன்றியது. பிரபாகரர் எனக்கு இவ்வளவு சமீபத்தில் இருந்தபோதிலும், எனக்குச் சொந்தமாகிவிட்ட போதிலும், நான் அவரிடமிருந்து அநேக மைல்கள் தூரத்திலேயே இருந்தேன். என் மனத்தில் ஓர் எண்ணம் அடிக்கடி உதிக்கலாயிற்று. என் வாழ்க்கை இன்னும் நிறைவை அடையவில்லை. இறுதியாக நான் விரும்புவது யாது ?

நான் வேண்டுவது யாது? அது எனக்கு நன்றாய்த் தெரிந்தது. ஆனால் அதை வெளியில் சொல்வதற்கு எனக்குத் தைரியமில்லை. வெகு சமீபத்தில் இருந்துங்கூடப் பிரபாகரர் தூரத்தில், வெகு தூரத்தில் இருப்பதாகத் தோன்றியது. என் மனச் சஞ்சலம் அதிகரித்துக்கொண் டிருந்தது. என்னை நானே கேட்டேன் : நான் விரும்புவது என்ன? இந்தத் துடிப்பு ஏன்? ஸ்பர்ச சுகத்திற்

காகவா? பிரபாகரர் உன்னை அடிமையாக்கிக் கொள்வதையா நீ விரும்புகிறாய்? சிறு பிராயத்திலிருந்து இதுவரை எதை நீ கேவலம் என்று வெறுத்துத் தள்ளினாயோ அதை நோக்கியா இப்பொழுது வேகமாகச் செல்ல விரும்புகிறாய்?'

என்ன நேர்ந்ததோ, எனக்குத் தெரியவில்லை. என் மனத்தை எத்தனை கேள்விகள் கேட்டும் பிரயோஜனமில்லை. பிரபாகரர் என்னை ஸ்பர்சிக்கட்டும், என்னைத் தன் அடிமையாக்கிக் கொள்ளட்டும், அதில் தவறு இருப்பதாக நான் கருதவில்லை. என் பிரபாகரர் என்னைத் தம் பக்கத்திலேயே வைத்துக்கொள்ளட்டும். அதில்தான் புனித அன்பின் நிறைவு இருப்பதாகத் தோன்றியது.

"இந்து! நான் ஒரு சமயம் காதல் மிருகத்தனமானது என்று நினைத்தேன். அது தவறு என்று இப்போது தெரிகிறது" என்றார் பிரபாகரர்.

"ஆம், நானும் அப்படித்தான் நினைக்கிறேன். காதல் மிருகத்தனமானதல்ல. சாலோக்யம், சாமீப்யம், சாரூப்யம், சாயுஜ்யம்-காதலின் இந்நான்கு படிகளிலும் ஏறுவதன் மூலம் வாழ்க்கையின் லக்ஷ்யம் வெற்றியடைகிறதென்று கருதுகிறேன். எனக்கு இதுவரை விளங்காதது, இப்பொழுதுதான் தெற்றெனத் தோற்றமளிக்கிறது. இந்தப் படிகளின்மூலந்தான், நாம் இருவரும் ஒன்றாகக் கூடித் தன்னலமற்ற, நிர்மலமான, அமர நிலையை அடைய முடியும்" என்று நான் பதிலளித்தேன்.

# ஒளியும் நிழலும்

[ஸ்ரீ சரத்சந்திர சட்டர்ஜி]

## 1

நான் கதை எழுத உட்காரும்பொழுது, உண்மையைத் தவிர வேறு ஒன்றும் எழுதுவதில்லை என்ற பிரதிக்ஞையை மேற்கொள்ளவில்லை. இதில் ஓரிரண்டு விஷயங்கள் உண்மையில்லாவிடில் அதனால் ஒன்றும் கெட்டுப்போய்விடாது. ஆம், கதாநாயகனுடைய பெயர் யக்ஞதத்த முகர்ஜிதான். ஆனால் சுர்மா அவனை 'ஜோதி' என்று கூப்பிடுவாள். கதாநாயகியினுடைய பெயரைத் தெரிந்துகொண்டீர்கள். ஆனால் யக்ஞதத்தன் அவளைச் 'சாயை' என்று அழைப்பான். அவர்களில் யார் ஜோதி, யார் சாயை என்று கொஞ்சநாள் வாக்குவாதம் நடந்தது. அது எவ்வகையிலும் தீருவதாயில்லை. கடைசியில் ஒரு நாள் சுர்மா அவனைப் பார்த்து, " நீங்கள் இல்லாவிட்டால், நான் இவ்வுலகத்தில் எங்கும் இருக்க முடியாது. ஆனால் நான் இல்லாவிட்டாலும், நீங்கள் சிரஞ்சீவியாக இருப்பீர்கள். இது ஏன் உங்கள் புத்தியில் படமாட்டேன் என்கிறது? ஆகையினால் நீங்கள் ஜோதி ; நான் சாயை " என்று கூறினாள்.

யக்ஞதத்தன் சிரித்தான். " கடைசியில் உன் பக்கம் தீர்ப்பாகி விட்டதாக்கும்! ஆனால் இத்தீர்ப்பு ஓர் உப்புக்கல்லுக்குப் பிரயோ ஜனப்படாது."

" பிரயோஜனப்படும், நன்றாய்ப் பிரயோஜனப்படும், பேஷாய்ப் பிரயோஜனப்படும். இனி வாதாடுவது வீண். நீங்கள் ஸ்ரீமான் ஜோதி ; நான் ஸ்ரீமதி சாயை."

இங்ஙனம் சொல்லிக்கொண்டு சாயை ஜோதியைப் பல விதங்களில் தொந்தரவு செய்தாள்.

* * * *

கதை இவ்வளவு தூரம் முன்னேறிவிட்டது. ஆனால் இதற்குள் நீங்கள் உங்களிடையே சண்டையிட்டுக் கொள்ளக் கூடாதே என்பதுதான் என் கவலை. "இவர்கள் ஸ்திரீபுருஷர்கள்" என்று நீங்கள் சொல்வீர்கள். "ஸ்திரீபுருஷர்கள்தாம்; ஆனால் கணவன், மனைவியல்ல" என்று நான் சொல்வேன். "ஓஹோ! காதல்போலும்!" என்று நீங்கள் முகத்தைத் திருப்பிக்கொள்வீர்கள். "அது மிகப் பரிசுத்தமான காதல்" என்று நான் சொன்னாலும் நீங்கள் நம்பமாட்டீர்கள். யக்ஞதத்தனுக்கு வயசு இருபத்து மூன்று; சாயைக்குப் பதினெட்டு.

இன்னும் அவர்களைப் பற்றி நீங்கள் கேட்க விரும்புவீர்களானால் இதோ ஆரம்பிக்கிறேன்.

யக்ஞதத்தனுடைய கண்களில் கண்ணாடி, தலையில் வாசனைத் தைலம் பூசி வாரிவிடப்பட்ட கிராப், இடுப்பில் வெளுத்த வேஷ்டி, உடம்பில் எஸ்ஸென்ஸ் தெளிக்கப்பட்ட ஷர்ட், கால்களில் சுர்மாவினால் பூவேலை செய்யப்பட்ட வெல்வெட் ஸ்லிப்பர், வீட்டில் பீரோக்கள் நிறையப் புத்தகங்கள், அதோடு அநேக வேலைக்காரர்கள், வேலைக்காரிகள், இத்தனையும் உண்டு. மேஜைக்கு முன்னால் உட்கார்ந்துகொண்டு யக்ஞதத்தன் கடிதம் எழுதுகிறான்; முன்னால் ஒரு பெரிய நிலைக்கண்ணாடி இருக்கிறது. சாயை மெதுவாக அறைக்குள் நுழைந்தாள். சந்தடி செய்யாமல் பின்னால் போய் அவனுடைய கண்களை மூடவேண்டுமென்பது அவளுடைய நோக்கம். ஆனால் முதுகின் பக்கம் போய், கைகளை நீட்டியதும் முன்னாலிருந்த நிலைக்கண்ணாடியின்மீது அவள் பார்வை விழுந்தது. யக்ஞதத்தன் தன்னைப் பார்த்துப் புன்முறுவல் செய்துகொண்டிருப்பதை அவள் கண்டாள். சிரித்துக்கொண்டே, "அதற்குள் ஏன் பார்த்தீர்கள்?" என்று கேட்டாள்.

"அதற்கு நானா காரணம்?"

"பின் யார்?"

"பாதி நீ; பாதி இந்தக் கண்ணாடி."

"நான் இப்பொழுதே அதை உடைத்துவிடுகிறேன்."

"அதை உடைத்துவிட்டாலும், அப்புறம் மற்றொரு பாதியை என்ன செய்வாய்?"

சுர்மா அவனுடைய தோள்களைப் பிடித்து இரண்டு, மூன்று தடவைகள் குலுக்கி, "ஜோதி!" என்றாள்.

"சாயை என்று கூப்பிடு."

"நீங்கள் ஏன் நாளுக்கு நாள் இளைத்துக்கொண்டே போகிறீர்கள்?"

"எனக்கு அப்படித் தோன்றவில்லையே!"

"நீங்கள் ஏன் சாப்பிடுவதே இல்லை?"

யக்ஞதத்தன் சிரிக்க ஆரம்பித்தான். "சுரோ, நீ என்னோடு சண்டையிடவா வந்திருக்கிறாய்?" என்று கேட்டான்.

"உம்."

"நான் அதற்குத் தயாராயில்லை."

"நீங்கள் ஏன் கல்யாணம் செய்துகொள்ளக் கூடாது?"

"இதற்குத்தான் நான் தினந்தோறும் ஒரு தடவை பதில் சொல்கிறேனே!"

"முடியாது. கட்டாயம் பண்ணிக்கொள்ளத்தான் வேண்டும்."

"சுரோ, நீ ஏன் கல்யாணம் செய்துகொள்ள மாட்டேன் என்கிறாய்?"

அவள் யக்ஞதத்தன் கையிலுள்ள கடிதத்தைப் பிடுங்கிக்கொண்டு, "சீ! விதவை கல்யாணம் செய்துகொள்வது உண்டா?" என்றாள்.

சிறிது நேரம் பேசாமல் இருந்துவிட்டு யக்ஞதத்தன், "யார் கண்டார்கள்? சிலர் செய்துகொள்ளலாம் என்கிறார்கள்; சிலர் கூடாது என்கின்றனர்" என்றான்.

"அப்படியானால் அந்தப் பாவத்திற்கு என்னை ஆளாக்க ஏன் முயலுகிறீர்கள்?"

யக்ஞதத்தன் நீண்ட பெருமூச்சுடன், "பின்னர், வாழ்க்கை முழுதையும் என்னுடைய சேவையிலா கழிக்க விரும்புகிறாய்?" என்று கேட்டான்.

"உம்" என்று சொல்லி அவள் கண்ணீர் விட்டு அழ ஆரம்பித்தாள்.

யக்ஞதத்தன் அவளுடைய கண்ணீரைத் துடைத்துக்கொண்டே, "சுரோ, உன் மனத்திலுள்ளதை வெளியிட்டு என்னிடம் சொல்ல மாட்டாயா?" என்று கேட்டான்.

"என்னைப் பிருந்தாவனத்திற்கு அனுப்பிவிடுங்கள்."

"என்னைப் பிரிந்து உன்னால் இருக்க முடியுமா?"

சுர்மாவினுடைய வாயிலிருந்து ஒரு பதிலும் வெளிவரவில்லை. ஆனால் தலையை அசைத்தாள். அசைக்கும்பொழுதே அவளுடைய கண்களினின்றும் அருவிபோல் நீர் வடிய ஆரம்பித்தது.

## 2

"அண்ணா, அந்தக் கதையை மேற்கொண்டு சொல்லமாட்டீர்களா?" என்றாள் சுர்மா.

"எதைச் சுர்மா?" என்று கேட்டான் யக்ஞதத்தன்.

"அதைத்தான்; என்னைப் பிருந்தாவனத்தில் வாங்கின கதையை. எவ்வளவு ரூபாய்க்கு வாங்கினீர்கள்?"

"ஐம்பது ரூபாய்க்கு. அப்பொழுது எனக்குப் பதினெட்டு வயது. பி. ஏ. பரீக்ஷை எழுதிவிட்டுப் பஞ்சாபில் சுற்றுப் பிரயாணம் செய்யச் சென்றிருந்தேன். என் தாயும் அப்பொழுது என்னுடன் கூட வந்திருந்தாள். ஒரு நாள் மாலை மாலதி குஞ்சிலிருந்து வைஷ்ணவிகளின் கோஷ்டி ஒன்று பஜனை செய்து கொண்டு போய்க்கொண்டிருந்தது. அங்கேதான் முதல்முதல் நான் உன்னைப் பார்த்தேன். யௌவன மாளிகையின் முதல் படி ஏறினதுமே, உலகம் நம் கண்களுக்கு மிக அழகாய்த் தோன்றுகிறது. அதன் இனிமை முழுவதையும் அநுபவிப்பதற்கு இரு கண்கள் போதாவெனத் தோன்றுகிறது. ஆகையினால் தன் மனத்திற்குப் பிடித்த இன்னும் இரண்டு கண்கள் கூட இருந்து அவ்வழகைப் பருகினால், - இதென்ன, சுர்மா, அழுகிறாயா?"

"இல்லை, நீங்கள் மேலே சொல்லுங்கள்."

"நீ அப்பொழுது பதின்மூன்று பிராயமுள்ள இளம் வைஷ்ணவப் பெண்ணாயிருந்தாய். கையில் தம்பூர் வைத்துக்கொண்டு, பக்தி ரஸமுள்ள கீர்த்தனங்களைப் பாடிக்கொண்டிருந்தாய்."

"ஆமாம்! எனக்கு ரொம்பப் பாடத் தெரியும்!"

"அப்பொழுது பாடிக்கொண்டுதான் இருந்தாய். அதன்பின் மிகுந்த சிரமத்தின்மேல் உன்னை அடைந்தேன். நீ பிராமணப்பெண். பால்ய விதவை. நான் உன்னை என் தாயினிடத்தில் ஒப்பித்தேன். அவள் உன்னை மார்போடு இறுகத் தழுவிக்கொண்டாள். பின்னர், சாகும் தறுவாயில் உன்னை என்னிடம் ஒப்பித்தாள்."

"அண்ணா! உங்களுக்குச் சொந்த ஊர் எது?"

"கிசன் நகருக்குச் சமீபத்தில் எங்கோ இருக்கிறதென்று கேள்விப்பட்டிருக்கிறேன்."

"எனக்கு வேறு உறவினர் இல்லையா?"

"ஏன், நான் இருக்கிறேன் அல்லவா! நான்தான் உனக்கு உற்றார் உறவினர் எல்லாம், சுர்மா."

"என்னை மறுபடியும் உங்களால் விற்க முடியுமா?"

"அது எப்படி முடியும், சுர்மா? நான் என்னை விற்றால் ஒழிய உன்னை எப்படி விற்க முடியும்?"

சுர்மா ஒன்றும் பேசாமல் நீர் நிறைந்த கண்களால் அவனையே பார்த்துக்கொண்டிருந்தாள். வெகு நேரத்திற்கப்புறம், "நீங்கள் அண்ணா; நான் தங்கை. நம் இருவருக்கும் மத்தியில் ஒரு மதனி வேண்டாமா?" என்று மெதுவாகச் சொன்னாள்.

"எதற்காக?"

"நாள் முழுவதும் அவளை நன்றாய்ச் சிங்காரித்து, உங்களிடம் கொண்டுவந்து உட்கார வைப்பேன்."

"முழு மனத்துடன் உன்னால் அப்படிச் செய்ய முடியுமா?"

சுர்மா தலைநிமிர்ந்து சற்றுக் கோபத்துடன், "அவள்மீது பொறாமைப்படுவதற்கு, நான் என்ன அவ்வளவு கெட்டவளா?" என்று கேட்டாள்.

"பொறாமைப்பட மாட்டாய். ஆனால் உன்னுடைய அந்தஸ்தை இழந்துவிடுவாய் அல்லவா?"

"ஏன் இழக்கவேண்டும்? நான் ராஜாத்தி மாதிரி இருப்பேன். எனக்கு ஒரு மந்திரி வருவாள். நாங்கள் இருவரும் சேர்ந்து உங்கள் ராஜ்யத்தை நடத்துவோம், மிக்க ஆனந்தத்துடன்."

"கல்யாணம் செய்துகொள்ள எனக்கு இஷ்டம் இல்லை. உனக்கு ஒரு தோழி அவசியம் வேண்டியிருந்தால், விவாகம் செய்து கொள்கிறேன்."

"உம், அவசியம் செய்துகொள்ளுங்கள். நாங்கள் இருவரும் மிக்க சந்தோஷமாய் வாழ்வோம்."

இங்ஙனம் கூறிய சுர்மா தன் மனத்திற்குள், 'எனக்காக நீங்கள் ஏன் உலக நிந்தைக்குப் பாத்திரமாக வேண்டும்? நீங்கள் கல்யாணம் செய்துகொள்ளுங்கள். உங்களுடைய இன்பகரமான வதனத்தைப் பார்த்து, நான் என் துக்கங்களைச் சகித்துக் கொள்வேன்' என்று சொல்லிக்கொண்டாள்.

## 3

சிற்சில சமயங்களில் யக்ஞதத்தனின் வீட்டிற்கு அக்கம்பக்கத்தார், முக்கியமாகப் பெண்கள் வருவார்கள். "சுர்மா, நீ உன் சகோதரனுக்கு ஏன் இன்னும் கல்யாணம் செய்துவைக்கமாட்டேன் என்கிறாய் ?" என்று ஒருத்தி கேட்பாள்.

"ஒரு நல்ல பெண்ணைப் பார்த்துச் செய்து வைக்கத்தான் வேண்டும்" என்று பதிலளிப்பாள் சுர்மா.

சுர்மாவின் தோழி யாராவது பக்கத்தில் இருந்தால் சிரித்துக் கொண்டே, "நிஜந்தான். நல்ல பெண் கிடைப்பது கஷ்டந்தான். உன் ரூபலாவண்யத்தைப் பருகிக்கொண்டிருக்கும் கண்களுக்கு, வேறு நல்ல -" என்று சொல்வாள்.

"போடீ! போக்கிரிக் க—" என்று சொல்லும்போதே நாணத்தினாலும் கர்வத்தினாலும் சுர்மாவின் முகம் சிவந்துவிடும்.

ஒரு நாள் மாலை மழை பெய்துகொண்டிருந்தது. "நல்ல பெண் ஒருத்தியைப் பார்த்துக்கொண்டு வந்திருக்கிறேன்" என்று சொல்லிக் கொண்டே சுர்மா அறைக்குள் நுழைந்தாள்.

"அப்பா, ஒரு பெருங்கவலை ஒழிந்தது. பெண் எங்கே இருக்கிறாள் ?"

"அந்தத் தெருவிலுள்ள மித்தர் வீட்டில்."

"பிராமணன் காயஸ்தனுடைய வீட்டில்... ?"

"காயஸ்தர்களின் வீட்டில் பிராமணர்கள் வசிப்பதில்லையோ ? அவளுடைய தாய் அங்கே சமையல்வேலை செய்துகொண்டிருந்தாள். பெண் மிக அழகானவள் என்று கேள்விப்பட்டேன். போய்ப் பாருங்கள். மனத்திற்குப் பிடித்திருந்தால், வீட்டிற்கு அழைத்துக்கொண்டு வந்துவிடுங்கள்."

"அந்தப் பிச்சைக்காரியை விட்டால் இந்த உலகம் முழுவதிலும் எனக்கு வேறு பெண் இல்லையா ?"

"பிச்சைக்காரிகளுக்கு அடைக்கலம் அளிப்பது உங்களுக்கு ஒன்றும் புதுமை அல்லவே !"

"அப்புறம்!"

"நீங்கள் போய்ப் பாருங்கள். மனத்திற்குப் பிடித்திருந்தால், வேண்டாமென்று தள்ளக்கூடாது."

"எனக்குத்தான் ஒருவரையும் பிடிக்காதே."

"பிடிக்காமல் என்ன? நன்றாய்ப் பிடிக்கும். ஒரு முறை பார்த்துவிட்டுத்தான் வாருங்களேன்."

பின்னர், சுர்மா யக்ஞதத்தனுக்கு மற்றொரு தண்டனையும் விதித்தாள். வாசனைத் தைலங்கள் பூசி, அவனுடைய தலையை வாரி, அவனை நிலைக்கண்ணாடிக்கு முன்னால் கொண்டுபோய் நிறுத்தினாள். யக்ஞதத்தனுக்கு மிக வெட்கமாயிருந்தது. "சீ! காரியம் மிகவும் மிஞ்சிவிட்டதே!" என்றான் யக்ஞதத்தன்.

"பரவாயில்லை, நீங்கள் போய்ப் பார்த்துவிட்டு வாருங்கள்" என்றாள் சுர்மா.

ஒரு வண்டி அமர்த்திக்கொண்டு யக்ஞதத்தன் பெண்ணைப் பார்ப்பதற்காகச் சென்றான். வழியில் சந்தித்த நண்பன் ஒருவனையும் தன்னுடன் அழைத்து, "மித்தருடைய வீட்டில் சாப்பிட்டுவிட்டு வருவோம், வா" என்றான்.

"நீ சொல்வதன் அர்த்தம்?" என்றார் நண்பர்.

"அவருடைய வீட்டில் ஒரு பிச்சைக்காரப் பெண் இருக்கிறாள். அவளைக் கல்யாணம் செய்துகொள்ளப் போகிறேன்."

"இந்த யோசனையை உனக்குச் சொல்லியது யார்?"

"சுர்மா."

யக்ஞதத்தன் நண்பனுடன் பெண்ணைப் பார்ப்பதற்காக மித்தருடைய வீட்டை அடைந்தான். ஒரு ஜமக்காளத்தின்மீது பெண் உட்கார்ந்திருந்தாள். பல தடவைகள் துவைக்கப்பட்டுக் கிழிந்து போன பழைய புடைவை ஒன்றை உடுத்திருந்தாள். கைகளில் தங்க முலாம் பூசிய பித்தளை வளையல்கள், சிற்சில இடங்களில் முலாம் தேய்ந்துவிட்டதால், வெளியில் பித்தளை தெரிந்துகொண்டிருந்தது. தலையில் மிக அதிகமாக எண்ணெய் தடவியிருந்ததால், நெற்றியில் வழிந்துகொண்டிருந்தது. தலை நடுவில் உச்சியின் மேல், கட்டிலைப் போல் பெரிய கொண்டையொன்றைச் சுற்றிக் கட்டியிருந்தாள். நண்பர்கள் இருவரும் அவளைப் பார்த்ததும் புன்முறுவல் செய்தனர். சிரிப்பை அடக்கிக்கொண்டு யக்ஞதத்தன் அப்பெண்ணைப் பார்த்து, "உன் பெயர் என்ன?" என்று கேட்டான்.

அவள் தன் பெரிய கருவிழிகளால் அவனை நோக்கிய வண்ணம், "பிரதுல்" என்று பதிலளித்தாள்.

யக்ஞதத்தன் தன் நண்பனைக் கிள்ளிய வண்ணம் சிரித்துக் கொண்டே, "நன்றாய்ப் பார். இது கதாதரன்* அல்லவே?" என்றான்.

"வீண் அதிகப் பிரசங்கித்தனம் வேண்டாம். பிடித்திருக் கிறதா என்று சொல்" என்று நண்பன் பதிலளித்தான்,

"இதோ சொல்கிறேன்........."

"சரி, என்ன படித்திருக்கிறாய்?"

"நான் ஒன்றும் படிக்கவில்லை."

"ரொம்ப நல்லது."

"வேலை செய்யத் தெரியுமா?"

பிரதுல் தலையை ஆட்டினாள். பக்கத்தில் நின்றுகொண்டிருந்த ஒரு வேலைக்காரி வியாக்கியானம் செய்யத் தொடங்கினாள். வேலையில் மிகக் கெட்டிக்காரி. சமையல், பரிமாறுதல், வீட்டுக் காரியங்களைக் கவனித்துக்கொள்ளுதல் - இவைகளில் எல்லாம் தன் தாயைப் போலத்தான். வாயிலிருந்து ஒரு வார்த்தை வெளிவராது. ரொம்பச் சாந்த குணம்" என்றாள்.

"அதுதான் அவளைப் பார்த்தவுடன் தெரிகிறதே. உன் தந்தை இருக்கிறாரா?"

"இல்லை."

"தாயும் இறந்துவிட்டாளா?"

"ஆம்."

அவளுடைய கண்களில் கண்ணீர் நிரம்பியிருப்பதை யக்ஞதத் தன் கண்டான்.

"உனக்கு உறவினர் ஒருவரும் இல்லையா?"

"இல்லை."

"என் வீட்டிற்கு வருகிறாயா?"

அவள் தலையை அசைத்தாள். "உம்." அச்சமயம் தற்செய லாக அவள் ஜன்னல் பக்கம் திரும்பவே, அங்கே இரண்டு கண்கள் நெருப்பைக் கக்கிக்கொண்டிருப்பதைப் பார்த்தாள். உடனே நடுங்கிக்கொண்டு, "மாட்டேன்" என்றாள்.

நாங்கள் வெளியில் புறப்படும்பொழுது ஸ்ரீ மித்தரைச் சந்தித் தோம்.

---

*கிரீஷ் சந்திரகோஷின் நாடகங்கள் ஒன்றில், போலீஸார் தேடிய பொழுது அகப்படாமல் தப்புவதற்காக, ஸ்திரீயின் ஆடைகளை அணிந்துகொண்டிருந்த ஓர் ஆடவன்.

" பெண்ணைப் பார்த்தீர்களா ?"

" ஆம், நல்ல பெண்தான் !"

" அப்படியானால், முகூர்த்தத்திற்கு நாள் பார்க்கட்டுமா ?"

" உம். "

## 4

பன்னிரண்டு, பதின்மூன்று வயதுப் பையனுடைய கையிலிருந்து அவன் அரைகுறையாய்ப் படித்திருந்த அபூர்வசம்பவங்கள் நிறைந்த நாவல் ஒன்றை முரடன் ஒருவன் பிடுங்கி ஒளித்துவைத்துவிட்டால், அவன் எப்படி இந்த அறைக்கும், அந்த அறைக்குமாய்ப் போய்த் தேடிக்கொண்டும், கண்டவர்களை எல்லாம் கோபித்துக்கொண்டும் இருப்பானோ, அதே மாதிரி யக்ஞதத்தன் வருகைக்காக, சுர்மா அவஸ்தைப்பட்டுக் கொண்டிருந்தாள். நாற்காலி, சோபா, படுக்கை-இவை மீதெல்லாம் கோபித்துக்கொண்டாள். ஒரு சமயம் இந்த நாற்காலியிலும் மற்றொரு சமயம் அந்த நாற்காலியிலுமாக உட்கார்ந்தாள். யக்ஞதத்தன் அறைக்குள் நுழைந்தான்.

" அண்ணா, என்ன நடந்தது ?"

யக்ஞதத்தன் பதில் ஒன்றும் சொல்லவில்லை.

" பெண் பிடித்திருக்கிறதா ?"

" உம். "

" கல்யாணம் எப்பொழுது ?"

" அநேகமாய் இந்த மாதத்திலேயே - "

வாடிய முகத்துடன் சுர்மா யக்ஞதத்தனுக்குச் சமீபத்தில் வந்து, " உண்மையைச் சொல்ல மாட்டீர்களா ?" என்றாள்.

"இது என்ன தொந்தரவு? உண்மையைத்தானே சொல்கிறேன்"

" என் முகத்தைப் பார்த்துச் சொல்லுங்கள். பெண் பிடித்திருக்கிறதா ?"

" உம். "

என்ன பதில் சொல்வதென்று சுர்மாவுக்குத் தெரியவில்லை. அடிபட்ட குழந்தை அழுவதற்கு முன்பு தலையை ஆட்டிக்கொண்டு அர்த்தமற்ற வார்த்தைகள் சொல்வதுபோல், சுர்மாவும் தலையசைத்த வண்ணம் ஈனஸ்வரத்தில், " நான்தான் முன்னமே சொன்னேன் அல்லவா ?" என்றாள்.

இவ்வளவு சீக்கிரத்தில் யக்ஞதத்தனுக்குப் பெண் பிடித்து, முகூர்த்தமும் தீர்மானமாகிவிடுமென்று சுர்மா நினைக்கவே இல்லை.

ஆகையினால் நாள் முழுதும் அவள் தன் அறையில் உட்கார்ந்து இவ்விஷயத்தைப்பற்றியே சிந்திக்க ஆரம்பித்தாள். உண்மை என்னவென்று யக்ஞதத்தனுக்கும் சிறிது விளங்க ஆரம்பித்தது. "இந்தக் கல்யாணம் வேண்டாம், சுரோ" என்றான்.

"இப்படி எங்காவது உண்டா, முகூர்த்தம் தீர்மானமாகிய பின்பு? என்றாள் சுர்மா.

"ஒன்றும் தீர்மானமாகவில்லை."

"அது ஒன்றும் இனி நடக்காது. ஏழைப் பெண் அல்லவா? அதையும் சற்று யோசித்துப் பாருங்கள். வாக்குக் கொடுத்துவிட்டு இனி மாறலாமா?"

பிரதுல் குமாரியின் முகமும், அவளுடைய கண்களில் அன்று நிரம்பிய கண்ணீரும், யக்ஞதத்தனுக்கு ஞாபகம் வந்தன. ஆகையினால் பதில் சொல்ல அவனுக்கு நா எழவில்லை. ஆனால் அவனுடைய மனத்தில் அநேகவிதமான எண்ணங்கள் தோன்றின. சுர்மாவின் மனோபாவத்தை அறிய அவனால் இயலவில்லை.

## 5

விவாகம் முடிந்தவுடன் யக்ஞதத்தன் பெண்ணை வீட்டிற்கு அழைத்து வந்தான். மிகுந்த அன்புடன் சுர்மா அவளை மார்புறத் தழுவிக்கொண்டாள். தன்னிடமிருந்த ஆபரணங்களை எல்லாம் அவளுக்கு அணிவித்தாள். தன் விலையுயர்ந்த புடைவைகளையெல்லாம் எடுத்து அவள் பெட்டியில் நிரப்பினாள். சுர்மா வாடிய முகத்துடன் புதுப்பெண்ணை நாள் முழுதும் அலங்கரித்துக்கொண்டிருப்பதைக் கண்டதும், யக்ஞதத்தனுடைய முகம் சிறுத்துவிட்டது. உண்மையான சொப்பனமாயிருந்தால் சகித்துக்கொள்ளலாம். சகிக்க முடியாததாயிருந்தால் நித்திரை தெளிந்துவிடும். ஆனால் விழித்துக்கொண்டே கனவு காண்பது மிகக் கஷ்டமான காரியம். ஏனென்றால் அதற்கு முடிவே இல்லை. ஒரு சமயம் அது கனவாகத் தோன்றும்; மற்றொரு சமயம் அது உண்மையாகத் தோன்றும். யக்ஞதத்தனும், சுர்மாவும் இதே நிலைமையில் தான் இருந்தார்கள்.

ஒரு நாள் யக்ஞதத்தன் சுர்மாவைத் தன் அறைக்குள் அழைத்து, "சாயை!" என்றான்.

"என்ன அண்ணா?"



மதுரை காமராசர் பல்கலைக்கழக அவ்வை தி. க. சண்முகம் நூலகம்

"ஜோதி என்று சொல்லமாட்டாயா?"

தலைகுனிந்து, "ஜோதி" என்றாள் சுர்மா.

யக்ஞதத்தன் தன் இரண்டு கைகளையும் நீட்டி, "வெகு நாட்களாய் என் பக்கத்தில் நீ வரவில்லையே, வா" என்றான்.

சுர்மா ஒரு முறை அவனுடைய முகத்தை உற்று நோக்கினாள். மறுக்ஷணமே எழுந்திருந்து, "என்ன வேலை செய்தேன்? மதனியைத் தனியே விட்டு வந்திருக்கிறேன்" என்று சொல்லிக்கொண்டே ஓடிவிட்டாள்.

முன்பின் தெரியாத ஒரு பெரிய மனுஷரைக் கோபத்தினால் கன்னத்தில் அடிக்க, அவர் மிக்க சாந்தத்துடன் மன்னித்துவிட்டுச் சென்றால், ஒருவனுடைய மனம் என்ன பாடு படுமோ, அவ்விதமே யக்ஞதத்தனும் மிகுந்த கஷ்டப்பட்டான். தான் தவறு செய்துவிட்ட தாகவும், அதைச் சுர்மா மன்னித்துவிட்டதாகவும் அவனுக்குத் தோன்றியது.

சர்வாபரணபூஷிதையாகிய புதுப்பெண்ணைச் சுர்மா வலிய இழுத்துக்கொண்டு வந்து அவனுக்குப் பக்கத்தில் உட்கார வைப்பாள். சூரியாஸ்தமனமாகியதும், கதவை இழுத்து வெளியில் பூட்டி விட்டுப் போய்விடுவாள். யக்ஞதத்தன் கன்னத்தில் கையை வைத்துக் கொண்டு யோசித்துக்கொண் டிருப்பான். பிரதுலும் ஒன்றும் தெரியாதவள் அல்ல; அவளுக்கும் கொஞ்சங் கொஞ்சமாக விஷயம் விளங்கியது. ஆயினும் பெண்தானே? இரவு முழுதும் விழித்துக்கொண்டிருப்பாள்.

கல்யாணமாகி எட்டுத் தினங்கள்கூட ஆகவில்லை. ஒரு நாள் காலை சுர்மாவைக் கூப்பிட்டு, "சுரோ, வர்த்தமானத்தில் அத்தை இருக்கிறாள். அவளுக்குப் பிரதுலைக் காட்டிவிட்டு வருகிறேன்" என்றான் யக்ஞதத்தன்.

* * * *

தாமோதர் நதிக்கப்பால் ஒரு கிராமத்தில் அத்தை வசித்து வந்தாள். வீட்டிற்குள் நுழையும்போதே, "அத்தை, நாட்டுப் பெண் வந்திருக்கிறாள், பார்த்தாயா?" என்றான் யக்ஞதத்தன்.

அத்தை, "கல்யாணம் செய்துகொண்டாயா, அப்பா! தீர்க்கா யுசாய் இரு. இப்பொழுதாவது நாலுபேரைப்போல் வீடுவாசலோடு குடித்தனம் செய்" என்றாள்.

"அதற்காகத்தானே சுர்மா கட்டாயப்படுத்திக் கல்யாணம் செய்துவைத்திருக்கிறாள்?"

" சுர்மாதானா கல்யாணம் செய்துவைத்தாள் ?"

" ஆம். ஆனால் விதிதான் இன்னும் என்னை விட்டபாடில்லை. இந்தப் பெண்ணுடன் நான் இல்லறம் நடத்தக் கூடாதாம். "

" ஏன், என்ன விஷயம் ?"

" பெண்ணுக்கு மாரக தோஷம் இருப்பதால், கொஞ்ச காலம் அவளோடு இருக்கலாகாதென்று ஜோஸ்யர் சொல்லுகிறார்.'

" அப்படிப் பெண்ணை......"

" அப்பொழுது அவசரத்தில் ஒன்றையும் கவனிக்கவில்லை இவள் உன்னுடனேயே இருக்கட்டும். மாதம் ஐம்பது ரூபாய் அனுப்புகிறேன். அதை வைத்துக்கொண்டு சௌகரியமாய் இருக்கலாமல்லவா ?"

" மஹாராஜியாய் இருக்கட்டும். லக்ஷ்மிபோன்ற பெண் பெரியவளாய்விட்டாளே, அப்பா. இதற்கு ஏதாவது பரிகாரம் இல்லையா ?"

" இருக்கும். நான் பட்டாச்சாரியாரைக் கேட்டு உனக்குத் தெரிவிக்கிறேன்."

" அப்படியானால் நீ இங்கேயே இரு" என்று சாயந்தரம் பிரதுலைச் சமீபத்தில் அழைத்து யக்ஞதத்தன் சொன்னான்.

" சரி " என்று அவள் தலையை அசைத்தாள்.

" உனக்கு என்ன வேண்டுமென்றாலும், உடனே எனக்குத் தெரிவி. "

" சரி. "

" உனக்குக் கடிதம் எழுதத் தெரியுமா ? "

" ஊஹூம். "

" பின் எப்படி எனக்குத் தெரிவிப்பாய் ?"

வீட்டில் வளர்க்கப்பட்ட மானைப்போல் பிரதுல் தன் பதியின் முகத்தை நோக்கிய வண்ணம் பேசாமல் நின்றுகொண்டிருந்தாள். யக்ஞதத்தன் முகத்தைத் திருப்பிக்கொண்டு போய்விட்டான்.

பிரதுல் அதிகாலையிலேயே எழுந்திருந்து வீட்டு வேலைகளைச் செய்வாள். சிறிது நேரமாவது சும்மா இருக்க மாட்டாள். வீட்டிற்குப் புதிதாக இருந்தபோதிலும், வெகு நாள் பழகியவள்போல் காரியங்களைச் செய்ய ஆரம்பித்தாள்.

பிரதுல் நிறைய ஆபரணங்கள் அணிந்திருந்தாள். தெருவிலுள்ள பெண்களெல்லாரும் அவைகளைப் பார்க்க வந்தார்கள். அவர்

களில் ஒருத்தி, "இந்த நகைகளெல்லாம் உனக்கு யார் போட்டார்? உங்கள் அப்பாவா?" என்று கேட்டாள்.

"எனக்கு அப்பாவும் இல்லை, அம்மாவும் இல்லை. நாத்தனார் இந்த நகைகளைக் கொடுத்தாள்?"

ஒத்த வயதுப் பெண்கள் சிலர் அவளுக்குப் பழக்கமாயினர். அவர்கள் அவளைத் துருவித் துருவிக் கேள்விகள் கேட்க ஆரம்பித்தனர். "உன் நாத்தனார் மிக நல்லவள்போலிருக்கிறது" என்றனர்.

"உம்."

"எல்லா நகைகளும் அவளுடையவையா?"

"ஆம்."

"அவள் இவைகளை அணிவதில்லையா?"

"அவள் விதவை. ஆபரணம் அணிவதில்லை."

"அவளுக்கு என்ன வயசிருக்கும்?"

"நம்மைவிடச் சிறிது அதிகமிருக்கும். அவள்தான் கட்டாயப் படுத்தி என்னைத் தன் சகோதரனுக்குக் கல்யாணம் செய்து வைத்தாள்."

"உன் கணவர் அவள் சொல்லைத் தட்டமாட்டாரோ?"

"ஆமாம்."

* * * *

மேல்மாடி ஜன்னலிலிருந்து யக்ஞதத்தன் தனியே வீட்டிற்குத் திரும்பி வருவதைச் சுர்மா பார்த்தாள். "அண்ணா, பிரதுலை எங்கே விட்டு வந்தீர்கள்?" என்று அவன் வீட்டிற்குள் நுழைந்ததும் கேட்டாள்.

"அத்தை வீட்டில்."

"ஏன் கூட அழைத்துக்கொண்டு வரவில்லை."

"இப்பொழுது அங்கே இருக்கட்டும்; அப்புறம் பார்த்துக் கொள்ளலாம்."

அவன் கூறிய வார்த்தைகள் அவளுடைய ஹிருதயத்தை உறுத்தின. சில தினங்கள் இருவரும் பேசாமல் இருந்தார்கள். "வெகுநேரம் ஆய்விட்டதே. குளித்துச் சாப்பிட்டால் என்ன?" என்பாள் சுர்மா. "உம், இதோ போகிறேன்" என்பான் யக்ஞதத்தன்.

இப்படிச் சில தினங்கள் கழிந்தன.

ஆனால் ஒரே வீட்டில் இருந்துகொண்டு இப்படி எத்தனை நாட்கள் இருக்க முடியும்? மறுபடியும் யக்ஞதத்தன் மிகுந்த அன்புடன், "சாயை!" என்று கூப்பிட ஆரம்பித்தான். ஆனால் சாயை இப்

பொழுது அவனை, "ஜோதி" என்று அழைப்பதில்லை. "அண்ணு" என்றுதான் கூப்பிடுவாள்.

"அண்ணு, ஏறக்குறைய மூன்று மாதங்கள் ஆகின்றனவே. மதனியை அழைத்துக்கொண்டு வாருங்கள்" என்று ஒரு நாள் சுர்மா சொன்னாள்.

"அவளாக வரட்டும்" என்று யக்ஞுதத்தன் பேச்சை மாற்றினான். அவனுடைய மனோபாவத்தைச் சுர்மா அறிந்துகொண்டு பேசாமல் இருந்துவிட்டாள்.

அத்தையினிடமிருந்து எப்பொழுதாவது கடிதம் வரும். "பிரதுலுக்கு மலேரியா வந்திருக்கிறது, அதற்கு வைத்தியம் செய்ய வேண்டும்" என்று அத்தை எழுதுவாள். அதன் அர்த்தத்தைப் புரிந்துகொண்டு யக்ஞுதத்தன் சிறிது அதிகமாகப் பணம் அனுப்புவான். அப்புறம் மாதம் முழுதும் ஒரு தகவலும் வராது.

இப்படியிருக்கும்பொழுது ஒரு நாள் திடீரென்று, "அத்தை இறந்துவிட்டாள்" என்று கடிதம் வந்தது.

யக்ஞுதத்தன் வர்த்தமானம் சென்றான். பிரதுலைக் கட்டாயம் கூட்டிக்கொண்டு வரும்படி சுர்மா சொல்லியனுப்பினாள்.

வர்த்தமானத்தில் அத்தையின் ஈமச்சடங்குகளெல்லாம் முடிந்த பின், ஒரு நாள் மத்தியானம் வராந்தாவில் நின்றுகொண்டு ஊருக்குத் திரும்புவதைப்பற்றி யக்ஞுதத்தன் யோசித்துக்கொண்டிருந்தான். பிரதுல் முற்றத்தில் நின்றுகொண்டிருந்தாள். அவளைக் கையலைத்துத் தன் அருகே கூப்பிட்டான்.

பிரதுல் பக்கத்தில் வந்தாள். "உங்களிடம் ஒரு வார்த்தை பேச வேண்டும்" என்றாள்.

"சரி, சொல்."

"எனக்கு ஏதாவது வேண்டுமென்றால், உங்களைக் கேட்குமாறு ஒரு நாள்..........."

"ஆம், உனக்கு என்ன வேண்டும், கேள்."

"வீட்டில் எல்லோரும் என்னை அதிருஷ்டங் கெட்டவள் என்று சொல்லுகிறார்கள். ஆகையினால் இனி இங்கிருப்பதற்கு எனக்கு இஷ்டமில்லை."

"எங்கே இருக்கலாமென்று நினைக்கிறாய்?"

"கல்கத்தாவில் ஏதாவது ஒரு நல்ல வீட்டில் வேலை கிடைக்காதா? எனக்கு எல்லா வேலையும் செய்யத் தெரியுமே."

"உன் வீட்டிற்கு நீ போகிறாயா?"

"என்னுடைய வீடா? எனக்கு ஏது வீடு? அவர்கள் இப்பொழுது இருக்க விடுவார்களா?"

கையினால் மனைவியின் மோவாய்க்கட்டையை மேலே தூக்கி, "என் வீட்டிற்கு வருகிறாயா?" என்று கேட்டான் யக்ஞதத்தன்.

"வருகிறேன்."

"சுர்மா உன்னைப்பற்றியே மிகவும் கவலைப்பட்டுக்கொண்டிருக்கிறாள்."

சுர்மாவின் பெயரைக் கேட்ட மாத்திரத்தில் சந்தோஷத்தால் அவளுடைய முகம் மலர்ந்தது. "மதனி என்னை ஞாபகம் வைத்துக்கொண்டிருக்கிறாளா?"

"ஆம்."

"அப்படியானால் என்னைக் கூட்டிக்கொண்டு போங்கள்."

பிரதுல் தன் விஷயத்தைத் தானே யோசித்து முடிவு செய்துகொள்ளும் வழக்கமுடையவள். மற்றவர்களைக் கேட்கமாட்டாள். "உங்களுக்கு என்னால் ஒரு கெடுதியும் வரக்கூடாது. ஆகையால் கீழேயுள்ள அறையிலேயே நான் வசித்துக்கொள்கிறேன். வீட்டு வேலைகளைக் கவனிப்பதற்கும் அதுதான் சௌகரியமாயிருக்கும்" என்று நன்கு யோசித்துக் கூறினாள்.

"மாடியில் நீ வசிப்பதற்கு அறை இல்லையா?"

"கீழேயுள்ள அறையே போதும்."

யக்ஞதத்தன் இதற்குமேல் ஒன்றும் கூறவில்லை.

## 6

பிரதுல் வந்திருப்பதைச் சுர்மா பார்த்தாள். அளவுக்கு மிஞ்சிய தன் சந்தோஷத்தை ஒருவாறு அடக்கிக்கொண்டாள். பிரதுலைப் பார்ப்பதற்கும் மிகுந்த ஆவலுடையவள்போல் காட்டிக்கொள்ளவில்லை. "பிரதுல், அங்கே உனக்கு உடம்பு சௌகரியமில்லை என்று கேள்விப்பட்டேனே" என்றாள்.

"அடிக்கடி ஜுரம் வந்துகொண்டிருந்தது."

அவளுடைய நெற்றியிலிருந்த வியர்வையைத் துடைத்துக்கொண்டு, "இங்கே வைத்தியம் செய்தால் சௌகரிமாய்விடும்" என்று சுர்மா கூறினாள்.

பிரதுலுக்காகக் கீழேயுள்ள அறை சுத்தம் செய்யப்படுவது சுர்மாவுக்கு மத்தியான்னம் தெரியவந்தது. அவளுடைய கண்களில்

நீர் ததும்பியது. அதைத் துடைத்துக்கொண்டு யக்ஞதத்தனிடம் சென்று, "அண்ணு, பிரதுலுக்குப் படுக்கை, கீழ் அறையிலா?" என்று கேட்டாள்.

யக்ஞதத்தன் புத்தகத்தைப் பார்த்தவண்ணம், "அவள் அப்படித்தான் சொல்கிருள்" என்ருன்.

"நீங்கள் ஒன்றும் சொல்லப்போவதில்லையா?"

"நான் என்ன சொல்வது? யாருக்கு எது இஷ்டமோ, அப்படிச் செய்யவேண்டியதுதானே?"

லஜ்ஜையும் கோபமும் தாங்கமுடியாமல் சுர்மா அவனுக்கு முன்ருலேயே அழ ஆரம்பித்துவிட்டாள்.

மாடியில் நடந்த இவ்விஷயம் கீழே ஒருவருக்கும் தெரியாது.

பிரதுல் வீட்டு வேலைகள் எல்லாவற்றையும் மிகுந்த சிரத்தையுடன் கவனிக்க ஆரம்பித்தாள். மாடிக்குச் செல்வதே இல்லை. பதியைச் சந்திப்பதுமில்லை. கொஞ்சங் கொஞ்சமாகச் சுர்மாவும் மாடிக்குச் செல்வதை நிறுத்திவிட்டாள். பிரதுல் சந்தோஷமாய் வேலை செய்வாள்; சுர்மா பக்கத்தில் உட்கார்ந்துகொண்டிருப்பாள்.

வேலை செய்வதில் எவ்வளவு ஆனந்தம் இருக்கிறதென்பதை ஒருத்தி காட்டினுள். வெள்ளம்போன்று வேலை எத்தகைய துக்கத்தையும் அடித்துக்கொண்டு போய்விடுமென்பதை மற்ருெருத்தி அறிந்தாள். இருவரில் ஒருவரேனும் அதிகமாய்ப் பேசுவதில்லை. ஆயினும் அவர்களிடையே நாளுக்கு நாள் அன்பு அதிகரித்துக் கொண்டே சென்றது.

பிரதுலுக்கு அடிக்கடி ஜுரம் வருவதுண்டு. இரண்டு மூன்று தினங்கள் உபவாசம் இருப்பாள். ஜுரம் சௌகரியமாகிவிடும். அவள் மருந்து சாப்பிடும் வழக்கமில்லை. அப்படிப்பட்ட சமயங்களில் வீட்டுவேலைகளை வேலைக்காரிகள் செய்வார்கள். சுர்மாவுக்கு வேலை செய்ய வேண்டுமென்று ஆவல் இருந்தபோதிலும், செய்ய முடிவதில்லை.

சொர்ண விக்கிரஹம் போன்ற சுர்மாதேவியிடம் இப்பொழுது பழைய தேஜஸையும் காந்தியையும் காணவில்லை. அவளுடைய ரூப லாவண்யமெல்லாம் இந்த இரண்டு மாதங்களில் எங்கே பறந்து விட்டனவோ தெரியவில்லை. "நீங்கள் ஏன் இப்படி நாளுக்குநாள் இளைக்கிறீர்கள். மதனி?" என்று அடிக்கடி பிரதுல் கேட்பாள்,

"நானு? தேக சௌக்கியத்திற்காகக் கொஞ்சநாள் எங்கேயாவது வெளியே சென்ருல், உனக்கொன்றும் கஷ்டமேற்படாதே?"

"அவசியம் ஏற்படும். ஏன் ஏற்படாது?"

"அப்படியானால் நான் போகவில்லை."

"வேண்டாம் மதனி, போகவேண்டாம். இங்கேயே இருந்து மருந்து சாப்பிடுங்கள்."

மிகுந்த அன்புடன் அவளுடைய நெற்றியில் சுர்மா ஒரு முத்தமிட்டாள்.

ஒரு நாள் சுர்மா யக்ஞதத்தனுக்குப் பரிமாறிக்கொண்டிருந்தாள். வாடி வதங்கிய அவளுடைய முகத்தை மிகுந்த கவலையுடன் யக்ஞதத்தன் பார்த்துக்கொண்டிருந்தான். சுர்மா தலை நிமிர்ந்ததும் நீண்ட பெருமூச்சுடன், "எனக்குச் சாவு என்றைக்கு வருமோ, தெரியவில்லையே!" என்றான்.

"ஏன்?"

இப்படிக் கேட்கும்போதே சுர்மாவின் கண்களில் நீர்நிரம்பியது.

"இன்னும் எத்தனை நாளைக்கு இந்தச் சரீரத்தைச் சுமந்து கொண்டிருக்க வேண்டுமோ என்று என் நெஞ்சம் கலங்குகிறது."

துப்பாக்கியினால் சுடப்பட்ட காட்டு மிருகமானது பூமியை விட்டு ஆகாயத்தில் பறக்க யத்தனிப்பதுபோல் துள்ளிக் குதிக்கிறது. ஆனால் ஆகாயத்தில் தனக்கு ஆதரவில்லாததைக் கண்டு, மீண்டும் பூமிக்கே வந்து அதை மார்புறத் தழுவிக்கொண்டு உயிர் விடுகிறது. அதைப்போல் சுர்மாவும் துடிதுடித்துக்கொண்டு ஆகாயத்தை நோக்கினாள். பின்னர், பூமியின்மீது புரண்டு அழ ஆரம்பித்தாள். "அண்ணா, என்னை மன்னியுங்கள். நான் உங்களுக்குச் சத்துரு.என்னை எங்காவது அனுப்பிவிட்டு நீங்கள் சுகமாயிருங்கள்."

வேலைக்காரி எங்கே வந்துவிடுகிறாளோ என்று பயந்து யக்ஞதத்தன் அவளுடைய கையைப் பிடித்துத் தூக்கினான். அன்போடு அவளுடைய கண்ணீரைத் துடைத்துக்கொண்டே, "சீ! இன்னுமா சிறுபிள்ளை? அழாதே" என்றான்.

கண்ணீரைத் துடைத்துக்கொண்டு சுர்மா சட்டென்று அறைக்குள் சென்று உள்ளிருந்து தாழிட்டுக்கொண்டாள்.

## 7

இதற்கப்புறம் ஒரு நாள் பிரதுலைச் சுர்மா தன் பக்கத்தில் அழைத்து, "அண்ணா உன்னிடம் ஏதாவது சொன்னாரா?" என்று கேட்டாள்.

பிரதுல் வஞ்சகமற்று, "என்ன சொல்வார்?" என்றாள்.

"அப்படியானால் நீ அவரிடம் ஏன் போவதில்லை? போக உனக்கு இஷ்டமில்லையா?"

பிரதுல் முதலில் மிகவும் வெட்கப்பட்டாள். பின், தலை குனிந்து கொண்டு, "இஷ்டமில்லாமல் என்ன? ஆனால் நான் போகக்கூடாதல்லவா?" என்றாள்.

"ஏன் பிரதுல்?"

"உங்களுக்குத் தெரியாதா?"

"தெரியாதே."

"ஒருவேளை உங்களுக்கு மறந்து போயிருக்கும் மதனி; எனக்கு மாரகதோஷம் இருக்கிறதல்லவா?"

"யார் சொன்னது?"

"அவர்தாம் அத்தையிடம் சொன்னார். அதனால்தான்........"

உடனே சுர்மாவுக்கு ரோமம் சிலிர்த்தது. "அது பொய், பிரதுல்."

"பொய்யா?"

ஆச்சரியத்துடன் பிரதுல் சுர்மாவைப் பார்த்தாள். சுர்மாவின் உடம்பெல்லாம் துடித்தது. "பொய், முழுப்பொய் அது!" என்றாள்.

"அவர் பொய் சொல்லியிருப்பாரென்று நான் நம்பவில்லை."

சுர்மாவுக்குப் பொறுக்க முடியவில்லை. இரண்டு கைகளாலும் அவளை இறுகக் கட்டிக்கொண்டு, அழ ஆரம்பித்தாள். "பிரதுல், நான் பெரும் பாதகி."

அவளுடைய பிடியினின்றும் மெதுவாகத் தன்னை விடுவித்துக் கொண்டு, "ஏன் மதனி?" என்றாள் பிரதுல்.

"ஐயோ! இதை இப்பொழுது கேட்காதே."

* * * *

யக்ஞதத்தனுக்கு முன்னால் சுர்மா ஒரு புயல்போல் போய் நின்றாள். "பிரதுலை இம்மாதிரியா ஏமாற்றி வைத்திருக்கிறீர்கள்? எத்தகைய பொய்யர் நீங்கள்?" என்று கேட்டாள்.

யக்ஞதத்தன் பிரமித்துப் போனான்.

"இது என்ன சுரோ?"

"சீ! சீ! உங்களுக்கு வெட்கமாயில்லை?"

யக்ஞதத்தனுக்கு ஒன்றும் விளங்கவில்லை.

" என்ன நினைத்துக் கல்யாணம் செய்துகொண்டீர்கள் ? என்ன நினைத்து அவளை இப்படி விட்டிருக்கிறீர்கள் ? எனக்காகவா ? என் முகத்தைப் பார்த்தா, இப்படி ஏமாற்றிவருகிறீர்கள் ?"

" சுர்மா, உனக்குப் பைத்தியம் பிடித்துவிட்டதா ?"

" எனக்கா பைத்தியம் ? உங்களைவிட எனக்கு இவ்விஷயத்தில் அதிகம் தெரியும். என்னை எங்காவது அனுப்பிவிடும் " இங்ஙனம் சொல்லும்பொழுதே அவளுடைய உடம்பு துடித்தது.

யக்ஞதத்தன் உரத்த குரலில், " நீ என்ன சொல்லுகிறாய், சுரோ ?" என்று கதறினான்.

" என்ன சொல்கிறேன் ? நீ பொய்யன், ஏமாற்றுபவன் என்று சொல்கிறேன்."

நிமிஷமாத்திரத்தில் யக்ஞதத்தனுடைய உடம்பு முழுதும் தீப்பற்றி எரிவதுபோல் தோன்றியது. காரணமின்றிச் சுர்மா தன்னுடன் சண்டையிட வந்திருப்பதாக அவன் நினைத்தான். செய்வது இன்னதென்று அறியாமல் மேஜைமீதிருந்த பெரிய ஒரு 'ரூலரை' எடுத்து "நான் அதமனா, ஏமாற்றுபவனா, பொய்யனா ? இதோ அதற்குப் பிராயச்சித்தம் செய்துகொள்கிறேன்" என்று உரத்துக் கத்திக்கொண்டே தன் தலையில் பலமாய் அடித்துக் கொண்டான்.

மண்டையுடைந்து ரத்தம் தாரை தாரையாக வழிய ஆரம்பித்தது. மிக்க பீதியுடன் சுர்மா, "அண்ணா, அண்ணா" என்று மூர்ச்சித்துத் தரையில் விழுந்துவிட்டாள். யக்ஞதத்தன் அதைப் பார்த்தான். அவன் முகம் முழுதும் ரத்த மயமாக இருந்தது, கண்களிலும் ரத்தம் வழிந்திருந்ததால், எல்லாம் ஒரு பனிப் படலம்போல் தோன்றியது. உன்மத்தமடைந்தவன்போல், "இனி என்ன ?" என்று கூறிக்கொண்டு மீண்டும் கையைத் தூக்கினான். பின்னாலிருந்து யாரோ அவன் கையைப் பிடித்தார்கள். திரும்பிப் பார்த்தான். அவனுடைய மனைவி. அழுதுகொண்டே, " நீ வந்துவிட்டாயா ?" என்றான்.

முழங்காலில் தலையை வைத்துக்கொண்டு அவனும் மூர்ச்சித்து விட்டான்.

சுர்மா கீழேயிருந்து மாடிக்கு ஓடிய விதத்தைப் பார்த்ததும், ஆச்சரியமும் சம்சயமுங்கொண்டு, மெதுவாகப் பின்னால் வந்து, கதவிற்குப் பக்கத்தில் நின்றுகொண்டு பிரதுல் எல்லாவற்றையும் பார்த்தாள், கேட்டாள். அநேக உண்மைகள் அவளுக்கு நன்கு

விளங்கின. அவளுடைய ஹிருதயம் வேகமாகத் துடிக்க ஆரம்பித்தது. கண்கள் இருளடைந்தன. ஆயினும் அதையெல்லாம் சமாளித்துக்கொண்டு, தன் பதியைத் தூக்கி மடியில் வைத்துக்கொண்டாள்.

## 8

ஆறு தினங்களுக்கு அப்புறம் தன்னுணர்வு வந்தபோது, "அண்ணுவுக்கு உடம்பு எப்படியிருக்கிறது?" என்று சுர்மா கேட்டாள்.

"இப்பொழுது பரவாயில்லை" என்ருள் வேலைக்காரி.

"நான் பார்த்துவிட்டு வருகிறேன்" என்று சுர்மா எழுந்தாள். ஆனுல் மீண்டும் படுக்கையில் விழுந்துவிட்டாள். "நீங்கள் ரொம்பப் பலஹீனமா யிருக்கிறீர்கள். காய்ச்சலும் அடிக்கிறது. எழுந்திருக்கக் கூடாது. டாக்டர் சொல்லியிருக்கிருர்" என்று வேலைக்காரி சொன்ஞள்.

உண்மையில் அவள் மிக்க பலஹீனமாய்த்தான் இருந்தாள். சிற்சில சமயங்களில் தேம்பித்தேம்பி அழுதுகொண்டு, 'ஒளியும் நிழலும்' என்ற தன் பழைய கதையைப்பற்றி யோசித்துக்கொண்டிருப்பாள்.

நாடக ஆரம்பத்தில் ஜோதி தீவிரப் பிரகாசத்துடன் ஜொலித்தது. இப்பொழுது அது அணைந்துகொண்டிருக்கிறது. மத்தியான்ன சூரியன் மேற்குத் திசை நோக்கிச் சாய்ந்துவிட்டது. ஆகையினுல் நிழலும் ஸ்பஷ்டமின்றி மாயமாய் மறையப்போகிறது. கன அந்தகாரத்தை நோக்கி அதில் ஐக்கியமடைய மெதுவாகச் சென்று கொண்டிருக்கிறது. - இங்ஙனம் அழுதுகொண்டே சுர்மா தூங்கி விட்டாள்.

"அக்கா."

"என்ன பிரதுல்?" என்று சுர்மா எழுந்து உட்கார்ந்தாள். அவளுடைய கண்கள் சிவந்திருந்தன; முகம் வற்றியிருந்தது; உதடு கறுத்திருந்தது. இதைப் பார்த்ததும், "என்ன பிரதுல், உன் உடம்புக்கென்ன?" என்று சுர்மா கேட்டாள்.

"உடம்புக்கு ஒன்றுமில்லை. என்னை இந்த வீட்டிற்குக் கொண்டு வந்தவர்கள் நீங்கள். ஆகையினுல் உங்களிடம் சொல்லிக்கொண்டு போகலாம் என்று வந்திருக்கிறேன்."

"எங்கே போவாய், அம்மா?"

சுர்மாவின் பாதங்களில் தலையை வைத்துப் பிரதுல் தரையில் படுத்துவிட்டாள்.

அவளுடைய உடம்பு தீப்போல் காய்ந்துகொண்டிருப்பதைக் கண்டு, "இதென்ன, உடம்பு தீயாய்க் காய்கிறதே!" என்று சுர்மா சொல்லிக்கொண் டிருக்கும்பொழுது ஒரு வேலைக்காரி கதறிக் கொண்டே ஓடிவந்து, "அம்மா, பிரதுல் எங்கே? அடி அம்மா, ஜுரத்தின் வேகத்தில் இங்கே ஓடி வந்திருக்கிறாள். தன் உணர் வில்லாமல் கிடந்து எட்டு நாளாச்சு. அட தெய்வமே! இங்கே எப்படி வந்தாள்?" என்று சொன்னாள்.

"எட்டு நாட்களாக ஜுரமா? டாக்டர் பார்த்துவருகிறாரா?"

"இல்லை, ஒருவரும் பார்ப்பதில்லை. முந்தாநாள் காலையில்தான் குழாய்க்கு அடியில் ஒருமணி நேரம் உட்கார்ந்துகொண் டிருந்தாள். யார் என்ன சொல்லியும் கேட்கவில்லை."

* * * *

சாயந்தரம் யக்ஞதத்தன் அறைக்குச் சுர்மா சென்று அழுதாள்: "அண்ணா, பிரதுல் இனிப் பிழைப்பது கஷ்டம்."

"பிழைப்பது கஷ்டமா? ஏன், என்ன நடந்தது?"

"என் அறையில் சென்று பாருங்கள் அண்ணா; இனி அவள் பிழைப்பது கஷ்டம்."

இரண்டு மூன்று டாக்டர்கள் வந்து பார்த்தார்கள். இரவு முழுதும் யக்ஞதத்தன் அவளுடைய தலைமாட்டில் உட்கார்ந்திருந் தான். எத்தனையோ தடவைகள் தன் முகத்தை அவளுடைய முகத் திற்குச் சமீபத்தில் கொண்டு சென்றான். ஆனால் அவளுக்கு ஒன்றும் தெரியவில்லை.

"பிரதுல், ஒரு தடவையாவது கண்களைத் திறந்து பார். 'மன் னித்துவிட்டேன்' என்று ஒரு தடவை சொல்!"

முன்றானையில் தன் முகத்தை மறைத்து அழுதுகொண்டே, "மதனி, இத்தகைய தண்டனை விதித்துவிட்டா செல்லவேண்டும்?" என்று சுர்மா கதறினாள்.

கௌரவம், அகௌரவம், ஆதரவு, அநாதரவு எல்லாவற்றையும் திரஸ்கரித்துவிட்டு, எல்லையற்ற பரம்பொருளில் வெகு சீக்கிரம் அவள் ஐக்கியமாகிவிட்டாள்.

* * *

"அண்ணா எங்கே? என்று சுர்மா கேட்டாள்.

"நேற்று அவர் பஞ்சாபை நோக்கி எங்கோ சென்றுவிட்டார்" என்று வேலைக்காரி பதிலளித்தாள்.

"எப்பொழுது வருவார்?"

"தெரியவில்லை. சீக்கிரம் வருவதாகத் தோன்றவில்லை."

"நான் எங்கே வசிப்பது?"

"எவ்வளவு ரூபாய் வேண்டுமானாலும் எடுத்துக்கொண்டு, எங்கே உங்களுக்கு இஷ்டமோ அங்கே சென்று வசிக்கும்படி, கணக்கப்பிள்ளையிடம் சொல்லிவிட்டுப் போயிருக்கிறார்."

சுர்மா ஆகாயத்தை நோக்கினாள். உலகத்தின் ஜோதி அணைந்து விட்டது. சூரியனில்லை, சந்திரனில்லை, ஒருநக்ஷத்திரங்கூடத் தென்படவில்லை. அங்கும் இங்கும் பார்த்தாள். தெளிவில்லாத அந்த நிழலும் எங்கோ போய் மறைந்துவிட்டது. நாலு பக்கமும் கோர இருள். தன் ஹிருதயம் நின்றுவிடாதா, தன் கண்கள் இருளடையாவா என்று நினைத்தாள்.

"அம்மா!" என்று வேலைக்காரி கூப்பிட்டாள்.

மேலே பார்த்த வண்ணம், "அண்ணா!" என்று சொல்லிக் கொண்டே கீழே மூர்ச்சித்து விழுந்தாள் சுர்மா.

**ஹிந்திக் கதை:**

# ரா ஜா

["சுதர்சன்"]

## 1

"நூறு வயசு."

நான் திடுக்கிட்டேன். என் காதுகளை நம்ப முடியவில்லை. மேஜைமேல் நோட்டை வைத்துவிட்டு, என்னுடைய நாற்காலியைக் கொஞ்சம் முன்னால் இழுத்துப் போட்டுக்கொண்டு, "நீ என்ன சொன்னாய்? நூறு வயசா? உனக்கு நூறு வயசாச்சா?" என்று கேட்டேன்.

மூன்று சட்டைகளையும் ஒன்றாய்ச் சேர்த்துக் கட்டிக்கொண்டு என் பக்கம் திரும்பி வண்ணான் பதிலளித்தான்: "ஆம் ஐயா, எனக்கு நூறு வயசுதான்! சரியாய் நூறு வயசு. ஒரு வருஷம் கம்மியும் இல்லை, ஒரு வருஷம் அதிகமும் இல்லை. என்னுடைய தேகக்கட்டைப் பார்த்துவிட்டு அநேகம் பேர் ஏமாந்துபோகிறார்கள்."

"ஆனால் நீ அத்தனை வயசானவன்போல் தோன்றவில்லையே. அதிகம் போனால் உனக்கு எழுபது வயசுக்குமேல் இருக்காதென்று நான் நினைக்கிறேன்" என்றேன்.

"இல்லை ஸார், பூரா நூறு வயசாய்விட்டது."

"நீ பெரும் அதிருஷ்டசாலிதான். இந்தக் காலத்தில்தான் ஜனங்கள் ஐம்பது வயசுக்கு முன்னாலேயே டிக்கட் வாங்கிவிடுகிறார்களே!"

வண்ணான் இதற்கு ஒரு பதிலும் சொல்லவில்லை.

திடீரென்று என் மனத்தில் ஓர் எண்ணம் உதித்தது. "சரி, அப்போது, நீ சீக்கியர்களுடைய ராஜ்யத்தைப் பார்த்திருப்பாயல்லவா?" என்று நான் கேட்டேன்.

“ ஆம், பார்த்திருக்கிறேன்.”

“அந்த ராஜ்யத்தில் நீ க்ஷேமமா யிருந்தாயா இல்லையா? அந்த ராஜ்யத்தில் ஜனங்களுடைய நிலைமை எப்படியிருந்தது?”

மறந்துபோன விஷயங்களை ஞாபகப்படுத்திக்கொள்பவன்போல், வண்ணான் ஒரு மாதிரியாக விழித்தான். பின்னர், ஒரு நீண்ட பெரு மூச்சு விட்டுக்கொண்டு சொன்னான்: “நான் அப்போது ரொம்பச் சிறு பையனா யிருந்தேன். சீக்கியர்களுடைய ராஜ்யம் எப்படி இருந்தது என்பது எனக்குத் தெரியாது. ஆனால் சீக்கியர்களுடைய ராஜா எப்படியிருந்தார் என்பதுமட்டும் சொல்ல முடியும்.”

என் உள்ளத்தில் ஒருவித ஆனந்தம் உண்டாயிற்று. “அப்பா, நீ மகாராஜாவைப் பார்த்திருக்கிறாயா, என்ன?” என்று ஆச்சரியத்துடன் நான் கேட்டேன்.

“ஆம் எஜமான்! பார்த்திருக்கிறேன். என்ன சொல்வேன், போங்கள்! அவருடைய புஜபல பராக்கிரமமும், கருணையும் இப்பொழுதும் நினைக்கும்பொழுது ரோமம் சிலிர்க்கிறது. ராஜா தான்; ஆனால் அவருடைய குணமோ பரம சாதுவின் குணம். கர்வம் என்பது பெயர் மாத்திரத்தில்கூட இல்லை. நான் உங்களுக்கு ஒரு விஷயம் சொல்லுகிறேன். ஒரு வேளை நீங்கள் அதை நம்ப மாட்டீர்கள், நீங்கள் அது கதை என்று சொல்வீர்கள். ஆனால் அது கதையல்ல! உண்மையாய் நடந்த விஷயம். அதில் ஒரு வார்த்தை கூடப் பொய்யல்ல; அதைக் கேட்டால் நீங்கள் மிக்க சந்தோஷம் அடைவீர்கள்; ஆச்சரியம் அடைவீர்கள்; ஆனந்தம் அடைவீர்கள். நான் அதிகம் படித்தவனல்ல; ஏதோ கொஞ்சம் ஹிந்தி தெரியும். நீங்கள் இரவும் பகலும் படித்துக்கொண்டிருக்கிறீர்கள். ஆனால் இம்மாதிரி விஷயம், நீங்கள்கூடப் படித்திருக்க மாட்டீர்கள் என்று நான் நினைக்கிறேன்.”

நான் குதூகலத்துடன் கேட்க ஆரம்பித்தேன். வண்ணான் சொல்லலுற்றான்.

“நான் ஒரு வண்ணான். என்னுடைய தகப்பனும் வண்ணான் தான். நாங்கள் அக்காலத்தில் லாகூரிலேயே இருந்தோம். ஆனால் அக்காலத்து லாகூர் வேறு; இக்காலத்து லாகூர் வேறு. அப்பொழுது நாங்கள் துணி வெளுத்த படித்துறையில் இப்பொழுது தண்ணீர் இல்லை. கொஞ்சங் கொஞ்சமாய் ரவிநதி நகர்ந்துகொண்டே போகிறது; அதனுடன் அக்காலமும் நகர்ந்து போய்விட்டது. வித்தியாசம் இவ்வளவுதான். ரவி நகர்ந்தாலும், சிறிது தூரத்தில் கண்ணுக்குத்

தென்படுகிறது. ஆனல் அக்காலமோ, எங்கும் கண்ணுக்குத் தென்படாதவாறு மறைந்துவிட்டது. அது எங்கே சென்றதோ ஆண்டவனே அறிவார்.

"எனக்கு ஏழெட்டு வயசிருக்கும். திடீரென்று எங்கும் பஞ்சம் வந்துவிட்டது. அம்மாதிரிப் பஞ்சம் அதற்கு முன்னல் ஒருவரும் பார்த்ததே இல்லை. இரண்டரை வருஷம் மழையே பெய்யவில்லை. குடியானவர்கள் அழுதார்கள். குளம், குட்டை, நதி, கால்வாய் எல்லாம் வற்றிவிட்டன. மனிதர்கள் கண்களில்தான் தண்ணீர் காணப்பட்டது; வேறெங்குமில்லை. நாங்கள் லங்கோட்டைக் கட்டிக்கொண்டு, முகத்தில் கரி பூசிக்கொண்டு, கடை வீதிகளில் பறையடித்துக்கொண்டு சென்றது, நேற்றுத்தான் நடந்தது போல் எனக்கு இன்னும் ஞாபகம் வருகிறது. அப்படியாவது மழை பெய்யாதா என்று பார்த்தோம். ஆனல் மழை பெய்யவில்லை. பெண்கள் கொடும்பாவி கொளுத்தி அவற்றின்மேல் நின்றுகொண்டு மார்பிலடித்துக்கொள்ள ஆரம்பித்தார்கள். அங்ஙனம் செய்தால் மழை பெய்யுமென்று ஜனங்கள் அக்காலத்தில் நம்பினர்கள். ஆனல் அதுவும் பயனில்லை. முகம்மதியர்கள் மசூதிகளில் நமாஸ் படித்தார்கள். ஹிந்துக்கள் கோவில்களில் பூஜை செய்தார்கள். சீக்கியர்கள் குருத்வாரங்களில் கிரந்த சாஹிப் படித்தார்கள். ஆனல் மழை பெய்யவில்லை. கடவுளுக்குக் கொஞ்சங்கூடக் கருணை பிறக்கவில்லை. ஜனங்கள் பட்டினி கிடந்து சாக ஆரம்பித்தார்கள். கடைவீதியில் துளிக்கூடக் களை இல்லை. வீடுகளில் தானியம், ஒரு மணிகூட இல்லை. பிரளய காலம் நெருங்கிவிட்டதுபோல் தோன்றியது. குடியானவர்கள் பாடுதான் மிகக்கஷ்டம். அவர்கள் முகத்தில் ரத்தமில்லை. கண்களில் ஜோதி இல்லை, உடம்பில் தசை இல்லை. யாவர் கண்களும் ஆகாயத்தை நோக்கின. ஆனல் அங்கே துர்ப்பாக்கிய மேகங்களே இருந்தன. நீர் மேகங்கள் இல்லை. தானியம் ரூபாய்க்கு இருபது சேர் விற்க ஆரம்பித்தது."

நான் ஆச்சரியத்துடன், "இருபது சேரா?" என்று கேட்டேன்.

"ஆம், இருபது சேர்! அக்காலத்தில் இதுகூட மிகவும் கிராக்கியாகக் கருதப்பட்டது. இப்பொழுது ரூபாய்க்கு நாலு சேர் விற்ருலும் ஜனங்களுக்குக் கஷ்டமாகத் தோன்றவில்லை. ஆனல் அக்காலத்து நிலைமை அப்படி இருந்தது. என் வீட்டில், நான், என் வயசுசென்ற தாத்தா, விதவையான என் தாய், இரு சகோதரிகள்.

அத்தனை பேருக்கும் மாதத்திற்கு நாலைந்து ரூபாய்க்குமேல் செலவு ஆகாது. ''

நான் பரபரப்புடன், " அப்புறம் ?'' என்று கேட்டேன்.

" அப்புறம் என்ன! தானியம் கிராக்கியாகிவிட்டது. ஜனங்கள் அழ ஆரம்பித்தார்கள். கடைசியில் என்ன நடந்ததென்றால், எங்கள் வீட்டில் சாப்பாட்டிற்கு ஒன்றுமில்லை. நகைகளையும், பாத்திரங்களையும் விற்றுச் சாப்பிட்டாகிவிட்டது. கேவலம் கட்டியிருந்த துணி மாத்திரந்தான் மீதி இருந்தது. இனிமேல் என்ன செய்வதென்று யோசிக்க ஆரம்பித்தோம். என் தாத்தா-கடவுள் அவருக்குச் சுவர்க்கத்தில் இடங்கொடுக்க வேண்டும் - எப்பொழுதும் சிரித்த முகமுள்ள மனுஷர் ; எப்பொழுதும் தாமரைபோல் மலர்ந்த முகத்துடன் இருப்பார் ; என்ன சங்கடம் வந்தாலும் சிரித்த முகத்துடன் பொறுத்துக்கொள்ள வேண்டும் என்று அவர் அடிக்கடி சொல்லுவார். ' துக்கப்படுவதனாலும், அழுவதனாலும் ஒருவன் துன்பம் குறைவதில்லை ; அதிகப்படும் ' என்பார். என் தகப்பனார் இறந்தபொழுதுகூட அவர் கண்களில் கண்ணீர் வரவில்லை என்று நான் கேள்விப்பட்டிருக்கிறேன். ஆனால் இப்போது, அவர்கூட அழ ஆரம்பித்தார். 'குழந்தை குட்டிகள் என் கண்முன்னிலையில் பட்டினி கிடந்து சாகின்றனவே, என்ன கஷ்டகாலம் இது ?' என்று சொல்லுவார். நானோ சிறுவன். என்னால் என்ன செய்யமுடியும் ? கடைசியில் மரத்தின் இலைகளை வேகவைத்துத் தின்னவேண்டிய காலமும் வந்துவிட்டது.

" ஒரு நாள் நடந்த விஷயம் : தாத்தா திண்ணையில் உட்கார்ந்து ஹுக்கா குடித்துக்கொண்டு ஆகாயத்தைப் பார்த்துக்கொண்டிருந்தார். ' தாத்தா, இனிமேல் பொறுக்கமுடியாது ; எங்கிருந்தாவது ரொட்டி கொண்டுவந்து கொடு. இலைகளைத் தின்ன என்னால் முடியாது ' என்று நான் சொன்னேன்.

" தாத்தா ஏக்கத்துடன், ' பிரளய காலம் வெகுதூரத்தில் இல்லை ' என்று சொன்னார்.

' பிரளயம் என்றால் என்ன ?'

' ஜனங்கள் எல்லோரும் இறப்பது. '

' அப்படியானால், எல்லோரும் செத்துப் போய்விடுவார்களா என்ன ?'

'பின்னே என்ன? எப்போது சாப்பாட்டிற்கு இல்லையோ, அப்போது ஜனங்கள் சாகாமல் என்ன செய்வார்கள்?'

'தாத்தா நான் என்னவோ சாகமாட்டேன். எனக்கு எங்கிருந்தாவது ரொட்டி கொண்டுவந்து கொடு. பசி பொறுக்க முடியவில்லை' என்றேன்.

"தாத்தாவின் கண்களில் கண்ணீர் ததும்பியது. மிகுந்த துக்கத்துடன் சொன்னார்: 'இம்மாதிரிக் கஷ்டகாலம் நான் என்றும் பார்த்ததில்லை. உனக்கு மரத்தின் இலைகளைத் தின்று சலித்துவிட்டது. ஆனால் கிராமத்து ஜனங்களோ, எலியையும் தவளையையுங்கூடத் தின்கிறார்கள்.'

'தாத்தா, எலிகளை எப்படித் தின்கிறார்கள்?

'பசிப்பிணி எல்லாம் செய்யச் சொல்லுகிறது.'

'என்ன இருந்தாலும் எலியும் தவளையும் எப்படித் தின்கிறது?'

'இந்தச் சமயம் எதானால் என்ன, தம்பி?'

'எப்படித்தான் மனம் சகித்துத் தின்கிறார்களோ, தெரியவில்லை.'

'கடவுள் கிருபையால் இக்கஷ்டம் சீக்கிரம் தொலைய வேண்டும்!'

'தாத்தா, ஏன் மழை பெய்யமாட்டேன் என்கிறது?'

'நம் ஒழுக்கம் கெட்டுவிட்டது. இம்மாதிரிப் பஞ்சம் நான் கேட்டதுகூட இல்லை. மனிதன் ரத்த தாகம் எடுத்துத் திரிகிறான். ஒவ்வொருவன் கண்களிலும் தீப்பொறி பறக்கிறது. மனிதன் கண்ணில் ரத்தம் வடிகிறது. இல்லை, காலம் கெட்டுவிட்டது.' பின்பு தாத்தா சிறிதுநேரம் மௌனமாய் இருந்தார். பின்னர் மீண்டும், 'நீ சூதுவாதில்லாத சிறுவன். எங்காவது போய்ப் பிச்சை எடுத்துக்கொண்டு வா. யாராவது ஒருவேளை உன்மேல் இரக்கங்கொண்டு ஒரு ரொட்டித் துண்டு கொடுக்கலாம்' என்றார்.

'அப்பா, நான் போகிறேன்.'

'கடவுள் நம்மைக் கொன்றுவது விடக் கூடாதா? ஏழைகளாய் இருந்தோம். ஆனால் இதுவரையிலும் ஒருவரிடமாவது கை நீட்டிப் பிச்சை வாங்கியதில்லை.'

## 3

"எனக்கோ பசியினால் உயிர் போய்க்கொண்டிருந்தது. பிச்சை எடுக்க வெளியேறினேன். ஏழைகள் வீட்டில்தான் பஞ்சம் என்று

நான் நினைத்துக்கொண் டிருந்தேன். ஆனால் வெளியேறியதும், எல்லோரும் ஏழைகளாயிருக்கக் கண்டேன். எல்லோரும் துக்கத்துடன் இருந்தார்கள். சந்தோஷமாய் ஒருவர்கூட இல்லை. நான் வெகுநேரம் வரைக்கும் இங்குமங்கும் சுற்றிப் பார்த்தேன். ரொட்டி கொடுப்பார் ஒருவரும் இல்லை. மிகுந்த வருத்தத்துடன் வீடு திரும்பிக்கொண்டிருந்தேன்.

"திடீரென்று ஓர் இடத்தில் பெருங்கூட்டம் இருந்ததைக் கண்டேன். நானும் உடனே அவ்விடத்திற்கு ஓடினேன். சர்க்கார்ச் சேவகன் தண்டோராப் போட்டுக்கொண் டிருந்தான், ஜனங்கள் எல்லாரும் அவனைச் சுற்றிச் சந்தோஷமாய் நின்று கேட்டுக்கொண் டிருந்தார்கள்.

"நான் ஆச்சரியமுற்றேன். அவர்கள் அத்தனை சந்தோஷமாய் இருப்பதற்கு என்ன காரணம் என்று எனக்கு விளங்கவில்லை. ஆனால் சிறிது நேரத்திற்குள் ரகஸ்யம் வெளியாகிவிட்டது. மஹாராஜா ரஞ்சித்சிங் ஷாயிக் கோட்டையில் தானியக் களஞ்சியங்கள் திறந்து வைத்து, யார் யாருக்குத் தானியம் வேண்டியிருக்கிறதோ, அவர்களெல்லாரும் வாங்கிக்கொண்டு போகலாம் என்று உத்தரவிட்டிருந்தார். தானியத்திற்கு விலை இல்லை. மஹாராஜாவின் உதார குணத்தைக்கண்டு ஜனங்கள் ஆச்சரியமுற்றார்கள். 'இவர்மனிதரல்ல, கடவுள்' என்றார்கள். இனிமேல் பட்டினிகிடந்து சாகவேண்டாம். கடவுளுக்கு என்னவோ கருணையில்லை. ஆனால் ராஜாவுக்குக் கருணை இருக்கிறதல்லவா! கருணையுள்ள அரசனே கடவுள். மஹாராஜா ஆட்களை வெளிநாடுகளுக்கு அனுப்பி, எவ்வளவு தானியங் கிடைக்குமோ அவ்வளவும் வாங்கிக்கொண்டு வரச்சொல்லி யிருப்பதாக ஒருவன் சொன்னான். 'என் பிரஜைகள் என் குழந்தைகளுக்குச் சமானம். அவர்கள் பட்டினி கிடந்து சாக நான் சகிக்கமாட்டேன்' என்று சொன்னாராம் ராஜா.

"மற்றொருவன் சொன்னான்: 'மஹாராஜா முன்னாலே என்ன தூங்கிக்கொண்டா இருந்தார்? இந்த எண்ணம் முதலில் ஏன் வரவில்லை? இப்போது மாத்திரம் ஏன் வந்தது?'

"முதல் மனிதன் பதில் சொன்னான்: 'மஹாராஜா தூங்கவில்லை. விழித்துக்கொண்டுதான் இருந்தார். தானிய விலை எப்படி இருக்கிறது, ஜனங்களுடைய க்ஷேமம் எப்படி என்று சதா கேட்டுக்கொண்டுதான் இருந்தார். நேற்று வரைக்கும் அவருக்குத் தெரிந்தது என்னவென்றால், தானியம் கொஞ்சம் கிராக்கியாய் இருக்கிறது

என்பதுதான். இன்றுதான் அவருக்குச் சமாசாரம் எட்டியது, கடைவீதியில் தானியம் ஒருமணிகூட இல்லை என்று. மஹாராஜா உடனே என்ன செய்வதென்று அஞ்சினர். கடைசியில் அவர் ஆட்களை வெளியே அனுப்பி எவ்வளவு தானியம் வாங்க முடியுமோ அவ்வளவையும் வாங்கி வருமாறு கட்டளையிட்டிருக்கிறார். 'நான் ஜனங்களுக்கு இனமாகத் தானியம் வழங்குவேன். என் பொக்கிஷத்தில் பணம் இருந்தாலும் சரி, இல்லாவிட்டாலும் சரி. ஆனல் ஜனங்கள் பிழைத்தால் போதும்' என்கிறார் அரசர்.

'மஹாராஜா என்ன முதலில் தூங்கினரா என்று இவர் கேட்கிறார், மஹாராஜாவிற்கு ஒரு கவலை இல்லை; எத்தனையோ கவலை உண்டு என்பது இவருக்குத் தெரியாது போலும்!' என்று ஒரு ஹிந்து சொன்னன்.

'எனக்கு இதெல்லாம் முன்னல் தெரியாது.'

'இன்னொரு விஷயம்: மஹாராஜா வெளியூர்ப் பாளையக்காரர்களுக்கும் அதே கட்டளையிட்டிருக்கிறராம்.'

'வேறே ஒரு ராஜாவாயிருந்தால், 'மழை பெய்யாவிட்டால் அது என் குற்றமா, என் அரண்மனையில்தான் எல்லாம் இருக்கிறதே?' என்று சொல்லுவார்' என்றான் மற்றொருவன்.

'இந்தச் சமாசாரத்தைக் கேட்டதும், சாகக் கிடக்கும் ஜனங்கள் எல்லாரும் புத்துயிர் பெற்று எழுவார்கள்.'

'இன்று நகரத்தின் சந்தோஷத்தைப் பார்க்கவேண்டுமே!'

'கொஞ்ச நேரத்திற்கு முன்னல் பார்க்கவேண்டுமே! எவன் கண்ணிலும் இவ்வளவு பிரகாசமில்லை!'

'இம்மாதிரிக் கஷ்டம் முன்னல் ஒரு போதும் வந்ததில்லை.'

'இப்பொழுதாவது ஆண்டவன் செவியில் நமது பிரார்த்தனை விழுந்ததே!'

"ஏதோ ஒரு விலையுயர்ந்த ரத்தினம் கிடைத்தவன்போல், அவ்வளவு சந்தோஷத்துடன், நான் அவ்விடத்தை விட்டுச் சென்றேன். கொஞ்சநேரம் மெதுவாகச் சென்றேன். பின்பு ஓட ஆரம்பித்தேன். இந்தச் சுப சமாசாரம் நான் போவதற்குள் எங்கே வீட்டிற்குத் தெரிந்துவிடப்போகிறதோ என்று பயந்தேன். வீட்டுக்காரர்கள் என் மூலமாய்த்தான் இந்தச் சமாசாரத்தைக் கேட்கவேண்டுமென்று நான் விரும்பினேன். குண்டுபோல் வேகமாக ஓடினேன். ஆனல் வீட்டிற்குப் பக்கத்தில் போனதும், வேகத்தைக் குறைத்து

மெள்ள மெள்ள வீட்டிற்குள் நுழைந்தேன். தாத்தா முன்போலவே தலைகுனிந்து உட்காந்திருந்தார். சந்தோஷத்தினால் என் நெஞ்சு துடிக்க ஆரம்பித்தது: அவருக்கு இன்னும் சமாசாரம் தெரியவில்லை!

"என்னை வெறுங்கையுடன் பார்த்ததும் அவர் ஒரு பெருமூச்சு விட்டு இன்னும் கொஞ்சம் தலையைத் தொங்கப்போட்டுக்கொண்டார். நான் அவருடைய கையைப் பிடித்துப் பலமாக இழுத்துக் கொண்டே, 'எழுந்திரு. துணியை எடுத்துக்கொண்டு வா. மஹாராஜா சொல்லியிருக்கிறார். தானியம் இனமாய்க் கிடைக்கும்' என்றேன்.

"எங்கம்மா, அக்காள், தாத்தா எல்லோரும் திடுக்கிட்டுப் போனார்கள். நான் சொன்னதை அவர்கள் நம்பவில்லை. 'சிறுபிள்ளை யாராவது விளையாட்டுக்குச் சொல்லியிருப்பார்கள். இது நிஜமென்று நினைத்துக் கூத்தாடுகிறது. மஹாராஜா நகர் முழுவதுக்கும் தானியம் எப்படி இனமாய்க் கொடுக்கமுடியும்? ரொம்பக் கஷ்டம்' என்று தலையை ஆட்டிக்கொண்டு சொன்னார்கள். 'நானே நேரில் கேட்ட விஷயம். நான் சொல்லுவது விளையாட்டல்ல, ஜனங்கள் இந்தச் சமாசாரத்தைக் கேட்டுக் கூத்தாட ஆரம்பித்தார்கள். நீ துணி எடுத்துக்கொண்டு என்னோடு வா' என்று நான் மீண்டும் சொன்னேன்.

"தாத்தா துணி எடுத்துக்கொண்டு என்னோடு வந்தார். அவருக்கு இன்னும் சந்தேகந்தான். ஆனால் கடைவீதியில் வந்து பார்த்தபொழுது, ஆயிரக்கணக்கான ஜனங்கள் கோட்டையை நோக்கிச் சென்றுகொண்டிருந்தார்கள். அப்பொழுதுதான் அவருக்கு என் வார்த்தையில் நம்பிக்கை பிறந்தது.

"கோட்டையை அடைந்தோம். அங்கே ஒரே ஜனத்திரளாய் இருந்தது. ஆனால் பணக்காரர்கள் ஒருவரைக்கூட உள்ளே விட வில்லை. வாசலில் சிப்பாய்கள் நின்றுகொண்டிருந்தார்கள். யாராவது வெள்ளை வேஷ்டி உடுத்திருந்தால், அவர்களை உள்ளே விடமாட்டார்கள். 'இந்தத் தானியம் ஏழைகளின் சாப்பாட்டிற்காக; பணக்காரர்களின் விருந்துக்காக அல்ல' என்று சொன்னார்கள். ஆம்; அது ஏழைகளின் சாப்பாட்டிற்காக; பணக்காரர்கள் விருந்துக்காக அல்ல. எனக்கும் இத்தனை வயசாய்விட்டது. பணக்காரர்களை எந்த வாசலிலும் 'நுழையக் கூடாது' என்று தடுத்ததை நான் இதுவரையும் கண்டதில்லை. ஆனால் அன்றோ தனவந்தர்கள் வெளியில் நின்று ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக்கொண்டிருந்தார்கள். நாங்களோ

ஏழைகள்; எங்களைத் தடுப்பார் எவருமில்லை. நாங்கள் உள்ளே சென்றோம். அங்கே நூற்றுக்கணக்கான சர்க்கார்ச் சேவகர் தராசும் கையுமாய் உட்கார்ந்துகொண்டு, இருபது இருபதுசேர் தானியம் எல்லோருக்கும் நிறுத்துப் போட்டுக்கொண்டிருந்தார்கள். ஆனால் ஒரு வீட்டில் ஒருவனுக்குத்தான் தானியம் கொடுத்தார்கள். மற்ற வர்களை எல்லாம் திருப்பி அனுப்பிவிட்டார்கள்.

"கோட்டையில் முற்றத்தில் ஒரே ஜனத்திரளாய் இருந்தது. முன்னேறிச் செல்வது இலகுவான காரியமல்ல. நானோ சிறு பையன்; தாத்தாவோ கிழவனர். தானியம் நிறுத்துப் போடச் சொல்லி, நாங்கள் அநேகம் பேர்களிடத்தில் கெஞ்சினோம். அக்கூட்டத் தில் எங்கள் வார்த்தை எங்ஙனம் ஏறும்? என் தாத்தா இரண்டு முறை கூட்டத்தைத் தாண்டி முன்னே செல்ல யத்தனித்தார். ஆனால் இரண்டு முறையும் தள்ளப்பட்டு வெளியில் வந்துவிட்டார். பின்னர், தாத்தாவும் நானும் ஒரு மூலையில் நின்றுகொண்டு எங்கள் துர்ப்பாக்கியத்தை நினைத்து வருந்தினோம்.

## 4

"சாயந்தர வேளை; எங்கும் இருள் சூழ ஆரம்பித்தது. திடீ ரென்று சங்கு ஊதும் சப்தம் கேட்டது. உடனே தானியம் கொடுப் பதை நிறுத்திவிட்டார்கள். 'மீதியுள்ளவர்கள் நாளை வந்து வாங் கிக்கொண்டு போகட்டும்' என்று கட்டளை பிறந்தது. யாரா வது இரண்டாவது தடவை வந்தால், 'மஹாராஜா அவன் முதுகுத் தோலை உரித்துவிடுவார்' என்று சொல்லப்பட்டது. ஜனங்கள் யாவரும் அளவில்லாத் துக்கமடைந்தனர். என்ன செய்வது? மெள்ளமெள்ள முற்றம் முழுதும் காலியாயிற்று. நாங்கள் எங்ஙனம் போவோம்? அநேக நாட்களாய்ப் பட்டினி கிடந்து சாகி றோம். இருவரும் அழ ஆரம்பித்தோம். தாத்தா என்னை நோக்கி, 'மகனே! நாம் எத்தகைய பாக்கிய ஹீனர்கள்! ஆற்றங்கரைக்கு வந்த பின்னும், தாகத்தோடு திரும்புகிறோமே. என்னே நம் துரதிருஷ் டம்! பாக்கியவான்களாயிருந்தவர்கள், மூட்டை மூட்டையாகத் தானியம் கட்டிக்கொண்டு போய்விட்டார்கள். நாம் நின்றுகொண்டு பேசாமல் பார்த்துக்கொண் டிருக்கிறோம். வா, வெறுங்கையுடன் திரும்புவோம், நம் அதிருஷ்டம் இவ்வளவுதான்' என்று சொன்னர்.

'தாத்தா, நாங்கள் ரொம்பப் பசியா யிருக்கிறோம் என்று அதோ நிற்கிறாரே அவரிடத்தில் சொல்லு. ஒருவேளை தானியம் கொடுப்பார்' என்றேன்.

'யார் கொடுக்கப்போகிறார்கள் தம்பி? தானியம் கிடைக்காது. வசவுதான் கிடைக்கும். வா, வீட்டுக்குப் போகலாம்.'

'தாத்தா, கேட்டுத்தான் பாரேன்.'

'தம்பீ, இதென்ன பேச்சுப் பேசுகிறாய்? நாம் தலைகீழாக நின்றாலும் இன்றைக்குத் தானியம் கொடுக்கமாட்டார்கள். நாளைக்கு வரலாம், வா.'

'அப்படியானால் இன்றைக்கு என்ன சாப்பிடுகிறது?'

'ஏழைகள் என்ன செய்ய முடியும்? இத்தனை நாளும் பட்டினி கிடந்ததுபோல் இன்று இரவும் பட்டினி கிடப்போம்.'

'தாத்தா, நான் என்னவோ வரமாட்டேன். நீ கேட்டுப் பார். ஒரு வேளை கொடுப்பார்கள்.'

'உனக்குத்தான் பைத்தியம். நானும் உன்னோடு சேர்ந்து பைத்தியமாகவா?'

"இதற்குள் ஒரு சர்தார் எங்கள் முன்வந்து, 'ஏன் இன்னும் போகவில்லை? நாளைக்கு வாருங்கள். இன்று தானியம் கிடைக்காது' என்று சொன்னார்.

"நாங்கள் மிகுந்த வருத்தத்துடன் 'இதோ போகிறோம், எஜமான்!' என்றோம்.

"தாத்தாவின் வாடிய முகத்தைக் கண்டதும், சர்தாரின் மனம் இளகியது. சிறிது இரக்கத்துடன், 'நீ யார்?' என்று கேட்டார்.

'நானா? வண்ணான், எஜமான்'

'நீ நாளைக்கு வரமுடியாதா, என்ன?'

'வராமல் என்ன எஜமான்? ஆனால் ஏழைகள். நான் கிழவன், இவனோ குழந்தை. இந்தக் கூட்டத்தில் நாளைக்கும் கிடைக்கிறதோ, என்னவோ தெரியவில்லை. இன்றைக்குக் கிடைத்தால், ராத்திரியே மாவு திரித்து எஜமான் பேரைச் சொல்லிச் சாப்பிடுவோம்.'

'உன் வீட்டில் வாலிபன் ஒருவனும் இல்லையா?'

'இல்லை, எஜமான். இந்தப் பையன் தகப்பன்தான் இருந்தான். அவனும் இறந்துபோனான்.'

'அப்பா, நீ நாளைக்கு வரமுடியாதா?'

'எசமான் கிருபை. இன்றைக்கே கொடுத்தால்......'

"சிரித்துக்கொண்டே 'வா, இதோ கொடுக்கிறேன்' என்றான்.

"நான், 'ஏன் தாத்தா, அவன் இன்னைக்குக் கொடுக்கமாட்டான் இன்னு சொன்னியே; இப்பப் பாத்தியா ?' என்றேன்.

"சர்தார் சிரித்தார்.

"தாத்தா என்னை, 'சும்மா இரு' என்று சைகை காட்டினார். நான் வாயைப் பொத்திக்கொண்டேன்.

"வா, நிறுத்துக்கொடுக்கிறேன்" என்று சொல்லி, சர்தார் எங்களைக் கூட்டிக்கொண்டு போனார்,

"நாங்கள் சர்தார் பின்னால் போனோம். அவர் தானியக் குவிய லண்டை போய் ஒரு சேவகனிடம், 'இந்தக் கிழவனுக்கு இருபது சேர் கோதுமை கொடு' என்று சொன்னார்.

"அச்சேவகன் தாத்தாவைத் துணியை விரிக்கச் சொல்லி, கோதுமை நிறுக்க ஆரம்பித்தான்.

'எஜமான்! தானியம் இனிமேல் மறுபடியும் எப்பக் கிடைக்கும் ?'

'அடுத்த வாரம்.'

'நாங்கள் வெகு நாளாய்ப் பட்டினி கிடந்து சாகிறோம்.'

'ஆகையால் ?'

'எஜமான், சொல்வதற்குக் கூட வெட்கமாய் இருக்கிறது. நான் என்ன சொல்லட்டும்!'

'பரவாயில்லை. சும்மா சொல்லு.'

'இன்னும் இருபது சேர் கொடுத்தால், உங்களை ஜன்ம ஜன்மத்திற்கும் மறக்க மாட்டோம். ஏதோ தங்கள் கிருபை. கடவுள் தங்களுக்கு நீண்ட ஆயுள் கொடுக்கவேண்டும்.'

'நீ பேராசைக்காரன்.'

'சர்தார்ஜி, வயிறு காயும்போது வாய்க்கு வெட்கமேது ? இம்மாதிரி மானங்கெட்டு நான் ஒருகாலும் பேசினதே இல்லை.'

'இப்படி எல்லோரும் கேட்டால் நான் என்ன செய்வது ?'

'எஜமான், மஹாராஜா அரண்மனையில் தானியத்துக்குக் குறைவா ? இல்லையானால் வேண்டாம். மறுபடியும் அடுத்த வாரம் வருகிறோம். மஹாராஜா இந்தத் தர்மத்தினால் ஜனங்கள் ஹிருதயத் தில் மோஹவலை வீசிவிட்டார். நகரம் முழுதும் அவரை வாழ்த்து கிறது. (என்னிடம்) மகனே, சர்தார்ஜிக்கு நமஸ்காரம் பண்ணு. இந்தப் புண்ணியவான்தான் நம்மைக் காப்பாற்றினார். இல்லையானால் இன்று ராத்திரியும் நாம் பட்டினிதான்!'

"முன்னுல் சென்று, 'நமஸ்காரம் எசமான்!' என்றேன்.

"புன்முறுவலுடன், 'மஹாராஜனுய் இரு மகனே! உன் பெயர் என்ன?' என்று சர்தார் கேட்டார்.

'மாரி இன்னு கூப்பிடுருங்க, எசமான்.'

'இப்போது கோதுமை கிடைத்துவிட்டதல்லவா? ரொட்டி சுட்டுச் சாப்பிடு, போ.'

'எசமான், இன்னும் இருபது சேர்!'

'அடே! நீ உன் தாத்தாவைக் காட்டிலும் பேராசைக் காரனுக இருக்கிருயே!'

'இல்லே எசமான்! இன்னும் இருபது சேர் நிறுத்துப் போடச் சொல்லுங்க. உங்களுக்குக் கோடி புண்ணியம்!'

"சர்தார் கோதுமை நிறுக்கிறவனிடம் 'இன்னும் இருபது சேர் நிறுத்துப்போடு. பாவம்! கிழவன் திரும்பத் திரும்ப எப்படி வருவான்?' என்று சொல்லித் தாத்தாவை நோக்கி 'கிழவா! இப்போது சந்தோஷந் தானே?' என்ருர்.

'கடவுள் தங்களுக்கு நீண்ட ஆயுளேக் கொடுப்பார்.'

'மஹாராஜா நீடூழி வாழவேண்டுமென்று கும்பிடப்பா. எல்லாம் அவருடைய கிருபை. ராஜா பிரஜைகளின் பிதா.'

'உண்மைதான் எஜமான்! மஹாராஜா மனிதரல்ல, ரிஷி.'

'ரிஷியாகி என்ன செய்ய, கிழவா? உண்மை மனிதனுய் இருந்தால், அதே பெரிதல்லவா?'

"இதற்குள் நிறுவைக்காரச் சேவகர்களெல்லாரும் போய்விட்டார்கள். கோட்டையில் நாங்கள் மட்டுமே இருந்தோம். வேறு எவருமில்லே. 'கோதுமையை எடுத்துக்கொண்டு போ, கிழவா' என்று சர்தார் சொன்னுர்.

"ஏழைக்கு விருந்துச் சாப்பாடு கிடைத்தால், வயிறு புடைக்கத் தின்றுவிடுகிருன், ஜீரணமாகுமா என்பதைப்பற்றி யோசிப்பதே இல்லே. தாத்தாவும் கோதுமையை நிறைய வாங்கிவிட்டார். தூக்க முடியவில்லே. என்ன செய்வதென்று தெரியவில்லே. அக்காலத்தில் சீக்கியர்கள், இப்பொழுது ஆங்கிலேயர்கள் எப்படி யிருக்கிருர்களோ, அப்படியிருந்தார்கள். 'எஜமான்! மூட்டை கனமாயிருக்கிறது. யாராவது தலேயில் தூக்கிவைத்தால் கொண்டுபோய் விடுவேன்' என்று தாத்தா நடுங்கிக்கொண்டே சொன்னுர்.

"சர்தார் மூட்டையைத் தூக்கித் தாத்தாவின் தலேமேல்வைத்தார்.

"தாத்தா இரண்டடி சென்ருர், அவ்வளவுதான். 'பொத்' என்று கீழே விழுந்தார்.

"ஏனப்பா இந்தக் கஷ்டம்? இவ்வளவு தானியத்தை ஏன் கட்டிக்கொண்டாய்? இப்பொழுது தூக்க முடியவில்லையல்லவா? எப்பொழுதும் மனிதனுக்குப் பேராசை ஆகாது. போ; போய் யாரையாவது கூட்டிக்கொண்டு வா. உன்னுல் தூக்க முடியாது." என்ருர் சர்தார்.

"தாத்தா ஏக்கத்துடன், 'எனக்கு யார் எஜமான் உதவிசெய்யப் போகிருர்கள்?' என்ருர்.

"சர்தார் சிறிது நேரம் யோசித்தார். பின்பு அந்த மூட்டையைத் தாமே தலைமேல் வைத்துக்கொண்டு நடக்கலானுர். நாங்கள் மிகுந்த ஆச்சரிய மடைந்தோம். எங்கள் உடல் சிலிர்த்தது. எங்கள் சரீரத்தின் ஒவ்வோர் அணுவும் 'அவர் நீடூழி வாழவேண்டும்' என்று கடவுளை நோக்கிப் பிரார்த்தனை செய்தது.

## 5

இந்தக் கட்டத்தில் வண்ணுன் கதையை நிறுத்திவிட்டான். கதை மிகவும் ஸ்வாரஸ்யமாய் இருந்தது. மேலே கேட்க வேண்டும் என்ற ஆவலால் நான் துடித்துக்கொண்டிருந்தேன். "என்னப்பா! அப்புறம் என்ன நடந்தது?" என்று மிகவும் பரபரப்புடன் கேட்டேன்.

வண்ணுன் ஆகாய மண்டலத்தை நோக்கினுன். அவன் கண்களில் நீர் பெருகியது. நீண்ட ஒரு பெருமூச்சு விட்டு மீண்டும் சொல்லலுற்ருன்:

"சர்தார் கோதுமை மூட்டையை எங்கள் வீட்டில் வைத்து விட்டுத் திரும்பியபொழுது, நானும் என் தாத்தாவும், அவருடன் பஜார் வரைக்கும் வழியனுப்பச் சென்ருேம். 'தாங்கள் செய்த உதவியை நாங்கள் ஒருகாலும் மறக்கமாட்டோம், ஏழைகளாகிய நாங்கள் தங்களுக்கு என்ன கைம்மாறு செய்யப்போகிருேம்! குரு நானக் சாஹேப்தாம் தங்களுக்கு நீண்ட ஆயுளைக் கொடுக்கவேண்டும்' என்று என் தாத்தா சொல்லிக்கொண்டே சென்ருர். உடனே திடீரென்று ஒரு பக்கத்திலிருந்து ஒரு சீக்கியச் சைனியம் வந்தது. சர்தார் சாஹேப் நின்ற இடம் கொஞ்சம் வெளிச்சமா யிருந்தது. சிப்பாய்கள் எல்லாரும் அவரைப் பார்த்ததும், கத்திகளை உருவிச்

சலாம் செய்தார்கள். இதைக் கண்டதும் தாத்தா திடுக்கிட்டார்; அவர் யாரோ, எவரோ என்று நடுங்கினார்.

"சர்தார் சாஹேப் சென்றவுடன், என் தாத்தா அந்தச் சிப்பாய்களிடம் போய், 'அவர் யார்?' என்று கேட்டார்.

"அவர்களில் ஒருவன் என் தாத்தாவை மிகுந்த ஆச்சரியத்துடன் நோக்கினான். இன்னொருவன் என் தாத்தாவைப் பார்த்து, 'அட மூடா! இது தெரியாதா என்ன? அவர்தாம் நம் மஹாராஜா!' என்றான்.

"தாத்தா திகிலுற்றார். அப்படியே ஸ்தம்பித்து நின்றுவிட்டார். நாவினின்றும் ஒரு வார்த்தைகூட வெளியேறவில்லை.

"ஆம், அவர் மஹாராஜாதான். எந்த மஹாராஜாவின் கண் இமைப்பில் சைனியங்கள் நடுங்கினவோ, எவருடைய முன்னால் பகைவர்கள் கைகட்டி வாய்புதைத்து நின்றார்களோ, எவர் பாஞ்சால நாட்டின் வீரகேசரியாய்த் திகழ்ந்தாரோ, அவர் அன்று கேவலம் ஒரு வண்ணானுக்காகக் கோதுமை மூட்டை சுமந்துகொண்டு வந்தார். அவர்தான் உண்மை மஹாராஜா. ஜனங்களை அவர் ஆயுத பலத்தினால் மாத்திரம் ஆளவில்லை; ஜனங்களின் உள்ளங்களில் அன்பினால் ஆட்சிபுரிந்தார்.

"அன்றிரவு எங்களுக்குத் தூக்கம் வரவில்லை. வீடு முழுவதும் விழித்திருந்தது. 'மஹாராஜா நீடூழி வாழவேண்டும்' என்று இரவு முழுவதும் இறைவனைப் பிரார்த்தித்தோம்.

"மறுநாள் பெருத்த மழை பெய்தது."

கதையை முடித்துவிட்டு வண்ணான் மௌனமானான். என் மெய் சிலிர்த்தது. கண்களில் நீர் ததும்பியது.

வண்ணான் துணிகளை எண்ணிக்கொண்டு, "ஐயா! எழுதுங்கள் பதினாலு கால்சராய், இருபது ஷர்ட்" என்றான்.

நான் நோட்டை எடுத்து எழுத ஆரம்பித்தேன்.

## ஹிந்திக் கதை

# பயங்கர ராஜ்யம்

[சந்திரகுப்த வித்தியாலங்கார்]

### நதிக் கரையில்

மேதினீபுர ஜில்லாவில் மஹிம்பூர் என்ற கிராமத்திற்கருகே ஒரு சிறு நதி ஓடுகிறது. வருஷம் முழுவதும் அது அநேகமாய் வறண்டே கிடக்கும். ஆனால் சிற்சில சமயங்களில், அடை மழையில், கன்னங் கரேலென்று கலங்கலான தண்ணீர் கரை புரண்டு ஓடும். அதைப் பார்த்தால், ஏதோ ஒரு மண் மலையே கரைந்து ஆறாக ஓடுவதுபோல் தோன்றும். நதிக் கரையில் விருக்ஷங்கள் அடர்ந்து நிற்கின்றன. நாணல், புல் முதலியவைகள் மிக அடர்த்தியாக வளர்ந்திருக்கின்றன. அவைகளின் பசுமை காரணத்தால் நதிக்கரை மிக ரம்மியமான தோற்றத்தை அளிக்கிறது.

கிழக்கிந்தியக் கம்பெனியின் அலங்கோல ஆட்சியின் நாட்களில் ஒருமாரிக்காலம். நதியில் கரைபுரண்டு வெள்ளம் ஓடிக்கொண்டிருந்தது. ஆகாயத்தில் வெண்மை நிறமான மேகங்களின் திட்டுகள் வேகமாய்ச் சென்றுகொண்டிருந்தன. சூரியனும் மேகங்களும் கிளித்தட்டு விளையாடுவதுபோல் தோன்றிற்று. ஒருசமயம் வெயில், ஒருசமயம் நிழல் - இங்ஙனம் மாறி மாறி வந்துகொண்டிருந்தன. பிற்பகல் நேரம். நதியின் அலைகள் ஒன்றோடொன்று மோதிக் கர்ஜித்துக்கொண்டிருந்தன. இயற்கையின் அந்த நிரந்தரமான கர்ஜனையிலுங்கூட ஒரு விசேஷ அமைதி தென்பட்டது. அச்சமயம் பத்துப் பன்னிரண்டு வயசுள்ள ஒரு சிறுமி, இரண்டு பசுக்களை ஓட்டிக்கொண்டு நதிக்கரையை யடைந்தாள். சிறுமியின் வஸ்திரம் தூய

வெண்மை நிறம். சிந்தனை நிறைந்த அவளது முகத்திலுள்ள சுபாவமான ஓர் உல்லாசம், பார்ப்பவர்களை வசீகரிக்கும் தன்மையதாயிருந்தது. சிறுமி நதிக்கரையை அடைந்தபொழுது மேகத்திரை சூரியனை மறைத்துக்கொண்டிருந்தது. ஆகாயத்தில் மேகங்கள்; நாலு பக்கங்களிலும், இடையிடையே முத்துக்கள் பதித்ததுபோல் வன மலர்களினால் சிங்காரிக்கப்பட்ட அடர்த்தியான பசுமை; முன்னால் அதிவேகத்துடன் ஓடும் தண்ணீர்! இந்தக் காட்சியைக் கண்ட சிறுமியின் உள்ளம் மகிழ்ச்சியால் மலர்ந்தது. அவள் தன்னை மறந்து உரத்த குரலில் ஏதோ பாட ஆரம்பித்தாள்.

திடீரென்று எவனோ ஒருவன் பின்னால் வந்து அவளுடைய கண்களை மூடினான். சிறுமி திடுக்கிட்டு, "யார் அது? விடு கண்களை" என்றாள்.

இரண்டொரு நிமிஷங்களுக்குப்பின், உரத்த ரமணீயமான ஒரு சிரிப்பினால் நதிக்கரை எதிரொலித்தது. அச்சிரிப்பைக் கேட்டவுடன் சிறுமியின் அச்சமெல்லாம் பறந்துவிட்டது. அவள் மிக்க கம்பீர த்வனியில், "அஜ்ஜி! கண்களை விடு" என்று சொன்னாள்.

அவளுடைய கண்களை மூடியவன், அஜித் என்ற பெயருடைய ஒரு சிறுவன். அவன் பரம ஏழையாயிருந்தபோதிலுங்கூட அவனுடைய கவிதைமயச் சிரிப்புமட்டும் இன்னும் அவனை விட்டு அகலவில்லை. சிறுமியின் கண்களை அவன் விட்டான். அவள் மெல்லப் புன்முறுவல் பூத்தாள்.

உடனே அஜித், மிக மெல்லியதாய் நூற்ற ஒரு நூல் மாலையைத் தன் மடியினின்றும் வெளியில் எடுத்தான். அதில் அற்புதமான வேலைப்பாடுகளுடன், நடு நடுவே அழகிய முடிப்புக்கள் போடப்பட்டிருந்தன. சிறுவன் அம்மாலையைத் தன் கையிலெடுத்துக்கொண்டு, "இந்தா மோஹினி! இந்த மாலை உனக்காகக் கொண்டு வந்திருக்கிறேன்" என்று சொன்னான்.

மோஹினி மாலையைப் பார்த்ததும் கம்பீரமான குரலில், "அஜ்ஜி! நீ சுத்த வேலையில்லாதவன். உன் தாய் நாள் முழுதும் கஷ்டப்பட்டு நூற்கும் நூலை இம்மாதிரியா பாழாக்குகிறாய்! அம்மாளுக்குத்தான் இப்பொழுது வயசாகிவிட்டதே; நீ அவளுக்கு உதவி செய்வதற்கென்ன?" என்று கேட்டாள்.

சிறுவனுடைய முகத்தில் இப்பொழுது புன்சிரிப்பைக் காணவில்லை. அவன் மோஹினியைவிட நாலைந்து வருஷம் மூத்தவன். இருவரும் இரவும் பகலும் கூடி விளையாடுகிறவர்கள். அஜித் வேலை

செய்யவில்லை என்று மோஹினியே குறை கூறும்பொழுது, அதை அவன் எங்ஙனம் சகிப்பான்? அவன் மிகவும் பொறுமையுடன், "இல்லை மோஹினி, இந்நூல் அம்மா நூற்றதல்ல; நானே சொந்தமாக நூற்றது" என்றான்.

மோஹினி மகிழ்வெய்தினாள். தன் தொழிலில் இப்பொழுதே அஜித் இவ்வளவு கெட்டிக்காரனாயிருப்பான் என்று அவள் நினைக்கவில்லை. ஆச்சரிய மிகுதியினால் என்ன சொல்வது என்று தெரியாமல் பேசாமல் நின்றாள். உடனே அஜித் அம்மாலையை அவள் கழுத்தில் போட்டான். மோஹினியும் அஜித்தும் ஒருவரை ஒருவர் பார்த்துப் புன்முறுவல் செய்து நதியின் பக்கம் திரும்பினார்கள்.

வேகத்துடன் மோதும் நதியின் அலைகளின்மேல், மூன்று வாத்துகள் நீந்தி வருவது அவர்கள் கண்களுக்குத் தென்பட்டது. அவைகளில் ஒன்று தாய்; மற்ற இரண்டும் அதன் குஞ்சுகள். முன்னால் தாய் வந்தது; குஞ்சுகள் அதன் பின்னால் வந்தன. தாய்ப்பறவை மிகக் கவலையுடன் அடிக்கடி கத்திக்கொண்டும், பின்னால் வரும் தன் குஞ்சுகளைத் திரும்பித் திரும்பிப் பார்த்துக்கொண்டும் வந்தது. சிற்சில சமயங்களில், தன் கால்களினால் தண்ணீரைக் கிழித்துத் தன் குஞ்சுகள் லகுவாய் நீந்தி வருவதற்கு உதவி செய்யும். மோஹினியும் அஜித்தும் பேசாமல் இந்தக் காட்சியைப் பார்த்துக்கொண்டிருந்தார்கள். நதிக்கரையில் பசும் புற்களை மேய்ந்துகொண்டிருந்த அவ்விரண்டு பசுக்களின் கவனங்கூட வாத்துக்களின் பக்கம் சென்றது.

நதியின் அக்கரையிலிருந்து இக்கரையை நோக்கி வாத்துக்கள் வந்துகொண்டிருந்தன. தாய் மெள்ளமெள்ளக் கரைக்குச் சமீபத்தில் வந்து தண்ணீரை விட்டு வெளியேறியது. குஞ்சுகளிரண்டும் இன்னும் நீரிலேயே இருந்தன. தாய் மிகுந்த கவலையுடன் அவைகளைப் பார்த்துக்கொண்டிருந்தது. சிறிது நேரத்தில் அவ்விரண்டு குஞ்சுகளுங்கூடக் கரையை அணுகிவிட்டன.

"டப்! டப்! டப்!"—திடீரென்று மூன்று துப்பாக்கிக் குண்டுகள் தரையில் நின்றுகொண்டிருந்த தாய் வாத்தின்மீது பாய்ந்தன. அது துடிப்பதற்கும் சக்தியற்று, அவ்விடத்திலேயே மாண்டு மடிந்தது. அதன் குஞ்சுகளிரண்டும் இன்னும் தண்ணீரை விட்டு வெளியேறவில்லை. பயத்தினால் அவை கூச்சலிட்டன. நதியின் அலைகள், தாயில்லாத அந்தக் குஞ்சுகளைத் தம்மோடு இழுத்து அடித்துக்கொண்டு சென்றன.

அஜித்தும் மோஹினியும் தமது சிறிய வாழ்க்கையில், அன்று வரை அத்தகைய பெரிய சப்தத்தைக் கேட்டதேயில்லை. இருவரும் திடுக்கிட்டு நடுங்கினுர்கள். சிறுமிக்கோ பேச்சு மூச்சுக்கூட இல்லை. அவ்வளவு பீதியடைந்துவிட்டாள், அவள். அதே சமயம் தூரத்தில், காட்டின் அடர்ந்த விருக்ஷங்களினின்றும் வெளியேறிய, பிரேதம் போல் வெளுத்த நாலைந்து உருவங்களைக் கண்டதும், அஜித் மிகுந்த அச்சத்துடன், "பூதம்" என்று கூச்சலிட்டான்.

மோஹினியும் பின்னல் திரும்பிப் பார்த்தாள். மேற்குத் திசையில், அடர்ந்த மூங்கிற் புதர்களினின்றும், பிரேதம்போல் வெளுத்த நாலைந்து உருவங்கள் வெளியேறி அவர்களை நோக்கி வந்துகொண்டிருந்தன. முகம் தவிர அவர்களுடைய சரீரத்தின் மற்றப் பாகங்கள் யாவும் மூடப்பட்டிருந்தன. முழங்காலுக்கு அடியிலுள்ள பாதத்தைப் பளபள என்று மின்னும் தோல் மூடியிருந்தது. காக்கித் துணியினுல் தைத்த சட்டைகளை அவர்கள் அணிந்திருந்தார்கள். தலையில் கூடைபோன்ற ஒரு வஸ்து தென்பட்டது. அவர்களுடைய முகங்கள் வெள்ளை வெளேரென்று வெளுத்திருந்தன. அக்காலத்து வங்காளிகள் அவர்களைத் திடீரென்று பார்க்கும்போது அவர்களை ஏதோ ஒருவித நோயாளிகளெனவே மதிப்பார்கள். அவர்களுடைய கைகளில் நீண்ட துப்பாக்கிகள் இருந்தன. அவ்வெள்ளையர்கள், இறந்துகிடந்த அந்த வாத்தை நோக்கி விரைவாக வந்துகொண்டிருந்தார்கள். மோஹினி பயங்கரமான அந்தக் காட்சியைக் கண்டதும் மூர்ச்சையாகிவிட்டாள். அஜித்தும் அஞ்சி நடுங்கினுன் என்ருலும், மூர்ச்சையடையவில்லை.

திடீரென்று அஜித் எப்படியோ அப்பிசாசுகளை இன்னரென்று அறிந்துகொண்டான். மூர்ச்சையுற்றிருக்கும் மோஹினியின் காதுகளுக்கு வெகு சமீபத்தில் தன் வாயைக் கொண்டுபோய், "மோஹினி, எழுந்திரு! இவர்கள் பூதமல்ல, பறங்கியர்கள்!" என்று மெதுவாகச் சொன்னுன்.

பறங்கியர்களைப்பற்றி அஜித் கிராமத்து ஜனங்களிடமிருந்து பல தடவை கேள்விப்பட்டிருக்கிருன். ஆனுல் அவர்களைப் பார்ப்பதற்கு அவனுக்கு இதுவரையும் சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. கொஞ்சங் கொஞ்சமாக மோஹினியின் மூர்ச்சை தெளிந்தது. இதற்குள் அந்நாலைந்து பறங்கியர்களும், வாத்தை எடுத்துக்கொண்டு, சிறுவனும் சிறுமியும் இருந்த இடத்திற்கு வந்தார்கள். அவர்கள் அஜித்தையும் மோஹினியையும் 'குறுகுறு' வென்று விழித்துப்

பார்த்தார்கள். குழந்தைகள் இருவரும் பேசாமல் உட்கார்ந்திருந்தனர். அப்பறங்கியர்கள் அவ்விருவரையும், சிறிது நேரம் வரை உயிரற்ற விக்கிரஹங்களைப் பார்ப்பதுபோல் பார்த்துக்கொண்டிருந்தார்கள். பின்பு, அக்குழந்தைகளை நோக்கிச் சிரித்துச் சிரித்து என்னதான் பேசினார்களோ, தெரியாது. குழந்தைகள் ஒன்றுமே பேசாமலிருப்பதைக் கண்டதும், கர்வம் மிகுந்த அப்பறங்கியர்கள், வாத்தின் சரீரத்தினின்றும் வடிந்துகொண்டிருந்த ரத்தத்தின் சில துளிகளை அக்குழந்தைகளின்மேல் தெளித்தார்கள். இருவரும் பயத்தினால் கூச்சலிட்டனர். உடனே பறங்கியர்கள் அனைவரும், உரத்து ஒரு ராக்ஷஸச் சிரிப்புச் சிரித்துவிட்டுத் தாங்கள் சுட்ட பறவையை எடுத்துக்கொண்டு கிழக்குத் திசையை நோக்கிப் போய் விட்டார்கள்.

அஜித்தும் மோஹினியும் எழுந்தனர். அவர்களுடைய அச்சம் அகன்றது. நதியில் தங்கள் துணிகளைத் துவைத்து ஸ்நானம் செய்துவிட்டுத் தங்கள் பசுக்களைத் தேட ஆரம்பித்தார்கள். பறங்கியர்களுடைய துப்பாக்கிச் சத்தத்தைக் கேட்டவுடன் இரண்டு பசுக்களும் காட்டிற்குள் ஓடிவிட்டன. அவைகளைத் தேடிப் பிடித்து ஓட்டிக்கொண்டு, இருவரும் கிராமத்தை நோக்கிச் சென்றார்கள். மோஹினி தன் வீட்டுக்குப் போனாள்; அஜித் தன் வீட்டுக்குப் போனான்.

## அரசாங்கக் கட்டளை

அஜித்திற்குத் தகப்பன் இல்லை; கூடப் பிறந்தவர் இல்லை; தாய் மட்டும் இருந்தாள். அவளும் கிழவி; தடி ஊன்றிக் கொண்டு நடப்பாள். அஜித்தின் சொந்த ஊர் மஹிம்பூர். அதில் பெரும்பான்மையான ஜனங்கள் நெசவுகாரர்கள். அஜித்தின் மூதாதையர்களும் நெசவுத் தொழிலே புரிந்து வந்தார்கள். தந்தை காலமானதிலிருந்து, அவன் தாய் தனியே அத்தொழில் செய்து, குடும்பத்தைக் காப்பாற்றி வந்தாள். அவள் மிகவும் மெல்லிய நூல் நூற்பாள். வெகு அழகாக நெய்வாள். அவளுடைய துணிகளுக்கு அதிகக் கிராக்கியிருந்தது. அதனால் தாயும், மகனும் சந்தோஷமாய்க் காலங் கழித்து வந்தார்கள். அவர்களுக்குத் தேவையான பொருள்களும் மிகக் கொஞ்சமே. அவர்கள் பிறரிடத்தில் கடன் வாங்கவும் இல்லை; பிறருக்குக் கடன் கொடுக்கவுமில்லை. வீட்டு முற்றத்தில் காலி நிலம் ஏராளமாக இருந்தது. வராந்தாவில் கூரை

வேய்ந்திருந்தது. பஞ்சு, நூல், ராட்டு, தறி முதலியவை பக்கத்தில் ஒரு சிறு அறையில் வைத்திருந்தார்கள். அதுதான் அவர்களுடைய 'தொழிற்சாலை'. முற்றத்திலிருந்த நிலத்தில் காய்கறிகளும் மற்றும் காலத்துக்கேற்ற பயிர்களும் பயிர் செய்யப்பட்டிருந்தன. வேலை என்னவோ, கிழவி கொஞ்சந்தான் செய்வாள். ஆனால் அவளுடைய வேலைக்கு அதிகக் கிராக்கியிருந்தது. அஜித் இன்னும் சிறுவன் என்றாலும் அவன் தன் தாய்க்கு அதிக உதவி செய்தான். அவன் பின்னொரு காலத்தில் பெரிய நெசவுகாரனாவான், உலகம் முழுதும் அவனுடைய கீர்த்தி பரவும் என்றெல்லாம் கிழத்தாய் ஆகாயக் கோட்டை கட்டிக்கொண்டிருந்தாள்.

மாலை நேரம். முற்றத்தில் பாகற் கொடிகளின் வேர்களி லுள்ள களைகளைக் கிழவி வெட்டி எறிந்துகொண்டிருந்தாள். அஜித் ஈர வேஷ்டியை உடுத்துக்கொண்டு வீட்டிற்குள் நுழைந்தான். அவனுடைய பயம் இன்னும் முற்றும் நீங்கவில்லை. தாய் அவனுடைய ஈர வேஷ்டியையும், பீதியுற்ற முகத்தையும் பார்த்த வுடன், "என்ன அஜ்ஜி! என்ன விஷயம்?" என்று கேட்டாள். அஜித் மிகவும் பயத்துடன், "அம்மா, நம் கிராமத்தில் பறங்கியர் வந்திருக்கிறார்கள்" என்று சொன்னான். அவனுடைய நாக் குழறியது.

பறங்கியர் குழந்தைகளைத் திருடிக்கொண்டு போகிறார்கள் என்று கிழவி முன்னாலேயே கேள்விப்பட்டிருந்தாள். ஆகையினால் அவளும் மிகக் கலவரமடைந்தவளாய், "அவர்கள் எங்கே இருக் கிறார்கள்?" என்று கேட்டாள்.

அஜித் நதிக்கரையில் நடந்த சம்பவம் முழுதையும் தாயிடத்தில் சொன்னான். கிழவி, "உம், உம்" என்று சொல்லிக்கொண்டே கதை முழுதும் கேட்டாள். அவள் வேறு என்னதான் செய்ய முடியும்? கிராமத்துப் பெரியதனக்காரன் அவளிடத்தில் நெய்யக் கொடுத்திருந்த துப்பட்டா, அன்று சாயந்தரத்திற்குள் அவன் வீடு போய்ச் சேரவேண்டுமென்று கிழவிக்குத் திடீரென ஞாபகம் வந்தது. வேறொரு நாளாயிருந்தால், கிழவி அஜித் வசமே அந்தத் துப்பட்டா வைப் பெரியதனக்காரர் வீட்டுக்கு அனுப்பியிருப்பாள்; ஆனால் இன்றோ கிராமத்தில் பறங்கியர் வந்திருக்கிறார்கள்! துப்பட்டாவைத் தோளின்மீது போட்டு ஒரு கையில் தடியை எடுத்துக்கொண்டு கிழவி அஜித்துடன் பெரியதனக்காரர் வீட்டைநோக்கிச் சென்றாள்.

கிராமப் பெரியதனக்காரர் பெயர் தாராசந்த் முகோபாத்யாயர். அக்காலத்தில் வங்காளிகள் சட்டோபாத்யாயருக்கு, 'சட்டர்ஜி' என்றும், முகோபாத்யாயருக்கு, 'முக்கர்ஜி' என்றும், வசு என்பதற்கு 'போஸ்' என்றும், வந்த்யோபாத்யாயருக்கு 'பானர்ஜி' என்றும், டாகுருக்கு 'தாகூர்' என்றும் சொல்லுவது நாகரிகமென்று நினைக்கவில்லை. தாராசந்தருக்குக் கிராமத்தில் 'முகோபாத்யாயர்' என்ற பெயரே பிரசித்தமாக வழங்கியது. அஜித்தின் தாயார் முகோபாத்யாயருடைய வீட்டை அடைந்ததும், அங்கே ஒரு பெருங் கூட்டம் கூடியிருப்பதைக் கண்டாள். அது என்ன கூட்டமென்று விசாரித்ததன்மேல், நவாபினுடைய கட்டளைப் பத்திரத்துடன் இருபது இருபத்தைந்து பறங்கியர்கள் வந்திருக்கிறார்கள் என்று தெரிந்தது. இனிமேல் மஹிம்பூர் கிராமத்தின் வரி வசூல் எல்லாம் அப்பறங்கியர்களே செய்வார்களென்றும், கிராமத்திலுள்ள நெசவுகாரர்களை அவர்களிஷ்டப்படி வேலை வாங்கலாமென்றும் அந்தக் கட்டளையில் எழுதியிருந்தது.

கிழவி அக்கூட்டத்திற்குள் எப்படியோ முண்டி நுழைந்து பார்த்தாள். ஒரு மரக்கட்டிலின்மேல் ஐந்தாறு பறங்கியர்கள் உட்கார்ந்திருந்தார்கள். பக்கத்தில் முகோபாத்யாயர் நடுநடுங்கி நின்றுகொண்டிருந்தார். அப்பறங்கியர் உரக்கச் சிரித்து ஆர்ப்பாட்டம் செய்துகொண்டிருந்தனர். கிராமத்து ஜனங்களிடையே ஒரு பரபரப்பு உண்டாயிருந்தது. அரசாட்சியில் ஏற்பட்ட இந்த மாறுதலுக்காக யாவரும் மிக வருந்தினார்கள். ஆனால் அவர்களால் என்ன செய்ய முடியும்?

இடையனில்லா ஆட்டுமந்தையைப்போல் சகாயமற்றவர்களாய் இருந்தார்கள். மஹிம்பூரின் அரசாட்சி சட்டபூர்வமாக நவாப் கையினின்றும் கம்பெனியார் கைக்குச் சென்றது. கிராமத்து ஜனங்கள் தங்கள் வாழ்க்கையில் ஏற்பட்ட இம்மாறுதலை, ஒரு கட்டுத்தறியிலிருந்து இன்னொரு கட்டுத்தறியில் கட்டப்பட்ட ஆடுமாடுகளைப் போல் நோக்கலாயினர்.

## சிறையில்

வெளியிலிருந்து, "அஜித்! அஜித்" என்ற சப்தம் வந்தது.

அஜித் சிறையில் ஒரு சிறு கொட்டடியில் பாயின்மேல் படுத்துத் தூங்கிக்கொண்டிருந்தான். இச்சப்தம் கேட்டவுடன், அவன் திடுக்

கிட்டு விழித்தான். அவனுடைய நாவினின்றும் அநாயாசமாக, "உம், யாரது?" என்ற கேள்வி வெளியேறியது.

"அஜித்! அஜித்! எழுந்திரு. நான் உனக்காகச் சாப்பாடு கொண்டுவந்திருக்கிறேன்" என்று மீண்டும் அந்தக் குரல் கூறியது.

சப்தத்தினின்றும் மோஹினி வந்திருக்கிருள் என்று அஜித் அறிந்து, மிகச் சந்தோஷமடைந்தான். எவனுவது பாராக்காரன் இச் சமயம் அங்கு வந்தால் மோஹினியின் கதி என்னுவது எனத் திடீரென்று அவன் மனத்தில் ஓர் எண்ணம் உதித்தது. உடனே அவன் மிகவும் கம்பீரமாக, "மோஹினி, உடனே இவ்விடத்தை விட்டு ஓடிவிடு" என்ருன்.

மோஹினி மெதுவாகச் சிரித்தாள். "பாராக்காரன் தூங்கிக் கொண்டிருக்கிருன்; நீ உன் கொட்டடி ஜன்னலின் வழியாக இந்தச் சாதத்தை வாங்கிக்கொள். எங்கே இருக்கிறது ஜன்னல்?" என்று மோஹினி கேட்டாள்.

"தெற்குச் சுவரில் மேற்புறமாக" என்று அஜித் சொன்னுன். சிறிது நேரத்தில் அங்கே கமுகம் பட்டையில் சாதமும், அதன்மேல் கொஞ்சம் வெண்ணெயும் வைக்கப்பட்டன. அஜித் அதை உடனே உள்ளே இழுத்துக்கொண்டான்.

"இங்கே உனக்கு நன்ருய்த் தூக்கம் வருகிறதா?" என்று மோஹினி கேட்டாள்.

அஜித் மிகுந்த கஷ்டத்துடன், "இங்கே கணக்கில்லாத மூட்டுப் பூச்சிகளும் கொசுக்களும் இருக்கின்றன. என் முதுகு முழுதும் சல்லடை மாதிரியாகிவிட்டது" என்ருன்.

சிறுமியின் கண்களில் நீர் ததும்பியது. ஆனுல் தான் அழுவது எங்கே அஜித்திற்குத் தெரிந்துவிடுமோ என்று ஒரு சிரிப்பை வருந்தி வருவித்துக்கொண்டு, "ரொம்ப நல்லதாச்சு; உன் சரீரத்தில் இவ்வளவு மாமிசம் இருக்கிறதே; அது வேறு எவ்விதத்தில் உபயோகப்படப் போகிறது!" என்ருள்.

மோஹினியின் இவ்வார்த்தைகளைக் கேட்டவுடன் அஜித் மிகவும் கோபம் கொண்டான். "இன்னும் நாலுநாள் பொறு. அப்புறம் பார்க்கலாம், நீ கேலி பண்ணுகிறதையெல்லாம்!"

"மெதுவாய்ப் பேசு, அஜித்! பாராக்காரன் விழித்துக் கொள்ளப் போகிருன்."

தான் கொட்டடியில் அடைபட்டிருப்பதை அஜித் மறந்து விட்டான்போலும்! மோஹினி பாராக்காரன் என்று சொன்ன

பிறகுதான் அவனுக்கு அது ஞாபகம் வந்தது. அவன் மெதுவான குரலில், "மோஹினி, ஓடு வீட்டுக்கு! இந்தப் பயல்கள் ரொம்பப் பொல்லாதவர்கள்" என்று சொன்னான்.

அதிமிருதுவான குரலில் மோஹினி, "அஜித்" என்று கூப்பிட்டாள்.

சிறையினுள்ளிருந்து அதே மெல்லிய குரலில், "மோஹினி!" என்று பதில் வந்தது.

அதற்கப்புறம் எங்கும் நிசப்தம். மோஹினி போய்விட்டாள் என்று அஜித் அறிந்துகொண்டான். அப்பொழுது இரவின் இரண்டாம் சாமம். ஆகாயத்தில் மதியம் மலர்ந்திருந்தது. என்ருலும் கொட்டடியில் ஒரே இருள். தென்திசையிலுள்ள சிறு ஜன்னல் வழியாக மட்டும் சந்திரனுடைய திவ்யகிரணங்களின் ஒளி, கொட்டடிக்குள் சிறிது நுழைந்தது. அந்த ஒளியின் உதவியால், அஜித் வெண்ணெயைச் சோற்றில் பிசைந்து சாப்பிட ஆரம்பித்தான். அவனுக்குப் பொறுக்க முடியாத பசி.

இது, அஜித் கொட்டடியில் அடைப்பட்ட மூன்ருவது இரவு. கிழக்கிந்தியக் கம்பெனி உத்தியோகஸ்தர்கள் கொடுத்த வேலையை அவனுல் குறித்த காலத்தில் செய்து முடிக்க முடியவில்லை. அதனுல்தான் அவனுக்கு ஒரு வாரம் சிறைவாசம் கிடைத்தது. அவனுக்கு இன்னும் 16 வயசுகூட முற்றும் முடியவில்லை. கம்பெனி உத்தியோகஸ்தர்கள், அவன் தாய்க்கு அவள் சக்திக்குப் பன்மடங்கு அதிகமான வேலை கொடுத்திருந்தார்கள். ஆகையினுல் அஜித் சிறுவனுயிருந்த போதிலும், தாயின் வேலையைத் தன்மீது ஏற்றுக்கொண்டான். அதிக முயற்சியின் பேரில் கம்பெனி ரிஜிஸ்டரிலிருந்து, தாயின் பெயரை அடித்துவிட்டுத் தன் பெயரை எழுதிவிட்டான். ஒருவேளை வேலை முடிக்காத காரணத்தால் சிறைவாசம் அனுபவிக்க வேண்டியிருந்தால், அந்தக் கொடுந் தண்டனை, தன் கிழத்தாயையாவது சாராமலிருக்கவேண்டுமென்பது அவனுடைய நோக்கம். தாயோ கிழவி; தனயன் உலக அநுபவம் இல்லாத சிறுவன். ஆதலின், கம்பெனியின் புது அரசாட்சியின் முதல் மாதம் முடிவதற்குள்ளேயே, சிறைவாசம் அநுபவிக்க வேண்டி நேர்ந்த பாக்கியஹீனர்களாகிய நெசவுகாரர்களில், அஜித்தும் ஒருவனுனன்.

சாதம் சாப்பிட்டதும், அஜித்திற்குத் தன் உணர்வு வந்தது. கம்பெனி உத்தியோகஸ்தர்களாகிய பாவிகள், கொட்டடியில் அடை

பட்டிருக்கும் கைதிகளைப்பற்றி இரண்டு மூன்று தினங்கள் வரை ஒன்றுமே கவனிப்பதில்லை. ஆகையினால் இன்று வரைக்கும் அஜித் பசியினால் மிகவும் வருந்திக்கொண்டிருந்தான். சாப்பிட்டு முடிந்ததும் 8 அடி நீளமும் 6 அடி அகலமுமுள்ள அக்கொட்டடியில் மெள்ள மெள்ள அவன் உலாவ ஆரம்பித்தான். உள்ளே கொடிய உஷ்ணம். கும்மிருட்டு. அவ்விருளில் கணக்கில்லாத கொசுக்களின் சேனை 'நொய்' என்று பாண்டு வாத்தியம் வாசித்துக்கொண்டிருந்தது. கொஞ்சநேரம் இம்மாதிரி உலாவிக்கொண்டிருந்தபின், அவன் போர்வையைப் போர்த்திக்கொண்டு, பாயின்மீது படுத்து உறங்கினான். முந்தின இரண்டு நாட்களும் அவனுக்குத் தூக்கமே இல்லை. ஆகையினால் இன்று அயர்ந்து தூங்கிவிட்டான்.

அதிகாலையில், பக்கத்து அறையினின்றும் பெருங் கூக்குரல் எழவே, அஜித் திடுக்கிட்டு விழித்து ஒரு குதிகுதித்து எழுந்து நின்றான். பக்கத்துக் கொட்டடியிலிருந்த நெசவுகாரனை, சிறைச்சாலை ஜமேதார் ஒரு தோற்சவுக்கினால் அடித்துக்கொண்டிருந்தான். அஜித்திற்கு உடம்பெல்லாம் நடுங்க ஆரம்பித்தது. இரவு மோஹினி வந்து போன விஷயம், ஒருவேளை அதிகாரிகளுக்குத் தெரிந்துவிட்டதோ என்னவோ எனச் சந்தேகிக்கலானான். தற்செயலாக, அஜித்தின் பார்வை கொட்டடி மூலையில் கிடந்த கமுகம்பட்டையின் மீது விழுந்தது. மோஹினி சாதம் கொண்டுவந்த பட்டை அது. அப்பட்டையின் காரணமாக எங்கே தன் உயிருக்கே ஆபத்து வந்துவிடுகிறதோ என்று அஞ்சி, உடனே அதை எடுத்து அவசர அவசரமாகத் தின்றுவிட்டான்!

சிறிது நேரத்தில், அஜித் வசித்த கொட்டடிக் கதவு திறக்கப்பட்டது. சிறைச்சாலை ஜமேதாரோடு, இன்று ஒரு பறங்கியும் வந்திருந்தான். அவன் கையில் தோல் சவுக்கு இருந்தது. கொட்டடியினின்றும் அஜித் வெளியே கொண்டு போகப்பட்டான். பக்கத்துக் கொட்டடியிலிருந்த நெசவுகாரன் சவுக்கடி பொறுக்கமாட்டாமல் குற்றுயிராய்க் கிடப்பதை அஜித் கண்டு நடுங்கினான். அஜித் மிகச் சிறு பையன் என்று அப்பறங்கிக்குத் தோன்றியது. ஆகையினால் அவனுக்கு இரண்டோர் அடி மட்டும் கொடுத்து, "அஜித்! இனிமேல் குறித்த காலத்தில் உன் வேலையைச் செய்து முடிக்காவிட்டால், உன்னை லகுவில் விடமாட்டோம்" என்று எச்சரிக்கை செய்து வீட்டுக்கு அனுப்பிவிட்டான்.

## 'தொழிற்சாலை' ஆரம்பம்

மேதினீபுர ஜில்லாவில், அக்காலத்தில் கம்பெனி ஏஜெண்டாக வேலை பார்த்துக்கொண்டிருந்தவன் பெயர் மிஸ்டர் பாக்ஸ். அவன் உண்மையிலேயே நரியைப்போல் தந்திரமும் கொடுமையும் வாய்ந்தவன். பாக்ஸ் மேதினீபுர ஜில்லா நெசவுகாரர்களிடமிருந்து வேலை வாங்குவதற்கு ஒரு புது உபாயம் கண்டுபிடித்திருந்தான். அவன் கிராமந்தோறும் ஒரு 'தொழிற்சாலை' கட்டினான். முன்பெல்லாம் நெசவுகாரர்களுக்குக் கொஞ்சம் 'முன் பணம்' கொடுத்து, மாதம் முழுவதற்குமுள்ள வேலையை அவர்களிடத்தில் ஒப்பித்து விடுவது வழக்கம். அவ்வேலையை முடிக்காதவர்களுக்குச் சிறைத் தண்டனை விதிப்பார்கள். ஆனால் இப்பொழுதோ, ஒவ்வொரு நெசவுகாரனும், ஒரு குறிப்பிட்ட நேரம், இத்தொழிற்சாலையிலேயே வந்து வேலை செய்ய வேண்டும் என்று பாக்ஸ் கட்டளையிட்டான். அவர்கள் இனிமேல் தங்கள் வீடுகளில் ஒரு வேலையும் செய்யக்கூடாது. பாக்ஸ் ஏற்படுத்திய தொழிற்சாலைகளில், நெசவுகாரர்களிடமிருந்து தினந்தோறும் பன்னிரண்டு மணி நேரம் வேலை வாங்கப்பட்டது. மத்தியான்ன போஜனத்திற்காக, கேவலம் ஒரு மணி நேர அவகாசந்தான் கொடுக்கப்படும். அவ்வொரு மணிநேரத்திற்குள்ளேயே அநேக நெசவுகாரர்கள் சமைத்துச் சாப்பிட வேண்டியிருந்தது. இரவில் கொஞ்ச நேரம் தவிர, மற்ற நேரங்களில், தொழிற்சாலை மூடுவதே இல்லை. நெசவுகாரர்களிடம் இவ்வளவு வேலை வாங்கியுங்கூட, அவர்களுக்குத் தினந்தோறும் கேவலம் முக்காலணாவிலிருந்து நாலணா வரைக்குந்தான் கூலிகொடுத்தார்கள்.

பாவம்! அஜித்தும் கம்பெனியாரின் கொடுமைக்குப் பலியாக வேண்டியிருந்தது. அவனுடைய வீட்டிலிருந்த தறி உடைத்து எறியப்பட்டது. துணி நெய்வதற்கு அவன் வீட்டிலிருந்த கருவிகளையெல்லாம் சொற்ப விலை கொடுத்துப் பறங்கியர்கள் வாங்கிக் கொண்டார்கள்.

அந்த ஜில்லாவிலிருந்த நெசவுகாரர்களில் பெரும்பான்மையோர் இந்தக் கொடுமைகளைச் சகிக்க முடியாமல், தங்கள் சொந்த வீடுகளை விட்டுக் கீழ்த்திசையிலுள்ள காடுகளுக்குச் சென்று வசிக்க ஆரம்பித்தார்கள். மற்றும் சிலர் கம்பெனியாரின் கொடுமைகளினின்றும் தப்புவதற்காக தங்கள் பெரு விரல்களை வெட்டிக்கொண்டார்கள். நாட்டில் குழப்பம் அதிகரித்தது. பிணியும் பஞ்சமும்

பரவ ஆரம்பித்தன. அக்காலத்தில் அவைகளைப்பற்றி எவரும் கவனிப்பாரில்லை.

அஜித் அதிகாலையில் தொழிற்சாலைக்குச் சென்று, இரவு நன்ருய் இருட்டியபின் வீட்டுக்குத் திரும்புவான். இந்தக் கொடிய அவஸ்தைகளைப் பொறுக்க முடியாமல் அவனுடைய வதனம் வாட ஆரம்பித்தது. அவனுடைய உல்லாசமும் உள்ளக் களிப்பும் எங்கோ பறந்து போயின. மஹிம்பூருக்குப் பக்கத்தில் அவ்வழகிய சிற்ருறு இன்னும் முன்போலவே, கற்களின்மேல் 'சலசல' என்று சப்தஞ் செய்துகொண்டு ஓடிக்கொண்டிருந்தது. ஆனல் இப்பொழுது அந்தப் பக்கம் போவதற்குக்கூட அவனுக்கு அவகாசம் கிடைப்பதில்லை.

மோஹினிக்கு இப்பொழுது பதினன்கு வயசாகிவிட்டது. ஆனல் இன்னும் அவளுக்கு விவாகம் ஆகாதிருந்தது மஹிம்பூர் வாசிகளுக்கு ஆச்சரியமா யிருந்தது. மோஹினியின் தாய்தந்தையர் நெசவுகாரர்களல்ல. அவர்கள் குடியானவர்கள். அந்தக்கிராமத்தில் அவர்கள் கொஞ்சம் பணக்காரர்களாயும் செல்வாக்குள்ளவர்களாயும் மதிக்கப்பட்டார்கள்.

மோஹினிக்கு ஏன் இன்னும் விவாகமாகவில்லை யென்பது இன்னும் ஒருவருக்கும் தெரியாது. மோஹினிகூட அதன் காரணத்தை அறிய மாட்டாள். அவளுக்குத் தெரிந்ததெல்லாம் இதுதான்: இனிமேல் அவள் சிறு குழந்தைகளைப்போல், எப்பொழுது வேண்டுமானலும் இஷ்டப்படி வெளியே செல்லக்கூடாது. உற்சவ தினங்களில் முன்னைப்போல் அவள் வேடிக்கைகள் பார்க்க முடியாது. வயசு ஆக ஆக, அவளுடைய வாழ்க்கையின் போக்கே மாறிவிட்டது. ஆனல் ஒரு விஷயம் மட்டும் எப்பொழுதும்போல் நடந்துகொண்டிருந்தது. மோஹினி இன்னும் சாயந்தர வேளைகளில் தன் பசுக்களை ஓட்டிக்கொண்டு தண்ணீர் காட்டுவதற்காக ஆற்றங்கரையை நோக்கிச் செல்வாள். நதியிலிருந்து திரும்புகையில், அவளுடைய வேகம் மிகக் குறைந்துவிடும். ஆனல் தண்ணீர் குடித்த பசுக்களோ தங்கள் கன்றுகளைப் பார்க்க வேண்டுமென்ற ஆத்திரத்தில் அதிக வேகமாக ஓடுகின்றன. அது மோஹினிக்குப் பிடிப்பதில்லை. கயிறுகளைப்பிடித்து இழுத்துக்கொண்டு, அவள் அவைகளை மெள்ளச் செலுத்துகிருள்.

நதியிலிருந்து அவளுடைய வீட்டிற்குச் செல்லும் பாதையின் ஒரு முனையில், கிழக்குத்திசையிலிருந்து இன்னெரு பாதை வந்து

சந்திக்கிறது. மோஹினி அச்சந்தியின் ஓரத்தில் நின்று, அவசியம் இரண்டு மூன்று நிமிஷங்கள் இளைப்பாறுவாள். அச்சமயம் களைப்பி ஞல் சோர்ந்த தேகமும், ரத்தமின்றி வெளுத்த முகமுங்கொண்ட நெசவுகாரர்கள் அப்பாதையின் வழியாகக் கிராமத்தை நோக்கி வரு வார்கள். ஆத்திரத்தோடு இருக்கும் பசுக்களைப் பிடித்து இழுத்துக் கொண்டு, மோஹினி அவர்களைப் பார்த்துக்கொண்டிருப்பாள். அவர் களில், அதிதூரத்தில் தொழிற்சாலையினின்றும் தனியாக வந்து கொண்டிருக்கும் அஜித்தும், சிற்சில சமயங்களில் அவள் கண்களுக் குத் தென்படுவான். அஜித் நாளுக்கு நாள் பலஹீனமடைந்து வருவதை மோஹினி தினந்தோறும் பார்க்கிருள். அவளருகில் வந்து அவன் தினந்தோறும் புன்முறுவல் பூக்கிருன். ஆனல் அவளுடைய பெரும் கருவிழிகளை உற்று நோக்குவதில்லை. உற்று நோக்கினல், நதிக்கரையிலிருந்து அந்த முனைவரைக்கும் அவள் அழுதுகொண்டே வந்திருப்பது தெரியவரும்.

சிற்சில சமயங்களில் தொழிற்சாலையில் அஜித்திற்குச் சவுக்கடி யும் கிடைப்பது உண்டு. தொழிற்சாலையினின்றும் திரும்பும்போது, அவன் சவுக்கடி பட்ட காயங்களை மோஹினியின் பார்வையினின்று மறைப்பதற்காகத் தன் பழைய கிழிந்த போர்வையால் முதுகை மூடுவதற்கு வீண் பிரயத்தனம் செய்வான். ஆனலும் அவளுடைய கூரிய பார்வையினின்றும் அவைகளை மறைக்க முடிவதில்லை.

அந்திநேர இருளில், தொழிற்சாலையினின்றும் சப்தமில்லாமல் மெதுவாக வீட்டிற்குத் திரும்பும் அஜித்தைப் பார்ப்பது மோஹி னிக்கு மிக்க இன்பமாக இருக்கும். தன்னைப் பாாப்பதைவிட மகத் தான சந்தோஷம் அஜித்திற்கு வேறு ஒன்றுமில்லை யென்பதும் அவளுக்குத் தெரியும். அவளைப் பார்த்தவுடன் அஜித்தின் களைப்பு முழுதும் நிமிஷ நேரத்தில் நீங்கிவிடும்.

## தசரா உற்சவம்

இன்று தசரா உற்சவம். இன்றுங்கூடத் தொழிற்சாலையில் அரை நாள் ரஜாதான். மத்தியான்னம் ஒரு மணிக்குத் தொழிற் சாலைக்குப் போய்விடவேண்டும். ஊர் முழுதும் இன்று உற்சவம் கொண்டாடுகிருர்கள்.

பல மாதங்களுக்குப் பிறகு இன்றுதான் அதிகாலையிலேயே அஜித் நதிக்கரைக்குச் சென்ருன். அங்கே அவன் ஒரு பீப்பாய் நிறையத் தண்ணீரை நிரப்பி, அதில் கெட்டியாகச் சிவப்பு வர்ணத்

தைக் கலக்கினான். நதிக்கரையினின்று செல்லும் இடையர்கள், வலையர்கள், நதியில் ஸ்நானம் செய்யச் செல்லும் ஸ்திரீகள் - ஒருவரும் அவனைத் தப்ப முடியவில்லை. அவன் யாவர்மீதும் தசராவின் வர்ணப் பிரசாதத்தைத் தெளித்தான். அவனும் தன் உடைகளை யெல்லாம் அதே வர்ணத்தில் தோய்த்து அணிந்துகொண்டிருந்தான். அவன் தன் உடம்பிலும் அதே வர்ணத்தைப் பூசியிருந்ததால், அவனை அடையாளம் கண்டுபிடிப்பதுகூடக் கஷ்டமாயிருந்தது.

மோஹினி பத்துமணி சுமாருக்கு அஜித் வீட்டிற்குச் சென்றாள். அவன் அதிகாலையிலேயே நதிக்கரையை நோக்கிச் சென்று விட்டதாக அவன் தாய் சொன்னாள். உடனே மோஹினியும் நதியை நோக்கிச் சென்றாள். கொஞ்சதூரஞ் சென்றதும், அத்தெருக் கோடியில் ஒரு காட்சியைக் கண்டாள். பல நாட்களாய் எங்கோ சென்று மறைந்திருந்த அவளுடைய இயற்கைப் புன்னகை அன்று மீண்டும் அவளுடைய இதழ்களில் தவழ்ந்தது. அஜித் உற்சவ மூர்த்தியே உருவெடுத்தவன்போல் அவளை நோக்கி ஓடிவருவதைக் கண்டாள். அவளுக்கு ஓர் அடிகூட இங்கு அங்கு விலகுவதற்கு அவகாசம் கிடைக்கவில்லை. உடனே அஜித் அவள்மேல் ஒரு பாத்திரம் நிறைய இருந்த சாயத் தண்ணீரை ஊற்றினான். இப்பொழுது மோஹினியின் முறை. அஜித் பீப்பாயைத் தெருவின் நடுமத்தியில் வைத்திருந்தான். அவள் நேராய் அதை நோக்கிச் சென்று, அந்தப் பீப்பாயிலிருந்த வர்ணநீர் முழுதையும் தெருவில் கவிழ்த்து விட்டாள். அஜித் தன் தோல்வியை ஒப்புக்கொண்டான். இருவரும் இப்பொழுது நதிக்கரையை நோக்கிச் சென்றார்கள். அநேகநாட்களுக் கப்புறம் இன்றுதான் இருவருக்கும் தங்கள் தங்கள் சுகதுக்கங்களை மற்றவரிடம் சொல்லிக்கொள்ளச் சந்தர்ப்பம் கிடைத்தது. ஆகையினால், இருவரும் வெகு நேரம்வரை ஆற்றங்கரை மணல்மீது உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தனர்.

அதன்பின் ஸ்நான போஜனாதிகளை முடித்துக்கொண்டு, அஜித் தொழிற்சாலைக்குப் போனபொழுது மணி மூன்றாகிவிட்டது. மிகுந்த பயத்துடன் தன் தறியண்டை போய் நின்றான். துர்ப்பாக்கிய வசமாக, மஹிம்பூர் தொழிற்சாலையை மேற்பார்ப்பதற்காக மிஸ்டர் பாக்ஸ் துரை அன்று அங்கு வந்திருந்தான். அஜித்திற்கு அந்தச் சமாசாரம் தெரியாது. அவன் வேஷ்டியை வரிந்து கட்டிக்கொண்டு, தன் வேலையைச் செய்ய ஆரம்பித்தான். திடீரென்று அங்கு ஒரு ஜமேதார் வந்து, "இன்று துரைகள் வருவதற்கு ஏன் இவ்வளவு

நேரம்?" என்று அஜித்தைக் கேட்டான். அஜித் ஒன்றும் பதில் சொல்லவில்லை. ஜமேதார் முன்கோபக்காரன். சமீபத்தில் வந்து அஜித்தின் காதைப் பிடித்துக்கொண்டு, "பதில் சொல்லுவதற்கு என்ன கேடு?" என்று கேட்டான்.

அஜித் ஜமேதாருடைய கையை வெடுக்கென்று பிடுங்கி விலக்கிக் கொண்டு, "நீ காதைப் பிடிப்பதன் அர்த்தமென்ன? நேரங்கழித்து வந்திருந்தால், கூலியைப் பிடித்துக்கொள்" என்றான்.

அஜித் இம்மாதிரி எதிர்ப்பானென்று ஜமேதார் கனவிலும் எண்ணவில்லை. ஆகையினால், அப்போக்கிரி உரத்த சப்தத்துடன், "ஐயோ! இந்தப் பயல் என் கையை ஒடித்துவிட்டானே, ஐயோ! ஐயோ!" என்று கூக்குரலிட ஆரம்பித்தான்.

அக்கூக்குரலைக் கேட்டவுடன் ஜமேதார்கள் அனைவரும் சவுக்கும் கையுமாய் அவன்மீது பாய்ந்தார்கள். அஜித் நடுநடுங்கினான். ஒரே சமயத்தில் அத்தனை சவுக்கடிகளையும் அவன் எங்ஙனம் தாங்குவான்? வேறு வழியில்லாமல் சவுக்கடிகள் அனைத்தையும் தன் கைகளினால் தடுக்க யத்தனித்தான். இச்சப்தத்தைக் கேட்டு மிஸ்டர் பாக்ஸும் அவ்விடத்தை அடைந்தான். அடிகளை மிக்க அகங்காரத்தோடு அஜித் தடுத்துக்கொண்டிருப்பதுபோல் அவனுக்குத் தோற்றியது. ஆகையினால் அவன் இடைமறித்து ஜமேதார்களைத் தடுக்கவில்லை. அஜித்தின் உடம்பு முழுதும் ரத்தம் பீறிட்டு வெளியேறும்வரை ஜமேதார்களும் அடிப்பதை நிறுத்தவில்லை.

உற்சவ தினமாகையால் மோஹினி இன்று வெகு சந்தோஷமாயிருந்தாள். மத்தியான்னத்திற்கு அப்புறம் அவள் வீட்டைவிட்டு வெளியேறவில்லை. வீட்டிலேயே இருந்து அவள் மிகவும் சிரமத்துடன் ரஸகுல்லா தயார் செய்தாள். பின்னர் ஒரு கிண்ணம் நிறைய ரஸகுல்லாவை எடுத்துக்கொண்டு, சூர்யாஸ்தமனத்திற்குப் பின் அஜித்தின் வீட்டிற்குச் சென்றாள்.

அங்கே அவள் கண்டதென்ன? அஜித்தின் கிழத்தாய் வாசற்படியில் மிக வருத்தத்துடன் உட்கார்ந்திருந்தாள். தொழிற்சாலைக்கு அஜித் நேரங்கழித்துச் சென்றதனால், அன்று மத்தியான்னத்திலிருந்து அவள் மனம் நிம்மதியாய் இல்லை. இருட்டிய பின்னும், அஜித் வீட்டிற்குத் திரும்பி வராததைக் கண்டதும், அவளுடைய கவலை அதிகரித்தது. அவள் இருந்த நிலைமையைக் கண்டதும், மோஹினி ரஸகுல்லாக்

கிண்ணத்தைத் தன் மடியில் மறைத்துக்கொண்டு, "அம்மா! அஜித் எங்கே?" என்று கேட்டாள்.

கிழவி கையை அலைத்துக்கொண்டே, "தெரியாது" என்றாள். அவளுடைய துக்கத்தைக் கண்ட மோஹினிக்கு, அவளிடம் வேறு ஒன்றும் கேட்பதற்குத் தைரியம் வரவில்லை. ரஸகுல்லாவைப் பற்றிக் கிழவியிடம் ஒன்றும் சொல்லாமல், கிண்ணத்தை மறைத்துக் கொண்டு மெல்ல மெல்லத் திரும்பிவிட்டாள்.

மோஹினிக்கு வீட்டிற்குப் போக மனமில்லை. தொழிற் சாலையை நோக்கிச் சென்றாள். சதுர்த்தசி சந்திரன் ஆகாயத்தில் நிர்மல ஒளியைப் பரப்பிக்கொண்டிருந்தது. வெகு தூரமுள்ள பொருள்கள்கூடத் தெளிவாகத் தெரிந்தன. மோஹினி அவசர அவசரமாக அந்தப் பாதையில் நடந்து சென்றாள். கொஞ்சதூரத்தில் நடுப்பாதையில் கறுப்பாய் ஏதோ ஒரு பொருள் கிடப்பது தெரிந்தது. இன்னும் கொஞ்ச தூரம் முன்னால் சென்றதும், யாரோ புலம்பும் சப்தம் கேட்க ஆரம்பித்தது. மோஹினியின் ஹிருதயம், 'திக், திக்' என்று அடிக்கத் தொடங்கிற்று. சமீபத்தில் சென்றதும் அவன் தான், இன்று மத்தியான்னம் வரைக்கும் கிராமத்தில் மிகக் குதூகல மாய்த் தசராக் கொண்டாடிய அஜித் என்று அறிந்தாள். புழுதி நிறைந்த அப்பாதையில் அவன் குற்றுயிராய்க் கிடந்தான். அச்சமும், துன்பமும், ஆச்சரியமும் மாறி மாறி அவள் உள்ளத்தில் தோன் றின. துன்ப மிகுதியினால் அவளுக்குக் கண்ணீர்கூட வரவில்லை. ரஸகுல்லாக் கிண்ணத்தைத் தெருவில் தூர எறிந்தாள். அதற்கப் புறம்? அதற்கப்புறம் - மெல்லிய தன் பலஹீனமான சரீரத்தில் அஜித்தைத் தாங்கிக்கொண்டு, மெள்ள மெள்ள, அவனுடைய தாயினிடத்தில் இட்டுச் சென்றாள்.

கிழவி அன்று அழுத அழுகைக்கு அளவே இல்லை. அவளுடைய அழுகைக் குரலைக் கேட்டு நூற்றுக்கணக்கான ஜனங்கள் கூடி விட்டார்கள்.

மஹிம்பூர் கிராமத்திலிருந்த நவாப் மூர்ஷதலியின் உத்தி யோகஸ்தர்கள் மேற்கூறிய சம்பவத்தைக் கேட்டதும் மிகவும் வருந் தினார்கள். ஆனால் அதற்காகக் கம்பெனி உத்தியோகஸ்தர்களில் கேவலம் ஒரு வேலைக்காரனைக்கூடக் கண்டிப்பதற்கு அவர்களுக்குத் தைரியமில்லை. தேசபரிபாலனம் அக்காலத்தில் இம்மாதிரிக் கோழைகள் கைவசம் இருந்தது!

மோஹினியின் பணிவிடைகளினுல் அஜித் மரணத்தின்வாயினின்று தப்பினுன். அவனுடைய காயங்கள் ஆறுவதற்கு முழு மாதம் பிடித்தது. அவள்தான் எமனேடு போராடி அவனைக் காப்பாற்றினுள்.

## பிரிவு

தசரா உற்சவத்திற்கு ஒரு மாதத்திற்கப்புறம் நடந்த விஷயம். அஜித் இப்பொழுது பூரண சுகமடைந்துவிட்டான். அவனுடைய கிழத்தாய் அம்மகிழ்ச்சியில் மோஹினிக்கும் அஜித்திற்கும் விருந்தளிக்க நிச்சயித்து அதிகாலையில் சூரியோதயத்திற்கு முன்பே எழுந்திருந்து மிகவும் உற்சாகத்தோடு நானுவிதக் கறிவகைகளையும், மிட்டாய்களையும் தயார் செய்தாள். மோஹினி தினந்தோறும் தன் நித்தியகருமங்களை முடித்துக்கொண்டு, காலை எட்டு மணி சுமாருக்கு அஜித்தின் வீட்டிற்கு வருவது வழக்கம். விருந்து சம்பந்தமாய்க் கிழவி மோஹினிக்கு முன்னமேயே ஒன்றும் சொல்லவில்லை. அவள் வருவதற்கு முன்பே எல்லாச் சாமான்களையும் தயார்செய்து, அவள் ஆச்சரியமுறுமாறு செய்யவேண்டுமென்று கிழவி நினைத்திருந்தாள். விருந்துக்கு வேண்டிய எல்லாச் சாமான்களும் தயாராகிவிட்டன. ஆனுல் மோஹினி இன்னும் வரவில்லை. அவளை அழைத்துக்கொண்டு வரலாமென்று அஜித் அவள் வீட்டிற்குப் புறப்பட்டுக்கொண்டிருந்தான். அதற்குள் மோஹினி வந்துவிட்டாள்! அஜித்தின் முகம் மகிழ்ச்சியால் மலர்ந்தது. அவன் புன்னகையுடன், "நீ வருவாயென்று வழியைப் பார்த்துப் பார்த்து அம்மா கண்ணும் பூத்துப் போயிற்று. உன்னை யாராவது சிறைசெய்து விட்டார்களா என்ன?" என்முன். அவள் வதனம் அன்று சோர்வுற்றிருந்தது. அவள் கண்களினின்றும் அப்பொழுதுதான் அவள் அழுதுவிட்டு வருபவள்போல் தோற்றியது. பின்னும் அவள் மிகுந்த பிரயாசையுடன் ஒரு புன்னகையை வரவழைத்துக்கொண்டு, "இல்லை, இந்தத் தாமதத்திற்கு விசேஷ காரணம் ஒன்றுமில்லை" என்று சொன்னுள்.

அதற்குள் வீட்டிற்குள்ளிருந்த கிழவி, மோஹினியைப் பார்த்ததும், "வா, மோஹினி! உனக்காக அஜித் வெகு நேரமாய்க் காத்துக்கொண்டிருக்கிருன். இன்று உங்கள் இருவருக்கும் நான் விருந்தளிக்க நினைத்திருக்கிறேன்" என்று சொன்னுள்.

மோஹினி இரு கைகளையும் கூப்பி அவனை நமஸ்கரித்தாள். தன் துன்பத்தை அஜித்திற்குத் தெரியாதவாறு அவள் மறைக்க யத்தனித்தாள். அஜித் அவளருகில் சென்று அவள் கையைப் பிடித்துக்கொண்டு மெல்லிய குரலில், "என்ன மோஹினி, விஷயம் என்ன?" என்று கேட்டான்.

"ஒன்றுமில்லை" என்று சொல்லிப் புன்னகை செய்வதற்கு வீண் பிரயத்தனம் செய்து, "வா, அம்மாவிடம் போவோம்" என்று சொன்னாள்.

அஜித் மோஹினியின் கையை விட்டுவிட்டு முகத்தை ஒருமாதிரி சுளித்துக்கொண்டான். அதைக் கண்டதும் மோஹினி கலகல வென்று நகைத்தாள். "நீ விநோதப் பேர்வழியா யிருக்கிறாய். இதற்கெல்லாம் கோபித்துக்கொள்ளலாமா?"

அஜித் ஒன்றும் பதில் சொல்லவில்லை. இருவரும் கிழவியிடம் சென்றார்கள். மோஹினி அன்றை விருந்தில் அதிக உற்சாகம் காட்ட ஆரம்பித்தாள்.

மோஹினியின் நடத்தை அன்று அஜித்திற்கு விநோதமாகத் தோற்றியது. ஆனால் அதன் காரணம் என்னவென்று அவனுக்கு விளங்கவில்லை.

சிறிது நேரத்திற்குப் பின் அவள் அஜித்தின் தாயிடம், ஏதோ ஒரு சர்வ சாதாரண விஷயத்தைச் சொல்பவள்போல், "அம்மா, நீங்கள் மஹிம்பூரை விட்டுப் போகவேண்டியிருக்கும்; ஒருவேளை இன்றே புறப்படவேண்டியிருக்கலாம்" என்றாள்.

தாயும் மகனும் மிகுந்த ஆச்சரியத்துடன், "ஏன்?" என்று கேட்டார்கள்.

"இனிமேல் இந்த ஊரில் இருந்து உங்களால் நிர்வகிக்க முடியாது."

"ஏன்?" என்று மீண்டும் கிழவி ஆத்திரத்துடன் கேட்டாள்.

"இந்தக் கிராமத்து நெசவுகாரர்கள்மீது கடவுள் கோபங் கொண்டிருக்கிறார். இங்கிருக்கும் நெசவுகாரர்கள் அனைவரையும் பறங்கியர்கள் அடியோடு நாசம் செய்யப் போவதாக நான் கேள்விப் பட்டேன்."

"யார் உனக்குச் சொன்னது?"

"எல்லோருந்தான் பேசிக்கொள்ளுகிறார்கள். எல்லா நெசவு காரர்களும் கிழக்குத் திசையை நோக்கி, கோல்பாடா ஜில்லாவிற்கு

ஓடுகிறார்கள். நம் தேசத்துச் சேடர்கள் அனைவரையும் அடியோடு தொலைத்துவிட வேண்டுமென்பது பறங்கியர்களுடைய விருப்பமாம்.''

இவ்விஷயம் அனைத்தையும் கிழவி முன்பே கேள்விப்பட்டிருந்தாள். அஜித் சுகமடைந்தவுடன் அவனைக் கூட்டிக்கொண்டு கீழ்த் திசைக் காடுகளை நோக்கி ஓடிவிடவேண்டுமென்பது அவளுடைய எண்ணம். ஆனால், அஜித்தும், மோஹினியும் அது விஷயத்தில் மிகுந்த துக்கப்படுவார்களே என்று தயங்கிக் கொண்டிருந்தாள். இப்பொழுது மோஹினியே இவ்வாறு சொன்னதும், அவள் அஜித்தை நோக்கி, "கேட்டாயா, மோஹினி என்ன சொல்லுகிறாள் என்று?" என்றாள்.

அஜித் யாதொரு பதிலும் சொல்லவில்லை. அச்சமயம் திடீரென்று அவர்களுடைய கன்றுக்குட்டி கயிற்றை அறுத்துக்கொண்டு முற்றத்திலுள்ள பயிர்க்குழியை மேய ஆரம்பித்தது. உடனே கிழவி எழுந்து அதைக் கட்டுவதற்குச் சென்றாள்.

மோஹினியும் அஜித்தும் தனியே இருந்தார்கள். அஜித் கண்ணீர் ததும்பும் தன் கண்களால் மோஹினியை நோக்கி மிகுந்த துக்கத்துடன், "நீ இத்தனை கொடியவளா யிருப்பாயென்று நான் நினைக்கவில்லை" என்றான்.

மோஹினியின் சரீரத்தில் ஒரு மின்னல் பாய்ந்ததுபோலிருந்தது. அவளுடைய கண்களினின்றும் மாலை மாலையாக நீர் வடிந்தது. ஆனால் அவையனைத்தையும் அடக்கிக்கொண்டு மிகுந்த கம்பீரத்துடன், "அஜித், நீ கீழ்நாட்டிற்குப் போகத்தான் வேண்டும்" என்றாள். அவ்விதம் சொல்லும்பொழுது அவளுடைய உள்ளத்தில் நானாவிதமான உணர்ச்சிகள் எழுந்தன. அவளுடைய முகம் சிவந்தது.

"பாதகி!" என்றான் அஜித்.

மோஹினியின் கண்களில் கண்ணீர் ததும்பியது. திடீரென்று முத்துப்போல் இரண்டு கண்ணீர்த் துளிகள் அவளுடைய அழகிய சிவந்த கன்னங்களில் விழுந்து கீழே வடிந்தன.

இதற்குள், அஜித்தின் தாய் திரும்பிவரும் சப்தம் கேட்கவே, மோஹினி அவசர அவசரமாகத் தன் கண்களைத் துடைத்துப் புன்முறுவலுடன், "அம்மா, நிரம்பப் பசி எடுக்கிறது. இன்னும் எவ்வளவு நேரம் என்னைக் காக்க வைப்பீர்கள்?" என்று கேட்டாள்.

கிழவி மிக்க சந்தோஷத்துடன் பரிமாற ஆரம்பித்தாள்.

அஜித்துக்குச் சாப்பிடவே பிரியமில்லே. ஆனல் மோஹினியின் கட்டாயத்துக்காகவும், அவளுடைய அன்பார்ந்த பிரார்த்தனைக்காக வும் கொஞ்சம் சாப்பிட்டான்.

போஜனத்திற்குப் பின் மோஹினியும் அஜித்தும் மீண்டும் ஏகாந்தமா யிருந்தார்கள். மணிக்கணக்கில் அவர்கள் என்னதான் பேசிக்கொண்டிருந்தார்களோ தெரியவில்லே. அவர்களிருவருடைய முகங்களிலும் துக்கமும் சந்தோஷமும் மாறி மாறித் தோன்ற ஆரம்பித்தன. பின்பு புறப்படுவதற்கு வேண்டிய ஏற்பாடுகள் எல்லாம் அஜித் செய்ய ஆரம்பித்தான்.

இரவு வந்தது. அன்று வைகாசி மாதம் சுக்ல பக்ஷ சதுர்த்தசி. ஆகாயத்தில் பூர்ண சந்திரன் உதயமாகிக்கொண்டிருந்தது. ஆயினும், அன்று அது அவ்வளவு பிரகாசமாயில்லே. அவ்விரவில் அஜித் இரண்டு மூட்டைகளைத் தூக்கிக்கொண்டு தன் தாயுடன், சப்தம் செய்யாமல் நதிக்கரையை நோக்கிச் சென்றுகொண்டிருந்தான். மோஹினியும் அவர்களோடு சென்ருள். யாராகிலும் பிடித்துக் கொள்வார்களோ என்னவோ என்ற பயத்தால், அஜித் குடியான வனைப்போல் மாறுவேஷம் பூண்டிருந்தான்.

அம்மூவரும் கிராம எல்லேயைக் கடந்து நதிக்கரையை அடைந்தார்கள். காட்டில் எங்கும் நிச்சப்தமாயிருந்தது. ஆற்றில் நீர் முற்றும் வடிந்துவிட்டதால் தண்ணீர் ஓடும் சப்தங்கூட இல்லே. அஜித்தும் மோஹினியும் பேசாமல் போய்க்கொண்டிருந்தார்கள். எங்கும் ஒரே அமைதி. அஜித்தின் உள்ளத்திலும், மோஹினியின் உள்ளத்திலும் பழைய ஞாபகங்கள் எழுந்து ஒரு புயலேக் கிளப்பி விட்டதுபோ லிருந்தது. கடைசியில் அவர்கள் ஒருவரை விட்டு ஒரு வர் பிரியுங்காலமும் வந்துவிட்டது.

மோஹினி வீடுநோக்கித் திரும்பினுள். தாயின் கையைப் பிடித்துக் கொண்டு அஜித் மெள்ள மெள்ள நதிக்கரையைக் கடக்க ஆரம்பித்தான்.

## பத்து வருஷங்களுக்குப் பின்

பிரம்மபுத்திரா நதிக்கரையில் வெகுதூரம்வரை அடர்ந்த ஒரு காடு. அக்காட்டில் ஒரு வேடன் வசிக்கிருன். அக்காலத்தில் வங்கா ளம் முழுதிலும் கம்பெனியாரின் ஆட்சி நன்ருய் ஸ்தாபிதமாகி யிருந்தது. ஆனல் அக்காட்டில் மட்டும் அவ்வேடனுடைய ஏகாதி பத்தியந்தான். அவ்வேடனுக்கும் மனித ஜாதிக்கும் ஒரு சம்பந்தமும்

இல்லை. அவனுடைய பிரஜைகளெல்லாம் மிருகங்களே. வங்காளம் முழுவதிலுமுள்ள வேடர்கள் எல்லாரும், இந்தப் பிரம்மபுத்திரா நதி வேடனைத் தங்கள் தெய்வமாக மதிக்கிறார்கள். ஆனால் அவர்களில் அநேகர் இன்னும் அவனைப் பார்த்திருக்கக்கூட மாட்டார்கள். அவ்வேடன் நல்ல திடகாத்திரமான வாலிபன். அகன்ற மார்பும் உயர்ந்த புஜங்களும் வாய்ந்தவன். தன்னந் தனியே வசிக்கிறான். அவன் வஸ்திரம் அணிவதில்லை. ஒரு பெரிய சிங்கத்தின் தோலைத் தன் இடுப்பில் கட்டியிருக்கிறான். அவன் எங்கே பிறந்தான் என்பது ஒருவருக்கும் தெரியாது. வங்காளம் முழுவதும் அவனைப்பற்றி அநேகக் கதைகள் வழங்கிவந்தன. அவன் சிங்கத்தின்மீது சவாரி செய்கிறானென்றும், தும்பிக்கைகளால் காட்டு யானைகள் அவனுக்குத் திலகமிடுகின்றன என்றும், காட்டுப் பறவைகள் அவன் சாப்பிடுவதற்குப் பழங்கள் கொண்டுவந்து கொடுக்கின்றன என்றும் ஜனங்கள் சொல்லுகிறார்கள். அக்கதைகளில் எவ்வளவு உண்மை, எவ்வளவு பொய்யென்று ஒருவராலும் சொல்ல முடியாது. ஆனால் ஒன்று மட்டிலும் உண்மை: அவ்வேடனுக்கும் பறங்கியர்களுக்கும் ஜன்மப் பகை. அவனுடைய சிரசில் எப்பொழுதும் ஒரு கிரீடம் இருக்கிறது. அது மனித எலும்புகளினால் செய்யப்பட்டிருந்தபோதிலும் மிக அழகாயிருக்கிறது.

மழைக்காலம் இப்பொழுதுதான் ஆரம்பித்தது. அந்திநேரம். பிரம்மபுத்திரா நதி முழுவேகத்துடன் ஓடிக்கொண்டிருந்தது. நதிக் கரையில் ஓர் உயர்ந்த பாறையின்மீது அவ்வேடன் பேசாமல் நின்றுகொண்டிருந்தான். பக்கத்து விருக்ஷங்களில் பக்ஷிகள் நானாவிதமான சப்தங்கள் செய்துகொண்டிருந்தன. காட்டில் மிருகங்கள் கத்திக்கொண்டிருந்தன. அவ்வேடன் துப்பாக்கியைத் தன் கையில் பிடித்துக்கொண்டு, நதியில் எழும் பெரிய அலைகளை நோக்கிய வண்ணம் நின்றுகொண்டிருந்தான்.

திடீரென்று, தூரத்தில் ஒரு நாய் குரைக்கும் சப்தம் கேட்டது. அவன் திடுக்கிட்டான். நாய் மேன்மேலும் குரைக்க ஆரம்பித்தது. இன்னும் ஏதாவது விசேஷ சம்பவம் நடக்குமென்று வேடன் அறிந்துகொண்டான். அவன் தன் துப்பாக்கியைக் கையில் இறுகப் பிடித்துக்கொண்டு விரைவாக நாய் குரைத்த திக்கை நோக்கிச் சென்றான். கொஞ்சதூரம் சென்றதும் நாய்கள், "பௌம், பௌம்" என்று குரைக்கும் சப்தத்துடன், யாரோ ஒரு ஸ்திரீயின் அழுகுரலையும்

வேடன் கேட்டான். என்ன காரணமோ, தெரியவில்லை. அவன் திடுக்கிட்டு விழித்தான்.

சற்றுத் தூரத்தில் காட்டின் ஒரு பாகத்தை வெட்டிச் சுத்தம் செய்து, இரண்டு மூன்று கூடாரங்கள் அடித்திருப்பது அவன் கண்களுக்குத் தென்பட்டது. அக்கூடாரங்களுக்கு முன்பு ஒரு பறங்கி உலாவிக்கொண்டிருக்கிறான். அவனுக்குப் பின்னால் கூடாரங்களின் வாசலில் அநேக சிப்பாய்கள், ஐந்தாறு வேட்டை நாய்களைப் பிடித்து இழுத்துக்கொண்டு நின்றுகொண்டிருக்கிறார்கள். வேடன் அதிவேகமாக முன்னால் சென்றான். பறங்கியின் கூடாரத்தில் ஒரு பாரதப் பெண்மணி கட்டுண்டு கிடப்பதை அவன் பார்த்தான். க்ஷண நேரம் அவன் அப்பெண்மணியைப் பார்த்தவண்ணமாகவே நின்றுகொண்டிருந்தான். பின்பு திடீரென்று ஒரே பாய்ச்சலாய்ப் பாய்ந்தான். அவனுக்கு அவ்வளவு தைரியம் எங்கிருந்து வந்ததென்று தெரியவில்லை. மின்னல் வேகத்தில் அவன் கூடாரத்தை அடைந்து துப்பாக்கியினால் அப்பறங்கியை அவ்விடத்திலேயே சுட்டு வீழ்த்தினான். அதன்பின், பெண்மணியின் அருகில் சென்று மிக்க மெல்லிய குரலில், "மோஹினி" என்று கூப்பிட்டான்.

அநேக வருஷங்களுக்குப் பின் அவ்வேடன் இன்றுதான் மீண்டும் மனிதர்களோடு பேசுகிறான்.

மோஹினி துப்பாக்கிச் சப்தத்தைக் கேட்டதும் முன்னைவிடப் பன்மடங்கு அதிகம் பயந்து நடுங்கிக்கொண்டு கிடந்தாள் ஆனால் இப்பொழுது தன் பெயரைக் கேட்டதும், அவள் திடுக்கிட்டு எழுந்தாள். அடுத்த நிமிஷம் அவள் வேடனை இன்னாரென்று அறிந்து மிக்க இனிய குரலில், "அஜித்!" என்றாள்,

வேடன், மோஹினியைத் தனது பலம் பொருந்திய புஜங்களில் தூக்கிப் போட்டுக்கொண்டு, வாயு வேகம் மனோவேகமாய்க் காட்டிற்குள் மறைந்துவிட்டான்.

இவையனைத்தும் ஒரு நிமிஷத்தில் முடிந்துவிட்டது!

திடீரென்று கூடாரத்துச் சேவகர்களிடையே பரபரப்பு உண்டாகியது. அவர்கள் வேறு ஒரு வழியுமில்லாமல் வேடனைத் துரத்துமாறு நாய்களை அவிழ்த்துவிட்டார்கள். இரண்டொருவர், அவனைத் துப்பாக்கியாலும் சுட்டார்கள். ஆனால் வேடன்மீது அவர்களுடைய குண்டு பாயவில்லை. வேட்டை நாய்களினாலும் அவனைப் பிடிக்க முடியவில்லை.

அதன்பின் அஜித்தும், மோஹினியும் எங்கே போய் வசித்தார்க ளென்று ஒருவருக்கும் தெரியாது.

இரண்டு மூன்று தினங்களுக்குப் பின், கல்கத்தா கவர்மெண்டு ரிஜிஸ்தரில் பின்வரும் குறிப்பு எழுதியிருந்தது: "கோல்பாடா கலெக்டர் மிஸ்டர் பாக்ஸ், பிரம்மபுத்திரா நதிக்கரையில் வசித்த அந்தப் பயங்கர வேடனிடமிருந்து ஒரு பாரதப் பெண்மணியை விடுவிப்பதற்காகச் சென்றிருந்தார். அங்கே அவனுல் அநியாயமாகக் கொலை செய்யப்பட்டார். கம்பெனியின் சிறந்த உத்தியோகஸ்தர் களில் மிஸ்டர் பாக்ஸ் ஒருவர். முன்பு அவர் மேதினிபுர ஜில்லா வில், கம்பெனியின் வருமானத்தை அதிகரிப்பதற்குச் சிறந்த தொண்டு புரிந்தவராவார்."

சர்க்கார் ரிஜிஸ்தர்களில் என்ன வேண்டுமானுலும் எழுதிக் கொள்ளட்டும். சுமார் ஒன்பது வருஷங்களுக்கு முன்பு மேற்குத் திசையிலிருந்து வந்து, கோல்பாடா ஜில்லாவிலுள்ள கிராமந் தோறும் ஒரு சந்நியாசினியைப்போல் அலைந்து திரிந்துகொண்டிருந்த சுந்தரி மோஹினியைப் பாக்ஸின் சேவகர்கள் என்ன உத்தேசத் தோடு பிடித்துக்கொண்டு போனுர்களென்பது கோல்பாடா வாசிகள் அனைவருக்கும் தெரியும்.

குஜராத்திக் கதை:

# தோழர்கள்

["ஸ்நேஹ ரச்மி"]

"விட்டிடு! விட்டிடு! திப்பு, இல்லேயின்னு ஒன்னேக் கொன்னுடுவேன் பாத்துக்கோ! ஆமா......"

கிராமத்திற்கு வெளியில் ஒரு பரந்த ஆலமரத்தின் அடியில் நின்றுகொண்டு, கிழிந்த துணி அணிந்திருந்த பத்துப் பன்னிரண்டு வயசுள்ள ஒரு பெண் தன் நாயிடம் இங்ஙனம் சொல்லிக்கொண் டிருந்தாள். இருவரும் திக்கற்றவர்கள்; ஆதரவற்றவர்கள். நாயின் பெயர் திப்பு. பெண்ணின் பெயர் மீனு. திப்புவின் வாயில் ஓர் அணில் அகப்பட்டுக்கொண்டு தப்பியோடப் போராடிக்கொண் டிருந்தது. பாவம்! அந்த அணிலே விட்டுவிடும்படி மீனு தன் நாயை ஆக்ஞாபித்துக்கொண் டிருந்தாள். ஆனல் மீனுவின் உத்தரவை நாய் சிறிதும் பொருட்படுத்தவில்லே. அது அவ்வணிலேக் கொஞ்சதூரம் விடுவதும் பிடிப்பதும், மீண்டும் விடுவதும் பிடிப்பதுமாய் விளேயாடிக்கொண் டிருந்தது.

மீனுவுக்குக் கோபம் வந்துவிட்டது. அவள் பக்கத்தில் கிடந்த ஒரு கல்லே எடுத்தாள். திப்பு அதைப் பார்த்தது; "உனக்கு இவ்வளவு ஜல்தி கோபம் வரக்கூடாதம்மா, மீனு.,....நான் என்ன அதைக் கொன்றுவிட்டேன்? இங்கே பார்! என் வாயிலே அது எவ்வளவு பத்திரமாய் இருக்கிறது" என்று அது மீனுவிடம் சொல்வதுபோ லிருந்தது. பின்பு மீனுவைப் பார்த்துக்கொண்டே அந்த அணிலேத் தன் பிடியினின்றும் விடுத்தது. பாவம்! அணிலின் இடுப்பு ஒடிந்துவிட்டது.

"நீ எத்தகைய கொடும்பாவி, திப்பு! உன் நெஞ்சில் கொஞ்சமாவது இரக்கமில்லேயா? ஐயோ பாவம்! பாவம்!" என்றுள் மீனு.

அணில் மிகுந்த கஷ்டத்துடன் இரண்டோர் அடி நகர்ந்தது. திப்பு தன் முன்னங் கால்களை நீட்டித் தன் வேட்டையைக் கண்ணிமையால் பார்த்துக்கொண்டேயிருந்தது. மீனு அணிலை ரக்ஷிக்க எப்பொழுது வருகிறுளோ, அப்பொழுது உடனே அதன்மேல் பாய வேண்டுமென்று நினைத்துக்கொண்டிருந்தது.

"இன்னும் போகலியா?......நீ என்ன நினைக்கிருய் என்பது எனக்குத் தெரியும். எங்கே போக்கிரித்தனம் பண்ணப் பார்க்கிறே! ஓடு அதை விட்டு" என்று மீனு மிகுந்த கோபத்துடன் ஒரு கல்லைக் கையில் எடுத்துக்கொண்டு சொன்னுள். ஒரு ரப்பர்பந்து துள்ளுவது போல் திப்பு அவ்வணிலின் மேல் ஒரே பாய்ச்சலாய்ப் பாய்ந்து, அதை வாயில் கௌவிக்கொண்டு ஓர் ஓதுக்கலான இடத்திற்கு ஓடிவிட்டது.

"இங்கே வா, இங்கே......யார்கிட்டே உன் குறும்பெல்லாம்?" என்று சொல்லிக்கொண்டே மீனு அதன்மேல் கல்லை எறிந்தாள்.

ஆனுல் திப்பு இன்று மீனுவின் கோபத்தைப் பொருட்படுத்தியதாகத் தெரியவில்லை. தூரத்தில் போய் வெகு அமைதியாக அணிலைத் தின்றுகொண்டிருந்தது. தின்று முடிந்த பின்பு தன் நாக்கினுல் வாயை நன்ருய் நக்கித் துடைத்துவிட்டு ரொம்ப ஆசாரமாகக் கண்ணை மூடிக்கொண்டு, மெள்ள மீனுவை நோக்கிவர ஆரம்பித்தது. மீனு ஆலமரத்தினடியில் ஒரு கல்லின்மீது உட்கார்ந்துகொண்டு, தான் பிச்சை எடுத்துவந்த சோற்றைச் சாப்பிட்டுக்கொண்டிருந்தாள். திப்பு வந்ததை அவள் பார்க்கவில்லை. மீனுவிடம் எப்படிப் போவது, எப்படி அவளைச் சமாதானம் செய்வது-இதெல்லாம் திப்பு முன்னுலேயே யோசித்து வைத்திருந்தது.

மெள்ள மெள்ள அது மீனுவின் பக்கத்தில் வந்து நின்றது; ஆனுல் அவள் அதைப் பார்க்கக்கூட இல்லை. உடனே திப்பு முன்னங் கால்களினுல் தரையைப் புரண்ட ஆரம்பித்தது. "மீனி! ஏ, மீனி! நான் வந்துவிட்டேன். இங்கேதான் பாரேன்!" என்று அது சொல்வதுபோலிருந்தது. அதன் சப்தத்தைக் கேட்டு மீனு அதன் பக்கம் திரும்பினுள். ஆனுல் அவள் கோபம் இன்னும் தணியவில்லை. பின்பு அவள் மீண்டும் சாப்பிடுவதில் கவனம் செலுத்த ஆரம்பித்துவிட்டாள். திப்புவால் இதைச் சகிக்க முடியவில்லை.

"இத்தனை கோபமும் கேவலம் அந்த அற்ப அணிலுக்காகவா? வேணுமானுல் என்னைக் கொன்ருவது விடு; ஆனுல் இம்மாதிரி..."

திப்பு இன்னும் கொஞ்சம் நெருங்கிப் போய்த் தன் முகத்தை மீனு ளின் மடியில் வைத்துக்கொண்டு அவளை நக்க ஆரம்பித்தது. மீனு தன் பலமெல்லாம் சேர்த்து அதைப் பிடித்து ஒரு தள்ளுத் தள்ளினுள். திப்பு கொஞ்ச தூரத்தில் போய் விழுந்தது; ஆனல் மீண்டும் அவள் பக்கத்தில் வந்து அவள் கையை நக்க ஆரம்பித்தது. "மீனக்கா! உன் கை வலிக்கிறதா?" என்று அது கேட்பதுபோ லிருந்தது.

"சீ, நாயே! உனக்கு வெட்கமில்லை? போ, தூர; இப்பத் தான் பாவம், அந்த அணிலை.........இன்னும் உன் வயிற்றில் அது செரிக்கக்கூட இல்லை. அதற்குள்ளே என்னைச் சமாதானம் பண்ண வந்திட்டே! நீ கொடும் பாவி! சண்டாளன்!"......என்று திட்டிக் கொண்டே கோபத்துடன் அதை ஒரு மிதி மிதித்துத் தள்ளினுள்.

திப்பு உரத்து அழ ஆரம்பித்தது. பின்பு கொஞ்ச தூரத்தி லுள்ள ஒரு கல்லின்மீது ஏறி நின்றது; பையன்கள் பெஞ்சிமீது ஏறி நிற்பதுபோல்! அது தன்னைத் தானே தண்டித்துக்கொண்டது. கொஞ்ச நேரம் அப்படியே நின்றுகொண்டிருந்தது. மீனு சாப்பிட் டுக்கொண்டிருந்தாள். திப்பு பேசாமல் நின்றுகொண்டிருந்தது. அது இன்னும் நம்பிக்கை இழந்துவிடவில்லை. தன்மேல்தான் தப்பிதம் என்று அதற்கு நன்ருய்த் தெரியும். அதனுல்தான் மீனி கோபமாயிருக்கிருள். எந்த விதத்திலாவது அவளைச் சமாதானப் படுத்துவது திப்புவினுடைய கடமை.

உடனே அது புழுதியில் படுத்து உரத்த சப்தத்துடன் அழ ஆரம்பித்தது. மீனு அதன் பக்கம் திரும்பினுள். அது மண்ணில் புரண்டு ஓலமிட்டுக்கொண் டிருந்தது. அவள் மனம் இரங்கியது. "பாவம்! தெரியாமல் செய்துவிட்டது." பின்னர் அவள் அதைக் கூப்பிட்டுச் சொன்னுள்: "திப்பு! இங்கே பார். இனிமேல் ஒரு பொழுதும் இப்படிச் செய்யக்கூடாது. செய்தியோ, நான் உன் மூஞ்சியிலே முழிக்கவே மாட்டேன் பார்த்துக்கோ; வா, இங்கே."

அவள் அந்தச் சோற்றில் கொஞ்சம் திப்புவிற்கு வைத்தாள். சோற்றைக்கூடத் தின்னுமல் திப்பு எழுந்திருந்து மீனுவிடம் சென்று தன் முகத்தை அவள் சேலைக்குள் ஒளித்துக்கொண் டது. மீனு சிரித்தாள். "உனக்கு வெக்கம் வந்திருச்சாக்கும். இன்னமே இப்படிச் செய்யவே கூடாது. பார்த்துக்கோ; தெரியுமா?" என்று சொல்லிக்கொண்டே அதன் முதுகைத் தடவிக்கொடுத்தாள்.

இவ்விரண்டு நண்பர்களும் இம்மாதிரி அடிக்கடி சண்டை போடுவதும், ஒருவரோடொருவர் கோபித்துக் கொள்வதும்,

கடைசியில் ஒருவரை யொருவர் மன்னிப்புக் கேட்டுக்கொண்டு கூடிக் கொள்வதும் வழக்கம். இவ்விரண்டு அநாதைகளும் ஒரு நாள் கிராமத்திற்கு வெளியே, மயானத்திற்குப் பக்கத்தில், ஆற்றங்கரையில் சந்தித்தார்கள். அன்றிருந்து இருவரும் பிராண சிநேகிதர்களாய் விட்டார்கள். திப்பு மீனுவை விட்டு ஒரு க்ஷணங்கூடத் தனியே இருக்காது. மீனுவும் திப்புவை விட்டுவிட்டு ஒரு நிமிஷங்கூடப் பிரிந்திருக்கச் சகியாள். அவ்வளவு நட்பு அவ்விருவருக்கும்; அத்தனை அன்பு அவர்களிடையில்.

அந்த ஆலமரத்திற்குச் சிறிது தூரத்தில் ஒரு தர்ம சத்திரம் இருந்தது. அந்தச் சத்திரத்தின் திண்ணையில்தான் இரவில் மீனு தூங்குவாள்; திப்புவோ இரவு முழுதும் விழித்துக்கொண்டு அவளுக்குக் காவலிருக்கும். இவ்விதம் அவர்களுடைய நட்பு ஒரு விக்கினமும் இல்லாமல் வளர்ந்துகொண் டிருந்தது. இப்பொழுது மீனுவுக்குப் பதின்மூன்று அல்லது பதினாலு வயசு ஆகிவிட்டது.

ஒரு நாள் திப்பு ஆலமரத்தினடியில் நின்றுகொண்டு மீனியின் வரவை எதிர்பார்த்துக்கொண்டிருந்தது. அவள் கிராமத்தில் பிச்சை எடுப்பதற்காகப் போயிருந்தாள். ஆயிரங்கிழிசல் உள்ள அவள் கம்பளிக்கும், அவளிடமிருந்த ஓட்டை உடைசலான இரண்டொரு பாத்திரங்களுக்கும் திப்புவைக் காவல் வைத்துவிட்டுப் போயிருந்தாள். இன்னும் அவள் திரும்பி வரவில்லை. ஏன் இவ்வளவு நேரமாய் வரவில்லையென்று திப்பு வியாகுலமடைய ஆரம்பித்தது. இந்நேரமெல்லாம் தினந்தோறும் திரும்பிவிடுவாளே என்று நினைத்தது. நாக்கைத் தொங்க விட்டுக்கொண்டு வெகுதூரம் வரைக்கும் ரஸ்தாவில் தன் பார்வையைச் செலுத்திப் பார்த்தது. ஆனால் அவளைக் காணவே இல்லை.

“என்ன நடந்திருக்கும்? என்னவோ நடந்திருக்கும்........... இல்லையானால், வராமலிருக்க மாட்டாள்” என்று பெருமூச்செறிந்தது திப்பு.

“அடே! இது யார் சிரிக்கிறது? சத்தம், மீனு சத்தம் மாதிரித்தான் இருக்கிறது...........அடே! இது யார் இன்னொருவன்?......” மீனுவோடு பேசிக்கொண்டு வந்த ஒரு வாலிபனைச் சந்தேக திருஷ்டியுடன் திப்பு பார்க்க ஆரம்பித்தது.

“இந்த ஸ்ரீமான் யார்? எங்கிருந்து வந்திருக்கிறார்?” என்று அது நினைக்க ஆரம்பித்தது. புது ஆள் கிட்ட நெருங்கியதும் திப்பு குரைக்கத் தொடங்கியது. அவன் பதினேழு பதினெட்டு வயசுள்ள

ஒரு வாலிபன். அழுக்குப் படிந்த நீண்ட தலை மயிர், கிழிந்த சட்டையொன்று, அரையில் ஒரு பழைய கந்தல் வேஷ்டி.

"சும்மா இரு, திப்பு! இவனும் உன் நண்பன்தான்" என்று மீனு சொன்னாள். திப்பு குரைப்பதை என்னவோ நிறுத்தி விட்டது; என்றாலும் அவனை முறைத்துப் பார்க்க ஆரம்பித்தது. தங்களிருவர் நட்புக்கிடையில் ஒரு மூன்றாவது மனுஷன் வருவது அதற்குப் பிடிக்கவில்லை. திப்புவின் எண்ணம் மீனுவுக்குத் தெரிந்து விட்டது.

"உனக்கு இத்தனை பொறுமையா? இம்மாதிரி செய்யாதே...... கொஞ்சம் தள்ளித்தான் போயேன்! உட்காரவாவது இடம் விடு..." என்று சொல்லிக்கொண்டே அதன் தலையில் ஒரு செல்ல அடி அடித்தாள்.

இன்று திப்பு எப்போதும்போல் விளையாடவில்லை. மீனுவோடு கோபித்துக்கொண்டு, ஆலமரத்தினடியில் சற்று எட்டப் போய் உட்கார்ந்துகொண்டது. தூங்கி விழுவதுபோல் பாசாங்கு பண்ணி யது. மீனுவும் இன்று அதன்மேல் எப்போதும்போல் அன்பாய் இல்லை. இதெல்லாம் அந்த மூன்றாவது மனுஷனால் வந்த விளைவு என்று திப்புவிற்குத் தெரியும். திடீரென்று திப்பு தன் காதைப் பட படவென்று அடித்துக்கொண்டு கண்ணைத் திறந்து அவர்களிருவரை யும் பார்த்தது. "பாரு! நல்லா நிமிர்ந்தல்லவா உட்கார்ந்திருக்கிறான், கவர்னர் துரைமாதிரி!" என நினைத்தது திப்பு. பின்பு நிராசை யடைந்து தூங்குவதுபோல் பாவனை செய்ய ஆரம்பித்தது.

புதிதாய் வந்தவன் சிரித்து மீனுவோடு பேசிக்கொண்டிருந்தான். கொஞ்ச நேரத்திற்குப் பின் மீனு தனது சோற்று மூட்டையை அவிழ்த்துத் தன் புது நண்பனைச் சாப்பிடச் சொன்னாள். தானும் சாப்பிடத் தொடங்கினாள். "திப்பு, ஏ, திப்பு! இங்கே வாயேன்! உன்னை வெத்திலை பாக்கு வைத்து அழைக்கணுமாக்கும்! ஏன், இன்னைக்கு அப்படிப் போய் உட்கார்ந்திருக்கே? உனக்கு இன்னைக்கு ஒரு தோசை கொண்டு வந்திருக்கேன், பாரு" என்று அதைக் கூப்பிட்டாள் மீனு.

ஆனால் என்றைக்கும்போல் இன்று திப்பு ஓடிவரவில்லை. மீனு எழுந்திருந்து அதன் பக்கம் போய் அதன் தலையின்மீது கையைப் போட்டுக்கொண்டு சொன்னாள்: "ஓஹோ! உனக்கு இத்தனை கோபமா? நாளை முதல் ஜல்தி வந்திடறேன். சரிதானே? இப்பக் கோபம் தணிஞ்சிடுச்சா?" திப்புவிற்கு இப்பொழுது ஆனந்தம்!

பேசாமல் கண்ணை மூடிக்கொண்டது. பின்பு எழுந்திருந்து தனக்கு வைத்திருந்த சோற்றையும் தோசையையும் சாப்பிட்டது.

மீனுவின் புது நண்பனுடைய பெயர் மாரியப்பன். மாரியப்பன் இப்பொழுது தினந்தோறும் மீனுவோடு வந்து ஆலமரத்தினடியில் சோறு சாப்பிடுவான். திப்புவுக்குக்கூட அப்புது மித்திரனோடு சிநேகம் செய்துகொள்ளவேண்டிய அவசியம் ஏற்பட்டது. இப்போது மூவரும் சேர்ந்து அம்மரத்தடியில் உட்கார்ந்து சாப்பிடுவதும், பின்பு தண்ணீர் குடிப்பதற்கு ஆற்றிற்குப் போவதும், திரும்பிவந்து ஆலமரத்தினடியில் படுத்துக்கொள்வதுமாய் இருந்தார்கள்.

இங்ஙனம் இரண்டு நண்பர்களாயிருந்தவர்கள் மூன்று நண்பர்களானுர்கள். இப்பொழுது இவர்களுக்கு ஒரு சங்கடம் வந்தது. சத்திரத்துக் காவல்காரக் கிழவன் இறந்துவிட்டான். புதுக் காவல்காரன் ஒருவன் வந்தான். அவன் வாலிபன். அவன் பெயர் முத்துசாமி. அவன் இம்மூவரையும் சத்திரத் திண்ணையினின்றும் வெளியேற்றிவிட்டான். அதனுல் இரவிலுங்கூட விருக்ஷத்தினடியிலேயே தூங்கவேண்டியிருந்தது. மீனுவுக்கு அளவு கடந்த துக்கம்; ஆனுல் அவளால் என்ன செய்ய முடியும்? எல்லாரைக் காட்டிலும் அதிகக் கோபம் திப்புவுக்குத்தான். முத்துசாமியின் காலை அது இரண்டொரு தடவை ருசிகூடப் பார்த்துவிட்டது.

வருஷம் முந்நூற்று அறுபத்தைந்து நாட்களும் மரத்தினடியில் வசிப்பதென்றுல் லேசான காரியமல்ல. கோடைக்காலத்தையும் குளிர்காலத்தையுந்தான் எப்படியும் மரத்தடியிலேயே கழித்துவிடலாம்; ஆனுல் மழைக்காலத்தில் என்ன செய்வது? இந்தப் பிரச்னைதான் அவர்கள் உள்ளத்தை வருத்த ஆரம்பித்தது. ஒரு நாள் மீனுவும், மாரியப்பனும் இதைப்பற்றி யோசித்துக்கொண்டு உட்கார்ந்திருந்தார்கள்.

"இனி, மழைக் காலத்தில் நாம் என்ன செய்யறது?" என்று மாரியப்பன் கேட்டான்.

"நானும் அதைப்பற்றித்தான் யோசித்துக் கொண்டிருக்கிறேன். நம்மைச் சத்திரத் திண்ணையில் படுக்கவிட்டால் முத்துசாமிக்கு என்ன கெட்டுப் போச்சு? சத்திரம் அவுங்க அப்பன் வீட்டுது இல்லையே? பின்னை ஏன் இத்தனை அதிகாரம் பண்றுன்? அவன் நாசமா..............."

" இந்தா, மீனு, நீ ஏன் அவனைச் சபிக்கிறே? அவன் கர்மம் அவனை விடாது."

" ஏன் சபிக்கக் கூடாது? பாவம்! திப்பு, அவனுக்கு என்ன செய்தது? எப்பப் பார்த்தாலும், அதை அடிக்கிருனே, தடியன்!"

" அதனுல்தான் நான் சொல்கிறேன்: நீ எங்கேயாவது வேறிடத்திற்குப் போய்விடு என்று."

" நான் எங்கே போறது? ஒனக்கு என்னவாவது வேலை கிடைச்சுதுன்னு......"

" எனக்கு வேலை கிடைச்சுதின்னு, நீ என்னைக் கலியாணம்......"

" பின்னும் அதே பேச்சு? நான் எப்ப மாட்டேன் இன்னு சொன்னேன் மாரி?"

" சரி, அப்ப சரி!" என்று சொல்லிப் புன்முறுவல் செய்து கொண்டே மாரி, மீனுவினுடைய கையைத் தன் கைமேல் வைத்தான்.

அதே சமயத்தில் மீனுவுக்குத் தன் சேலையைப் பின்னுலிருந்து யாரோ இழுப்பதுபோல் தெரிந்தது. பின்னல் அவள் திரும்பினுள். திப்பு அவளுடைய சேலையைப் பற்றி இழுத்துக்கொண்டிருந்தது. மீனு சிரித்துக்கொண்டே தன் ஆடையை விடுவித்துக்கொண்டு சொன்னுள்: "கொஞ்ச நேரங்கூட உன்னுல் சும்மாயிருக்க முடியாதா, திப்பு? உனக்குக் கொஞ்சமாவது சந்தர்ப்பம் தெரியலை!" மீண்டும் மாரியப்பன் பக்கம் திரும்பிச் சொல்லலுற்ருள், "நானும் கொஞ்சம் கவலையற்று இருக்கணுமின்னுதான் நெனைக்கிறேன். இப்ப, இந்த ஊர் ஜனங்களும் முன்னைப்போல் இல்லை."

" நானும் அதுதானே சொல்றேன்: நீ இவ்விடத்தை விட்டு வேறே எங்காவது போய்விடுன்னு."

மீனு பதில் சொல்வதற்குள், மீண்டும் அவளுடைய சேலை இழுக்கப்பட்டது. "திப்பு! என்னைக்கும் ஞாபகம் இருக்கும்படி அடிச்சிப்புடுவேன், பாத்துக்கோ. கொஞ்ச நேரம் சும்மா இருக்க முடியாது?"

ஆனுல் திப்பு அவள் வார்த்தையைக் கேட்கவில்லை. தன் பற்களினுல் அவள் ஆடையைப் பிடித்து இழுத்துக்கொண்டே இருந்தது. மீனு கோபத்துடன் எழுந்திருந்தாள். அதே சமயத்தில் மரத்தின் பின்னுல் நின்றுகொண் டிருந்த முத்துசாமி ஓட்டமெடுத்தான். அவனுக்குப் பின்னுல், திப்பு வெகு தூரம் குரைத்துக் கொண்டு ஓடியது. மீனு மீண்டும் மாரியப்பன் பக்கத்தில் உட்கார்ந்துகொண்டாள்.

"மாரி! மாரி! அந்தத் தடியன் முத்துசாமி நம்ம பேசினதெல்லாம் கேட்டுக்கிட்டிருந்திருக்கிருன். மாரி, இவனுடைய நடத்தை எனக்கு ஒன்றும் பிடிக்கவில்லே."

"நான்தான் முன்னமேயே ஒனக்குச் சொன்னேனே. நீ என் வார்த்தையை எங்கே கேக்கிறே?"

"நான் என்ன செய்யறது மாரி? முன்பின் தெரியாத பட்டணத்துக்குப் போக எனக்குப் பயமாயிருக்கு. இங்கே என்னமோ, நமக்குத் தெரிந்தவர்கள் நாலு பேர் இருக்கார்கள். அங்கே யார் இருக்கா? நீ, நான் சொல்றபடி செய்யறையா? பட்டணத்துக்குப் போயி நாலஞ்சு நாளேக்குள்ளே ஏதாவது வேலே பாரு. பார்த்துக் கொண்டு வந்து என்னேக் கூட்டிக்கிட்டுப் போ. ஆகட்டுமா?"

"நான் வருவதுக்குக் கொஞ்ச நாளாச்சின்னு, எனக்காக நீ காத்துக் கிட்டிருப்பாயில்லே?"

"கட்டாயம்! கட்டாயம்! இதே ஆலமரத்தினடியில் ஒன் வரவைப் பார்த்துக்கொண்டே இருப்பேன். வேறே எங்கையும் போகமாட்டேன். தெரிஞ்சுதா? ஆனல் கால தாமதம் செய்யப் படாது; ஜல்தி வந்திரணும், பார்த்துக்கோ. வரவில்லே யிண்ணு, நான் கழுத்திலே......"

"சரி! சரி!" என்று சொல்லிக்கொண்டே மாரி தன் இரண்டு கைகளினுலும் அவள் வாயை மூடினுன்.

"அப்படி யெல்லாம் சொல்லாதே. இங்கே பார், இந்தச் சூரிய தேவனுக்கு முன்னல் சொல்றேன். நான் கட்டாயம் சீக்கிரம் வந்துவிடறேன்.

"நானும் இதே சூரியதேவனுக்கு முன்னல்தான் சொல்லறேன். நீ வரும் வரைக்கும் இதே ஆலமரத்தினடியில், ஒனக்காகக் காத்துக் கிட்டிருப்பேன்."

**மா**ரியப்பன் போய்விட்டான். மீனு அவன் வரவை எதிர் பார்த்துக்கொண்டிருந்தாள். ஒவ்வொரு நாளும் மத்தியான்னம் கிராமத்திலிருந்து பிச்சை எடுத்துக்கொண்டு வந்த பின்பு, அந்த ஆலமரத்தினடியில் உட்கார்ந்து, 'மாரியப்பன் வருகிருனு, வருகிருனு' என்று பார்த்துக்கொண்டே இருப்பாள். ஆனல் அவன் வரக் காணவில்லே. மாரியப்பன் போய்ப் பத்து நாளாயின; இருபது நாளாயின; ஒரு மாதமானது; இரண்டு மாதமாயின; மூன்ருவது மாதமும் வந்துவிட்டது. ஆனல் மாரியப்பன் இன்னும் வர

வில்லே. மீனு வழியைப் பார்த்துப் பார்த்து அவள் கண்ணும் பூத்து விட்டது. 'என்ன நடந்திருக்கும்?' என்று அவள் யோசிக்க ஆரம்பித்தாள். "அவன் அவளை மறந்துவிட்டானே? அவனுக்கு ஏதாவது கஷ்டம் வந்துவிட்டதோ என்னவோ?"

மீனு ஒருமாதிரி சோர்ந்திருந்தாள். திப்புவினுல் இதைச் சகிக்க முடியவில்லே. 'மீனு ஏன் இப்படி வருத்தமாயிருக்கிருள்? மாரியப்பன் போய்விட்டால் என்ன வந்துவிட்டது? நான்தான் அவள் பக்கத்தில் இருக்கிறேனே!' என்று அது நினைத்தது. நள்ளிரவில் நரிகள் ஊளையிடும்பொழுதும், அம்மரத்தினடியில் படுத்துக்கொண்டு மீனு மாரியை நினைத்து ஏங்கிப் பெருமூச்சுவிட்டுக் கொண்டிருக்கும் பொழுதும் திப்பு அவளுடைய உடம்போடு உடம்பாய் ஒட்டிப் படுத்துக்கொண்டு, அநேக முறைகளில் அவளைச் சமாதானப்படுத்த முயலும். அதனுல் பேசத்தான் முடியாது; அது தவிர வேறு எல்லா வழிகளிலும் அது மீனுவைச் சந்தோஷப்படுத்தவும், அவளுடைய துன்பத்தைப் போக்கவும் பிரயத்தனம் செய்தது. மீனுவும் அதைத் தன் மடியில் படுக்கப்போட்டுக் கொள்வாள். அதன்மேல் கண்ணீர் வடிப்பாள். பின்பு படுத்துக்கொள்வாள். திப்பு இரவு முழுதும் அவளுக்காகக் காவல் காத்துக்கொண்டிருக்கும். ஒரு நாள் திடீரென்று அது சப்தமிட்டுக் குரைக்க ஆரம்பித்தது. மீனு விழித்துப் பார்த்தாள். யாரோ கறுப்பாய் ஒருவன் அங்கிருந்து ஓடக் கண்டாள்.

மறுநாள் முத்துசாமி மீனுவிடம் வந்தான். சாயங்காலம் ஆகிவிட்டது, மாலைச் சூரியனின் இளஞ்செங் கிரணங்களில் அவளுடைய அழகிய சரீரம் மலர்ச்சியுற்றிருந்தது. முத்துசாமிக்கு அவளைப் பார்த்ததும் பைத்தியம் பிடித்தது போலிருந்தது. சமீபத்தில் வந்து, "மீனு! இம்மரத்தடியிலா படுத்திருக்கிருய்? சத்திரத்திற்கு வந்து தூங்குவதற்கு என்ன?" என்ருன்.

"பரவாயில்லே; இதுதான் எனக்குச் சௌகரியமாயிருக்கிறது."

"உன் இஷ்டம் அம்மா. ஆனுல் உன்னிடம் படுக்கை கிடுக்கை கூட இல்லே போலிருக்கே. இந்தா, இந்த ஜமக்காளத்தை விரிச்சிக்கோ."

"எனக்கு ஜமக்காளம் வேண்டாம். என்னிடத்திலே இருப்பதே போதும்" என்று சொல்லிக்கொண்டே ஜமக்காளத்தை அவனிடம் திரும்பக் கொடுத்துவிட்டாள்.

"மீனு! உனக்கு இத்தனை கர்வமா? வீடு வீடாய்ப் போய்ச் சோறு பிச்சை எடுப்பதுக்கு வெட்கமில்லை; இந்த ஜமக்காளத்தை வாங்குவதுக்குத்தான் வெட்கமா யிருக்கோ? பெரிய ராசா வீட்டுப் பொண்ணு!......ஞாபகமிருக்கட்டும். நீ யாருக்காக வழி பார்த்துக் கொண் டிருக்கிறுயோ, அந்த உன் மாரியப்பன் இனிமேல் திரும்பி வரும் ஸ்திதியில் இல்லை!"

மீனுவினுல் இவ்வார்த்தைகளைச் சகிக்க முடியவில்லை. ஏங்கி ஏங்கி அழ ஆரம்பித்தாள்.

"முத்து! முத்து! நான் ஒனக்கு என்ன அண்ணே கெடுதி செய்தேன்? என்னை ஏன் இந்தமாதிரி நீ துன்பப்படுத்துறே?"

ஆனுல் இவ்வார்த்தைகளைக் கேட்பதற்கு முத்துசாமி அங்கே நின்றுகொண் டிருக்கவில்லை. அந்த முதிய ஆலமரந்தான் தன் கரங்களை விரித்து அவளுக்கு ஆறுதல் அளித்தது.

மீனு இரண்டு தினங்களாகப் பைத்தியம் பிடித்தவள் போல் இங்குமங்கும் அலைந்து திரிகிறுள். வாடிய முகம், சிக்கடைந்த தலைமயிர், கண்ணீர் ததும்பும் கண்கள், - கருணுமூர்த்தி போல் அவள் கிராமத்திலிருந்து ஆலமரத்திற்கும், ஆலமரத்திலிருந்து கிராமத்திற்குமாக அலைந்துகொண் டிருக்கிறுள். யாரையோ தேடுகிறுள் போலும்! இன்று அவளோடு அவளுடைய திப்புவைக் காணவில்லை. ஆலமரத்தினடியில் உட்கார்ந்துகொண்டு, பிச்சையெடுத்துவந்த சோற்றைச் சந்தோஷமாய்ச் சாப்பிடும் மீனு அல்ல இன்று அவள்! அவள் பக்கத்தில் படுத்துக்கொண்டு அவளுடைய கால்களை மோர்ந்து பார்த்துக்கொண் டிருக்கும் திப்புவையும் காணவில்லை. இன்றே அவள் தனியே, ஆதரவற்றுப் பைத்தியக்காரி போல் இங்குமங்கும் அலைகிற மீனு! கிராமத்தின் மூலை முடுக்குகளில் எல்லாம் தன் திப்புவைத் தேடிக்கொண்டிருக்கிறுள். ஆனுல் திப்புவைக் காணவில்லை; எங்கும் காணவில்லை.

"திப்பு! என் அருமைத் திப்பு! நீ எங்கப்பா இருக்கிறுய்!" என்று அவள் அழுகிறுள்; கூக்குரலிடுகிறுள், "மாரியும் போய் விட்டான்; நீயும் போய்விட்டாயா? என் திப்பு எங்கப்பா போய்விட்டாய்?"

மீண்டும் அவள் நதியை நோக்கிச் செல்கிறுள். மணிக்கணக்கில் கரையில் நின்றுகொண்டு, நதியின் ஆழமான நீரைப் பார்த்துக் கொண்டே இருக்கிறுள். எங்காவது தூரத்தில், ஜலராசியில் அவளுடைய திப்பு தென்படுகிறதோ?......இல்லை. மனம் நொந்து

திரும்பிவருகிருள். ஆலமரத்தினடியில் முத்துசாமி நின்றுகொண்டிருக்கிருன்.

"ஏன் இன்று இவ்வளவு துக்கமாயிருக்கிருய்?"

"ஒன்றுமில்லே." சொல்லும்பொழுதே அவள் கண்களினின்றும் கண்ணீர் வடிகிறது. "முத்து! என் திப்பு ரெண்டு நாளாய் எங்கே போச்சிண்ணு தெரியலே."

"உம். திப்புவையா?"

"ஆம். அண்ணே, திப்பு. எங்கையாவது நீ பாத்தியா?"

"நாணு! இல்லவே இல்லே. ஆம், நான்தான்......இல்லே. பார்க்கவில்லே. ஆனல்........."

"என்ன சொல்றே நீ?"

"நான் பார்க்கலே-இ-இ; வேணுமிண்ணு அதைத் தேடுகிறதுக்கு முயற்சி செய்கிறேன்."

"ஹா! கட்டாயம் செய் அண்ணே. ஒன்னேக் கை யெடுத்துக் கும்பிடுறேன், முத்துசாமி யண்ணே. ஒன் உபகாரத்தை நான் ஒருகாலும் மறக்கமாட்டேன்." இரண்டு கைகளேயும் கூப்பி அவனேக் கும்பிட்டாள்.

"உபகாரங் கிபகாரம் ஒண்ணுமில்லே......ஆனு......"

"என்ன? சொல்லேன்?"

"அதுதான்......வேறே என்ன?" என்று சொல்லிச் சமிக்கினே காட்டினுன் முத்துசாமி.

மீனு திகிலடைந்தாள். கண்ணேப் பொத்திக்கொண்டாள். பின்னர் அழ ஆரம்பித்தாள். ஆனல்......ஆனல்......அவளுடைய திப்பு? அவளால் ஒன்றும் பேச முடியவில்லே; இன்னது செய்வதென்று தெரியவில்லே.

"சரி! நல்லது, எனக்குத் தெரியும்."

மீனு! அநாதை மீனு! அவள் என்ன செய்வாள்? மாரியப்பனே இழந்து உட்கார்ந்திருந்தாள்! இப்பொழுது திப்புவையும் இழக்க நேர்ந்துவிட்டதா? இனிமேல் தனியாக அவள் இவ்வுலகத்தில் எப்படி இருப்பாள்? யோசிக்க ஆரம்பித்தாள். திடீரென்று அவள் கண்களில் ஓர் ஒளி வீச ஆரம்பித்தது. ஏதோ தீர்மானம் செய்துவிட்டாள்போல் தோன்றியது.

"முத்து...சம்மதம்! ஆனல் ஒரு வார்த்தை: இன்னேக்கிப் பொழுது விடிவதற்குள் நீ திப்புவைக் கொண்டுவந்து கொடுத்துவிடவேண்டும்; அப்பத்தான். அதோடு ஒரு தேங்காய், வெற்றிலே,

பாக்கு, மூணு காசு - இத்தனையும் கொண்டுவரவேண்டும். நாளைக் காலை காளியம்மனுக்குத் தேங்காய் உடைத்துச் சாமி கும்பிட்டு விட்டு, நான் சொன்ன சொல்லைப் பூர்த்தி செய்வதற்கு உன்னிடம் சத்திரத்திற்கு வருகிறேன்."

முத்துசாமியின் முகத்தில் ஆனந்தம் பொங்கியது. அவன் நாலு பக்கமும் பார்த்தான். வெகுதூரம் வரைக்கும் ஒருவரும் தென்படவில்லை. உடனே அவன் மீனுவை நோக்கிக் கீழே குனிந்தான். மீனு திடுக்கிட்டாள். அவளுடைய இதழ்களில் யாரோ ஒருவனுடைய இதழ்களின் ஸ்பர்சம் பட்டது. அவள் உடல் முழுவதும் நடுங்கியது. பெரும் கூச்சலிட்டாள். "முத்து! அட பாவி! காளியம்மா ஒன்னையும் என்னையும் கொண்ணு திண்ணுவிடுமடா! சண்டாளா! இதென்ன செய்தாய் நீ?"

முத்து ஓடியே போய்விட்டான்.

அவன் சத்திரத்திற்குள் நுழைந்ததும், அவள் பைத்தியக்காரி போல் ஓடித் தன் பானையினின்றும் தண்ணீர் எடுத்து உதடுகளைக் கழுவ ஆரம்பித்தாள். ஆனால் அதில் அவளுக்குத் திருப்தி இல்லை. திரும்பத் திரும்பக் கழுவினாள். பின்னும் திருப்தி இல்லை. உடனே பக்கத்தில் கிடந்த ஒரு ஓட்டை எடுத்துத் தன் உதடுகளைத் தேய்க்க ஆரம்பித்தாள். ரத்தம் வந்த பிறகுதான் அதைத் தூர எறிந்தாள்.

சாயங்காலம் ஆனதும், முத்து திப்புவைக் கூட்டிக்கொண்டு வந்தான். திப்புவைப் பார்த்ததும், மீனு பைத்தியம் பிடித்தவள் போல் ஆய்விட்டாள். திப்பு நானுவிதமான சப்தங்கள் செய்தது. அது வாலை ஆட்டினதைப் பார்த்தால், வால் ஒடிந்துவிடும்போ லிருந்தது. அது அழுதது, சிரித்தது, கூத்தாடியது, குதித்தது. மீனு அதைத் தன் மடியில் வைத்துக்கொண்டு கொஞ்ச ஆரம்பித்தாள்.

"நான் என்னுடைய வாக்கை நிறைவேற்றிவிட்டேன், நீ......?"

"மறந்துவிட்டாயா, முத்து, நான் கேட்......?"

"இல்லை.........நான் வெற்றிலை பாக்கு, தேங்காய், மூணு காசு எல்லாம் கொண்டுவந்திருக்கிறேன்."

"சரி, அப்ப நாளைக்கு. ஆனால் ஒண்ணு சொல்றேன்: இன்னைக்கி ராத்திரி நீ இந்தப் பக்கமே வரக்கூடாது. ஆமா; நான் காளியம்மனுக்கு ராத்திரி முழுதும் பூசை போடணும்."

"சரி, ஒன்னிஷ்டம் அம்மா" என்று சொல்லிவிட்டு முத்துசாமி போய்விட்டான்.

அன்றிரவு மீனு திப்புவைத் தன் மடியில் வைத்துக்கொண்டு, மீண்டும் மீண்டும் முத்தமிட்டுக் கொஞ்சினுள். கழுத்தோடு சேர்த்துக் கட்டிக்கொண்டு அழுதாள். அந்தக் கம்பீர ஆலமரமும், ஆகாயத்திலுள்ள எண்ணற்ற நக்ஷத்திரங்களும் இக்காட்சியைப் பார்த்துக் கொண்டே இருந்தன.

மறுநாட் காலே மீனு ஆலமரத்தினடியில் தூங்கிக்கொண்டிருந்தாள். இப்பொழுதுதான் அவளுக்குத் தூக்கம்வந்ததுபோ லிருந்தது. மூடிய அவள் கண்கள் அரை க்ஷணத்தில் திறந்து விடுவனபோல் தோன்றின. பக்கத்தில் மிகுந்த துன்பத்துடன் திப்புவும், அதைவிட அதிகத் துன்பத்துடன் மாரியப்பனும் கண்ணீர் வடித்துக்கொண்டிருந்தார்கள். மீனுவுக்குக் கண்ணீரினுல் தர்ப்பணம் செய்கிருர்கள் போலும்! உலகத்தின் சகிக்க முடியாத துன்பங்களேக் கடந்து, அவ்வினிய நித்திரையில் மூழ்கியிருக்கும் மீனு இனி ஒருபொழுதும் எழுந்திருக்கமாட்டாள். அவ்விருவருக்கும் அது நிச்சயமாய்த் தெரிந்துவிட்டது. ஆயினும் அவர்களுடைய சஞ்சல ஹிருதயங்கள் பிரார்த்தனே செய்துகொண்டிருந்தன. அவ்விளங் கன்னியின் கண்கள் தங்களேக் கடைசி முறை பார்ப்பதற்காகவாவது திறக்க மாட்டாவா? அவள் தனது ஆழ்ந்த நித்திரையினின்றும் எழமாட்டாளா? அவளுடைய குற்றமற்ற முகத்தில், உள்ளத்தைக் கவரக் கூடிய புன்முறுவலின் ரேகைகள் தோன்ருவா? அவ்விருவர் பிரார்த்தனேகளேயும் கொஞ்சமும் பொருட்படுத்தாமல், மீனு படுத்திருந்தாள். சாந்தமும் கம்பீரமும் அவள் முகத்தில் ஒளி வீசின. இப்பொழுதுதான் அவள் தூங்கியதுபோலிருந்தது. அவளுடைய மூடிய கண்கள் இன்னும் அரை நிமிஷத்தில் திறந்துவிடுவனபோல் தோன்றின. சூரியதேவன் முன்னுல், அவள் செய்த வாக்கை, அவள் காப்பாற்றவில்லேயா, என்ன?

ஆலமரத்தில் காக்கைகள் கத்த ஆரம்பித்தன: 'கா-கா-கா.' தூரத்தில் மயில்கள் கூவ ஆரம்பித்தன: 'ம்யாவோ-ம்யாவோ-ம்யாவோ!'

[குறிப்பு: அசல் கதையிலுள்ள பெயர்கள் மொழிபெயர்ப்பில் மாற்றப்பட்டிருக்கின்றன.]

# அப்பூகானின் வெள்ளாடு

[டாக்டர் ஜாகிர் ஹுஸேன் சாஹெப், எம். ஏ. பி. எச். டி.]

இமயமலையைப்பற்றி நீங்கள் நிச்சயம் கேள்விப்பட்டிருப்பீர்கள். அதை விட உயர்ந்த மலை உலகத்தில் வேறு இல்லை. ஆயிரக்கணக்கான மைல்தூரம் அது பரவியிருக்கின்றது. அதனுடைய மிக உன்னத மான சிகரத்தை இன்னும் ஒருவரும் அடையவில்லை. அம் மலைத் தொடரில் அநேக கிராமங்களும் நகரங்களும் இருக்கின்றன. அந்நகரங்களில் அல்மோராவும் ஒன்ருகும்.

அல்மோராவில் ஒரு பெரிய தலைவன் வசித்தான். அவனுடைய பெயர் அப்பூகான். அவனுக்கு வெள்ளாடுகள் வளர்ப்பதில் அதிகப் பிரியம், அவன் தனியாக வசித்ததால் இரண்டொரு வெள்ளாடு கள் மட்டும் வளர்த்தான். நாள் முழுதும் அவைகளை மேய்த்துக் கொண்டு திரிவான். அவைகளுக்கு அற்புதமான பெயர்கள் வைப் பான். அவைகளுடன் என்னவெல்லாமோ பேசிக்கொண்டிருப்பான். இரவில் அவைகளைக் கொண்டுவந்து வீட்டில் கட்டுவான். அல்மோரா மலைப்பிரதேசம். ஆகையினுல் அப்பூகானின் ஆடுகளும் மலை இனத்தைச் சேர்ந்தவை.

அப்பூகான் ஏழை. ஆனுல் மிகுந்த பலசாலி. அவனுடைய ஆடுகள் எல்லாம் என்றைக்காவது ஒரு நாள் இரவில் கயிறுகளை அறுத்துக்கொண்டு ஓடிவிடும். மலையாடுகளுக்குக் கட்டிக் கிடப்பது கொஞ்சமேனும் பிடிப்பதில்லை. அவை அறுத்துக்கொண்டு மலை களுக்கு ஓடும். அங்கு ஓர் ஓநாய் வசித்துவந்தது. அது அவைகளைக் கொன்று தின்றுவிடும். ஆனுல் ஆச்சரியம் என்னவென்ருல், அப்பூ கானின் அன்போ, இரவில் அவைகளுக்கு வைக்கப்படும் தானியத் தின்மீதுள்ள ஆசையோ, அல்லது ஓநாயின் பயமோ அவ்வாடுகளை

ஓடுவதினின்றும் தடுக்கவில்லை. ஏனென்றால் மலையில் வசிக்கும் பிராணிகள் யதேச்சையாய் வாழ விரும்புகின்றன. எந்த விலைக்கும் அவை தங்களுடைய சுதந்தரத்தை விற்கச் சம்மதிப்பதில்லை. சுகமாயும், சந்தோஷமாயும் கட்டுண்டிருப்பதைக் காட்டிலும், ஆபத்துக்களையும் கஷ்டங்களையும் சகித்துக்கொண்டு சுதந்தரமாய் வாழ்வது சிறந்ததெனக் கருதுகின்றன.

ஏதாவது ஓர் ஆடு ஓடிப்போய் விட்டால் போதும், உடனே அப்பூகான் இரு கைகளாலும் தன் தலையைப் பிடித்துக்கொண்டு உட்கார்ந்துவிடுவான். அவனுக்கு அவ்விஷயம் விளங்குவதே இல்லை. பச்சைப் பசும்புல்லில் அவைகளை மேய்க்கிறான். ஒருவருக்கும் தெரியாமல் அக்கம் பக்கத்து வயல்களுக்கெல்லாம் அவைகளைத் துரத்திவிடுகிறான். இரவில் அவைகளுக்குத் தானியம் ஊட்டுகிறான். இவைகளை எல்லாம் துறந்துவிட்டு, மலைக்கு ஓடி ஓநாய்க்கு இரையாவதை ஏன் அந்த ஆடுகள் விரும்புகின்றன என்பது அவன் மூளைக்கு எட்டவே இல்லை.

அப்பூகானின் ஆடுகள் எல்லாம் இவ்விதமாக ஓடியபோது, அவன் மிகுந்த அருவருப்புற்று, "இனி நான் ஆடு வளர்க்க மாட்டேன். என் வாழ்நாளில் மிஞ்சியிருப்பது கொஞ்சந்தான். அச் சிறிது காலத்தை ஆடுகள் இல்லாமலே கழிப்பேன்" என்று தனக்குள்ளே சொல்லிக்கொண்டான். ஆனால் ஏகாந்தமாய் வாழ்வது மிகக் கஷ்டமான காரியம். ஆடுகள் இல்லாமல் அப்பூகான் கொஞ்ச காலம் எப்படியோ கழித்துவிட்டான். ஆனால் அதற்குமேல் இருக்க முடியவில்லை. ஒரு நாள் எங்கிருந்தோ ஒரு வெள்ளாடு விலைக்கு வாங்கிக்கொண்டு வந்தான். அது சிறு குட்டி. ஒரு வயசு அல்லது ஒன்றேகால் வயசு இருக்கலாம். சிறு குட்டியாக வாங்கினால் ஒரு வேளை பழகிவிடும் என்று அப்பூகான் நினைத்தான். முதலிலிருந்தே நல்ல புல்லையும் தானியங்களையும் தின்று ருசி கண்டு விட்டால் அப்புறம் மலைவாசத்தை விரும்பாது என்று எண்ணினான். இந்த ஆடு மிக அழகாயிருந்தது. நிறம் தூய வெள்ளை; நீண்ட ரோமமும், அழகிய கொம்புகளும், மாணிக்கம் போன்ற சிவந்த கண்களும் உடையது. தோற்றத்தில் மட்டுமல்ல, அந்த ஆடு குணத்திலும் நன்றாயிருந்தது. மிகுந்த அன்போடு அப்பூகானின் கையை நக்கும். சிறு குழந்தைகூட அதன் பாலைக் கறக்கலாம். உதைப்பதே இல்லை. கேட்கவேண்டுமா? அப்பூகான் அதனைத் தன் காதலியைக் காதலிப்பதுபோல் நேசித்தான்.

அதற்குச் சந்திரிகை என்று பெயரிட்டான். நாள் முழுதும் அதனுடன் பேசிக்கொண்டே இருப்பான். ஒரு சமயம் சிற்றப்பன் கஸீடாகானுடைய சரித்திரத்தையும், மற்றொரு சமயம் மாமா நத்தூவின் சரித்திரத்தையும் சொல்லுவான்.

தன்னுடைய சிறிய குடிசையில் இருப்பதற்கு ஆடுகளுக்குப் பிடிக்கவில்லையோ என அப்பூகான் நினைத்தான். ஆகையினால் தன் புதிய ஆடு சந்திரிகைக்காகப் புதிய ஏற்பாடு செய்தான். வீட்டிற்கு வெளியே அவனுக்குச் சொந்தமான சிறிய நிலம் இருந்தது. எங்கெங்கிருந்தோ முள் கொண்டுவந்து, அதன் நாலு பக்கங்களிலும் போட்டு யாதொன்றும் உள்ளே வராதபடி வேலியிட்டான். இங்குமங்கும் நன்கு ஓடியாடுவதற்குத் தக்கபடி ஒரு நீண்ட கயிற்றினால் சந்திரிகையை அதன் நடுவில் கட்டினான். இவ்விதம் அப்பூகானின் வீட்டில் சந்திரிகை மிகவும் சௌகரியமாய்க் காலம் கழித்துவந்தது. கடைசியில் இந்த ஓர் ஆடாவது நிலைத்து விட்டது, இனி இது ஓடாது என்று அப்பூகானும் தீர்மானித்து விட்டான்.

ஆனால் அப்பூகான் ஏமாற்றமடைந்தான். சுதந்தர விருப்பம் அவ்வளவு சுலபமாக உள்ளத்தினின்றும் விலகுவதில்லை. காட்டிலும் மலையிலும் யதேச்சையாய் வாழும் பிராணிகளைச் சுற்றிலும் சுவர்களால் சூழப்பட்ட வீட்டில் கட்டினால் என்ன, நாலு புறங்களிலும் வேலியிடப்பட்ட காட்டில் கட்டினால் என்ன? கைதி கைதிதானே! சில தினங்கள் வேண்டுமென்றால் மறந்திருக்கலாம். ஆனால் மீண்டும் காடு, மலை இவைகளின் ஞாபகம் வந்தவுடன், தான் கட்டப்பட்டிருக்கும் கயிற்றை அறுப்பதற்கு முயற்சி செய்யும். சந்திரிகை மலைக் காற்றையும், சுனை நீரையும் மறந்துவிட்டதென்று அப்பூகான் நினைத்தது தவறு.

ஒரு நாள் அதிகாலையில் சூரியன் மலைகளுக்குப் பின்னால் தோன்றிக்கொண்டிருந்தபொழுது சந்திரிகை அம்மலைகளின் பக்கம் தன் பார்வையைச் செலுத்தியது. அசைபோட்டுக் கொண்டிருந்த அவ்வாடு சற்றுநேரம் நின்றது. 'அம்மலைச் சிகரம் எவ்வளவு அழகாயிருக்கிறது. அந்தக் காற்றிற்கும், இந்தக் காற்றிற்கும் எத்தனை வித்தியாசம்! அங்கே குதிக்கலாம், ஓடலாம், கீழே விழலாம். இங்கே நாள்முழுதும் கட்டிக்கிடக்க வேண்டும்! இருபத்து நாலு மணி நேரமும் கழுத்தில் இந்த நாசமாய்ப்போன கயிறு! இம் மாதிரி வீடுகளில் கழுதையும், கோவேறு கழுதையும் வாழலாம்.

ஆனால் ஆட்டு ஜாதியைச் சேர்ந்த எங்களுக்கோ பெரிய மைதானம் வேண்டும்' என்று தனக்குள்ளே சந்திரிகை சொல்லிக்கொண்டது.

இம்மாதிரி எண்ணம் அதன் மனத்தில் தோன்றவும், சந்திரிகை பழைய சந்திரிகையாயில்லை. பசும் புல்லின்மீது அதற்கு விருப்பமில்லை. தண்ணீரின்மீதும் அதற்கு நோக்கம் செல்லவில்லை. அப்பூகானின் நீண்ட கதைகளும் அதற்குப் பிடிக்கவில்லை. நாளுக்கு நாள் மெலிய ஆரம்பித்தது. பால் வரவரக் குறைந்தது. சந்திரிகை சதா மலைகளின் பக்கமே பார்த்துக்கொண்டிருந்தது. கயிற்றை இழுத்துக் கொண்டு, மிகுந்த வேதனை நிரம்பிய குரலில் "மே, மே" என்று கத்தியது. அப்பூகானுக்கு விஷயம் என்னவென்று விளங்கவில்லை. ஒரு நாள் காலை, அப்பூகான் பால் கறந்தவுடன், அவன் பக்கம் முகத்தைத் திருப்பிக்கொண்டு ஆடுகளுக்குச் சொந்தமான பாஷையில், "எஜமானரே, இனி நான் உம்மிடம் இருந்தால், என் உடம்பிற்கு ஒத்துக்கொள்ளாது. என்னை மலைகளிலே விட்டுவிடும்" என்று சந்திரிகை கூறியது.

அப்பூகானுக்கு ஆடுகளின் பாஷை விளங்கும். "ஐயோ அல்லா! இதுவுமல்லவா போகவேண்டுமென்று சொல்லுகிறது!" என்று கதறினன். கைகள் நடுங்கின. பால் கறந்திருந்த மண் கலயம் தவறிக் கீழே விழவே தூள் தூளாய் நொறுங்கியது.

அப்பூகான் அப்படியே புற்றரையில் ஆட்டின் பக்கத்தில் உட்கார்ந்துகொண்டு, மிகப் பரிதாபகரமான குரலில், "மகளே, சந்திரிகா, என்னை நீயுமா விட்டுப் போக விரும்புகிறுய்?" என்று கேட்டான்.

"ஆம், அப்படித்தான் விரும்புகிறேன்" என்று சந்திரிகை பதிலளித்தது.

"ஏன்? உனக்குப் புல் கிடைப்பதில்லையா? அல்லது, தானியம் நன்றுயில்லையா? கடைக்காரன் தானியத்தில் கல்லும் மண்ணும் கலந்திருக்கிருனு? நான் இப்பொழுதே போய் வேறு தானியம் வாங்கிக்கொண்டு வருகிறேன்."

"இல்லை, இல்லை, தானியத்தில் ஏதும் குற்றமில்லை."

"அப்படியானல் கயிறு சிறிதாயிருக்கிறதா? இன்னும் நீளமான கயிறு வேண்டுமென்றுல் கொண்டுவருகிறேன்."

சந்திரிகை, "அதனுல் என்ன நன்மை?" என்றது.

"பின் நீ வேண்டுவதுதான் யாது?"

"வேறென்றுமில்லை; என்னை மலைக்கு ஓட்டிவிடு."

" நீ நாசமாய்ப் போக! அங்கே ஓர் ஓநாய் இருப்பது உனக்குத் தெரியுமா? அது வந்தால் நீ என்ன செய்வாய்?"

"அல்லா இரண்டு கொம்புகள் கொடுத்திருக்கிறாரல்லவா? அவைகளைக் கொண்டு குத்துவேன்."

"ஆம், ஆம், குத்துவாய்! உன்னுடைய கொம்புகள் ஓநாயின் மீது பெரிய காயத்தை உண்டாக்கிவிடும்! அந்த ஓநாய் எனக்குச் சொந்தமாயிருந்த பல ஆடுகளைக் கொன்றிருக்கிறது. அவைகளின் கொம்புகளெல்லாம் உன் கொம்புகளைக் காட்டிலும் மிகப் பெரியனவாய் இருந்தன. உனக்குக் கல்லூவைத் தெரியுமல்லவா? சென்ற வருஷம் அது இங்கே இருந்தது. அதை ஆடென்று சொல்லலாமா, மான், கலைமான் என்று சொல்லவேண்டும். இரவு முழுதும் கொம்புகளினால் ஓநாயோடு சண்டை செய்தது. ஆனால் பொழுது விடிவதற்குள் ஓநாய் அதைக் கொன்று தின்றேவிட்டது."

"ஐயையோ! பாவம், கல்லூவின் கதி அப்படியா ஆயிற்று? ஆனால் என்னவானாலும் ஆகட்டும். என்னை எப்படியாவது மலைக்கு ஓட்டிவிடு" என்று சந்திரிகை சொல்லியது.

அப்பூகானுக்குக் கோபம் பொங்கியது. "ஏ அல்லா, இதுவும் ஒரு ஜன்மமா? இந்த ஆடும் அந்தப் பாழும் ஓநாய் வயிற்றுக்குள் போய்ச் சேரவா? கூடாது, இதை நான் எப்படியும் காப்பாற்றியே தீருவேன். மூட ஜன்மமே, உனக்கு இஷ்டமில்லாவிட்டாலும், நான் உன்னைக் காப்பாற்றுகிறேன், பார். சரி, இப்பொழுது உன் எண்ணம் எனக்குத் தெரிந்துவிட்டது. வா, உன்னை ஓர் அறைக்குள் பூட்டிவிடுகிறேன். இல்லையானால் சந்தர்ப்பம் வாய்த்ததும் ஓடிவிடுவாய்."

சந்திரிகையை அவிழ்த்துக்கொண்டுபோய், ஒரு மூலையிலுள்ள அறையில் பூட்டி, வெளியில் அப்பூகான் நாதாங்கி போட்டுவிட்டான். ஆனால் கோபமும் துக்கமும் ஒன்று சேரவே, ஜன்னலை மூடுவதற்கு மறந்துவிட்டான். இந்தப் பக்கம் நாதாங்கியைப் போட்டுவிட்டு இவன் வெளியில் கிளம்பியதுதான் தாமதம், அந்தப் பக்கம் ஜன்னலின் வழியாய்க் குதித்துச் சந்திரிகை வெளியேறிவிட்டது!

மலையை அடைந்ததும் சந்திரிகையின் சந்தோஷத்திற்கு அளவே இல்லை. மலையிலுள்ள மரங்களை அது முன்னமே பார்த்திருக்கிறது. ஆனால் இன்று அவைகளின் நிறமே வேறாகத் தோன்றியது. அவை யாவும் நின்ற வண்ணமே தங்களோடு வந்து சேரும்படி,

சந்திரிகையை வரவேற்பனபோல் அதற்குத் தோன்றியது. வெண்மை நிறம் வாய்ந்த ரோஜா மலர்கள் சந்தோஷ மிகுதியினல் இங்கு மங்கும் ஆடிக்கொண்டே தங்கள் இதழ்கள் விரியச் சிரித்தன. உயரமாய் வளர்ந்திருக்கும் புற்கள் சந்திரிகையைக் கட்டியணைத்தன. மலைகளெல்லாம் மகிழ்ச்சியினுல் புன்முறுவல் பூத்தன. காணுமற் போன தங்கள் குழந்தை மீண்டும் தங்களிடையே வந்துசேர்ந்ததைக் குறித்து அவைகளின் சந்தோஷத்திற்கு அளவே இல்லை. சந்திரிகை யின் சந்தோஷத்தை யாரால் வர்ணிக்க முடியும்? நாலு பக்கங் களிலும் சுவரில்லை, முள்வேலி இல்லை, கழுத்தில் கயிறில்லை. புல்லோ? அன்பு நிறைந்த அப்பூகானுலும் அத்தகைய புல்லைக் கொண்டுவர முடியாது.

சந்திரிகை ஒரு சமயம் இங்கே குதிக்கும், இன்னெரு சமயம் அங்கே குதிக்கும். மலையுச்சியில் ஏறும், பள்ளத்தாக்கில் குதிக்கும். திடீரென்று கால் சறுக்கும்; உடனே சமாளித்துக்கொள்ளும். சந்திரிகை ஒன்று வரவே, மலை முழுதும் அல்லோலகல்லோலப் பட்டது. பத்துப் பன்னிரண்டு ஆடுகள் அப்பூகான் வீட்டிலிருந்து அறுத்துக்கொண்டு வந்துவிட்டனபோல் தோன்றியது.

கொஞ்சம் புல்லைத் தின்றுவிட்டு நிமிர்ந்து பார்த்ததும், அப்பூ கானின் வீடும், அந்த முள் வேலியும் அதற்குத் தென்பட்டன. அவைகளைப் பார்த்துச் சிரித்துக்கொண்டே, "ஏ, கடவுளே, இப்பொழுது பார்த்தால் அது எவ்வளவு சிறிய வீடாயிருக்கிறது! ஏ அல்லா, இத்தனை நாளும் நான் அதில் எப்படி வசித்தேன்? இவ்வளவு சிறிய வீட்டில் நான் எப்படித்தான் வாழ முடிந்தது?" என்று தனக்குள்ளே சொல்லிக்கொண்டது.

மறுநாள் பகலிலும் சந்திரிகை மிகக் குதூகலமாயிருந்தது. நடுப்பகல்வரை அது இங்குமங்கும் குதித்து ஆடின ஆட்டம் வாழ்நாள் முழுதிலுங்கூட ஆடியிராது. மத்தியான்னத்திற்கு மலையாடுகளின் மந்தை யொன்று அதன் கண்களுக்குத் தென் பட்டது. அவை சந்திரிகையை மிக்க சந்தோஷத்துடன் தங்களிடம் அழைத்து அதன் க்ஷேமலாபங்களை விசாரித்தன. மந்தையில் வாலிபக் கிடாய்களும் சில இருந்தன. அவைகளும் சந்திரிகையை மிக்க அன்புடனும் மரியாதையுடனும் வரவேற்றன. அவைகளில் கறுப்பு நிறமுள்ள ஒரு கிடாய் இருந்தது. அது சந்திரிகைக்கு மிகவும் பிடித்திருந்தது. அவை இரண்டும் வெகுநேரம் வரை இங்குமங்கும் சுற்றிக்கொண்டு திரிந்தன. அவைகளிடையே என்ன என்ன சம்பா

ஷணை நடந்ததோ, யார் அறிவார்! அந்த நிர்மானுஷ்யமான இடத்தில், ஒரு சிற்றோடை மட்டும் ஓடிக்கொண்டிருந்தது. ஒரு வேளை அவைகளின் சம்பாஷணையை அது கேட்டிருக்கலாம். யாராவது அங்கே சென்று அவ்வோடையை விசாரித்தால், ஒரு சமயம் தெரிந்துகொள்ளலாம். ஆனால் அவ்வோடையுந்தான் உண்மையைச் சொல்லுமென்று என்ன நிச்சயம்?

ஆட்டு மந்தை எங்கே சென்றதோ தெரியவில்லை. கிடாயும் அலைந்து திரிந்து கடைசியில் தன் நண்பர்களுடன் சேர்ந்து கொண்டது.

சந்திரிகையின் சுதந்தர தாகம் அளவு கடந்திருந்ததால், மந்தையில் இப்பொழுதே சேர்ந்து அதனுடைய சட்ட திட்டங்களுக்கு அடங்கியிருக்க அதற்கு விருப்பமில்லை. ஆகையினால் அது வேறு பக்கம் சென்றது. இரவு சமீபிக்கவே, குளிர் காற்று வீச ஆரம்பித்தது. மலை முழுதும் அந்தியின் செவ்வொளி பரவியது.

கீழே அப்பூகானின் வீடும், வேலியிடப்பட்ட அவ்வயலும் இருளில் மறைந்தன. ஓர் இடையன் தன் ஆடுகளை யெல்லாம் பட்டிக்குள் அடைத்துக்கொண்டிருக்கும் சத்தம் கேட்டது. அந்தக் குரல் சந்திரிகைக்கு மிகவும் பழக்கமானதுதான். அதைக் கேட்டுச் சந்திரிகை சற்று விசனமடைந்தது. இதற்குள் நன்றாய் இருட்டி விட்டது. மலையின் ஒரு புறத்திலிருந்து 'கூ! கூ!' என்று ஒரு சத்தம் வந்தது.

அச்சத்தத்தைக் கேட்டதும் சந்திரிகைக்கு ஓநாயின் ஞாபகம் வந்தது. இதுவரை சந்திரிகை சிறிதேனும் அதைப்பற்றி நினைக்கவில்லை. மலையின் கீழிருந்து யாரோ சீட்டியடிக்கும் சத்தமும் குழல் ஊதும் சத்தமும் கேட்டன. அது அப்பூகானுடைய சத்தந்தான். அதைக் கேட்டாவது சந்திரிகை திரும்பி வந்துவிடுமென்று நினைத்தான். ஒருபுறமிருந்து அப்பூகானுடைய சத்தமும், மற்றொரு புறமிருந்து ஓநாயின் சத்தமும் வந்துகொண்டிருந்தன.

திரும்பிப் போய்விடலாமா என்று சந்திரிகை சற்று நேரம் யோசித்தது. ஆனால் அத்துடன் கட்டுத்துறை, முளை, கயிறு முள் வேலி - இவைகளின் ஞாபகமும் வந்தது. அங்கே வாழ்வதைக் காட்டிலும், இங்கே மரிப்பது மேல் என்று அதற்குத் தோன்றியது. இறுதியில் ஊதுகுழல், சீட்டியின் சத்தங்கள் நின்றுவிட்டன. திடீரென்று பின்புறம் இலைகள் சலசலத்தன. சந்திரிகை திரும்பிப் பார்த்தபொழுது, நேராய் நிமிர்ந்திருக்கும் இரண்டு காதுகள் தென்

பட்டன. இரண்டு கண்கள் அவ்விருளில் பிரகாசித்துக்கொண் டிருந்தன. ஓநாய் சமீபத்தில் வந்துவிட்டது.

தரையில் உட்கார்ந்து ஆட்டையே இமைகொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தது ஓநாய். அது சிறிதும் அவசரப்படவில்லை. ஆடு இனி எங்கே ஓடிவிடப் போகிறது என்று அதற்குத் தைரியம் போலும்! சந்திரிகை அதன் பக்கம் திரும்பியபொழுது, "ஓஹோ! அப்பூகானின் ஆடா? நன்ருய் ஊட்டி ஊட்டிக் கொழுக்க வைத் திருக்கிருன்" என்று புன்சிரிப்புடன் கூறியது. இவ்விதம் சொல்லிக் கொண்டே தன்னுடைய சிவந்த நாக்கினுல் நீல நிறமான உதடுகளை நக்கியது. உடனே சந்திரிகைக்கு அப்பூகான் சொன்ன கல்லூவின் கதை ஞாபகம் வந்தது. தானும் இரவுமுழுதும் முட்டாள்தனமாகச் சண்டையிட்டுக் காலையில் ஏன் உயிரைவிட வேண்டுமென்று அது நினைத்தது. இப்பொழுதே தப்பித்துக்கொண்டால் என்ன? ஆனுல் மீண்டும் யோசிக்கையில் அது கூடாது என்று தீர்மானித்தது. உடனே தலை குனிந்து, கொம்புகளை முன்னுல் வைத்துக்கொண்டு, வீரர்களின் இயல்புக்கேற்ப ஓநாயை எதிர்த்து நின்றது சந்திரிகை. ஆனுல் அதனுடைய சக்தி அதற்குத் தெரியாததல்ல. ஓநாய் எத்தகைய பலம் வாய்ந்தது என்றும் அது அறியாமலில்லை. ஆடுகளால் ஓநாயைக் கொல்லமுடியாது என்பதும் அதற்குத் தெரிந்த விஷயந்தான். தன் முழுப் பலத்தையும் கொண்டு முயற்சி செய்ய வேண்டுமென்றே அது விரும்பியது. வெற்றியும் தோல்வியும் அதன் வசமில்லை. அது அல்லாவின் கையிலிருக்கிறது. ஆனுல் முயற்சி செய் வது அதன் வசந்தான் இருக்கிறது. கல்லூவைப்போல் தானும் இரவு முழுதும் சண்டையிட முடியுமா, இல்லையா என்று பார்க்கலாம் என நினைத்தது.

சிறிது நேரமானதும், ஓநாய் முன்னேறி வந்தது. சந்திரிகையும் நன்கு ஆயத்தம் செய்துகொண்டு, ஓநாயின் உயிர் போகுமாறு அதன் மீது பாய்ந்தது. ஓநாய் முட்டுண்டு பின்னுல் தள்ளப்பட்டது. இவ் விதம் இரவுமுழுதும் இரண்டும் சண்டையிட்டுக்கொண்டிருந்தன. அடிக்கடி சந்திரிகை ஆகாயத்தை நோக்கி, "எப்படியாவது சீக்கிரம் விடிந்துவிடாதா?" என்று நக்ஷத்திரங்களைப் பரிதாபகரமாகத் தன் பாஷையில் வினவியது.

நக்ஷத்திரங்கள் ஒவ்வொன்ருய் மறைந்துவிட்டன. கடைசி நேரத்தில் சந்திரிகை தன் பலம் முழுதும் உபயோகித்துத் தாக்கிற்று. ஓநாயும் களைத்துவிட்டது. கிழக்கு வெளுத்தது. சேவல்

ஒன்று எங்கிருந்தோ கூவியது. கீழிருந்த கிராமத்திலுள்ள மசூதியி லிருந்து காலைப் பிரார்த்தனையின் சத்தம் கேட்டது. சந்திரிகை மனசார அல்லாவைப் போற்றியது. "நான் என்னுலான முயற்சி யெல்லாம் செய்துவிட்டேன். அல்லா, இனித் தங்கள் கிருபை" இறுதியில், " அல்லாஹு அக்பர் " என்று சொல்லிக்கொண்டே சந்திரிகை தரையில் சாய்ந்தது. அதனுடைய வெண்மையான உரோமமெல்லாம் இப்பொழுது முற்றும் ரத்தமயமாயிருந்தது. ஓநாய் அதைக் கிழித்துத் தின்றுவிட்டது. மரங்களிலுள்ள பக்ஷிகளெல்லாம் இதைப் பார்த்துக்கொண்டிருந்தன. வெற்றி யாருடையது என்று அவை விவாதித்தன. பெரும்பான்மையான பக்ஷிகள், "ஓநாய்தான் ஜயித்தது" என்று கூறின. ஆனுல் ஒரு கிழக்குருவி, "சந்திரிகைக்குத்தான் ஜயம்!" என்றது.

# அதிருஷ்டம்

[விபின்குமார் பர்கோஹாயி]

"உன் பேரென்ன?"

"உன் பெயர்?"

"உன் பேரைச் சொல்."

"என் பெயர் அமியா."

"என் பேர் போனு."

தான் ஸ்ரீதனமாகக் கொண்டுவந்த கட்டிலின்மீது அமியா உட்கார்ந்து, அச்சிறு பாலகனை மடியில் வைத்துக் கொஞ்சிக்கொண்டிருந்தாள்.

"போனு, ஓ போனு! சித்தியிடம் என்ன செய்துகொண்டிருக்கிருய்? என்னிடம் வா."

"சித்தி, பாட்டி கூப்பிடுரு. நான் போறேன். கொஞ்ச நேரத்துக்கப்பறம் ஓடி வந்திடறேன். சீக்கிரமா வந்திடுவேன்."

சித்தியின் மடியிலிருந்து இறங்கி, கிழப்பாட்டியிடம் ஓடினுன். போனு. பாலகனுடைய பால் ஒழுகும் அச்சுந்தர வதனத்தைப் பார்க்கும்போதெல்லாம் அமியாவுக்கு ஆனந்தம் பொங்கும். முழங்கால் வரைக்கும் கால்சராய் போட்டிருந்தான். அவனுடைய நீண்ட தலைமயிர் கழுத்துவரை தொங்கியது. அம்மயிர்ச்சுருள்களின் அழகு யாவரையும் அக்குழந்தைபால் இழுத்தது. குழந்தையைப் பார்த்தவுடன் அதைத் தூக்கி மடியில் வைத்துக்கொண்டு கொஞ்சிக் குலாவ வேண்டுமென்று யாருக்குமே தோன்றும்.

போனு ('பாப்பா' என்ற தமிழ்ப் பதத்திற்கு இணையான அஸ்ஸாமியப் பதம்) தூங்கிய பின்பு, பாத்திரம் பண்டங்களை எல்லாம் அவைகளின் இருப்பிடத்தில் வைத்து அமியா ஒழுங்கு செய்ய ஆரம்

பித்தாள். பின்பு, வாசலுக்கு மேலே தொங்கவிடப் பட்டிருக்கும் ஸ்ரீகிருஷ்ணனுடைய படத்தைக் கைகூப்பி வணங்கி, கடிதம் எழுதுவதற்காகப் புதுப் பெண் ஒரு மரத்தடியில் உட்கார்ந்தாள்.

"இன்று காலை நான் என் புக்ககத்திற்கு வந்து சேர்ந்தேன். பிரயாணத்தில் ஒரு விதமான கஷ்டமும் ஏற்படவில்லை. ஆனால் உங்களைப்பற்றி நினைக்கும்போதெல்லாம் துக்கம் நெஞ்சை அடைத்துக் கொள்கிறது. என் புது வாழ்க்கை எப்படி இருக்கிறதென்று அறிய நீங்கள் ஆவலாயிருப்பீர்கள். இதோ சொல்கிறேன், கேளுங்கள். இப்பொழுது இங்கே கடுமையான வெயில். எங்கள் வீட்டிற்கு மாடி இல்லை. சுவர்களெல்லாம் இடிந்து விழுகிறுப் போலிருக்கின்றன. ஜன்னல் கண்ணாடிகளெல்லாம் உடைந்திருக்கின்றன. மூலை முடுக்குகளிலெல்லாம், காகிதமும் குப்பையும் குவிந்திருக்கின்றன. தரித்திரமே வீட்டின் உருவமெடுத்து வந்தது போல் தோன்றுகிறது. ஆயினும் வீட்டில் அமைதி குடிகொண்டிருக்கிறது. வாசலிலிருக்கும் மாமரத்தின் கிளைகள் காற்றில் அசைந்தாடிக்கொண்டிருக்கின்றன. இலைகளின் சலசலப்புத்தான் வீட்டின் அமைதிக்குப் பங்கம் உண்டாக்குகிறதென்று சொல்லலாம்.

"அவர் (கணவர்) இப்பொழுது வீட்டில் இல்லை; வெளியில் சென்றிருக்கிறார். அவரைப்பற்றி ஒன்றும் சொல்வதற்கில்லை. ஏனென்றால் அவரோடு நான் இன்னும் நன்றாய்ப் பழகவில்லை. மாமியார் சமையலறையில் ஏதோ செய்துகொண்டிருக்கிறார்கள். என் மாமியார் கம்பீரமும் சாந்த குணமும் வாய்ந்தவர்கள். தாய்மையே உருவெடுத்து வந்தவர்கள்போல் தோன்றுகிறது.

"என்னைப் பெற்றெடுத்த தாய் எப்படியிருந்தாளோ, எனக்குத் தெரியாது. இதுவரைக்கும் தாயற்றிருந்த நான், இப்பொழுது ஓர் அன்னையை யடைந்திருக்கிறேன். இன்னொரு விஷயம் உனக்குச் சொல்லவேண்டும்: என் பதியின் காலஞ்சென்ற சகோதரனின் சிறு பையன் ஒருவன் இருக்கிறான், 'போனு.' அவனை என் கண்ணின் மணியாகக் கருதுகிறேன். அவன் என் மனத்தைக் குதூகலப்படுத்துகிறான்."

"அம்மா, அமியா, வெளியே வா. உன்னைப் பார்க்க வந்திருக்கிறார்கள் இவர்கள்." எழுதிய கடிதத்தைக் கையில் எடுத்துக்கொண்டு, அமியா வெளியில் சென்றாள்.

"'அடியே இதென்ன? எங்களுக்கு முன்னால் என்ன வெட்கம்? எவ்வளவு அழகான பெண்!"

"எதுவரையில் படித்திருக்கிறாள்?"

"ஏழாம் வகுப்பு வரையில்."

"ஏழாம் வகுப்புப் பாஸ் பண்ணவில்லையா?"

"உம், பாஸ் பண்ணிவிட்டாள்."

ஹாகிமானியின் முகம் சிறிது மாறுதலடைந்தது. ஏனென்றால் அவளுடைய மகள் பிரதிபா ஏழாம் வகுப்புத் தேறவில்லை.

"உம், பாடத் தெரியுமா?"

"தெரியாது."

ஹாகிமானி புன்சிரிப்புடன் சொல்லலுற்றாள்: "பரவாயில்லை. எல்லோருக்கும் சங்கீதம் வருமா? எங்கள் பிரதிபாவுக்குச் சங்கீதம் கற்றுக்கொடுக்க நாங்கள் எவ்வளவு கஷ்டப்பட்டிருக்கிறோம். தந்தையின் விடா முயற்சியின் பயனாக இன்று அவள் சபையில் பாடும் யோக்கியதை அடைந்திருக்கிறாள். சமீபத்தில் ஒரு மெடல்கூட வாங்கியிருக்கிறாள். ஏ பிரதிபா, எங்கே, உன் மெடலைக் காண்பி."

"உனக்கு நூற்கவும், நெய்யவும் தெரியுமா? (அஸ்ஸாமிலுள்ள ஒவ்வொரு பெண்ணும் நூற்கவும் நெய்யவும் கற்றுக்கொள்கிறாள்.) இந்த ஊர் உனக்குப் பிடித்திருக்கிறதா? உனக்குச் சகோதர சகோதரிகள் உண்டா?" இப்படிக் கொஞ்சநேரம் கேள்விக்குமேல் கேள்வி கேட்டுவிட்டு ஹாகிமானி எழுந்து புறப்படத் தயார் ஆனாள்.

புறப்படும்பொழுது அமியா கையில் ஐந்து ரூபாய் கொடுத்தாள். போனு சித்தியிடம் சென்று, "ஒன் கையில் என்ன சித்தி?" என்று கேட்டான்.

"ரூபாய்."

"எங்கே, பார்க்கலாம். ஏ சித்தி! இத்தனை ரூபாயை நீ என்ன பண்ணப் போறே?"

"ஏன், உனக்கு வேணுமா?"

"எனக்கு வேண்டாம். நாம் ரொம்ப ஏழை, சித்தி. பாட்டிக்குப் பொடவையில்லை. அவளுக்கு யார் சித்தி, பொடவை வாங்கிக் குடுப்பா? சித்தப்பா மழையில் நனையறார். அவர்கிட்டே கொடை இல்லை. 'பணம் இல்லையே, கொடை எப்படி வாங்கிறது?' இண்ணு சித்தப்பா சொல்றார். நீ சித்தப்பாவுக்குக் கொடை வாங்கிக் குடுக்கிறயா? பால்காரன் இப்ப நம்ம வீட்டுக்கு வருவதே இல்லை. அவனைக் கூப்பிட்டால், 'பணமில்லாமல் பால் எப்படி

வாங்குவே' இண்ணு சொல்ருன். சித்தி, நீ பணங்குடு; நாம் பால் சாப்பிடலாம்."

அமியாவின் கண்களில் நீர் ததும்பியது. போனுவின் மூலம் தன் புக்ககத்தின் தரித்திர நிலைமையை அறிந்து, அவள் நெஞ்சம் கலங்க ஆரம்பித்தது.

முகுலும் அமியாவும் அன்றிரவு படுக்கையின்மீது உட்கார்ந்து சம்பாஷித்துக்கொண் டிருந்தார்கள். எங்கும் அமைதி. உலகம் உறக்கத்தில் ஆழ்ந்திருந்தது. கிருஷ்ண பக்ஷம். சதுர்த்திப் பிறை ஆகாயத்தில் உதயமாகிக்கொண்டிருந்தது. முகுலின் அறையிலுள்ள கீழ்ப் பக்கத்து ஜன்னலின் வழியாகச் சந்திரன் தன் ஜோதிப் புனலாகிய சந்திரிகையினுல் அறையை ஸ்நானம் செய்வித்தான். அத்துடன் மலர்களின் இனிய மணமும் அறை முழுவதும் பரவியது.

"அமியா, தூங்கிவிட்டாயா?" என்று முகுல் கேட்டான்.

"இல்லை."

"அமியா!"

"ஏன்?"

"அமியா, நீ ஒரு பெரும் பிழை செய்துவிட்டாய்."

"என்ன பிழை?"

"நீ என்னைக் கல்யாணம் செய்துகொண்டது தவறு."

"எப்படி?"

"நாங்கள் பரம ஏழை."

"ஐசுவர்யவானைக் கல்யாணம் செய்து கொள்ள வேண்டு மென்று நான் சபதம் ஒன்றும் செய்யவில்லையே."

"அமியா, இந்த வீட்டில் நீ மிக்க கஷ்டப்பட வேண்டி யிருக்கும்."

"போனுவும், அத்தையும், நீங்களும் இருக்கிற வீட்டில் கஷ்டம் எப்படி இருக்கும்?"

"என்னவோ!"

"நீங்கள் ஏன் இம்மாதிரி நினைக்கிறீர்கள்? நான் இங்கு மிகவும் சந்தோஷமாயிருக்கிறேன். கடவுள் நமக்கு மங்களம் உண்டாக்கு வார்."

முகுல் ஒரு நீண்ட பெருமூச்சு விட்டு, "வெகு நேரமாகி விட்டது. தூங்கு" என்ருன்.

*    *    *    *

பகல் கழிகிறது ; இரவு வருகிறது. இப்படியே ஒரு மாதம் ஆகியது. ஒரு நாள் மாமியார் அமியாவைத் தன் பக்கத்தில் அழைத்து, "சூன்யமயமான எங்கள் வீட்டிற்கு லக்ஷ்மிபோல் நீ வந்திருக்கிருய். போனுவினுடைய தாய் சாகும்பொழுது, அவனை என் வசம் ஒப் பித்து, 'அத்தை, போனுவை உங்களிடம் கொடுக்கிறேன். எனக் காக நீங்கள் வருத்தப்பட வேண்டாம்' என்று சொல்லிப்போனுள். முகுல் சிறுவன். இந்த வயசிலேயே அவன் இத்தனை கஷ்டப்பட வேண்டியிருக்கிறது. மதனியின்மீது அவன் எவ்வளவு அன்பாயிருந் தான்! அவள் அவனுக்கு ஒரு தாய்போல் இருந்தாள். அவனுடைய அண்ணனும் போய்விட்டான் ; மதனியும் மறைந்துவிட்டாள். நானிருக்க, அவர்கள் சென்றுவிட்டார்கள். எல்லாம் நாம் நினைக்கிற படியே முடியுமா, அமியா? என் அருமை முகுல் என் ஹிருதய விளக்காயிருக்கிருன். எனக்கோ வயசாகிவிட்டது. நீ முகுலைக் கவனித்துக் கொள். உன்னுல் முடியுமானுல் அவனுடைய பாரத்தைச் சிறிது நீயும் வகித்துக்கொள். அவன் மிகவும் கஷ்டப்படுகிருன்" என்று சொன்னுள்.

முகுல் காலையில் காலேஜில் படித்துக்கொண்டு, மாலையில் வட கௌஹாடியிலுள்ள ஒரு பள்ளிக்கூடத்தில் மிகச் சொற்பச் சம்ப ளத்தில் உபாத்தியாயர் வேலை பார்த்து வந்தான். அதன் பின்பு, ஒரு வீட்டில் ஒரு பையனுக்குப் பாடஞ் சொல்லிவைத்து விட்டு, சூரியாஸ்தமன மாகும்பொழுது, வீட்டிற்கு வந்துசேருவான். அவன் எப்பொழுதும் விசனத்தோடு இருந்தான். சிற்சில சமயங்களில் கனவில் அழுவான்.

தரித்திரம் தாண்டவமாடும் அவ்வீட்டில் போனு ஒருவன்தான் தீபம்போல் பிரகாசித்துக்கொண்டிருக்கிருன்.

போனு, அமியா இவர்களுடைய சம்பாஷணையும் ஹாஸ்யமும் தரித்திரத்தின் கழுத்தைப் பிடித்து வெளியே தள்ளுகின்றன. ஆயி னும் இறுதியில் தரித்திரந்தான் வெற்றிபெறுகிறது.

அமியா எப்பொழுதும் சிரித்த முகத்துடன் இருக்கிருள். மாமி யும் மருமகளும் தாயும் மகளும்போல் வசிக்கிருர்கள். ஏழைமை யின் கஷ்டங்களை யெல்லாம், அவள் மிகப் பொறுமையுடன் சகித்துக் கொள்கிருள். சமயம் வாய்க்கும்போதெல்லாம், போனுவுடன் சிரித்து விளையாடுவாள்.

"அமியா, நீ படித்தவளாய் இருக்கிருய். பணக்கார வீட்டில் வளர்ந்திருக்கிருய். அதனுடன் இவ்வளவு வேலைகளும் கற்றிருப்பா

யென்று நான் சொப்பனத்தில்கூட நினைக்கவில்லை. உன்னைக் கடவுள் ஆசீர்வதிக்கவேண்டும்" என்று மாமியார் சொல்வாள்.

"சித்தி, எங்களை விட்டுவிட்டு எங்கும் நீ போகக்கூடாது" என்று போனு சொல்வான்.

"அமியாவைப் போன்ற பெண் கிடைப்பது மிகக் கஷ்டம். அவள் சாக்ஷாத் லக்ஷ்மிதான்" என்று அயல் வீட்டார்களெல்லோரும் சொல்வது வழக்கம்.

எல்லோரும் அமியாவைப் புகழ்வதை ஹாக்கிமானி கேட்டவுடன், தன் பெண் பிரதிபாவின் திறமைகளைப் பற்றிச் சிறிது வர்ணிக்க ஆரம்பிப்பாள். "இப்பொழுது எங்கள் பிரதிபா நாட்டியமும் கற்றுக்கொண்டிருக்கிருள். அஸ்ஸாமி நாட்டியம், நாகர் நடனம், மணிப்புரி நடனம், ஓரியன்டல் நாட்டியம் - இத்தனையும் படித்துக்கொண் டிருக்கிருள்" என்று சொல்வாள்.

* * * * *

இன்று காலையிலிருந்து காற்றுப் பலமாக வீசிக்கொண் டிருக்கிறது. அகண்ட பிரம்மபுத்ரா நதியில் அலைகள் இன்று பேய்க் கூத்தாடுகின்றன. கருமேகங்கள் பிரளய காலத்தை அறிவிப்பது போல ஆகாயமெங்கும் கர்ஜித்துக்கொண் டிருக்கின்றன.

சூரியன் அஸ்தமிக்க இன்னும் வெகுநேரம் இருக்கிறது. எல்லோரும் அவசர அவசரமாகத் தங்கள் தங்கள் வீடுகளை நோக்கிச் செல்கிருர்கள். சூரியதேவனும் மேகங்களுக்கிடையே மறைந்து உலகத்தினின்றும் விடைபெற்றுக்கொண்டான். தெருக்களிலும் கடைவீதிகளிலும் ஜனங்களைக் காணவில்லை. மின்னல் மின்னுகிறது. வீடுகளிலெல்லாம் விளக்கேற்றிவிட்டார்கள். பாதைகளில் மனித நடமாட்டமே இல்லை.

எங்கும் கோர இருள் சூழ்ந்தது. ஆனல் முகுல் இன்னும் வீடு வந்து சேரவில்லை. காலையில் வீட்டை விட்டு வெளியேறியவன் இன்னும் திரும்பி வரவில்லை. முகுலின் ஒன்றுவிட்ட சிற்றப்பா ஒருவர் அவன் வருகிருனு என்று பார்ப்பதற்கு நதிக்கரைக்குச் சென்ருர். ஆனல் முகுலைக் காணவில்லை.

முகுலின் தாய் சமையலறையில் சமையல் செய்துகொண்டிருக்கிருள். அமியாவின் முன்ருனையைப் பிடித்துக்கொண்டு, போனு நின்றுகொண்டிருக்கிருன். யாவரும் மௌனமாயிருக்கிருர்கள்.

முகுலின் சிற்றப்பா திரும்பிவிட்டார். வழியில் அமியாவைப் பார்த்ததும், "மகளே, வீட்டிற்குள் போ. முகுல் இனி வரமாட்டான். படகில் நதியைக் கடக்கும்போது, அது நதியில் மூழ்கிவிட்டதாம். பக்கத்தில் அதைப் பார்த்துக்கொண்டிருந்த படகோட்டிகள் அழாக்குறையாக என்னிடம் இத்துக்கச் செய்தியைச் சொன்னார்கள். பிரம்மபுத்திரா இன்று மூன்று உயிர்களை விழுங்கிவிட்டது" என்றார்.

அமியா மூர்ச்சையுற்றுத் தரையில் விழுந்தாள்.

முகுலின் தாயும் இச்செய்தியைக் கேட்டவுடன் அடியற்ற மரம்போல் விழுந்துவிட்டாள். போனு அமியாவினுடைய முன்தானையைப் பிடித்து இழுத்துக்கொண்டு, "நான் இருக்கிறேன், சித்தி, எழுந்திரு" என்றான்.

# திட சங்கற்பம்

[முனிமாணிக்கம் நரசிம்ம ராவ், பி. ஏ., எல். டி.]

## 1

காந்தமும் நானும் இம்மாதத்தில் ஆன செலவுகளைக் கணக்கிட்டுப் பார்த்ததில், இந்த மாதம் ஆன செலவைப்போல் வேறு எந்த மாதத்திலும் ஆனதில்லை என்பதை அறிந்தோம். உறவினர்களும் நண்பர்களும் பலர் வந்ததனால் அவர்களை உபசரிக்க வேண்டி யிருந்ததே அதற்குக் காரணமாகும்.

"இனிமேல் நீங்கள் யாரையாவது விருந்துக்கென்று வீட்டிற்குக் கூட்டிக்கொண்டு வரக்கூடாது. யாராவது உங்களையோ உங்க ளுடைய கதைகளையோ புகழ்ந்துவிட்டால் போதும், உடனே அவர் உங்களுடைய நண்பராகி விடுகிறார். அப்புறம் என்ன? உங்கள் வீட்டில் அவருக்கு மாப்பிள்ளை உபசாரந்தான்; பலகாரம், சாப்பாடு எல்லாம் நேரம் தவறாமல் நடக்கின்றன! இம்மாதிரி தாறுமாறாய்ச் செலவழித்தால் குடும்பம் என்ன கதியாகும்? நான் இப்பொழுதே உங்களுக்குச் சொல்லிவிடுகிறேன் : இனி விருந்துக்கு ஒருவரையும் அழைத்துக்கொண்டு வருவதில்லையென்று இப்போதே தீர்மானம் செய்துகொள்ளுங்கள்" என்று காந்தம் என்னிடம் சொன்னாள்.

இதற்குள் ஒரு பிராமணர் கட்கத்தில் ஒரு துணி மூட்டையை இடுக்கிக்கொண்டு, என் வீட்டு முற்றத்தில் வந்து, "இதுதான் காந் தத்தின் வீடா?" என்று கேட்டார். "இந்த வீட்டில் வேங்கடராவ் வசிக்கிறார்" என்று நான் பதிலளித்தேன். "காந்தம்மா என்பது யார்? அவர்கள் எங்கு வசிக்கிறார்கள்? அவர்கள் இந்த வீட்டில் இல்லையா?" என்று பிராமணர் சற்று ஆத்திரத்துடன் கேட்டார். இதைக் கேட்டு என் மனைவி அந்தப் பிராமணரைப் பார்த்து,

"வாருங்கள், இந்த வீடுதான். என் பெயர்தான் காந்தம்மா. என்ன விசேஷம், சொல்லுங்கள்" என்ருள்.

"பெண்ணே, உன் பெயர்தான் காந்தம்மாவா? பார்த்தவுடனே நான் தெரிந்துகொண்டேன். இருளிலும் ரத்தினம் பிரகாசிக்கு மல்லவா?" என்ருர் பிராமணர்.

"தாங்கள் யார்? தங்கள் ஊர்?"

"பெண்ணே, உன்னைப்பற்றி ராமராவ் அதிகம் சொல்லியிருக் கிருர். நீ உதாரமும் சீலமுமுள்ள பெண்மணி என்றும், மழை நீரிஞல் நிரம்பிய தடாகத்தில் எங்ஙனம் விதவிதமான தவளைகள் கத்திக்கொண்டிருக்குமோ, அங்ஙனம் உங்கள் இல்லமும் விருந்தினர் நிறைந்திருக்குமென்றும் கேள்விப்பட்டிருக்கிறேன்."

இவ்வார்த்தைகளைக் கேட்டதும் என் மனைவியின் முகம் தாமரைபோல் மலர்ந்தது. அவள் மிகுந்த கவனத்துடன் தன் கீர்த்திகளைக் கேட்டுக்கொண்டிருந்தாள்.

பிராமணர் மேலும் சொல்லலுற்ருர்: "பெண்ணே, நான் ஏதோ முகஸ்துதி செய்கிறேன் என்று நினைக்காதே. ராமராவ் என்னிடம் எல்லாம் சொல்லியிருக்கிருர். உங்களிருவருடைய இன்பமயமான இல்வாழ்க்கை, உத்தமமான மக்கட்பேறு, நீங்கள் ஈசுவரனிடத்தில் கொண்டுள்ள பக்தி, பெரியவர்களிடம் நீங்கள் காட்டும் மரியாதை - இவை எல்லாம்-பொன்மலர் நாற்றமும் பெற்றதுபோல் - பெண்ணே, என்ன சொல்வது, போ. பகவான் உங்கள்மீது அளவிலாக் கருணை கொண்டிருக்கிருர்."

"தங்களைப் போன்ற ஓர் உத்தம பிராமணர் ஏழைகளாகிய எங்கள் இல்லத்திற்கு வந்தருளியது எங்கள் பாக்கியமேயாகும். தயவு கூர்ந்து தாங்கள் வந்ததன் காரணத்தைக் கூறியருளுமாறு கோருகிறேன்."

"விசேஷம் ஒன்றுமில்லை. நான் உங்களிடம் தானதர்மம் ஏதும் வேண்டி வரவில்லை. ராமராவ் உங்களைப்பற்றிக் கூறியதிலிருந்து உன்னைப் பார்க்கவேண்டும் என்ற அவாவிஞலேயே வந்தேன். வேறு விசேஷமில்லை."

"சுவாமி, தாங்கள் மத்தியான்ன போஜனத்திற்குப்பின் தயவு செய்து எங்கள் வீட்டிற்கு வந்து அருள் புரியவேண்டும். புராணம், இதிகாசம் ஏதாவது படிக்க வேண்டும். இப்பொழுது விடை கொடுங்கள். வீட்டில் வேலை இருக்கிறது. சாவகாசமாய் இன்று மாலை வாருங்கள்."

"பெண்ணே, அழகான வஸ்துக்களைப் பார்ப்பதிலேயே மனம் சந்தோஷமடைகிறதென்று கேள்விப்பட்டிருக்கிறேன். ராமராவின் வீட்டைப் பார். அவருக்குக் குழந்தை குட்டிகள் ஒன்றுமில்லை. அவருடைய வீட்டில் ஒரு கிழவி இருக்கிருள். அவருடைய தாய் போலும்! அவருடைய மனைவி வியாதியாய்க் கிடக்கிருள். குழந்தை குட்டிகள் இல்லாத வீட்டில் போஜனம் செய்ய என் மனம் இடங் கொடுப்பதில்லை. அங்கு உணவருந்துவது மயானத்தில் உணவருந்து வதை யொக்கும். நான் சொல்வது விளங்குகிறதா? பெண்ணே! உன்னுடைய வீட்டைப் பார், என்ன ஆனந்த மயமா யிருக்கிறது! சிறந்த சித்திரகாரர்களால் ஆக்கப்பட்ட சித்திரங்களினுல் அலங்கரிக் கப்பட்ட அழகிய அரண்மனையைப்போல்......"

"எங்கள் வீட்டில் என்ன இருக்கிறது! வீடு முழுதும் சாணத்தினுலும் களி மண்ணினுலும் செய்யப்பட்ட பொம்மைகள் நிறைந்திருக்கின்றன. எங்களுடைய குழந்தைகளோ நிர்வாணமாய்த் திரிகின்றன."

"அப்படியில்லை பெண்ணே! நிர்வாணமான குழந்தைகளே உயிருள்ள அழகிய இயற்கைச் சித்திரங்கள். இந்தக் குழந்தைகளி னுல்தான் உன் வீடு ஒரு சித்திரசாலையை ஒத்திருக்கிறது."

"எல்லாம் தங்கள் ஆசீர்வாதமே. சுவாமி, தங்களுக்குச் சொந்த ஊர் எது?"

"தெனுலிக்குச் சமீபத்தில் குஞ்சவரம்."

"தெனுலிக்குத் தாங்கள் எப்போதாவது போயிருக்கிறீர் களா?"

"எப்போதாவது ஏன்? அடிக்கடி போவதுண்டு. அரிசி பருப்பு, கடுகு மிளகு, மருந்து - என்ன வாங்க வேண்டுமானுலும் - அங்கேதான் போகவேண்டும்."

"மருந்து யாருக்கு?"

"எனக்காக அல்ல. கொஞ்ச காலத்திற்கு முன் என் மனைவி நோய்வாய்ப்பட் டிருந்தாள். அவள் பிழைப்பாள் என்ற நம்பிக்கை யைக்கூட நான் இழந்துவிட்டேன். ஆனுல் தெனுலியில் ஒரு டாக்டர் இருக்கிருர். நான் அவரைத் தினந்தோறும் கைகூப்பித் தொழு கிறேன். அந்த டாக்டரை நினைக்காத நாள் இல்லை. அவரே அவளுக்கு உயிர்ப் பிச்சை கொடுத்தார். டாக்டருக்கு வயசு கொஞ்சந்தான். ஆனுல் அநுபவம் அதிகம். தங்கமான குணம், அவர் பெயர் ராமமூர்த்தி."

## 2

இவ்வார்த்தைகளைக் கேட்டதும் என் மனைவி அடைந்த ஆனந்தத்திற்கு அளவில்லை. "அவன் என் தம்பி, அந்த டாக்டர் என் தம்பிதான்" என்று மிகுந்த சந்தோஷத்துடன் சொன்னாள்.

அந்தப் பிராமணரும் சிறிது நேரம் ஆச்சரியத்துடன் அப்படியே பார்த்துக்கொண்டு நின்றார். பின்பு ஆச்சரியம் தெளிந்து, "அப்படியா சங்கதி? அறிந்துகொண்டேன். ரோஜாச் செடி எங்கிருந்தால் என்ன, அதில் ஆனந்தகரமான புஷ்பங்கள்தாம் பூக்கும். பெண்ணே! இன்று பெரிய சுபதினம். நீயும் அவரும் ஒரு தாய் வயிற்று மக்களா?"

மிக்க பெருமையுடன், "ஆமாம், ஒரு தாய் வயிற்றுக் குழந்தைகள்தாம்" என்றாள்.

"இத்தகைய உத்தம மக்களைப் பெற்றெடுத்த தாய் உண்மையிலேயே புண்ணியவதிதான்."

சிந்தனை தோய்ந்த முகத்துடன், "அதனால்தான் அவள் இருபத்தைந்தாவது வயசிலேயே பரலோகப் பிராப்தி......" என்றாள் அவள்.

"அடடா, அப்படியா விஷயம்? பாவம் சிறு வயசிலேயே...... அவள் இன்று உயிருடனிருந்து, உன் தம்பியின் கீர்த்திகளைக் காதாரக் கேட்டு, உன் இன்பமயமான இல்லற வாழ்க்கையையும் கண்குளிரப் பார்ப்பாளானால், அப்புறம் என்ன சொல்வது போ. அவள் எத்தனை சந்தோஷப்படுவாளோ, யார் கண்டார்கள்?"

காந்தம் ஒரு நீண்ட பெருமூச்சு விட்டாள்.

## 3

பகல் ஒன்பது மணியாகிவிட்டது. அந்தப் பிராமணர் நெருங்கிய உறவினரைப் போல், குழந்தைகள் யாவருடைய பெயர்களையும் விசாரித்து, அவர்களைப் பெயரிட்டழைத்து, எல்லோரையும் ஆசீர்வதித்து, "போய் வருகிறேன். விடைகொடுக்க வேண்டும்" என்று கேட்டார்.

"இல்லை. தாங்கள் இப்பொழுது போக முடியாது. இன்று தயவு செய்து எங்கள் வீட்டில் போஜனம் செய்தருள வேண்டும்."

"அதற்கு இப்பொழுது என்ன அவசியம்? ராமராவ் எனக்காகக் காத்துக்கொண்டிருப்பார்."

"நாங்கள் யாவரும் குண்டூர் ஜில்லாவைச் சேர்ந்தவர்கள். வித்துவானும் ஸத்புருஷருமாகிய தாங்கள் எங்கள் வீட்டுக்கு வந்தருளியது எங்கள் பாக்கியமேயாகும். தாங்கள் கட்டாயம் இங்கே சாப்பிடவேண்டும். இல்லாவிட்டால் தங்களை விடமாட்டோம்" என்று அவரை மிகவும் வற்புறுத்தி வேண்டிக்கொண்டாள் காந்தம்.

"பெண்ணே, நீ என் மகளைக் காட்டிலும் என்மீது அன்பாயிருப்பது கண்டு சந்தோஷம். உன் வார்த்தையை எப்படித் தட்டுவேன்? உன் மனம் நோக நான் சகியேன். சரி. ஸ்நானம் செய்துவிட்டு வருகிறேன். ஆற்றங்கரைக்கு எப்படிப் போகவேண்டும்?"

"இந்த வழியாகவே நேராகச் செல்லுங்கள். கொஞ்ச தூரம் போனவுடனேயே ஆற்றைப் பார்ப்பீர்கள். சீக்கிரம் குளித்துவிட்டு வாருங்கள். என் கணவர் ஆபீஸ் போவதற்கு நேரமாகிவிட்டது."

"இதோ வந்துவிட்டேன். ஆற்றில் இரண்டு முழுக்குப் போட்டு வந்துவிடுகிறேன்."

காந்தம் மாடிக்கு வேகமாய் ஓடிவந்து, "இதோ பாருங்கள்: அவர் பெரிய வித்துவான்; பிராமண சிரேஷ்டர். நம் ஜில்லாக்காரர். என் உறவினர். யாவரையும் நன்கறிந்தவர்" என்று என்னிடம் சொன்னாள்.

"அதற்கு என்ன?"

"அவர் நம் வீடு தேடி வந்திருக்கிறார். நான் அவரைச் சாப்பிட அழைத்திருக்கிறேன்."

"எவனோ ஒரு வழிப்போக்கன் உன்னை ஏமாற்றிவிட்டான்."

"அந்த மாதிரி சொல்லாதீர்கள், மகா பாவம்; ஸத்புருஷர்களை எப்பொழுதும் நிந்திக்கக் கூடாது. குழந்தைகுட்டிகள் இருக்கும் வீடு. ஏதாவது கெடுதி நேரும்."

"சரி, அதிருக்கட்டும். இப்பொழுது என்னிடம் ஏன் வந்தாய்?"

"இன்று சனிக்கிழமையல்லவா? காய் கறி, வெற்றிலை பாக்கு முதலியவை எல்லாம் வீட்டிலேயே இருக்கின்றன. கொஞ்சம் கடைக்குப் போய் ஒரு டஜன் மாம்பழம் வாங்கி வாருங்கள். நல்ல ஜாதியாய் இருக்கவேண்டும். தெரிகிறதா? இன்னொரு விஷயம்: உங்களைத்தானே, நான் சொல்வது கேட்கிறதா? கோனாரிடத்தில் ஒரு படி பால் வாங்கிவரச் சொல்லுங்கள்."

"என்னிடத்தில் காலணாக்கூட இல்லையே."

"எங்காகிலும் கடனாவது வாங்கி, இந்தச் சாமான்களை வாங்கிக் கொண்டு வாருங்கள். என்ன செய்வது? அவசியம் வாங்கித்தான் ஆகவேண்டும்."

"ஒரு மணி நேரத்திற்கு முன்னால் நாம் என்ன தீர்மானம் செய்தோம்? இப்பொழுது நீ செய்துகொண்டிருப்பதென்ன?"

"அதைப் பின்னால் யோசித்துக் கொள்வோம். நான் சீக்கிர மாய்ச் சமைக்கவேண்டும். தாங்கள் உடனே புறப்படுங்கள். கடை வீதியில் யாருடனாவது பேசிக்கொண்டு இருந்துவிடாதீர்கள். இங்கே பாருங்கள், இந்தச் சிறு பெண் வீட்டிலிருந்தால் ஒரு வேலை யும் ஓடாது; ஆகையினால் இவளையும் தூக்கிக்கொண்டு போங்கள்."

இவ்வார்த்தைகளைக் கேட்டுக் கோபத்தினால் என் உடல் துடிக்க ஆரம்பித்தது. அங்கவஸ்திரத்தை உதறித் தோளில் போட்டுக் கொண்டு வீட்டைவிட்டு வெளியேறினேன். பின்னால் திரும்பிக் கூடப் பார்க்கவில்லை.

# வாழ்க்கை

[“ஆனந்தா”]

## 1

சனிக்கிழமை. ‘கப்பன் பார்க்’கில் சங்கீதம் வாசித்துக்கொண் டிருந்தார்கள். எங்கேபார்த்தாலும் ஜனங்களின் கூட்டமாக இருந்தது. விதவிதமான வஸ்திரங்களும், விதவிதமான வேஷங்களும் அணிந்த ஆடவர் பெண்டிர், யுவ யுவதிகள், பால பாலிகைகள் இங்குமங்கும் உலாவிக் கொண்டிருந்தார்கள். சிலர் ஸ்திரீ புருஷர்களுடைய ரூபலாவண் யத்தைப் பார்ப்பதில் மயங்கியிருந்தனர். இன்னும் சிலர் தங்கள் தங்களுடைய ஆடையாபரணங்களின் அழகை மற்றவர்களுக்குக் காட்டுவதில் ஈடுபட்டிருந்தனர்.

பாண்டு வாத்தியம் இப்பொழுதுதான் ஆரம்பித்தது. எந்த மேடைமீது பாண்டு வாசித்துக்கொண் டிருந்ததோ, அதன் நாலு பக்கங்களிலும், கூட்டங் கூட்டமாக ஜனங்கள் இங்கிருந்து அங்கும், அங்கிருந்து இங்குமாக உலாவிக்கொண்டிருந்தனர். அவர்களில் வாலிபர்களின் ஜோடி ஒன்றிருந்தது. அதில் ஒருவன், ஐந்தடி உயரம் இருக்கலாம். அழகிய முகம், உருண்ட கண்கள். அவன் நவ நாகரிக மேல்நாட்டு உடை அணிந்திருந்தான். பார்ப்பதற்கு அவன் அசல் ஆங்கிலோ இந்தியன்போல் இருந்தான். ஆனால் அந்த வெளவால் ஜாதிக்கும் அவனுக்கும் கொஞ்சங் கூடச் சம்பந்தம் இல்லை. அதாவது உடை ஒன்றை விட்டால் அவன் நூற்றுக்கு நூறு சுதேசி. அவ்வாலிபனுடைய தோழன் அவனின்றும் முற்றும் மாறுபட் டவன். வித்தியாசம் கேவலம் உடையில்தான். உயரம் கொஞ்சம்

குறைவு. வசீகரமான முகத்தோற்றம். மாநிறம். ஆனல் உடையில் வானுக்கும் பூமிக்குமுள்ள வித்தியாசம். அவ்விளைஞன் உச்சியி லிருந்து உள்ளங்கால் வரைக்கும் கதர் அணிந்திருந்தான். உடையும் சர்வ சாதாரணமானது. ஒரு காந்திக் குல்லாய், ஒரு வெள்ளை ஷர்ட், ஒரு வெள்ளை அங்கவஸ்திரம், ஒரு வேஷ்டி ; இவ்வளவுதான். வேறு ஒன்றும் இல்லை. கால்களில் சாதாரணச் செருப்பு.

முதல் பாட்டு முடிந்தவுடன் பாண்டும் நின்றது. பேசிக் கொண்டே 'சுதேசியும், பரதேசியும்' ஆன அவ்விருவரும் ஒரு பாறையின்மேல் போய் உட்கார்ந்தார்கள். உட்கார்ந்தபின் தங்கள் மனம் போனபடி சம்பாஷணை செய்துகொண்டிருந்தனர். ஐந்து நிமிஷந்தான் ஆயிருக்கும். ஒரு சிறு பையன் மெல்லிய குரலில், 'ஸார்' என்று சொல்லிக்கொண்டே முன்னல் வந்து நின்ருன். இருவரும் சம்பாஷணையை நிறுத்திப் பையனைப் பார்த்தார்கள். பைய னுக்கு வயசு ஏழெட்டுக்கூட இராது. மெலிந்த சரீரம், ஒட்டிய கன்னங்கள். கண்களினின்றும் தரித்திரத்தின் சின்னங்கள் தெறித் துக் கொண்டிருந்தன. கிழிந்த சட்டை அணிந்திருந்தான். ஒரு கால் சராய், அதுவும் கிழிந்தது. கையில் மஞ்சள் நிறமான காகிதப் பெட்டிகள் வைத்திருந்தான். பையன் 'ஸார்' என்று கூப்பிட்ட வுடன் வாலிபர்கள் இருவரும் ஒரே சமயத்தில் அவன் பக்கம் திரும்பி ஞர்கள். இவ்வாலிபர்களுடைய முகங்களைப் பார்த்ததும், அவன் முன்னல் சென்று பேசுவதற்குக் கூடப் பயப்பட்டான். உடனே கதர் அணிந்தவன் புன்சிரிப்புடன் அவனை, 'குழந்தாய்' என்று கூப்பிட்டான். பையன் கொஞ்சம் தைரியமாக, "ஸார், கைக்குட்டை விற்பனைக்குக் கொண்டுவந்திருக்கிறேன்" என்று சொல்லிக்கொண்டே காகிதப் பெட்டியைத் திறந்தான்.

கதரணிந்தவன் "எடேன், பார்ப்போம்" என்று சொன்னுன்.

பையன் காகிதப் பெட்டியைத் திறந்தான். பெட்டியில் பல கைக்குட்டைகள் மடித்து வைக்கப்பட்டிருந்தன. பையன் அவைகளை அவன் கையில் கொடுத்தான். அவன் ஒரு கைக்குட்டையை விரித்துப் பார்த்தான். அதன் நான்கு கரைகளிலும் ஜரிகைவேலை செய்யப்பட்டிருந்தது. உண்மையில் அது மிகவும் அழகாயிருந்தது. அதை நன்ருய்ப் புரட்டிப் பார்த்தபின் அவன், "தம்பி, இதை யார் தயாரித்தது ?" என்று கேட்டான்.

"என் அக்காள்."

"நீ யாருடைய பையன் ?"

பையன் பதில் சொல்லவில்லை. அவன் கண்களில் துயர அலைகள் தோன்றின.

"என்ன தம்பீ, உனக்குத் தாய்தந்தையர் இல்லையா?"

"இருக்கிறார்கள், ஸார்!"

"அவர்கள் பெயர்?"

"ரங்கப்பா."

"என்ன வேலை செய்கிறார்?"

சிறுவன் மீண்டும் மௌனம் சாதித்தான்.

"ஏன், வேலை ஒன்றுமில்லையா?"

"எனக்குத் தெரியாது, ஸார்."

"உன் பெயர் என்ன?"

"நஞ்சுண்டன். ஸார்."

"நீ பள்ளிக்கூடத்திற்குப் போவதில்லையா?"

"போய்க்கொண்டுதான் இருந்தேன். இப்பொழுது நிறுத்தி விட்டார்கள்."

"யார் நிறுத்தியது?"

"அம்மா."

"ஏனோ?"

"தெரியாது."

கதரணிந்தவன் ஒரு பெருமூச்சு விட்டான். உடனே பையன் "ஸார், உங்களுக்குக் கைக்குட்டை வேண்டாமா?" என்று கேட்டான்.

"இதன் விலை என்ன?"

"இரண்டணாத்தான்."

"ஓ! ரொம்ப அதிகம்."

"ஸார், நீங்களே இப்படிச் சொன்னால்......?"

"பார், நான் கதர்தான் உடுத்துகிறேன். இந்தக் கைக்குட்டை கதரல்ல. (நண்பனிடம்) நீ வாங்கிக்கொள்கிறாயா?"

நண்பன் தலையசைத்துவிட்டு, சும்மா இருந்துவிட்டான். பையன் நம்பிக்கை இழந்தான். மிருதுவான மெல்லிய ஸ்வரத்தில் அவன் மீண்டும் சொல்லலுற்றான்: "ஒன்றாவது வாங்கிக் கொள்ளுங்கள், ஸார். அதிகம் வேண்டாம்."

கதரணிந்தவன், "வேறு யாருக்காவது கொடு. எங்களுக்கு வேண்டாம்" என்றான்.

இவ்விதம் சொல்லிக்கொண்டே அவன் காகிதப் பெட்டியைப் பையனிடம் திரும்பக் கொடுத்துவிட்டான்.

சிறுவன் மீண்டும், "இன்று ஒன்றுகூட விற்கவில்லை. வெகு நேரமாக அலைகிறேன்" என்றான்.

இருவரும் எழுந்து வீட்டுக்குப் போகப் புறப்பட்டார்கள். சிறுவன் மீண்டும், "ஸார், உங்களுக்கு ஒன்றுகூட வேண்டாமா?" என்று கேட்டான்.

"வேண்டாமப்பா" என்று சொல்லிக்கொண்டே கதரணிந்தவன் தலையசைத்தான்.

"ஸார், நான் ஒன்றுகூட விற்க முடியாவிட்டால், விற்பதற்கு நான் போகவே இல்லையென்று வீட்டில் நினைப்பார்கள். ராத்திரி சாப்பாடு போடமாட்டார்கள்."

இதைச் சொல்லும்போதே சிறுவனுடைய உதடுகள் துடிக்க ஆரம்பித்தன. கண்களில் நீர் ததும்பியது. துயர் வெள்ளத்தின் தாரை பீறிட்டுக் கிளம்புவதுபோல் அந்த நிராசைக் குரலில் எத்தகைய துன்பம்!

உடனே கதரணிந்தவன், "சரி, நீ எங்களோடு வா" என்றான்.

மூவரும் ஜீ. ஆர். எஸ். காப்பிக் கிளப்பை நோக்கிச் சென்றார்கள்.

சிறுவன் ரொம்பப் பசியாயிருந்தான். இருவரும் 'டிபன்' சாப்பிட்டார்கள். சிறுவனுக்கும் வயிறு நிறைய வாங்கிக்கொடுத்தார்கள். அதன்பின், கதரணிந்தவன் எட்டணாவிற்கு மிட்டாய் வாங்கிச் சிறுவன் கையில் கொடுத்து, "இதை வீட்டிற்குக் கொண்டு போ" என்று சொன்னான்.

அவர்களின் கருணையைக் கண்டதும் சிறுவன் ஆச்சரியமுற்றான். அவர்களுக்கு வந்தனமளிக்க, அவன் நா எழவில்லை. ஆனால் அவன் கண்கள் நாவின் வேலையைச் செய்தன. சிறுவன் தன் வீட்டை நோக்கி நடந்தான். எனினும் அவர்கள் இருவரையும் திரும்பித் திரும்பிப் பார்த்துகொண்டே போனான்.

## 2

சங்கீதம் நின்றுவிட்டது. ஜனங்கள் தங்கள் தங்கள் வீட்டிற்குச் செல்ல ஆரம்பித்தனர். கூச்சல் குறைந்தது. கதரணிந்தவனும், அவன் நண்பனும் காப்பி ஹோட்டலிலிருந்து திரும்பி, பாறையின்மேல் உட்கார்ந்தார்கள். பத்து நிமிஷம்வரைக்கும் இருவரும் பேசாமல் இருந்தார்கள். சூட் அணிந்தவன், பையினின்றும் சிகரெட்டை

எடுத்துப் பற்றவைத்துக்கொண்டே, "ராஜு, என்ன யோசிக்கிருய் ?" என்று கேட்டான்.

"ஒன்றுமில்லே, அந்தச் சிறுவனுடைய எளிய நிலைமையைப் பற்றி யோசிக்கிறேன். என்ன, ஏழைச் சிறுவனின் வாழ்க்கை!"

"நண்பா, அந்தப் பையனுக்கு மிட்டாய் வாங்கிக் கொடுத்தது என்னவோ சரிதான். ஆனல் நீ வீட்டிற்கு மிட்டாய் அனுப்பினுயே, அதற்கு என்ன அர்த்தம் ?"

"அவன் தாய்தந்தையரும் மிகுந்த ஏழையாயிருப்பார்கள்."

"அட பைத்தியமே! நீ ஒரு நாளேக்கு எட்டணுவிற்கு மிட்டாய் வாங்கி அனுப்பிவிட்டால், அவர்களுடைய தரித்திரம் நீங்கிவிடுமா?"

"நீ அப்படி நினைத்திருப்பாய். ஆனல் நான் அப்படி நினைக்கவில்லே. நம்மால் எவ்வளவு முடியுமோ, அவ்வளவு செய்வோம். நான் என்னவோ அந்தப் பையனேப் பார்த்தவுடன் சகிக்கமுடியாத் துன்பமடைந்தேன். சீனு, இந்த வாழ்க்கைப்போரில் அந்த எட்டு வயசு அறியாப் பாலகனுடைய துர்க்கதி என்ன! அவன் மற்றப் பிள்ளேகளோடு சேர்ந்து ஆடிக் குதித்து விளேயாடி, பாடசாலேயில் படிக்கவேண்டிய காலமல்லவா இது? ஐயோ! இவ்வயசிலா அவனுக்குச் சம்பாதிக்கவேண்டிய கவலே! துணி விற்காவிட்டால், தாய் சாப்பாடு போடமாட்டாளாம்! தாயின் தெய்விக அன்பை அபகரிக்கும் இந்தத் தரித்திரப் பிசாசு எவ்வளவு பயங்கரமானது! ஐயோ! எனக்கு என்னவோ, அம்மாதிரி குடும்பம் ஒன்றின் பரிசயந்தான் கிடைத்திருக்கிறது. ஆனல் பாரத தேசம் முழுதும் இத்தகைய துர்ப்பாக்கியக் குடும்பங்கள் எத்தனே இருக்குமோ, ஆண்டவனே அறிவார்! நூறு இருநூறு - இல்லே - லக்ஷக்கணக்கில் அல்லது கோடிக்கணக்கில் இருக்கலாம். நிறைந்த தொந்தி ஒன்ருனல் இம்முப்பத்தைந்து கோடியில் தரித்திரக் கொடும் தீயினுல் தகிக்கப்பட்ட வயிறுகள் எத்தனேயோ, யாரால் சொல்லக்கூடும்? உண்மையில் தரித்திர வலேயில் சிக்கித் தப்ப வழி தெரியாமல் ஏங்குவதைக் காட்டிலும் சாவது பன்மடங்கு மேலாகும். தரித்திரத்தின் காரணமாக எத்தனே கொலேகள், எத்தனே களவுகள், எத்தனே ஆத்ம ஹத்திகள் நடக்கின்றன! இப்பெரும் நோயை வேரோடு களேந்தாலொழிய, தேசத்திற்கு விமோசனமில்லே. இதற்கு ஒரு மருந்து இருக்குமானல், அது ஒன்றே ஒன்றுதான்."

"அது என்ன ?"

"பொதுவுடைமை!"

"வெகு அழகு! உனக்குத்தான் பைத்தியம் பிடித்துவிட்டதென்று அப்பொழுதே சொன்னேனே!"

"கண்ணிருந்தும் நீ குருடனுயிருக்கிருய். இல்லையானுல், நீயும் என்னைப்போல் பித்தனுய்விடுவாய். உம், பைத்தியம்! எனக்கா பைத்தியம்!"

## 3

ஒரு வாரம் சென்றது. மீண்டும் சனிக்கிழமை வந்தது. அன்றும் ராஜாராமும், ஸ்ரீநிவாஸமூர்த்தியும், 'கப்பன் பார்க்'கை அடைந்தார்கள். அன்று இருவரும் வீட்டைவிட்டுப் புறப்பட வெகு நேரமாய்விட்டது. முந்திய வாரச் சம்பாஷணையின் தொடர்பு இன்னும் முடிவில்லை. ஸ்ரீநிவாஸமூர்த்தி, "ராஜு! இன்றும் அந்தச் சிறுவன் நம்மைத் தேடிக்கொண்டிருப்பான்" என்ருன்.

"ஏன்?"

"ஏனென்ருல் வயிறு நிறையத் தின்பண்டங்கள் வாங்கிக் கொடுத்து, வீட்டிற்கும் மிட்டாய் அனுப்புபவர்கள் 'கப்பன் பார்க்'கில் மிகச் சிலரே இருப்பார்கள்."

"எனக்கு என்னவோ, அதில் ஆனந்தமாய்த்தான் இருக்கிறது."

வழக்கமாய் எங்கே சங்கீதம் நடக்குமோ, அங்கே இருவரும் போய்க் கொஞ்சநேரம் உலாவிக்கொண்டிருந்தனர். பின்பு 'அட்டாராக் கச்சேரி'யை நோக்கிச்சென்ருர்கள். நாலைந்து அடிகளே முன்னுல் சென்றிருப்பார்கள். அவர்கள் காதுகளில் அதே "ஸார்" என்ற சப்தம் கேட்டது. இருவரும் திரும்பிப் பார்த்தார்கள். அதே சிறுவன்! ஸ்ரீநிவாஸமூர்த்தி ராஜாராமின் முகத்தைப் பார்த்துப் புன்முறுவல் செய்தான். ராஜாராம் சிறுவனைப் பார்த்ததும் உள்ளம் பூரித்தான். ஆனுல் அதை வெளிக்காட்டாமல், அன்பு நிறைந்த வார்த்தைகளில், "பையா, நீ சௌக்கியமா?" என்று கேட்டான்.

சிறுவன் தலைகுனிந்து, "நான் இவ்வளவு நேரமாய் உங்களைத்தான் தேடிக்கொண்டிருந்தேன்" என்ருன்.

சிறுவன் கையில் அன்றும் இரண்டு காகிதப்பெட்டிகள் இருந்தன. ஒன்று கொஞ்சம் பெரிது; மற்ருென்று சிறிது. இப்பொழுது ராஜாராம் ஒரு கைக்குட்டை வாங்க விரும்பினுன். அவன் பெட்டியைத் திறந்து பார்த்தான். மிகவும் அழகிய ரோஜா நிறக் கைக்குட்டை ஒன்று மடித்து வைக்கப்பட்டிருந்தது.

நேர்த்தியான தையல்! கைக்குட்டையின் நாலு ஓரங்களிலும் பறந்து கொண்டிருக்கும் நாலு வண்ணத்திப் பூச்சிகளின் அழகிய சித்திரம். ராஜாராம் அந்தக் கைக்குட்டையை மிகவும் பாராட்டி, "பையா, எனக்கு நீ விலை மதிப்பிட முடியாத ஒரு பொருளைக் கொண்டுவந்திருக்கிறாய். இதன் விலை என்ன?" என்று கேட்டான்.

சிறுவன், "காசு வாங்காமல் இதைச் சும்மா கொடுத்துவிடும்படி வீட்டில் சொல்லியிருக்கிறார்கள்" என்றான்.

ராஜா ஸ்ரீநிவாஸமூர்த்தியை நோக்கினான். மூர்த்தி கண் அடித்தான், பின்பு சிறுவனிடம், "அப்படி யார் சொன்னது?" என்று கேட்டான்.

"அம்மா."

ராஜா மனத்திற்குள்ளேயே, "இது மிட்டாய் அனுப்பியதற்குப் பிரதி உபகாரமா?" என்று நினைத்தான்.

பின்னர் ராஜாராம் சிறுவனிடம், "இந்தா" என்று சொல்லி, அவன் கையில் ஒரு நாலணுக்காசை வைக்க யத்தனித்தான். சிறுவன் "வேண்டாம்" என்று சொல்லிச் சங்கோசத்துடன் பின்வாங்கினான். உடனே ராஜா காசை வலிய அவன் கையில் வைத்து, "இது கைக்குட்டையின் விலையல்ல; உனக்காக இனாம். உங்கம்மாவிடத்தில் என் நமஸ்காரத்தைத் தெரிவி" என்றான்.

சிறுவன், "ஸார், உங்களை......" என்று சொல்லிக்கொண்டே மௌனமானான்.

"பரவாயில்லை, சொல்லு, என்ன செய்தி?"

"ஸார், உங்களைக் கூட்டிகொண்டு வரச் சொன்னார்கள்" என்றான்.

இதைக் கேட்டதும் ராஜாவுக்கு என்ன சொல்வதென்று தெரியவில்லை. சிகரெட் புகையை மூர்த்தி ஊதிக்கொண்டே, கண்ணடித்துப் புன்முறுவல் செய்தான்.

ராஜா சிறுவனை, "யாரப்பா கூப்பிட்டார்கள்?" என்று கேட்டான்.

"எங்கம்மா."

"ஏன்?"

"எனக்குத் தெரியாது."

ராஜா கொஞ்சம் மனத்திற்குள்ளும் கொஞ்சம் வெளியுமாய், "எதற்காகக் கூப்பிட்டிருப்பார்கள்?" என்றான்.

இதுவரைக்கும் மௌனமாயிருந்த மூர்த்தி, "போய்ப் பார்த்தால் தெரிகிறது" என்றான்.

ராஜாவுக்கும் சிறுவனுடைய வீட்டைப் போய்ப் பார்க்க வேண்டுமென்று ஆசையாக இருந்தது. மூர்த்தியின் வார்த்தைகளைக் கேட்டவுடன், அவன் முன்னிலும் உற்சாகமடைந்தான். "என்ன, போவோமா?" என்று கேட்டான்.

"ஆம். போகலாம்."

ராஜா சிறுவனிடம், "சரி போவோம்; உங்கள் வீடு எங்கே இருக்கிறது?" என்று கேட்டான்.

"தர்மராயர் கோவிலுக்குப் பக்கத்தில் ஒரு சந்தில்."

"வா, போகலாம்."

இரவு ஆறரை மணி ஆகிவிட்டது. சிறுவன் முன்னால் போனான். நண்பர் இருவரும் பின்னால் சென்றார்கள்.

## 4

போகும்பொழுதே ராஜாராம் தன் மனத்திற்குள்ளேயே மேற்கூறிய எளிய குடும்பத்தின் பரிதாபகரமான நிலையைப்பற்றி யோசிக்க ஆரம்பித்தான்: 'பாவம்! அவர்கள் எவ்விதம் கஷ்டப் பட்டுக்கொண்டிருக்கிறார்களோ, தெரியவில்லை. ஆனால் அவர்கள் ஏழையாயிருந்தால் என்ன கெட்டுவிட்டது? குணத்தில் என்னவோ அவர்கள் தரித்திரர்கள் இல்லையல்லவா? வாடி வதங்கிய அவர்கள் ஹிருதயத்தில் நன்றியறிவின் எத்தகைய மதுர பாவம்! அத்தேவி அனுப்பிய கைக்குட்டையே இதற்கேற்ற சாக்ஷியாகும். இந்தக் கைக் குட்டையில் எத்தகைய அன்பு! எத்தகைய அழகு! இதில் எத்தகைய மனமோஹன சுகந்தம்! ஆ! அப்பெண்மணியோடு நான் எப்படிப் பேசுவேன்? அவர்களுடைய வீடு எத்தகைய கேவல ஸ்திதியிலிருக்கிறதோ!' இவ்வித யோசனைகளில் ஆழ்ந்த ராஜாராம் ஸ்ரீநிவாஸமூர்த்தியின் பின்னால் சென்றுகொண்டிருந்தான்.

இரு நண்பர்களும் சிறுவன் வீட்டை அடைந்தார்கள். வீடு ஒரு குறுகிய சந்தில் இருந்தது. சூரியன் இன்னும் மறையவில்லை; இருந்தபோதிலும் அந்தச் சந்தில் பரவியிருந்த இருளைப் பார்த்தால், அங்கே சூரிய பகவானுடைய கிரணம் நுழையாதுபோல் இருந்தது. சந்து அத்தனை குறுகியது. கூளமும், குப்பையின் நாற்றமும் முனிசிபாலிட்டியின் நிர்மலமான கீர்த்தியைப் பரப்பிக்கொண் டிருந்தன. சிறுவன் அவ்விருவர்களுக்கும் நடுவில் சந்தில் நின்று

கொண்டு, முன்னுலிருந்த ஒரு வீட்டின் கதவைத் தட்டினுன். வீட்டிற்குள் செல்வதற்கு ஒரே வாசல்தான் இருந்தது. ஜன்னல் ஒன்றுமில்லை. சிறுவன் தட்டியதும் கதவு திறந்தது; அவன் உள்ளே சென்றுன்.

ராஜா மூர்த்தியிடம், "இதோ நரகத்தின் பிரத்தியக்ஷக் காட்சியைப் பார்" என்றுன்.

முகத்தில் மொய்த்த ஈக்களை விரட்டிக்கொண்டே மூர்த்தி, "இந்த ஈக்களைப் பார்: நம்மை வரவேற்கின்றன" என்றுன். அதற்குள் திடீரென்று 'குர், குர்' என்ற சப்தம் கேட்டது. ராஜா திடுக்கிட்டான். மூர்த்தி, "இதுதான்போல் இருக்கிறது. இதற்குப் பயமா?" என்றுன்.

இருளடர்ந்த அந்தச்சந்தில் வந்துபோகும் ஜனங்கள், பிசாசுகள் உயிர்பெற்றெழுந்து இங்குமங்கும் உலவுவதுபோல் இருந்தார்கள்.

ஐந்து நிமிஷத்திற்குள் பையன் உள்ளிருந்து வெளியே வந்து, "ஸார், உள்ளே வாருங்கள்" என்றுன். உடனே இருவரும் அவன் பின்னுல் சென்றுர்கள். கதவின் பக்கத்தில் முப்பது முப்பத்தைந்து வயசுள்ள ஒரு பெண்மணி காத்துக்கொண்டிருந்தாள். முகத்தில் மெல்லிய புன்முறுவல் தவழ்ந்துகொண்டிருந்தது. இவ்வாலிபர்களைப் பார்த்தவுடன் அந்த ரமணி, சேலையைக் கொஞ்சம் ஒழுங்குபடுத்திக்கொண்டு, "வாருங்கள்" என்றுள்.

ராஜாராம் ஸ்தம்பித்து விட்டான். தங்களை வரவேற்பதற்கு வீட்டுக்காரர் வருவார் என்று அவன் நினைத்திருந்தான். அப்பெண்மணி அவர்கள் இருவரையும் உள்ளே ஓர் அறைக்கு அழைத்துச் சென்றுள். ராஜா அவ்வீட்டைப்பற்றித் தன் மனத்தில் எழுதியிருந்த சித்திரம் கொஞ்சம் கொஞ்சமாக மறைய ஆரம்பித்தது. வறுமையின் அறிகுறி ஒன்றும் அங்கே காணப்படவில்லை. அந்த அறையின் நடுவில் வட்டமேஜை இருந்தது. அதன் நாலு பக்கங்களிலும் நாலைந்து நாற்காலிகள் இருந்தன. ஒரு பழைய சோபாவும் இருந்தது. மேஜையின்மேல் கையினுல் பின்னப்பட்ட அழகிய நிறம் வாய்ந்த ஒரு மேஜை விரிப்பு விரிக்கப்பட்டிருந்தது. சுவரில் மாட்டப்பட்ட நானுவிதமான படங்கள் அறையின் சோபையை அதிகரித்துக்கொண்டிருந்தன. மேஜையின் மீது அழகிய பீங்கான் புஷ்பப் பாத்திரம் வைத்திருந்தது. அதைச் சுற்றிலும் சிறு சிறு போட்டோக்கள் வைத்திருந்தன.

அறையின் மத்தியில் மின்சார விளக்கு எரிந்துகொண் டிருந்தது. இடது பக்கத்தில் வேரோர் அறை இருந்தது. அதன் கதவு பாதி திறந்திருந்தது, அதன் வாசலில் பட்டுத் திரை ஒன்று தொங்கிக்கொண்டிருந்தது. பாதி திறந்திருந்த கதவின் வழியாக உள்ளே இருந்த படுக்கையின் பாதிப் பாகமும், சுவரில் தொங்கிக்கொண்டிருந்த ஓரிரண்டு படங்களும் அரைகுறையாகத் தெரிந்தன. இத்தகைய அழகிய அறையின் வசீகரம் சுகந்த திரவியங் களினால் பின்னும் அதிகரித்தது.

அந்தப் பெண்மணி அதிதிகளைச் சோபாவில் உட்காரும்படி சைகை செய்து தானும் மேஜையின் முன்னால் நாற்காலியின்மீது உட் கார்ந்தாள். ராஜாராம் நாலுபக்கமும் தன் பார்வையைச் செலுத்தி னான். அவன் மனத்திலிருந்த கற்பனைச் சித்திரம் இப்பொழுது முற்றும் மறைந்துவிட்டது. அங்கே வறுமைக்குப் பதிலாகப் பாக்கிய லக்ஷ்மி ஆனந்த நர்த்தனம் புரிந்துகொண்டிருப்பது போலிருந்தது. முன்னால் உட்கார்ந்திருந்த மடந்தை, ரூபத்தில் மட்டுமல்ல, செல்வத் திலும் பாக்கியசாலியாகவே விளங்கினாள். எளிய வீட்டில் எம்மாதிரி பேசவேண்டுமோ, அதை ராஜாராம் மனனம் பண்ணிக் கொண்டு வந்திருந்தான். ஆனால் இந்த அறையின் ஆடம்பரத்தைக் கண்டதும் எல்லாம் மறந்துவிட்டது. அவன் நிலை, நாடக மேடையில் முதல் தரம் வரும் நடிகனுடைய நிலைபோலாகிவிட்டது. அவனுடைய நாவினின்றும் ஒரு வார்த்தைகூட வெளிவரவில்லை. பொம்மைபோல் பேசாமல் இருந்துவிட்டான். அவர்கள் இருவரும் பேசாமலிருப்பதைப் பார்த்த அந்த ஸ்திரீ ராஜாவையும், மூர்த்தி யையும் மாறிமாறிச் சந்தேகப் பார்வையோடு பார்த்தாள். ராஜா பிரமித்துப் போய்விட்டான். அவன் முகத்தில் அசடு தட்டியது. ஆனால் மூர்த்தி அவள் பார்வையினால் பயந்துவிடவில்லை. கடைசியில் அவளே பேச ஆரம்பித்தாள். வலது கையினால் இடது கைவிரல்களை அமுக்கிக்கொண்டு, புன்னகை தவழும் அழகிய அதரங்களை மெல்ல அசைத்து, "தங்கள் தரிசனத்தினால் இந்த ஏழையின் வீடு புனிதமடைந்தது" என்றாள்.

ராஜாராமுக்கு என்ன சொல்வதென்று தெரியவில்லை. "ஆ - ஊ - ஈ" என்று என்னவோ உளறிவிட்டுப் பேசாமல் இருந்து விட்டான். தேவகன்னிகளின் கிரீடாபவனத்தில் சுகமுனி புகுந்தது போல் அவ்விருவரும் இருந்தனர். அந்த ஏழைக் குடும்பத்தின்மீது கருணை செலுத்தி, அவர்களுக்குத் தன்னாலியன்ற உதவி செய்வதற்

காக ராஜாராம் அங்கே வந்தான். ஆனால் இந்த ராஜபவனத்தில், அவன் பாவம், யாரிடம் இரக்கப்படுவான்? ஆகையினால் வழி தப்பிய ஒரு மான்போல் மருண்டு மூர்த்தியின் பக்கம் நோக்கினான்.

ஸ்ரீநிவாஸமூர்த்திக்கு ராஜாராமின் மௌன விரதம் கொஞ்சங் கூடப் பிடிக்கவில்லை; ஆனால் அவனுக்கும் என்ன பேசுவதென்று தெரியவில்லை. ஒரு சிகரெட்டைக் கொளுத்தி, அதன் புகை பண்ணும் லீலைகளைப் பார்ப்பதிலேயே ஆழ்ந்துவிட்டான். இனி மேலும் மௌனம் சாதிப்பது ராஜாவுக்கு அசம்பாவிதமாகத் தோற்றியது. மெல்லிய குரலில் மிகுந்த சங்கோசத்துடன், "தங்கள் ......தங்கள் பையன் எங்களைக் கூட்டிக்கொண்டு வந்தான். ஆகையி னால்......" என்று சொல்லி மீண்டும் மௌனமானான்.

உடனே அந்தக் காரிகை, நெற்றியில் ஊசலாடும் சுருள்களைக் கையினால் ஒதுக்கிக்கொண்டே, "தாங்கள் வந்தது எங்கள் பாக்கிய மென்றே சொல்லவேண்டும்" என்றாள்.

பின்பு மீண்டும் இருவரும் சில நிமிஷங்கள் மௌனமாயிருந் தார்கள். இப்பொழுது ராஜாவுக்கு வீட்டு எஜமானரின் ஞாபகம் வந்தது. அவன் உடனே, "ரங்கப்பா அவர்கள் வீட்டில் இல்லையா?" என்று கேட்டான்.

இதைக் கேட்டவுடன் அவள் முன்றானையில் முகத்தை மறைத்துச் சிரித்துக்கொண்டே, "ரங்கப்பா என்பவர் யார்?" என்று வினவினாள்.

இருள் நிறைந்த இரவில், சரியான மார்க்கமென நினைத்துக் கால் வைக்க, அது வழுக்கிவிட்டால் ஒருவனுடைய நிலை எங்ஙன மாகுமோ, அதே நிலையை அடைந்தான் ராஜாராம்.

"அந்தப் பையன் உங்களுக்கு என்ன வேண்டும்?" என்றான்.

"அவன் ஓர் அநாதைச் சிறுவன்; நான்தான் அவனைக் காப் பாற்றுகிறேன்."

"அவன்தான் எங்களிடத்தில் சொன்னான், தன் தகப்பனார் பெயர் ரங்கப்பா என்று!"

"பாவம், அவனுக்கு என்ன தெரியும்! அவனுக்குத் தாய் தந்தையோ, அண்ணன் தம்பியோ ஒருவரும் இல்லை."

"அதென்ன அப்படிச் சொல்கிறீர்கள்? அவன் எங்களிடத்தில், 'உங்களை எங்கம்மா கூப்பிடுகிறாள்' என்று சொன்னானே. அப்படி யிருக்க, நீங்கள் சொல்வதன் அர்த்தமென்ன?"

"சிறு பிள்ளையிலிருந்து நான்தான் அவனை வளர்த்தேன். என்னைத்தான் அவன் 'அம்மா' என்று அழைக்கிறான். அதுதான் விசேஷம்."

ராஜா சிறிது கோபத்துடன், "அப்போது என்ன, உங்கள் வீட்டில் புருஷர்கள் ஒருவரும் இல்லையா?" என்று கேட்டான்.

"ஏன் இல்லை?" என்று அவள் சிரித்தாள்.

"யார்?"

"நீங்கள்தாம்!" என்று சொல்லிக்கொண்டே வெட்கத்துடன் தலைகுனிந்தாள்.

ஸ்ரீநிவாஸ மூர்த்தியினுடைய வயிறு முன்னமேயே சிகரெட்டுப் புகையினால் நிறைந்திருந்தது. இந்தச் சிரிப்பு வந்து அந்தப் புகையை இருமல் மூலமாக வெளியேற்றியது. ராஜாவின் தொண்டை அடைத்துக்கொண்டதுபோல் இருந்தது; அவன் ஏதோ சொல்ல விரும்பினான். ஆனால் அது 'இ - இ - இ -' என்பதோடு முடிந்தது.

உடனே அப்பெண்மணி முன்றானையை விரல்களினால் சுற்றிக் கொண்டே, "என்மீது கிருபை வைத்து எந்தக் கனவான் என் வீட்டிற்கு வருகிறாரோ, அவர்தாம்......இன்று தாங்கள் வந்திருக்கிறீர்கள். இது என் பாக்கியம்" என்றாள்.

ராஜாவிற்கு இப்பொழுது என்ன சொல்வதென்று தெரியவில்லை. அவன் மூர்த்தியின் முகத்தைப் பார்த்தான். மூர்த்தி ஜேபியிலிருந்து கைக்குட்டையை எடுத்து முகத்தின் வேர்வையைத் துடைக்க ஆரம்பித்தான். மூர்த்தியின் கையில் கைக்குட்டையைப் பார்த்தவுடன், ராஜாவுக்குப் பட்டுக் கைக்குட்டையின் ஞாபகம் வந்தது. உடனே ராஜா, "நீங்கள் அனுப்பிய கைக்குட்டை மிகவும் அழகாயிருக்கிறது" என்று சொன்னான்.

"அது ஏழைகளின் அன்பளிப்பு. புஷ்பமணியின் கைத்திறன்."

இதுவரைக்கும் மூர்த்தி வாய் திறக்கவில்லை. அவன் வந்தது பேசுவதற்காக அல்ல, தமாஷ் பார்ப்பதற்காக. திடீரென்று மூர்த்தியின் பார்வை மேஜைமீது வைத்திருந்த போட்டோவின்மீது விழுந்தது. அதைக் கையில் எடுத்துப் பார்க்க ஆரம்பித்தான். அதைப் பார்த்ததும் அவள், "அதுதான் புஷ்பமணியின் போட்டோ. எடுத்து இன்னும் ஒரு வாரங்கூட ஆகவில்லை. இப்போது அவளுக்கு வயசு பதினெட்டு" என்றாள்.

படத்திலிருந்த பெண் பெண்ணல்ல; அழகே உருவெடுத்து வந்த தேவகன்னிகை! இதற்குள் அந்தப் பெண்மணி எழுந்து

மற்ருேர் அறைக்குள் சென்ருள். வாலிபர்கள் இருவரும் படத்தைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்தார்கள். அதன்பின், மூர்த்தி படத்தை மேஜையின்மீது வைத்துவிட்டுத் தனது வலது கையால் ராஜாவின் இடது கையைப் பிடித்து மெதுவாக இழுத்து அழுத்தினுன். ராஜா மூர்த்தியின் சமீபத்தில் வந்து காதோடு, "இவள் யார்?" என்று கேட்டான்.

மூர்த்தி பேசாமலிருந்தான்; ஆனல் கண்கள் ஜாடை காட்டின. ராஜாவோ பரம சாது! மூர்த்தியின் நயன பாஷை அவனுக்கு எங்ஙனம் விளங்கும்?

ராஜா, "அப்படி என்ருல் என்ன அர்த்தம்?" என்ருன்.

"இன்னும் விளங்கவில்லையா? அவள் பூலோகத்து அப்ஸர ஸ்திரீ."

"பூலோகத்து அப்ஸர ஸ்திரீயா? அப்படியென்ருல்?"

"மண்டு, வேசி! தெரிந்ததா?"

"என்ன சொன்னுய்? வேசியா?"

"பேசாமல் வேடிக்கை பார்த்துக்கொண்டிரு. பேசக்கூடாது. அதோ......"

அந்த ஸ்திரீ அறைக்குள் வந்து, "வா பட்டு, வா; என்ன இவ்வளவு வெட்கமா? வா, வெளியே" என்ருள்.

அறையினுள்ளிருந்து, அந்தப் பெண்மணிக்குப் பின்னல், வெள்ளித் தட்டில் வெற்றிலை பாக்கு எடுத்துக்கொண்டு முன்ருனை யால் முகத்தை மறைத்துக்கொண்டு, அந்த ரூபலக்ஷ்மி, பதினெட்டு வயசு யுவதி, புஷ்பமணி, இரு வாலிபர்களுக்கும் முன்னல் வந்து நின்ருள்.

"நமஸ்காரம் செய். வெற்றிலை தடவிக் கொடு!" என்ருள் அந்த மடந்தை.

அந்த அழகி, இன்னும் இரண்டடி முன்னல் சென்று தட்டை மேஜையின்மீது வைத்துவிட்டு நமஸ்காரம் செய்தாள். பின்பு தாயின் பின்னல் போய் ஒளிந்துகொண்டாள்.

மூர்த்தி, "இவர்கள் வேசிகள்" என்று சொன்னுனே இல்லையோ ராஜா திடுக்கிட்டான். அவன் மெய் சிலிர்த்தது. பாவம்! அவனுக்கு வேசிகள் வீடு சென்று பழக்கமில்லை. அவன் என்ன நினைத்து இங்கே வந்தான்? என்ன ஆயிற்று? கருணை நிறைந்த அவன் ஹிருதயம் க்ஷணநேரத்தில் பயங்கரமான மாறுதலை அடைந் தது. தன் மனத்திற்குள்ளேயே, 'இவர்கள் வறுமைப் பிணியினுல்

பீடிக்கப்பட்டவர்கள், நமது கருணைக்குப் பாத்திரமானவர்கள் என்று நாம் நினைத்தோமே; இப்பொழுது என்னவென்றால் இவர்கள் மஹாபாபிகளாக இருக்கக் காண்கிறோம்!'' என்று நினைத்தான். அவனது மெல்லிய ஹிருதயம் கோபத்தினால் துடித்தது. தன் மனத்திற்குள்ளேயே, 'சீ! எவ்வளவு நீசர்கள் இவர்கள்! இவர்களால் எத்தனை வீடுகள் நாசமாயிருக்கும்? எத்தனை குடும்பங்கள் நாசமடைந்திருக்கும்? எத்தனை கொலை, எத்தனை சாவு இவர்களால் ஏற்பட்டிருக்கும்! எத்தகைய தந்திரம் செய்துவைத்திருக்கின்றன இப் பிசாசுகள்! கைக்குட்டை விற்கும் சாக்கில் பையனை அனுப்பி ஜனங்கள்மீது வலை வீசுகிறார்களே. சமூகத்திற்குக் களங்கமாயிருக்கும் இந்தப் பாவபிண்டங்களை உயிரோடு பொசுக்கித் தொலைக்கவேண்டும். இத்தகைய பாவிகளைப் புனிதமாக்க, ஒன்றல்ல, நூறு கங்கை நதிகள்கூடப் போதா. இம்மாபெரும் பீடையை அடியோடு நாசஞ்செய்தால் ஒழியச் சமூகத்திற்கு விமோசனமில்லை' என்று அவன் சொல்லிக்கொண்டான்.

## 5

ராஜாராம் கண்ணியமுள்ள வாலிபன். அவன் உலகின் சுக துக்கங்களினின்றும் முற்றும் விலகியவன். அவன் ஓர் அன்புலகத்தைப்பற்றிக் கனவு கண்டுகொண்டிருந்தான். அவனுடைய கற்பனையுலகில் பிணிகளுக்கே இடமில்லை; பொய்யும் ஏமாற்றமும் இல்லை; கொலை களவு இல்லை. வறுமையின் பெயர்கூட இல்லை. வேசியின் நிழல்கூட அங்கே இல்லை.

மூர்த்தியின் நிலைமை இப்போது கொஞ்சம் விசித்திரமாய் இருந்தது. புஷ்பமணியின் சித்திரம் அவன் மனத்தில் பதிந்துவிட்டது. ராஜாவின் மனோபாவங்களை அறிவதுகூட அவனுக்குக் கஷ்டமாயிருந்தது.

ராஜாராமுக்குப் புஷ்பமணியின் வெற்றிலையோ, அவளுடைய சரச சல்லாபங்களோ அல்லது அவளுடைய இளம் புன்னகையோ தேவையில்லை. அவன் அவர்களுக்கு உதவி செய்வதற்காக வந்தான். ஆனால், அதற்கு இப்போது சந்தர்ப்பம் எங்கே? அவனது கருணை விளக்கு எண்ணெய் இல்லாமல், அதற்குப் பிரதிகூலமான பெரும் புயலுக்கு முன்னால் எப்படி எரியும்? ராஜாராமும் மூர்த்தியும் மௌனமாயிருக்கக் கண்ட அந்தப் பெண்மணி தானாகவே, " இது

தான் எளியோர்களாகிய எங்களால் இயன்ற சேவை. தங்கள் கிருபையால் எங்கள் ஜீவனம்......" என்று தயங்கினுள்.

ராஜாவால் சகிக்க முடியவில்லை. நாற்காலியினின்றும் எழுந்தான். அவன் கண்கள் தீப்பொறிகளைக் கக்கின. உதடுகள் துடித்தன. முகம் சிவந்தது. "சீ! நான் இங்கு வந்திருக்கவே கூடாது; நீசர்கள் கூட்டம்!" என்று இடிபோலக் குமுறினுன்.

ராஜாவின் ரோஷம் நிறைந்த இவ்வார்த்தைகளைக் கேட்டவுடன் புஷ்பமணி இடியேறுண்ட நாகமென அறைக்குள் ஓடினுள். அந்த ரமணியும் கொஞ்சநேரம் வரை ஸ்தம்பித்து நின்றுவிட்டாள்; ஆனுல் பயங்கொண்டாளில்லை. அவள் ஆச்சரியமடைந்தாள்; அதனுடன் சிறிது கோபமுங்கூட. ஆச்சர்யம் எதனுல் என்ருல் தன் கண்ணில் பட்ட பறவைகள் தப்பிக்க யத்தனித்துக்கொண்டிருந்தன. கோபம் ஏன் எனில் ராஜாராம், "நீசர்கள் கூட்டம்" எனத் தங்களைச் சொன்னது. அவள் இவர்களைப்போல் எத்தனையோ பேர்களைப் பார்த்திருக்கிருள். அவள் தனக்குள்ளேயே, 'இந்தச் சம்பவம் இன்று எப்படி முடிகிறது என்று பார்க்கலாம்' என நினைத்தாள். பின்னர்ச் சிறிது அதிருப்தியுடன், "எங்களை நீசர்களென்று தாங்கள் அழைப்பதன் தாத்பரியமென்ன?" என்று கேட்டாள்.

அவள் ஸ்திரீ; அதோடு கைதேர்ந்த வேசி. அவளோடு சண்டையிட்டால் புருஷர்களுக்கு என்ன மதிப்பு இருக்கும்? எழுந்திருந்த ராஜா உட்கார்ந்தான். உட்கார்ந்து மூர்த்தியின் பக்கம் பார்க்கலுற்ருன். மூர்த்தியினிடமிருந்து எவ்வித உதவியும் கிடைப்பதாகத் தெரியவில்லை. அவன் வந்தது, வேடிக்கை பார்ப்பதற்காக; வேறு ஒன்றுக்குமல்ல. இப்பொழுது இச்சொற்போரில் ராஜா தனியே நிற்கவேண்டியிருந்தது.

அவன், "தாத்பரியம் இருக்கிறது. ஏன் இல்லை? வேசியின் வீடென்று தெரிந்திருந்தால் நாங்கள் வந்திருக்கவே மாட்டோம்" என்ருன்.

"எங்கள் குற்றமா அது?"

"அவசியம் உங்களுடையதே."

"அது எப்படி? சற்றுச் சொல்லுங்களேன், பார்ப்போம்."

"எப்படியா?" என்று சொல்லிக்கொண்டே அவள் அனுப்பிய கைக்குட்டையைக் காட்டி, "கைக்குட்டை விற்கும் சாக்கில் ஜனங்கள்மீது வலை வீசுகிருயே?" என்ருன்.

அவள் மெல்லிய குரலில், "நீங்கள் மிட்டாய் அனுப்பினீர்களே? அதற்கு என்ன அர்த்தம்?" என்று கேட்டாள்.

"ஆம், அனுப்பினேன். அந்தப் பையன் எங்கே? அவன் ஏழைக் கூலியின் குழந்தை என்று நினைத்து அனுப்பினேன். பையன் எங்களை அழைத்தபோது. ஓர் ஏழைத்தொழிலாளியின் வீடு என்று நினைத்துக் கொண்டு வந்தோம்."

"இப்பொழுது என்ன கெட்டுவிட்டது?"

"நல்லது; பேஷ்! நான் என்ன சொல்லட்டும்! வேசி வீடு போகலாமா என்ன?"

"தங்கள் வீடு புனிதமாயிருக்கலாம்; நாங்கள் என்னவோ பாவிகள், நீசர்கள். ஆனால், புனிதமா...? அது வயிறு நிறைந்ததற்கு அப்புறந்தானே?"

"வயிரு? வயிரு? உன் வயிற்றில் இடி விழ! மானத்தை விற்று வயிறு பிழைப்பதைக் காட்டிலும் மரணமே சிறந்தது."

"தாங்கள் பசிக்கொடுமை இன்னதென்பதே அறியாமலிருக்கலாம். ஆகையால் மற்றவர்கள் சாவதுகூடத் தங்களுக்கு ஒரு பொருட்டாகத் தோன்றவில்லை. தங்களுக்குத் தங்கள் உயிரில் எவ்வளவு ஆசை இருக்கிறதோ, அதைவிட எத்தனையோ மடங்கு அதிகம் எங்களுக்கும் எங்கள் உயிரில் இருக்கிறது."

"வயிறு பிழைப்பதற்கு வேறு வழி ஒன்றும் இல்லையா?"

"எங்களுக்கு என்னவோ ஈசுவரன் இந்த வழியைத்தான் காட்டியிருக்கிறான்."

"உங்கள் கையில் பகவான்கூடப் பாதகர் ஆகிவிடுவார் போலும்!"

"புருஷர்களுக்கு வயிறு பிழைக்க எத்தனையோ வழிகள் இருக்கலாம்; ஆனால் ஸ்திரீகளுக்கு இரண்டே வழிகள்தாம். ஒன்று உயிரைத் தியாகம் செய்யவேண்டும்; அல்லது மானத்தை விற்க வேண்டும். நானும் ஏழைப் பிராமணகுலந்தான். கொஞ்சம் எழுதப் படிக்கவும் தெரியும். இப்பொழுது என் கல்வி கில்வி எல்லாம் ஏதோ கனவுபோலத் தோற்றுகிறது."

"உன் பிராமணீயம் நாசமாய்ப் போக!"

"ஆம், நானும் பிராமண குலத்தில்தான் பிறந்தேன். ஆனால் தாங்கள் ஒன்று ஞாபகம் வைத்துக்கொள்ளவேண்டும்: அந்தப் பிராமண தர்மத்தை விட்டுவிட்டு இந்த வாழ்க்கையில் அபார சுகத்தை அடைவதற்காக வந்திருக்கிறேன் என்று நினைக்க

வேண்டாம். மாதக் கணக்கில் பட்டினி கிடந்து உழன்றபின் என் தலைவிதி என்னை இந்தப் பாவக் குழியில் தள்ளியது. இப்பொழுது சொல்லுங்கள் : இது யாருடைய தோஷம் ?"

ராஜாவின் கோபம் கொஞ்சங் கொஞ்சமாய்த் தணிந்துகொண்டிருந்தது. 'மானம்', 'வாழ்க்கை' இரண்டும் அவன் முன்னால் நர்த்தனம் புரிந்தன. அவன் தலைகுனிந்துகொண்டே, "சரிதான்" என்றான்.

"நான் இந்த விஷயமெல்லாம் வேறு ஒருவருக்கும் இதுவரை சொன்னதில்லை. இப்பொழுது என் மனோபாவங்களை வெளியிடச் சந்தர்ப்பம் கிடைத்திருக்கிறது. நான் எல்லாவற்றையும் சொல்லி விடுகிறேன் :

"நான் பால்மணம் மாறாத பச்சைக் குழந்தையா யிருக்கும் பொழுதே, என் தாய்தந்தையர் என்னைப் பூமாதாவின் மடியில் விட்டுவிட்டுப் பொன்னுலகு அடைந்தனர். உடனே எவளோ ஓர் எட்டிய சொந்தக்காரி என்னை எடுத்து வளர்த்தாள். நான் மங்கைப் பருவமடைந்தேன். அதிருஷ்ட வசத்தால் எனக்குக் கல்யாணமும் ஆயிற்று. ஆனால் இரண்டு வருஷத்திற்குள் என் பாக்கிய சக்கரம் சுழன்றது. புஷ்பமணி பிறந்த ஒரு வருஷத்திற்குள் நான் விதவையானேன். என் கணவருக்குக் கொஞ்ச நிலம் இருந்தது. ஆனால் அதையும் தாயாதிகள் விழுங்கிவிட்டார்கள். நான் நடுத்தெருவில் விடப்பட்டேன். என் அழகையும் யௌவனத்தையும் மறைத்து வைத்து என்ன சொல்லி வேலை செய்ய முடியும்? எங்கே போவது ? பட்டினி கிடந்து சாகவேண்டி இருந்தது. பகவான் அழகு கொடுத்திருக்கிறார் ; யௌவனம் கொடுத்திருக்கிறார் ; அதோடு வறுமையும் கொடுத்திருக்கிறார் ! ஆனால் தற்கொலை செய்துகொள்ளத் தைரியத்தைக் கொடுக்கவில்லை. கல் நெஞ்சத்தைக் கொடுக்கவில்லை. தெருத் தெருவாய் அலைந்தேன். கடைசியில் ஒரு பிரபுவின் வீட்டில் வேலைக்காரியானேன்.அவர் என் அழகில் ஈடுபட்டு நான் வேலைக்காரி என்பதை மறந்தார். அப்பொழுதுதான் என் கற்பு ஆபத்துக்குட்பட்டது. ஆனால் ஐயோ ! அது அதோடு நிற்கவில்லை. மீண்டும் நான் தெருவில் விடப்பட்டேன். அப்பொழுது இந்தப் புஷ்பமணி, இன்னும் ஒரு குழந்தை கர்ப்பத்தில், நான் - ஆக மூன்று பேர் ஆகி விட்டோம். ஐயோ ! பசிக்கொடுமையைப் பொறுத்துக்கொண்டு நான் மறுபடியும் அலைந்தேன். அதை எல்லாம் இப்பொழுது நினைக்கும்பொழுது கண்ணில் கண்ணீரல்ல, ரத்தம் பீறிடுகிறது.

மானம் போய்விட்டது; ஆனால் இளமை போகவில்லை; அழகு போகவில்லை; பசி போகவில்லை. அழகும் இளமையும் இருக்கும் வரை எனக்கு எங்கும் பாதுகாப்பில்லை என்பது இறுதியில் எனக்கு நன்றாய்த் தெரிந்தது. கடைசியில் இப்படுகுழியில் விழுந்தேன்; இல்லை, யாரோ என்னை இதில் தள்ளி விட்டார்கள். அதை விட்டு நான் தப்பிக்க முடியாமல் சிக்கிக்கொண்டேன். அப்பொழுதுதான், அழகும் யௌவனமும் இருக்கும்வரை, பசிப்பிணியைத் தணிக்க என்னால் ஆன முயற்சியைச் செய்வதாகத் தீர்மானித்தேன். பாவமும், புண்ணியமும் என்ன என்பது எனக்குத் தெரியும். என் ஒவ்வொரு மயிர்க்காலிலும் அதை உணர்கின்றேன். இந்தப் பரந்த உலகில் பசி என்பது விலையுயர்ந்த வஸ்து. சுகத்தைப்பற்றிச் சிந்தனை இல்லை; ஆனால் பசியைப்பற்றிச் சிந்தனை, ஆம் பசியைப்பற்றி. உயிர் வாழ வேண்டும், அதுதான் முக்கியம். என்னிடம் இளமை இருக்கிறது; அழகு இருக்கிறது; ஆனால் அன்னம் வேண்டும். யார் அன்னம் கொடுக்கிறார்களோ, அவர்களுக்கு இந்த அழகும் இளமையும் அடிமை. யார் வயிறு நிறைந்திருக்கிறதோ, அவர்களுக்கு என்ன அதிகாரம் இருக்கிறது, மற்றவர்கள் பட்டினி கிடந்து சாகட்டும் என்று சொல்ல? பசிக்கொடுமையின் பயங்கர தாண்டவத்தை அவர்கள் எங்ஙனம் அறிவார்கள்? கனவான்களே, அநாதைகளாய்ப் பிறப்பதைக் காட்டிலும், ஏழைகளாய்ப் பிறப்பதைக் காட்டிலும், நாயாய்ப் பிறக்கலாம்!''

இதைச் சொல்லும்பொழுதே அவள் தொண்டை அடைத்துக் கொண்டது. அவள் தலைகுனிந்து பேசாமல் உட்கார்ந்துவிட்டாள்.

இதுவரை ராஜா குனிந்த தலையுடன் பேசாமல் கேட்டுக் கொண்டே இருந்தான். அவனுடைய கோபம், அவனுடைய அருவருப்பு, எல்லாம் மாயமாய் மறைந்தன. அவனுடைய கற்பனை உலகில் ஒரு பெரும் புயல் கிளம்பியது. பசிப்பிணி, வாழ்க்கைக் கவலை! அந்தப் பெண்ணின் பரிதாபக் கதையைக் கேட்டதும் அவனுடைய மனம் கொதிக்க ஆரம்பித்தது. உள்ளங்கையில் கன்னத்தை வைத்துக்கொண்டு அவன் ஒரு தடவை பெருமூச்சு விட்டான். அவன் அவளிடம் பேசிய கடுஞ் சொற்களுக்காகவும், அவள் மனத்தைப் புண்படுத்தியதற்காகவும் மிகவும் வருந்தினான். மேலும் கொஞ்ச நேரத்திற்குப் பின், அந்த ரமணியின் முகத்தைப் பார்த்துக்கொண்டே மெல்லிய குரலில், "அம்மணி, நான் பிழை செய்துவிட்டேன். பெரும் பிழை! இன்றுதான் நான் வாழ்க்கை

இன்னதெனக் கண்ணுல் பார்த்தேன் ; காதால் கேட்டேன். வாழ்க்கைப் பிரச்னை மிகவும் சிக்கலானது. அதில் சந்தேகமில்லே. ஒவ்வொரு மனிதனும் இந்தப் பிரச்னையைத் தன் சக்தி, யுக்திக்கு ஏற்றவாறு தீர்க்க யத்தனிக்கிருன். இது சரி, அது சரியல்ல என்று சொல்ல யாருக்கு அதிகாரம் இருக்கிறது? தங்களிடத்தில் என் பிரார்த்தனே என்னவென்ருல் நான் அறியாமல் பேசிய அசம்பாவித வார்த்தைகளேத் தயவு செய்து மறந்துவிடுங்கள். என்னே மன்னியுங்கள். நாங்கள் இப்பொழுது விடைபெற்றுக் கொள்ளுகிருேம்'' என்ருன்.

பிறகு ராஜாவும் மூர்த்தியும் எழுந்திருந்து சென்றுவிட்டார்கள்.

இருவரும் வெளியில் சென்றவுடன் கதவைச் சாத்திவிட்டு, அந்தப் பெண்மணி சோபாவில் வந்து உட்கார்ந்தாள். புஷ்பமணி அறையினின்றும் வெளியே வந்து சற்றுக் கர்வத்துடன், 'இதென்னம்மா! நீ எல்லா ராமாயணத்தையும் அந்தக் காந்திக் குல்லாய்க்காரனிடம் சொல்லிவிட்டாயே?'' என்று கேட்டாள்.

தாய் ஒன்றும் பதில் சொல்லவில்லே. ஆனுல் புஷ்பமணி சோபாவில் உட்காரப் போனபொழுது, அங்கே ஒரு காகிதத் துண்டு கிடப்பதைப் பார்த்தாள். அதை எடுத்தாள். அது என்ன? ஐந்து ரூபாய் நோட்டு! "இது ஏது?'' என்று சொல்லிக்கொண்டே அந்த மதிமுகத்தாள் பக்கத்தில் வந்தாள்.

தாய் உடனே பதில் சொல்லவில்லே. பேசாமல் நோட்டையே பார்த்துக்கொண்டிருந்தாள். சிறுமி சட்டென்று நோட்டைப் பிடுங்கிக்கொண்டு தாயின் தோள்களில் கைபோட்டு மீண்டும், "இது ஏது?'' என்று கேட்டாள்.

"எனக்கு என்ன தெரியும்?'' என்று சொல்லிகொண்டே தாய் பெருமூச்சு விட்டாள். சிறிது நேரத்திற்குப் பின், "அந்தக் காந்திக் குல்லாயில் இருந்தது'' என்ருள்.

"இது நன்ருயில்லே.''

"ஒருவேளே மறந்திருக்கலாம்'' என்று சொல்லிவிட்டு மௌனமடைந்தாள்.

ராஜாவும் மூர்த்தியும் வெகுநேரம்வரைக்கும் பேசாமல் சென்ருர்கள். திடீரென்று மூர்த்தி சிரித்தான்.

"ஏன் இத்தனே சிரிப்பு?'' என்று ராஜா கேட்டான்.

"ஒன்றும் இல்லை. அன்று நீ நமஸ்காரம் சொல்லும்படி சிறுவனிடத்தில் சொன்னாயே, அது ஞாபகம் வந்தது."

"உனக்கு விளங்குகிறதா; வயிற்றுப் பிழைப்புக்காக அந்தப் பெண் மானத்தை விற்றதாகச் சொல்லுகிறாளே ?"

"பின் நீ என்ன நினைக்கிறாய் ?"

"நான் என்ன நினைக்கிறேன் என்றால் இந்தக் கொடிய சமூக வாழ்க்கையின் ஆழமான குழியில் அவளைக் கைகால் கட்டிப் போட்டிருக்கிறார்கள் என்றே நினைக்கிறேன். தீன ஹீன அபலை! பாரதப் பெண்மையின் உயிர்ப் பிரதிபிம்பம் !"

"என்ன ; என்ன சொல்லுகிறாய்? இன்னொரு தரம் சொல்லு."

"சீ ! வெட்கமில்லை ?"

பின்பு அவ்விருவரும் நாலைந்து அடி தூரம் மௌனமாய்ப் போனார்கள். மூர்த்தி மீண்டும் சிரித்தான்.

"உனக்கு என்ன பைத்தியம் பிடித்துவிட்டதா?" என்று ராஜா கேட்டான்.

"ஒன்றுமில்லை. எனக்கு அந்தக் கைக்குட்டையின் ஞாபகம் வந்தது. இப்பொழுது சொல்: அதை வைத்துக்கொள்வாயா? எறிந்து விடுவாயா ?"

"வைத்துக்கொள்வேன். ஏன் எறியவேண்டும் ?"

உடனே மூர்த்தி தன் பையிலிருந்து ஒரு வஸ்துவை எடுத்து ராஜாவின் கையில் வைத்து, "அப்படியானால், இதையும் சேர்த்து வைத்துக்கொள் " என்றான்.

ராஜா அதைப் பார்த்தான். அது புஷ்பமணியின் போட்டோ.

ராஜா, "அட பைத்தியமே! இதை ஏன் தூக்கிக்கொண்டு வந்தாய் ?" என்று கேட்டான்.

மூர்த்தி சிரித்துக்கொண்டே, "உன் காதற்பயிரை வளர்ப்பதற்காக !" என்றான்.

ஒரே நாளில், ஒரே இரவில், ராஜாவின் கற்பனையுலகில், என்ன என்ன மாறுதல்கள் உண்டாயின என்பதைச் சொல்ல முடியாது. அந்தக் கைக்குட்டையும் புகைப்படமும் இன்னும் அவன் கைப்பெட்டியில் பத்திரமாகவே இருக்கின்றன.

# ஒரு துளி தண்ணீர்!

[கே. தாமோதரன்]

"அம்மா, ஒரு துளி தண்ணீர்!"

குடிப்பதற்காக அவன் குளிர்ந்த நீர் கேட்டான். ஆனால் தாயின் கண்களிலிருந்து இரண்டுதுளிகள் வெம்மையான கண்ணீரே கீழே உதிர்ந்தன. அவன் அவளுடைய ஒரே மகன். ஒரு மாத காலமாய்க் காய்ச்சலாகப் படுத்திருக்கிறான். இன்று அவன் பட்டினி. அவன் தாய் அவன் பக்கத்தில் உட்கார்ந்து, கண்ணீர் வடித்துக்கொண்டிருக்கிறாள். இதற்குப் பதிலாக அவன் பெரியவனாகும் காலத்தில், அவள் பட்டினி கிடந்தால், அவனும் கண்ணீர் வடிக்கவேண்டி யிருக்கும்.

அவன் ஒரு புலையனுடைய வீட்டில் பிறக்காமல் உயர்ந்த ஜாதியைச் சேர்ந்த ஒரு தனவான் வீட்டில் உதித்திருப்பானாகில், இன்று அவனுக்கு எவ்விதக் கஷ்டமும் இருந்திருக்காது. விலையுயர்ந்த துணிமணிகளும், வெல்வெட் 'ஸ்லிப்பர்' களும் அணிந்துகொண்டு, மோட்டாரும் இதரப் பொம்மைகளும் வேண்டுமென்று தன் தந்தையிடம் பிடிவாதம் செய்யலாம். அவன் நோய்வாய்ப் பட்டவுடன், ஆங்கில வைத்தியர்களும் நாட்டு வைத்தியர்களும் அவனுக்கு மருந்து கொடுப்பதில் இரவு பகல் என்று பார்க்காமல் முனைந்து நிற்பர்; ஆனால் என்னே, பரிதாபம்! அவன் ஓர் ஏழை ஹரிஜனச் சிறுவன்!

பள்ளிக்கூடத்தை அவன் கண்ணால் பார்த்ததே இல்லை; ஆனால் அவன் தீக்ஷண்யமான அறிவு வாய்ந்தவன். வீட்டில் இன்று அரிசி ஒரு மணிகூட இல்லை. அது அவனுக்குத் தெரியும். ஆகையினால் தான் கேவலம் தண்ணீர் கேட்டான்.

ஆனால் அந்த அர்த்தராத்திரியில் தண்ணீர் எங்கிருந்து கிடைக்கும்? அந்தச் சேரியில் கிணறு இல்லே. சுமார் இரண்டு மைல் தூரத்திற்கப்பால் ஒரு தீயரின் வீடு இருக்கிறது. தீய ஸ்திரீயின் தயவு இருந்தால், ஒருவேளை தண்ணீர் இறைத்துக் கொடுப்பாள். பாவம்! இவளோ அந்தக் கிணற்றைத் தொடக்கூடாது. இவள் தொட்டால் கிணறு அசுத்தமடைந்துவிடும்!

சமீபத்தில் ஒரு நம்பூதிரிப் பிரபுவின் மாளிகை இருக்கிறது. அதில் இரண்டு மூன்று கிணறுகள் இருக்கின்றன. ஆனால் ஈன ஜாதிப் பெண்ணாகிய இவள் அங்கே பிரவேசிக்கவே முடியாதே!

"அம்மா, கொஞ்சம் தண்ணீர்!" ஆறே வயசுள்ள அந்தப் பாலகன் தன் உலர்ந்த உதடுகள் துடிக்க மீண்டும் கேட்டான்.

தாய் பொறுமை அற்றவள். அறிவோ உலக அனுபவமோ கொஞ்சமும் அவளுக்கு இல்லே. அவளுக்கு ஒரே ஒரு விஷயந்தான் தெரியும்: தன் புத்திரனைத் தன் உயிரினும் அதிகமாக நேசித்ததே.

அவள் அடுப்புக் கரியைப்போல் கரிய நிறம் வாய்ந்தவள். ஆனால் அந்தக் கன்னங் கரிய நிறத்தினுள் ஒரு தூய வஸ்து மறைந்திருந்தது அவளுடைய அன்பு நிறைந்த ஆத்மா!

அவள் அண்ணாந்து ஆகாயத்தை நோக்கினாள். வீட்டுக் கூரையிலுள்ள எண்ணற்ற துவாரங்களின் வழியாக ஆகாயத்தில் பிரகாசித்துக் கொண்டிருந்த கணக்கற்ற நக்ஷத்திரங்களைப் பார்த்தாள். பிரகாசம் பொருந்திய அந்த நக்ஷத்திரங்கள் இருளடைந்த அந்தக் குடிசைக்குத் தங்கள் பிரகாசத்தில் சிறிதளவும் அளிக்கவில்லே. ஆம், உயர்ந்த பதவியிலும், நிலைமையிலும் உள்ளவர்கள் தங்கள்கீழ் உள்ளவர்களுக்கு எங்கே உதவி செய்கிறார்கள்? அவள் நாலுபக்கமும் திரும்பிப் பார்த்தாள். அவளுடைய ஹிருதயத்தைப் போன்று உடைந்து, பிளவு பட்டதும், மூன்று நான்கு அடி உயரமுள்ளதுமான அந்தக் குடிசையின் சுவர்களே அவளுடைய கண்களில் பட்டன.

"அம்மா! ரொம்பத் தாகமாயிருக்கு; கொஞ்சம் தண்ணி கொடேன்!"

இந்தத் தடவை அவளால் சகிக்க முடியவில்லே. இனி அந்தப் பரிதாபக் குரலே அவளால் கேட்க முடியாது. மண் பானை ஒன்றை எடுத்துக்கொண்டு அவள் குடிசையை விட்டு வெளியேறினாள். இரண்டு மைல் தூரம் சென்று அந்தத் தீய ஸ்திரீயை எழுப்புவது

முடியாத காரியம். அவள் நேராய் நம்பூதிரி வீட்டை நோக்கிச் சென்ருள்.

அவள் அக்கிணற்றை நெருங்க நெருங்க, அவளுடைய கால்கள் அதிகமாய் நடுங்க ஆரம்பித்தன. ஏன்? அவள் ஒரு தீய காரியத்தைச் செய்யப்போகிருள். அது எத்தகையது? ஒரு பிராமணனுடைய கிணற்றிலிருந்து தண்ணீர் எடுக்கப் போகிருள்!

அவள் கிணற்றை அடைந்தாள். வீட்டு ஜன்னல் வழியாக வெளிச்சம் வந்துகொண்டிருந்தது. அதைப் பார்த்ததும் திடுக்கிட்டாள். ஆனுல் புத்திர வாஞ்சை அவளுக்கு அளவற்ற தைரியத்தைக் கொடுத்தது. அவள் மெதுவாகத் தண்ணீர் எடுக்க ஆரம்பித்தாள்.

"யார் அது?" என்று அந்தப் புனித மாளிகையிலிருந்து ஒரு பயங்கரமான சப்தம் கேட்டது. அவள் திடுக்கிட்டாள்.

தன் பத்தினியோடு கொஞ்சிக் குலாவிக்கொண்டிருந்த நம்பூதிரி, தண்ணீர் எடுக்கும் சப்தம் கேட்டு ஜன்னலின் வழியாக நோக்கினுன். களவும் கையுமாய்ப் பிடிக்கப்பட்ட ஒரு திருடனைப்போல அவள் நடுநடுங்கினுள்.

"யார் அது?" என்று சிங்கத்தின் கர்ஜனைபோல் மீண்டும் அந்தக் குரல் அவள் காதில் விழுந்தது.

அவளுடைய சக்தி முழுதையும் அந்தக் குரல் உறிஞ்சிவிட்டது போல் தோன்றியது. அவள் கைகள் நடுங்க ஆரம்பித்தன. கிணற்றிலிருந்து வெளியேறும்பொழுது அவளுடைய கையினின்றும் பானை நழுவிக் கீழே விழுந்து தூள் தூளாகியது. பானையா உடைந்தது? இல்லை, அவளுடைய ஹிருதயந்தான் உடைந்து தூள் தூளாகியது!

நம்பூதிரி வேலைக்காரனைக் கூப்பிட்டான். வேலைக்காரன் அலறிப் புடைத்துக்கொண்டு ஓடி வந்தான். ஹூம்! அப்புறம் என்ன? அவள்மீது அடிமேல் அடி தொடர்ந்து விழ ஆரம்பித்தது. அந்தத் துர்ப்பாக்கியவதி ஓடவும் முடியாமல், ஒன்றும் சொல்லவும் முடியாமல், ஒரு சொட்டுத் தண்ணீருக்காகத் துடித்துக்கொண்டிருந்தாள். தண்ணீரில்லாமல் அவள் எப்படித் திரும்புவாள்? கடைசியில், அவள் தன் இரண்டு கைகளையும் கூப்பி, "சுவாமி, என் மகன் காய்ச்சலாய்க் கிடக்கிருன். ஒரு துளி தண்ணீருக்காகத் துடித்துக்கொண்டிருக்கிருன்" என்று கெஞ்சினுள்.

ஆனால் அவளுடைய வார்த்தைகளைக் கேட்பவர் அங்கே ஒருவரும் இல்லை. அன்னை உள்ளத்தின் வேதனையை உணரக்கூடியவர் அங்கே யாருமில்லை. ஏனென்றால் அவள் கொடும்பாவி ; பிராமணர் ஒருவருடைய புனிதமான கிணற்றை அவள் அசுத்தம் செய்து விட்டாள் !

இறுதியில், யாவரும் அவளைத் தடிகொண்டு காம்பவுண்டுக்கு வெளியே துரத்தினார்கள். அந்த ஏழைப் பெண் மீண்டும் மீண்டும் அந்தக் கிணற்றையே மிகப் பரிதாபகரமான பார்வையுடன் நோக்கிக் கொண்டிருந்தாள்.

ஆனால் அங்கே தண்ணீர் கிடைக்குமென்ற நம்பிக்கை சிறிதும் இல்லை. ஆகையால் அவள் வேறொரு திக்கை நோக்கி ஓடினாள். சிறிது தூரம் சென்றவுடன், அவளுக்கு ஒரு விஷயம் ஞாபகம் வந்தது. திடீரென்று நின்று நனைந்திருந்த தன் சேலையைப் பார்த்தாள். துயரம் நிறைந்த அவள் ஹிருதயம் சற்றுச் சந்தோஷமடைந்தது. உடனே திரும்பி ஓட்டமாய் ஓடிக் குடிசைக்கு வந்தாள். ஒரு சிறு மண் சட்டியை எடுத்துத் தன் துணியைப் பிழிந்தாள். ஆஹா ! அதிலிருந்து நாலைந்து துளி தண்ணீர் விழுந்தது. அதை எடுத்துக்கொண்டு மகனிடம் சென்றாள். அவனுக்கு வெகு சமீபத்தில் சென்றுங்கூட, அவன் தண்ணீர் கேட்கவில்லை. அவனுக்குத் தாகம் தீர்ந்துவிட்டதுபோலவும், எவ்விதக் கஷ்டமுமின்றிச் சுகமாயிருப்பதுபோலவும் பேசாமல் படுத்திருந்தான்.

ஆம், உண்மையில் அவன் சுகமாகத்தான் இருந்தான். அவனுக்கு இப்பொழுது எவ்விதக் கஷ்டமும் இல்லை. கடவுளுக்கு அவன்மீது கருணை பிறந்துவிட்டது. அவன் தன் பழைய கிழிந்த படுக்கையை விட்டு, மரணம் என்னும் சுக சயனத்தில் ஆனந்தமாகச் சயனித்துக்கொண்டிருந்தான் !

"குழந்தாய் !" என்று அன்பு நிறைந்த குரலில் தாய் தனயனைக் கூப்பிட்டாள். உயிரற்ற அந்த உடலிருந்து எவ்விதமான பதிலும் வரவில்லை.

"குழந்தாய், ஏனப்பா ஒன்றும் பேசமாட்டேன் என்கிறாய் ?" என்று மகனுடைய நெற்றியைத் தடவிக்கொண்டே அவள் கேட்டாள். ஆ ! இதென்ன ? திடுக்கிட்டு அவன் உடம்பை இப்படியும் அப்படியும் ஆட்டிப் பார்த்தாள். அவளுடைய ஹிருதயம் துடிக்க ஆரம்பித்தது. ஆம், இப்பொழுது அவளுக்கு எல்லாம் விளங்கி விட்டது.

அவள் ஒரு பெருமூச்சு விட்டாள். 'இது என் குற்றந்தான். என்மீது வெறுப்புக்கொண்டு, என் கண்மணி சென்று விட்டான்' என்று அவள் தனக்குள் எண்ணினாள். உடனே அவளுடைய சூக்ஷ்மச் செவிகளில் ஓசையற்ற குரலில் யாரோ, "அது உன் குற்ற மல்ல. நீசர்களைச் சபி ; உன் மகனின் மரணத்திற்குக் காரணமா யிருந்த சமூகத்தையும் சபி" என்று சொல்வதுபோல் இருந்தது.

உயிரற்ற அவ்வுடலையே அவள் கண்ணிமையாது பார்த்துக் கொண்டிருந்தாள். அவளுடைய மனத்தில் விதவிதமான எண்ணங் கள் உதித்தன. அவளுடைய ஹிருதயத்தில் துன்பவெள்ளம் பொங்குவதுபோல் தோன்றியது.

அவள் உரக்கச் சிரித்தாள். அந்தப் பிணத்தைத் தன் தோளின் மீது தூக்கிக்கொண்டு அவள் கூத்தாட ஆரம்பித்தாள். அர்த்த மற்ற வார்த்தைகளில் புலம்பினாள்.

ஐயோ ! அவளுக்குப் பைத்தியம் பிடித்துவிட்டது ! என்னே, சமூகத்தின் வெற்றி !

# யோகாஸனம்

[சு. குருசாமி, பி. ஏ. எல். டி.]

ஐயா! வாசகரே! அப்படி ஒன்றும் இதைப் புறக்கணித்துவிட்டுப் போக வேண்டாம். நான் உங்களுக்கு யோக ரகஸ்யங்களைப் போதிப்ப தற்காக வரவில்லை. கொஞ்சம் இதைப் படித்துப் பாருங்கள்.

தற்காலத்தில் தமிழ் நாட்டிலுள்ள சில பத்திரிகைகளில் தோன் றும் யோகாஸனக் கட்டுரைகளைப் படித்ததும், எனக்குப் பெரும் பீதி ஏற்பட்டுவிட்டது. 'ஏதடா இது! பத்திரிகைகளெல்லாம், தமிழர்கள் அனைவரையும் யோகிகள் ஆக்கியே தீர்வது என முனைந்து நிற்கின்றன; நாம் கர்நாடக மனுஷனைப்போல் அவை களால் பாதிக்கப்படாமல் இருக்கிறோமே' என்று நினைக்க ஆரம்பித் தேன். பிறர் என்னைப் பிற்போக்காளனாகக் கருதுவது எனக்குச் சிறிதேனும் பிடிக்காது. யோகிகள் மலிந்த எதிர்காலத் தமிழ்நாட் டில் என்னுடைய இடம் எங்கிருக்கும் என்று நான் யோசித்துப் பார்த்தபொழுது என் மூக்கில் இரண்டு துளி நீர்கூட வந்துவிட் டது. (மூக்கால் அழுவது அப்படித்தானே!) அத்துடன் 'ஒப்புர வொழுகு', 'உலகத்தோடு ஒத்து வாழ்' என்னும் ஔவையாரின் நீதி வாக்கியங்களும் ஞாபகத்திற்கு வரவே, 'இந்தத் தலைகீழ் நிற்கும் வித்தையை நாமுந்தான் கொஞ்சம் கற்றுக்கொள்வோமே' என்று தீர்மானித்தேன். யோகிகளும், தபஸ்விகளும், முனிவர்களும், ரிஷி களும் தங்கள் கரைகளில் தவஞ்செய்யும் பெருமையைக் கங்கையும் யமுனையுமே இதுவரை அநுபவித்து வந்தன. ஆனால் இப்பொழுது அந்தப் பெருமையை நமது காவிரியும், தாம்பிரபர்ணியுங்கூட அடையப்போகின்றன என்பதை நினைத்தவுடனே என் மேனி புளகாங்கிதம் அடைந்தது.

பின்பு ஒரு சுபயோக சுபதினத்தில் நல்ல நேரமாகப் பார்த்து, இதுவரை யோகாஸனங்களைப்பற்றி வெளிவந்த கட்டுரைகளை யெல்லாம் விரித்து வைத்துக்கொண்டு, சாய்வு நாற்காலியில் படுத்த வண்ணம் ஆராய்ச்சி செய்ய ஆரம்பித்தேன். நான் என் யோகாப் பியாசத்தைப்பற்றி நினைக்கும் போதெல்லாம், என் மனத்தில் பற்பல எண்ணங்கள் தோன்றும். முதலில் நான் யோகாஸனங்கள் கற்பது, பின்பு ஹடயோகியாவது, பின்னர் ராஜயோகி, பின்பு ஹைஸ்கூல்களிலும், கல்லூரிகளிலும் யோகாஸனத்தைப்பற்றி என் பிரசங்கங்கள், பத்திரிகாசிரியர்களெல்லாம் என்னைக் கட்டுரை எழுதுமாறு வேண்டிக்கொள்வது, தேசம் முழுவதும் என் கீர்த்தி பரவுவது, இத்யாதி, இத்யாதி. பின்னர் நான் இவ்வற்பக் கீர்த்தியையும் புகழையும் வெறுத்துத் தள்ளுவது, வீட்டை வெறுப்பது, வாசலை வெறுப்பது, சொத்தைத் துறப்பது, சுகத்தைத் துறப்பது, பரமஹம்ஸராவது, பால் நிலவில் என் அரண்மனையை விட்டு வெளியேற யத்தனிப்பது, மனைவி யசோதரையையும்,குழந்தை ராகுலனையும் கடைசிமுறை பார்த்துவிட்டு வரலாமென்று அந்தப்புரம் செல்லுதல் - இத்தகைய இன்பக் கனுக் கண்டுகொண்டு, கற்பனு லோகத்தின் உச்சியில் சஞ்சரித்துக்கொண் டிருக்கையில் என் மனைவி வீராயி வந்து, "விடியும் போதே இந்தப் பாழும் பத்திரிகையிலா விடியவேண்டும்? நாட்டாண்மைக்காரர் நேற்று உங்களைத் தேடிவிட்டுப் போனுரே. அந்த ஜட்ஜ்மெண்டைத் தமிழ்ப்படுத்திக் கொடுத்தாலும், நாலு காசு கிடைக்குமே. எழுந்திருந்து போங்கள்" என்ருள்.

என் மகன் மாடசாமி வந்து, "அப்பா, நாளைக்குக் கோட்டைக்குப் போனுல் எனக்குப் பொரிகடலை வாங்கிக்கொண்டு வரமாட்டாயா?" என்று கேட்டான்.

## 2

ஆராய்ச்சிக் கட்டம் முடிந்தவுடன், அப்பியாசக் கட்டத்தில் இறங்கினேன். யோகாப்பியாசத்துக்கு வேண்டிய சாதனங்களெல்லாம் தயார் செய்ய ஆரம்பித்தேன். முதலில் ஒரு லங்கோடு தைத்துக் கொண்டேன். பின்பு ஒரு கமண்டலமும் தயார் செய்துகொண்டேன். 'டிஞ்சர் அயடின்' பாட்டில் ஒன்று வாங்கவேண்டுமென்று ஒரு யோசனை தோன்றியது. ஆனுல் பின்னுல் அந்த யோசனை

நிராகரிக்கப்பட்டது. சிரசாஸனமும், மயூராஸனமும் பழகும்போது அதை வாங்கிக்கொள்ளலாம் எனத் தீர்மானித்தேன்.

ஒரு நாள் நான் லங்கோட்டைக் கட்டிக்கொண்டு, எனது யோகாப்பியாசத்தை ஆரம்பிப்பதற்குச் சித்தமாயிருக்கும்பொழுது என் மனைவி சாக்ஷாத் வீராயி அம்மாள் என் முன்பு பிரசன்னமானுள். "நாலு பிள்ளை குட்டி இருக்கிற இடத்தில், அபசகுனமா லங்கோட்டைக் கட்டிக்கொண்டு நிக்கிறீங்களே" என்ருள். அச்சமயம் என் நண்பன் சோமு முதலியும் வந்துசேர்ந்தான். என் வீட்டில் உப்புமாப் பண்ணும்போதெல்லாம் சோமு முதலிக்கு எப்படியோ மூக்கில் வியர்த்துவிடும். ஏதாவது சாக்குச் சொல்லிக்கொண்டு வந்துவிடுவான். அவனைக் கண்டதும் என் மனைவி, "இலையில் பழையது போட்டு எவ்வளவு நேரமாகிறது? நான் எந்நேரம் வரைக்கும் காத்துக்கொண்டிருப்பது? வாருங்கள்" என்று சொன்னுள்.

நானே சோமு முதலி வந்திருப்பதையும் கவனியாமல் பதுமாஸனம் போட ஆரம்பித்தேன். என் முழங்கால் தரையில் படவே மாட்டேன் என்றது. அதை ஒரு கையால் அழுத்தி அவஸ்தைப் பட்டுக்கொண்டிருந்தேன்.

"இது ஏனடா உனக்கு இந்தத் தொல்லை! இத்தனை வயசுக்கு மேலே உடம்பு வளையுமா? கலியுகத்தில் எங்காவது அஷ்டாங்க யோகம் சித்திக்கக் கேள்விப்பட்டிருக்கிருேமா?" என்று சோமு முதலி பிரசங்கம் செய்ய ஆரம்பித்துவிட்டான்.

உங்களுக்கு உள் அந்தரங்கத்தைச் சொல்லிவிடுகிறேன். சோமு முதலியின் வயிறு வண்ணுன் சால்போல் இருக்கும். குன்றக்குடிக்குக் காவடி எடுத்தாலும், அவனுக்கு யோகாஸனம் வராது. நான் யோகீசுவரனுகி விட்டால் எனக்குச் சிஷ்யனுகும் யோக்கியதை கூடத் தனக்கு இராதே என்று என்மேல் அவனுக்குப் பொருமை.

ஆனல் நான இதில் எல்லாம் ஏமாறுகிறவன்? என் யோகாப்பியாசத்தை விடாமுயற்சியுடன் பயின்றேன். பதுமாஸனம், சித்தாஸனம், ஹலாஸனம், தனுராஸனம், சர்வாங்காஸனம், பச்சிமோத்தாஞஸனம், உட்டியாணம், நௌலி முதலியவைகளை ஒருமட்டாகப் பழகிவிட்டேன். ஆனல் அந்தப் பாழும் சிரசாஸனமும், மயூராஸனமும் ஆண்டவன் என் தலையில் எழுதவில்லைபோலும்! நான் சிரசாஸனம் பழகும்போது, முதலில் கதவையடைத்துக்கொண்டு, என் மனைவியை உதவிக்குப் பக்கத்தில் வைத்துக்கொள்வேன். என் மகனுங்கூட 'டிஞ்சர் அயடின்' முதலிய மருந்து வகையராக்களுடன் பக்கத்தில்

நின்றுகொண்டிருப்பான். என்னுடைய யோகாப்பியாசத்திற்கு இத்தனை உதவி புரியக்கூடிய என் மனைவியையும், மக்களையும் பின்னால் ஒரு நாள் தனியே தவிக்கவிட்டு, நான் காட்டுக்குத் தவம் செய்யப்போகிறேன் என்பதை நினைக்கும்போது எனக்கே மிகப் பரிதாபமாயிருக்கும்.

கூடிய சீக்கிரத்தில் என் மனைவியின் உதவியால் ஒரு பிரயோஜனமுமில்லை என்று அறிந்தேன். அவளால் ஒரு தடவையாவது என் கால்களைப் பிடித்து நேரே நிறுத்த முடிவதில்லை. ஆகையால் என் மனைவியை நம்புவதைவிட ஒரு காரைச்சுவரை நம்பினாலும் புண்ணியமுண்டு என்று நினைத்துச் சுவரையே ஆதரவாக வைத்துப் பழக ஆரம்பித்தேன். வெகு சீக்கிரத்தில் அதுவும் பிரயோஜனமில்லை என்று அறிந்தேன். ஏனென்றால் என் கால்கள் சுவரில் போய் விழுவதற்கு முன்பே, இடது பக்கமோ, வலது பக்கமோ சாய்ந்து, நான் 'பொத்' என்று விழுவேன். அத்தனை தடவைகள் விழுந்தும், என் கால் எலும்புகள் ஒடியவில்லையென்றால் அது ஈசுவரக் கிருபை என்றுதான் சொல்லவேண்டும். 'கடவுள் கருணாநிதி, கருணைக் கடல், கருணை வெள்ளம்' என்று பக்தர்கள் சொல்வதை இப்பொழுதாவது நீங்கள் நம்புகிறீர்களா?

என் சிரசாஸனப் பயிற்சியால் நான் ஒரு சிறந்த உண்மையை உணர்ந்தேன். 'இவ்வுடல் மண்ணால் ஆனது; மீண்டும் அது மண்ணையே சேரும்' என்பதைச் சிரசாஸனம் எனக்கு நிமிஷந்தோறும் நினைவுறுத்தியது. என் மகனும் அதனால் ஒரு பாடம் கற்றுக் கொண்டதாகச் சொன்னான். "அப்பா, பூமிக்கு ஆகர்ஷண சக்தி உண்டென்பதை நீ எவ்வளவு தெளிவாக விளக்கிக் காட்டுகிறாய்! நேற்று எங்கள் உபாத்தியாயர் அந்தப் பாடத்தை எத்தனையோ பரிசோதனைகளுடனும், உதாரணங்களுடனுந்தான் சொல்லிக் கொடுத்தார். ஆனால் என் மூளையில் அது ஏறவே இல்லை" என்றான்.

யோகாஸனப் பயிற்சியால் நான் அடைந்த நன்மை என்னவென்று கேட்கிறீர்கள்? ஐயோ! அந்தக் கண்ணராவியைத் தான் ஐயா, இப்பொழுது சொல்ல வருகிறேன். ஒவ்வோர் ஆஸனமும் எனக்கு ஒரு வரப்பிரசாதத்தைக் கொடுத்தது. ஹலாஸனத்தினால் முதுகெலும்பு வலி; சர்வாங்காஸனத்தினால் தொண்டை வலி, கழுத்து வலி; உட்டியாணம், நௌலி இவைகளினால் வயிற்று வலி, வயிற்றோட்டம்! எனக்கு இத்தனை வியாதிகள் கூட பெரிதாகத் தோன்றவில்லை. ஆனால் என் மனைவிக்கு என்ன பதில் சொல்லுவது?

சோமு முதலி என்னை ஏளனம் செய்வானே, அவன் முகத்தில் நான் எங்ஙனம் விழிப்பது? இவ்வாறெல்லாம் நான் நினைத்துக்கொண்டிருக்கும்போது, சாக்ஷாத் சோமு முதலியே வந்துவிட்டான்!

"ஏனடா, நான் அன்றைக்கே சொன்னேனே, கேட்டாயா? இந்த யோகாஸனம் எல்லாம் நமக்கு வேண்டாம், இக்கலியுகத்தில் யோக வித்தையைப் பூரணமாகக் கற்றறிந்தவர் ஒருவருமே இல்லை என்று என்னவெல்லாமோ சொல்லிப் பார்த்தேன்; உன் காதில் ஏறவில்லை. இப்பொழுது இத்தனை ரோகங்களுக்கு அதிபதியாகி விட்டாயே; என்ன செய்யப்போகிறாய்?" என்று கேட்டான்.

நான் ஒன்றும் பதில் சொல்லத் தெரியாமல், பரக்கப் பரக்க விழித்தேன். சோமு முதலி உண்மையிலேயே நல்ல மனுஷன். கேள்வியைக் கேட்டுவிட்டுப் பதிலையும் அவனே சொல்லிவிட்டான். "நான் சொல்லுகிறேன், கேள்: ஏதோ ஆரம்பித்தது ஆரம்பித்து விட்டாய். யோகாப்பியாசத்தினால் வந்த நோயை, யோகாப்பியாசத்தினாலேயே தீர்க்கவேண்டும். ஆகையினால் உடனே உதக மண்டலத்துக்குப் புறப்பட்டுப் போ. நேற்றுத்தான் பத்திரிகையில் யோகானந்தர் படமும், அவர் நிறுவியிருக்கும் யோகாசிரமத்தின் படமும் பிரசுரமாகியிருந்தன. அவ்வாசிரமத்திற்குச் சென்று மூன்று நான்கு மாதங்கள் இருந்து, நன்றாய் ஆஸனம் பழகிக்கொண்டு வந்துவிடு" என்றான்.

மறுநாள் காலை வண்டிக்கு நான் உதகமண்டலம் போவதற்கு எல்லா ஏற்பாடுகளும் செய்துவிட்டுப் படுத்துக்கொண்டேன். அன்றிரவு எனக்குத் தூக்கம் ஏது? பல தடவைகள் திடுக்கிட்டு எழுந்து இன்னும் விடியவில்லையா என்று பார்த்தேன். தூங்க ஆரம்பித்தால் யோகாஸனத்தைப்பற்றிய கனவுதான்! சுவாமி யோகானந்தர் என்னைக் கண்டவுடன், தாம் வெகு நாளாய் எதிர்பார்த்த சிஷ்யன் வந்துவிட்டதாக என்னை மலர்ந்த முகத்துடன் வரவேற்கிறார். எனக்கு அவர் யோக ரகஸ்யங்களை அறிவுறுத்துவதாகவும், ராஜ யோகம், பக்தி யோகம், கர்ம யோகம், ஞான யோகம் முதலியவை எனக்குச் சித்திப்பதாகவும், அதன்பின் நான் அமெரிக்கப் பிரயாணம் செய்வதாகவும், சர்வ மத சபையில் பிரசங்கம் செய்வதாகவும் கனாக் கண்டேன். பின்பு பாரத தேசம் திரும்புகிறேன். உலகெங்கும் என் புகழ் பரவுகிறது. கடைசியில் நான் இமயமலையிலுள்ள ஒரு குகையில் தவம் செய்கிறேன். அப்பொழுது என் மனைவி வந்து என்னை, "நாதா!" என்று கூப்பிடுகிறாள். "நீ யார்?

உன்னை எனக்குத் தெரியாதே!" என்று நான் சொல்லுகிறேன். அவள் மீண்டும், "நாதா! நாதா!" என்று கெஞ்சுகிருள். நான் ஒரே பிடிவாதமாய் நிஷ்டையில் ஆழ்ந்துவிடுகிறேன். என் மனைவி திடீரென்று என் தோள்களைப் பிடித்துக் குலுக்குகிருள். நான் திடுக்கிட்டு விழித்தேன். என் தோள்களைப் பிடித்துக் குலுக்கிக் கொண்டு, "எழுந்திருங்கள். மணி ஏழாகிறது. நீங்கள் ரெயிலுக்குப் போகவில்லையா?" என்று என் மனைவி சொல்லிக்கொண்டிருந்தாள்.

எழுந்திருந்து கடிகாரத்தைப் பார்த்தேன். மணி ஏழு! எட்டு மணிக்கு வண்டி புறப்படுகிறது. ஆகையினுல் அவசர அவசரமாய்க் காலைக் கடன்களை முடித்து, கோட்டை மாட்டிக்கொண்டு, பொத்தான்கள்கூடப் போடாமல் கிளம்பினேன். வாசற்படி இறங்கினேனே இல்லையோ, அடுத்த வீட்டுச் செட்டியார் புன்முறுவல் செய்துகொண்டே வந்து, "ஏது, வெகு அவசரம் போலிருக்கு! எங்கே போகிறீர்கள்?" என்று கேட்டார்.

இந்தச் செட்டியார் சாதாரணமாய் நல்ல மனுஷரே. ஆனுல் அவரிடமிருக்கும் ஒரு கெட்ட வழக்கம் என்னவென்ருல், யார் வெளியே புறப்பட்டாலும் சரி, "எங்கே போகிறீர்கள்?" என்று கேட்டுவிடுவார். அவருக்கு நான் பல தடவைகள் சொல்லியிருக்கிறேன்: "யாராவது ஒரு காரியமாய்ச் செல்லும்பொழுது, அவரிடம் 'எங்கே போகிருய்?' என்று கேட்டால், அக்காரியம் ஜயமாவதில்லை; ஆகையால் இனிமேல் அம்மாதிரிக் கேளாதீர்" என்று சொல்லியிருக்கிறேன். ஆனுல் அதை ஒன்றும் அவர் கவனிப்பதில்லை. அன்று நான் அவரிடமிருந்து தப்ப வேண்டுமே என்று எத்தனையோ சாமிகளை வேண்டியிருந்தேன். ஆனுல் எங்கிருந்தோ எனக்குச் சனியன்போலத் தோன்றி, 'எங்கே போகிறீர்?' என்ற வெடிகுண்டையும் போட்டுவிட்டார். எனக்கு வயிற்றெரிச்சல் பொறுக்க முடியவில்லை. "நரகத்திற்குப் போகிறேன். நீங்களும் வருகிறீர்களா?" என்று கேட்டுவிட்டேன்.

"சும்மா கேட்டேன், நீங்கள் எங்கே போகிறீர்கள் என்று" என அழுத்தந் திருத்தமாய்ச் செட்டியார் சொன்னுர்.

இந்த அசட்டினிடம் என்ன சொல்வது! கடிகாரத்தைப் பார்த்தேன்; இன்னும் பத்து நிமிஷங்களே இருந்தன. பகவான் நாமத்தை உச்சரித்துக்கொண்டு, பின்னங்கால் பிடரியில் படும்படி விழுந்தடித்து ஓடினேன். ஸ்டேஷனையடைந்து டிக்கட் வாங்கிக்

கொண்டு பிளாட்பாரத்துக்குள் நுழைந்தேன். வண்டி கிளம்பி விட்டது! நான் ஓட ரெயில் ஓட, கடைசியில் வண்டியைப் பிடித்து ஏறி ஒருவாறுக உள்ளே சென்றேன்.

இத்தனை இடையூறுகளுக்கு அப்புறம் நான் ஒருவாறுக உதகை போய்ச் சேர்ந்தேன். ரெயிலே விட்டு இறங்கியதும், "யோகாசிரமம் எங்கிருக்கிறது?" என்று டிக்கட் கலெக்டரையே கேட்டேன். என் தைரியத்தைப் பாருங்களேன்! அவர் "தெரியாது" என்று சொல்லி விட்டார். பின்பு யோகானந்தரையும், யோகாசிரமத்தையும் தேடி ஊர் முழுவதும் அலைந்தேன். எங்கும் அகப்படவில்லை. யோகா னந்தரும் யோகாசிரமமும் உதகையில் இல்லை என்பதைத் தெரிந்து கொள்ளவே, இவ்வளவு அவசரப்பட்டேன்போலும்! யோக வித்தையைக் கற்பதற்குமுன் வீடு திரும்புவதில்லை என்று தீர்மானம் செய்துகொண்டேன்.

சுவாமி சிகிச்சானந்தர் என்பவர், பம்பாயில் யோக சிகிச்சா சிரமம் ஒன்று வைத்திருப்பதாக நான் முன்னமேயே கேள்விப்பட் டிருந்தேன். அங்கே செல்லலாம் என்று புறப்பட்டேன்.

## 3

யோக சிகிச்சாசிரமத்தின் அதிசயங்களை நான் என்னென்று சொல்வது! உள்ளே நுழைந்தால், எங்கே பார்த்தாலும் மானிட அங்க அமைப்புப் படங்கள், யோகாஸனங்கள் செய்வதற்கு வித விதமான கருவிகள், யந்திரங்கள்! சுவாமி சிகிச்சானந்தர் யோகா ஸன வித்தையை அக்கு வேறு, ஆணி வேருகப் பிரித்திருந்தார். பாருங்களேன்: ஆஸனங்கள் மட்டும் கற்றுக் கொடுப்பதற்கு மாதம் மூன்று ரூபாய்; பிராணுயாமத்திற்கு மாதம் ஐந்து ரூபாய்; இரண் டும் சேர்ந்து கற்றுக் கொடுப்பதானுல் மாதம் ஏழு ரூபாய். எப்படிச் சிக்ஷா விகிதம்? யோக வித்தையை ரூபாய், அணு, பைசாவாக மாற்றிய பேர்வழி லேசானவரா யிருப்பாரா? இப்படியெல்லாம் நான் யோசனையில் ஆழ்ந்திருந்தேன்.

அப்பொழுது சுவாமிஜியே வந்துவிட்டார். உடனே நான் அவரிடத்தில் என் விருத்தாந்தம் முழுவதும் சொன்னேன். "நாளைக் காலையில் வந்து என்னைப் பார்" என்று சொல்லிவிட்டுச் சுவாமிஜி போய்விட்டார்.

மறுநாள் காலை சென்றேன்.

"சிரசாஸனம் போடு, பார்ப்போம்" என்றுர்.

“ அதுதானே எனக்கு வராது ” என்றேன்.

“ அப்படிச் சொல்லு. அதுதான் காரணம் ” என்று அவருடைய சிஷ்யர்களில் ஒருவரை ஒரு யந்திரம் கொண்டுவரும்படி கட்டளை யிட்டார். அது வந்தவுடன் அதற்குள் என்னை நிறுத்திப் பூட்டி விட்டு எல்லோரும் போய்விட்டார்கள். மூச்சு விடுவதற்காக என் முகப்பக்கம் மட்டும் திறக்கப்பட்டிருந்தது. அன்று மாலை ஆறு மணிக்குத்தான் என்னைத் திறந்து விட்டார்கள். அன்றிரவு முழுவதும் நான் பட்ட பாடு ஆண்டவனுக்குத்தான் தெரியும். தலை வலி, கண் குத்து, காது வலி, பல் வலி எல்லாம் பொறுக்க முடியவில்லை. மறுநாட் காலையில் சுவாமிஜியினிடத்தில் போய் முறையிட்டேன். “ இன்னும் இரண்டு நாட்களில் எல்லாம் சரியாகி விடும் ” என்று அன்றும் என்னை அந்த யந்திரத்தில் தலை கீழாக நிறுத்திப் பூட்டி வைத்துவிட்டார்கள்!

அன்றிரவும் ஒரே வலி. என் பிராணன் போய்விடும்போல் இருந்தது. ஆகையினால் அதை விட்டுத் தப்புவதற்கு ஒரு யோசனை செய்தேன். காலையில் எழுந்ததும் சுவாமிஜியினிடம் சென்று, “ சுவாமிஜி, நான் தங்களுக்கு என் நன்றியை எவ்வாறு தெரிவித்துக் கொள்வேன்? என் ரோகங்களெல்லாம் சூரியனைக் கண்ட பனிபோல் விலகிவிட்டன. நான் இன்று ஊர் செல்கிறேன். விடையளிக்கவேண்டும் ” என்று நமஸ்காரம் செய்துகொண்டு நின்றேன்.

“ சரி! தாங்கள் போகலாம். ஆனுல்...” என்று சொல்லி என் கையில் ஒரு காகிதத்தைக் கொடுத்தார். ‘பில்’ கொடுக்கும் உரிமையைச் சர்க்கார் இங்கிலீஷ் டாக்டர்களுக்குத்தான் கொடுத்திருக்கிருர்கள் என்று நான் நினைத்துக்கொண்டிருந்தேன். யோகீசுவரர்களும் அந்த லைசென்ஸைப் பெற்றிருக்கிருர்கள் என்று அப்பொழுதுதான் எனக்குத் தெரியவந்தது. இரண்டாம் வார்த்தை பேசாமல் இருபத்தைந்து ரூபாயை எண்ணி மேஜையின்மீது வைத்தேன்.

“ ஏய் டைபிஸ்ட்! ஒரு சர்டிபிகேட்டு டைப் செய்துகொண்டு வா ” என்று சுவாமிஜி கட்டளையிட்டார்.

ஐந்து நிமிஷங்களில் அதுவும் வந்து சேர்ந்தது. அதில் என் ரோகங்களின் விவரமும், அவை யோக சிகிச்சையினுல் இரண்டே நாட்களில் குணமான விந்தையும் எழுதப்பட்டிருந்தன. ‘ பிள்ளையார் பிடிக்கப்போய் அது பூதமான கதைபோ லிருக்கிறதே ’ என்று நினைத்துக்கொண்டு, அதிலும் கையொப்பமிட்டுக் கொடுத்துவிட்டுத் ‘தலை தப்பியது தம்பிரான் புண்ணியம்’ என்று வெளியேகிளம்பினேன்.

## 4

எனக்கு இன்னும் யோகாஸனத்தின்மீதுள்ள நம்பிக்கை மாத்திரம் போகவில்லை. பத்திரிகைகளுக்கு யோகாஸனக் கட்டுரைகள் எழுதிய யோகீசுவரானந்தரின் ஆசிரமம் ஸ்ரீநகரில் இருந்தது. ஆகையால் அவரையும் போய்ப் பார்த்துவிட்டு வரலாம் என்று தீர்மானித்து ரயில் ஏறினேன்.

நான் யோகீசுவரானந்தரின் ஆசிரமத்தை அடைந்தபோது, அவருடைய சிஷ்ய கோடிகளில் சிலர் வெளியில் உட்கார்ந்திருந்தார்கள். நான் சுவாமிஜியைப் பார்க்கவேண்டுமென்று அவர்களிடத்தில் சொன்னேன்.

" சுவாமிஜிக்கு உடம்பு சௌகரியமில்லை ; இப்பொழுது பார்க்க முடியாது " என்று அவர்களில் ஒருவர் சொன்னார்.

" உடம்புக்கு என்ன ? " என்று நான் கேட்டேன்.

" மூல வியாதியால் மிகவும் கஷ்டப்படுகிறார்."

" பச்சிமோத்தானாஸனம் செய்தால் மூல வியாதி பறந்தோடிப் போகுமே ! " என்று என்னையும் அறியாமல் சொல்லிவிட்டேன். பின்பு நாம் எவ்விடத்தில் இருக்கிறோம் என்று ஞாபகத்துக்கு வரவே கைகட்டி வாய் புதைத்து, " ஏதோ சிறியேன் தெரியாமல் சொல்லி விட்டேன் ; மன்னிக்க வேண்டும் " என்றேன். இதற்குள் தபால்காரன் வந்து ஒரு கட்டுக் காகிதங்களைக் கொடுத்துவிட்டுச் சென்றான். அவைகளெல்லாம் என்னைப்போல் யோகாஸனங்கள் பயின்றவர்கள் எழுதிய கடிதங்கள். ஒருவருக்கு வயிற்றுவலி, வேறொருவருக்கு வயிற்றுக் கடுப்பு, மற்றொருவருக்கு வயிற்றோட்டம், இன்னும் ஒருவருக்குத் தலைவலி, பின்னொருவருக்குக் கண்வலி, பிறரொருவருக்கு மார்பு வலி, எஞ்சியவருக்கு மூலம் ! எல்லாம் ஆஸனப் பயிற்சியால் வந்த விளைவு ! அதற்கெல்லாம் என்ன செய்வதென்று சுவாமிஜியின் உதவியை நாடியிருந்தார்கள். அவைகளை யெல்லாம் சிஷ்யர்கள் சுவாமிஜிக்கு வாசித்துக் காட்டினார்கள். அவருக்குக் கோபம் பொறுக்க முடியவில்லை. " பதஞ்சலி யோக சூத்திரத்தில் இரண்டு சூத்திரங்களுக்கு அரை குறையாய் அர்த்தம் படித்துக்கொண்டு நான் பத்திரிகையில் ஏதாவது எழுதினால், அதைப் பேசாமல் படித்து விட்டுச் ' சிவனே ' என்று கிடக்காமல் இவர்களை யார் அப்பியாசம் செய்யச் சொன்னது ? இந்த ஜன்மத்தில் நான் உட்டியாணமும் செய்தறியேன், நௌலியும் செய்தறியேன். நான்கு நாட்களாக நான்

படும் பாடு பகவானே அறிவார். என்னை மலச்சிக்கலுக்கு என்ன செய்வதென்று கேட்டால், நான் என்ன சொல்வேன்! பத்திரிகைக் காரன் கொடுக்கும் காசு, இந்தக் கடிதங்களுக்குப் பதில் எழுதக் கூடக் காணாது. ஏ கிருஷ்ணானந்தா! 'இனிமேல் யோகாஸனக் கட்டுரை என்னால் எழுத முடியாது' என்று ஆசிரியருக்கு இன்றே ஒரு கடிதம் எழுதிவிடு" என்று சொன்னார்.

மறுவார்த்தை பேசாமல் நான் ஆசிரமத்தை விட்டு மெதுவாய் நழுவினேன்.

முற்றும்

மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
அவ்வை
தி.க.சண்முகம் நூலகம்.

# மால்கோஷ்

## (வங்காளச் சிறுகதைகள்)

✻

கவி ரவீந்திரநாத டாகுர், டாக்டர் சரத் சந்திர சட்டர்ஜி

முதலிய பிரபல வங்க ஆசிரியர்கள் எழுதிய அருமையான

**சிறுகதைகளின் தொகுதி**

✻

வங்க மூலத்திலிருந்து

த. நா. குமாரஸ்வாமி, பி. ஏ., அவர்களால்

மொழிபெயர்க்கப் பெற்றவை

| கதைகளின் பெயர் | ஆசிரியர்களின் பெயர் |
|---|---|
| 1. மால்கோஷ் | சாரு சந்த்ர தத் |
| 2. குருவியின் ஸம்ஸாரம் | அச்யுத ராய் |
| 3. படித்துறை சொல்லும் கதை | ரவீந்த்ரநாத் டாகுர் |
| 4. இஷ்ட தெய்வம் | சரத் சந்த்ர சட்டர்ஜி |
| 5. ஹிராகுணி | அவனீந்த்ரநாத் டாகுர் |
| 6. பாலை மலர்கள் | சரதிந்து பானர்ஜீ |
| 7. தங்கச் சிலை | ஸீதா தேவி |
| 8. யாரோ ! | பிரபோத குமார் ஸாங்யால் |
| 9. ஆப்பிள் பழம் | ரவீந்திரநாத் மித்ர |
| 10. வளையற்காரன் | சாருசந்த்ர பானர்ஜீ |
| 11. கெட்ட பெயர் | ரவீந்த்ரநாத் டாகுர் |
| 12. ஸ்வப்ன யாத்திரை | ‘ வன புல ’ |
| 13. சிறைப் பறவைகள் | ஸாதனா கர் |
| 14. முடிவில் காதல் | ஜலதர் ஸேன் |
| 15. கற்பனையும் வாஸ்தவமும் | காஞ்சனமாலா தேவி |

ஆண்டிக் காகிதத்தில் அழகாய் அச்சிடப்பெற்றது.

உயர்ந்த முறையில் பைண்ட் : : ரூ. **2—12—0**

**அல்லயன்ஸ் கம்பெனி, மயிலாப்பூர், சென்னை.**

# கதைக் கோவை

**தொகுதி 1 :: 504 - பக்கங்கள்**

கீழே கண்ட

**40** பிரபல எழுத்தாளர்கள் எழுதிய சிறந்த சிறுகதைகள் கொண்டது **40**

— பெதர்வெயிட் பதிப்பு ரூ. **5—0—0** —

(தபால், ரிஜிஸ்டர் செலவு 0—10—0. வி. பி. இல்லை.)

---

1. மகாமகோபாத்தியாயடாக்டர் உ. வே. சாமிநாதையர்
2. சக்கரவர்த்தி ராஜகோபாலாசாரியார்
3. எஸ். வி. வி.
4. க. சந்தானம், எம்.ஏ., பி.எல்.
5. கி. சாவித்திரி அம்மாள்
6. "சங்கர ராம்"
7. ந. பிச்சமூர்த்தி, பி. ஏ.
8. ரா. ஸ்ரீ. தேசிகன், எம் ஏ.
9. தி. ஜ. ர.
10. கு. ப. ராஜகோபாலன், பி, ஏ,
11. தி. நா. சுப்பிரமணியன்
12. சங்கு சுப்பிரமணியம்
13. பி. எஸ். ராமையா
14. தி. ப. பத்மநாபன்
15. கி. வா. ஜகந்நாதன், பி.ஓ.எல்.
16. த.நா. குமாரஸ்வாமி, பி. ஏ.
17. சேது அம்மாள்
18. சு. குருசாமி, பி.ஏ., எல். டி.
19. சி. வைத்தியலிங்கம், (கொழும்பு)
20. ந. சிதம்பர சுப்பிரமணியம்
21. பி. எம். கண்ணன்
22. கொத்தமங்கலம் சுப்பிரமணி[யம்
23. கி. ரா.
24. க. நா. சுப்பிரமணியம், பி. ஏ.
25. சி. சு. செல்லப்பா
26. ஜே. தங்கவேல், பி. ஏ.
27. புரசு பாலகிருஷ்ணன் எம். பி., பி. எஸ்
28. ஏ முகம்மது ரஷீத், பி. எஸ்ஸி, (ஆனர்ஸ்)
29. த. நா. ஸேனாபதி
30. 'சம்பந்தன்' (யாழ்ப்பாணம்)
31. அ. கி. ஜயராமன்
32. ஆர். நாராயணையங்கார், பி. ஏ., பி. எல்.
33. 'மௌனி'
34. ஆர். ஷண்முகசுந்தரம்
35. பி. வி. சுப்பிரமணியம், பி. ஏ.
36. 'குகப்ரியை'
37. இலங்கையர்கோன்' (யாழ்ப்பாணம்)
38. 'ரூஸி'
39. லா. ஸேதுராமன்
40. ஆர். திருஞானசம்பந்தன்

ஒப்புயர்வற்ற இம்மாதிரியான ஒரு நூல், தமிழுக்குப் புத்தம் புதிது: ஒவ்வொரு குடும்பத்துக்கும் இன்றியமையாத ஓர் அரிய பொக்கிஷம். உங்கள் பிரதிக்கு உடனே எழுதிக்கொள்க.

---

அல்லயன்ஸ் கம்பெனி மயிலாப்பூர், சென்னை

# கதைக் கோவை

## இரண்டாம் தொகுதி

கீழே கண்ட **50** சிறந்த எழுத்தாளர்களின் சிறந்த சிறுகதைகள்

பெதர்வெயிட் பதிப்பு : : 577-பக்கங்கள் ரூ. **6—0—0**

(தபால், ரிஜிஸ்டர் செலவு 0—10—0. வி. பி. இல்லை)

1. ஆண்டாள்
2. ஆர். ஆத்மநாதன்
3. ரா. ஆறுமுகம்
4. ராவ்பகதூர் ஸி. எம். இராமச்சந்திரஞ்செட்டியார், பி. ஏ., பி. எல்.
5. "இளங்கோவன்"
6. கே. பி. கணபதி
7. 'கதிர்'
8. கமலா பத்மநாபன்
9. கே. ஜி. கமலாம்பாள்
10. 'கல்கி'
11. ஆர். கிருஷ்ணசுவாமி
12. ஆர். கிருஷ்ணமூர்த்தி
13. பி. எஸ். கிருஷ்ணமூர்த்தி
13. வி. எஸ். கிருஷ்ணமூர்த்தி
15. எஸ். குஞ்சிதபாதம்
16. குமுதினி [எம்.ஏ.,பி.எல்.
17. ப. கோதண்டராமன்,
18. வை. மு. கோதைநாயகி
19. அ. கோபாலரத்னம்
20. கௌரி [பி. ஏ., பி. எல்.
21. கி. சங்கர நாராயணன்,
22. கி. சந்திரசேகரன், எம். ஏ., பி. எல்.
23. கி. சரஸ்வதி அம்மாள்
24. ஸி. ஆர். சரோஜா
25. சோ. சிவபாத சுந்தரம் (யாழ்ப்பாணம்)
26. அ. நா. சிவராமன், பி. ஏ.
27. 'சுகி'
28. சுந்தரி
28. 'சுந்தா'
30. என். ஆர். சுப்பிரமணிய ஐயர், பி. ஏ., பி. எல்.
31. 'தமிலன்'
32. 'தேவன்'
33. நவாலியூர் சோ. நடராஜன் (கொழும்பு)
34. நல்லா முகமது
35. நாரண துரைக்கண்ணன்
36. என். நாராயணன், பி. ஏ.
37. 'மதுரம்'
38. வி. ஆர். எம். செட்டியார், பி. ஏ.
39. கே. எம். ரங்க்சாமி
40. வ. ரா.
41. து. ராமமூர்த்தி, பி. ஏ.
42. ராமரத்னம் [ஹானர்ஸ்
43. நா. ராமரத்னம், எம். ஏ.
44. கா. சி. வேங்கடரமணி, எம். ஏ., பி. எல்.
45. கே. வேங்கடாசலம்
46. ஆர். வேங்கடாசலம்
47. 'லக்ஷ்மி'
48. ஜயலக்ஷ்மி ஸ்ரீநிவாசன்
49. பி. ஸ்ரீ. [எம். ஏ.
50. ரா. ஸ்ரீ. ஸ்ரீகண்டன்,

அல்லயன்ஸ் கம்பெனி மயிலாப்பூர், சென்னை

# தமிழ் நாட்டுச் சிறுகதைகள்

1. **மங்கையர்க்கரசியின் காதல்**
   மகரிஷி வ. வே. ஸு. ஐயர்.
2. **ராஜாஜி குட்டிக்கதைகள்**
   சக்கரவர்த்தி ராஜகோபாலாசாரியார்
3. **கன்யாகுமாரி**
   த. நா. குமாரஸ்வாமி, பி. ஏ.
4. **சந்தனக் காவடி**
   தி. ஜ. ர.
5. **சக்ரவாகம்**
   ந. சிதம்பரசுப்பிரமணியம்
6. **கனகாம்பரம்**
   கு. ப. ராஜகோபாலன், பி. ஏ.
7. **தோட்டியை மணந்த அரசகுமாரி**
   தி. நா. சுப்பிரமணியன்
8. **பவழ மாலை**
   பி. எம். கண்ணன்
9. **வெண் தாமரை**
   வி. எஸ். ராமகிருஷ்ணன், பி. ஏ.
10. **அழகி**
    க. நா. சுப்ரமண்யம், பி. ஏ.
11. **ஜடாதரன்**
    கா. சி. வேங்கடரமணி, எம். ஏ., பி. எல்.
12. **லக்ஷ்மீ கடாக்ஷம்**
    ஜயலக்ஷ்மி ஸ்ரீநிவாஸன்
13. **நீலமணி**
    கி. வா. ஜகந்நாதன், பி. ஓ. எல்.
14. **வைர டோலக்**
    'ஆண்டாள்'
15. **வாடா விளக்கு**
    சு. குருசுவாமி, பி. ஏ., எல். டி.
16. **குழந்தை மனம்**
    த. நா. ஸேனாபதி
17. **மீட்சி** - ஸி. ஆர். ஸரோஜா
18. **தேவகி** - குகப்ரியை

பரிசளிப்பதற்கு மிகவும் ஏற்ற நேர்த்தியான பதிப்புகள்

---

**அல்லயன்ஸ் கம்பெனி, மயிலாப்பூர், சென்னை**

# கதைக் கோவை

## முதல் தொகுதி — 512 பக்கங்கள் — ரூ. 5—0—0

**40** பிரபல எழுத்தாளர்கள் எழுதிய சிறந்த சிறுகதைகள் கொண்டது **40**

## கதைக் கோவையைப்பற்றிய புகழ் மொழிகள்

கலைமகள் :— * * மனோகரமான நூல்களை அழகான முறையில் பிரசுரிப்பவர்களுள் முன்னணியில் நிற்பவர் அல்லயன்ஸ் கம்பெனியார். இத்தொகுதியில் ஒவ்வோர் ஆசிரியரும் கையாண்டிருக்கும் நூதன முறையும் திறமையும் நமக்கு வியப்பையே அளிக்கின்றன.

பாரதமணி.—* தமிழ் நாட்டில் இதுவரையில் இத்தகைய நூல் வெளிவந்ததில்லை. * புத்தகத்தின் அமைப்பு (get-up) மிகவும் சிறந்து விளங்குகிறது. * பிழையின்றி வெளிவந்துள்ள இந்நூலை நாம் பாராட்டாமல் இருப்பதற்கில்லை.

**The Free Press.**—*A Notable Book. **No Library of Modern Tamil Literature will be complete,** it can be safely affirmed, **without this excellent volume.**

**Sunday Times.**—* It is verily a magnum opus and must find a place in every Tamil Home. Every story in the volume is a complete success.

**The HINDU.**—* * One cannot do better than study with attention and sympathy, this **carefully chosen and sumptuously got-up collection of stories.**

**The Indian Express.**—*All the stories are good, most of them exquisite and some profound. The book is neatly printed and **remarkably well got-up.**

**The Scholar.**—*The language has all the sweetness and expressiveness of Tamil. The printing and get-up are particularly good.

**The South Indian Teacher.**—*Kathai Kovai is a **brilliant compilation of the Best Short Stories** of the Tamil Nad.

**Free India.**— * The book deserves a place in every Home and Library.

**அல்லயன்ஸ் கம்பெனி, மயிலாப்பூர், சென்னை**

## கதைக் கோவையைப்பற்றிய புகழ் மொழிகள்

ஆனந்த விகடன்.—* ஒரு வெகு அழகான புத்தகத்தை அல்லயன்ஸ் கம்பெனியார் தயாரித்துக் கொடுத்திருக்கிறார்கள். அதுவும் தமிழ்நாட்டுக்கே முற்றும் புதிதான புத்தகம். இந்த நூலுக்குத் தமிழன்பர்களிடம் ஆதரவு கிடைக்குமென்று எதிர்பார்க்கிறோம்.

கல்கி.—* உண்மையில் இந்தப் புத்தக வெளியீட்டை ஒரு வியாபார விஷயமாகச் சொல்லுவதற்கே இல்லை. தமிழ்நாட்டுக்குச் செய்திருக்கும் ஓர் அரும் பெரும் தொண்டு என்றுதான் சொல்லவேண்டும். தமிழ் நாட்டில் மறுமலர்ச்சி இயக்கம் புத்தக பைண்டுத் தொழிலுக்குக்கூட ஏற்பட்டிருக்கிறதென்பதற்கு இப்புத்தகம் அத்தாட்சியாய் இருக்கிறது.

Sri. T. K. Chidambaranatha Mudaliar, B.A., B.L., **Retired Endowment Commissioner**.— * It is really a pleasure to see a book like your கதைக் கோவை.

சக்தி.—* தமிழிலக்கிய நவமலர்ச்சியின் கொழுந்து இந்நூல். இந்நூல் ஒவ்வொரு தமிழர் வீட்டிலும் இருக்கவேண்டும். இது உபசாரமல்ல, உண்மை.

பாரத தேவி.—* இக் கதைக் கோவையை ஒவ்வொரு தமிழரும் கட்டாயம் படிக்கவேண்டியது. இப் புத்தகத்தைப் படிக்கத் தவறியவர்கள் தமிழ் இலக்கியத்தில் வளர்ச்சிபெற்றுவரும் புதிய வித்தையைப் பார்த்து இன்புறத் தவறிவிட்டவர்களே யாவார்கள்.

திருச்சி ரேடியோவில் ஸ்ரீ ஸ்ரீனிவாஸ ராகவன், எம். ஏ., கதைக் கோவையைப்பற்றிப் புகழ்ந்தது.—* அழகான பதிப்பு. பார்வைக்கு நேர்த்தியாக இருக்கிறது. அல்லயன்ஸ் கம்பெனியாரின் பிரசுரங்களில் இது ஓர் உன்னத சித்திரம்.

ஜகன்மோகினி.—* ஒவ்வொருவரும் வாசிக்கத்தக்க இப்புத்தகம் தமிழ் புத்துயிர் பெற்று வருவதைக் காட்டும் ஓர் அறிகுறியாகும். படிப்போருக்கு ஆனந்தமூட்டும் என்பதில் ஐயமில்லை.

சந்திரோதயம்.—* ஒவ்வொரு கதையும், தமிழன் மனத்துக்கு ஒரு புத்துணர்ச்சியையும் ஆனந்தத்தையும் கொடுப்பதாக இருக்கின்றது.

பாலர் கல்வி.—* நவரசங்களையும் தனித்தனியாகவும் ஒன்று சேர்த்தும் காணக்கூடிய பல கதைகள் உள்ளன.

லோகோபகாரி.—* கதைகளில் பெரும்பாலானவை படிப்பவர் மனக் கண்முன் உருட்டித் திரட்டிவிட்ட மணி விக்ரகம்போல் ஒளி வீசுவனவாக இருக்கின்றன. படிக்கப்படிக்கத் தெவிட்டா அமுதமாகவும் விளங்குகின்றன.

அல்லயன்ஸ் கம்பெனி, மயிலாப்பூர், சென்னை

மதுரை காமராசர் பல்கலைக்கழக அவ்வை